~~T.1908~~
T.1909

1909

SRI VENKATESWARA ORIENTAL SERIES—No. 32

EDITOR :—P. V. RAMANUJASWAMI, M.A.

ரகுவம்ச மஹா காவ்யம்

காளிதாஸ மஹாகவி இயற்றியது.

T. 1909

பதிப்பாசிரியர்

D. T. தாதாசாரியர், M.O.L.

இயற்றிய

தமிழ் உரையுடன் கூடியது.

PUBLISHED UNDER THE AUTHORITY OF

SRI C. ANNA RAO, B.A.,

Executive Officer

ON BEHALF OF THE BOARD OF TRUSTEES

TIRUMALAI-TIRUPATI DEVASTHANAMS. TIRUPATI.

ஸ்ரீ வேங்கடேச்வர கீழ்க்கலை ஆராய்ச்சி மன்றம்

திருப்பதி.

1952

PRINTED AT
T. T. D. PRESS,
TIRUPATI.
250 Copies
28-4-'52.

ஸ்ரீ:

முகவுரை.

ரிக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் அதர்வவேதம் என்கிற நான்கு வேதங்கள்; சிக்ஷை, வியாகரணம், சந்தஸ்ஸு, நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம், என்கிற ஆறு அங்கங்கள்; இதிஹாஸ புராணம், நியாயம் என்ற தர்க்கம், மீமாம்ஸை, தர்ம சாஸ்திரம், என்கிற நான்கு உபாங்கங்கள்; ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம் என்ற ஸங்கீத சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், என்ற நீதி சாஸ்திரம், என்கிற நான்கு உபவேதங்கள்; ஆக இப்பதினெட்டும் நமக்கு வேண்டிய விவேகத்திற்கும் தர்ம வ்யவஸ்தைக்கும் ஆதாரமாக நமது முன்னோர்கள் ஆதரித்துப் போற்றிவந்த வித்யைகள், அல்லது சாஸ்திரங்கள். ரிக்வேதம் முதலிய பதினெட்டு சாஸ்திரங்களில் நிர்ணயிக்கப்பட்ட தத்துவங்களையும் அனுஷ்டானங்களையும் நம்புவதே நமது மதமாகும்.

இச்சாஸ்திரங்களைக் கற்பதும், அவற்றின் பொருளை உள்ளபடி உணர்வதும் எளிதான காரியமன்று. சிலருக்கே அதில் யோக்யதை உண்டு. அவ்வித யோக்யதை வாய்ந்தவர்கள் உரிய முறையில் சாஸ்திரங்களைப் பயின்று, தத்துவங்களை உணர்ந்து, அவற்றை மற்றை யாவரும் உணருமாறு உபதேசம் செய்வார்கள். இதிஹாஸங்களும் புராணங்களும் ஏற்பட்டது இதை உத்தேசித்தே. வேதங்களிலும் வேதாந்தங்களிலும் அடங்கிய வெகு ஸூக்ஷ்மமான தத்துவங்களையும் ஜனங்கள் யாவரும் செவ்வையாக உணரும்படி ரஸமாகவும் ஸுகமாகவும் உபதேசிப்பதற்கு வேண்டிய முறையைக் கையாண்டு உண்டாக்கிய நூல்களே புராணங்கள் இதிஹாஸங்கள் என்று கூறப்படுகின்றன. நமது நாட்டிலுள்ள யாவரும் அந்தந்த காலங்களில் அவரவர்களுக்கு ஏற்பட்ட காரியங்களைச் செய்துவிட்டு ராக் காலங்களிலும், உத்ஸவ காலங்களிலும் மேற் கூறியபடி தர்மாதர்மங்களில் விவேகத்தையும்

செய்யவேண்டிய காரியங்களில் ஊக்கத்தையும், செய்யத்தகாதவற்றில் வெறுப்பையும் உண்டாக்கக் கூடிய சிறந்த உபாக்யானங்களைச் சொல்லியும் கேட்டும் மிகப் பயன்பெற்று வந்தனர். இது நமது தேசத்தில் முன்னோர்கள் ஆதரித்து அநுஸரித்துவந்த மிகச் சிறந்த ஸர்வவித்யா முறை. ஸ்திரீகள், வேளாளர்கள் மற்றுமுள்ள பல தொழிலாளர்கள் எவராயினும் இவ்விதமான உபதேச முறையினால் வெகுநாட்கள் குருகுலவாஸம் பண்ணி மிகுந்த பாண்டித்யத்தை ஸம்பாதித்த அறிவாளிகள் போலவே ஸத்யம், தர்மம், அஹிம்ஸை, விநயம் இவை முதலியவற்றில் மிக்க விவேகமும் பற்றும் பெற்று ஸுகமாகவும் ஒழுங்காகவும் ஜீவித்து வந்தனர்.

ஆனால் காலக்ரமத்தில் கடினமான சாஸ்திர நூல்களைக் கற்பதும் விரிவான இதிஹாஸ புராண நூல்களைப் பயில்வதும் கஷ்டமாக இருந்தமையால் அவ்விதமான வித்யா ப்ரசாரம் கொஞ்சம் குறைய ஆரம்பித்தது. ஆகவே யாவரும் அறியவேண்டிய அரும் பெரும் தத்துவங்களை ரஸமாகவும் சுருக்கமாகவும் ஸுலபமாகவும் விளக்கக்கூடிய நடையில் நூல் இயற்ற ஆரம்பித்தனர். இவ்விதமான நூல் 'காவ்யம்' எனப்படுகின்றது. இவ்வித நூலைச் செய்பவர் 'கவி' எனப்படுகின்றனர்கள். ஸம்ஸ்கிருத கவிகளில் முதல்வராக எல்லோராலும் மதிக்கப்பட்ட, இப்போதைக்கு சுமார் ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னிருந்த காளிதாஸ மகாகவி பல காவ்யங்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் ஒன்று 'ரகுவம்சம்' என்பது.

இவ்வுலகில் ஜனங்கள் ஸுகமாக வாழ்வது அரசாங்கத்தையே பொறுத்திருப்பதால் அதன் விஷயமான சிறந்த உபதேசங்களைச் செய்யக்கருதி இவர் இக்காவ்யத்தை இயற்றி யிருக்கின்றனர். 'அரசன் எப்படியோ அப்படிக் குடிகள்' என்று பழமொழி யாதலின் குடிகள் குணசாலிகளா யிருந்து அறநெறி தவறாது வாழ வேண்டுமாயின் அரசன் எல்லாச் சிறந்த குணங்களும் பெற்றிருக்க வேண்டும். இவ்வித யோக்கியதைக்கு மூல காரணம் நல்ல குலத்

தில் பிறப்பது. இவ்வுண்மைகளை யெல்லாம் மனத்தில்வைத்து இம் மஹாகவி ஸ்ரீ ராகவன் உள்பட ஸூர்ய வம்சத்தில் உதித்த பல அரசர்களின் சரித்திரத்தை வர்ணிப்பதின் மூலம் அரசர்கள் இருக்க வேண்டிய நிலையை உலகத்திற்கு எடுத்துக் காட்டுகின்றார். அதில் "ஸூர்யனிடத்திலிருந்து உண்டான முதல் அரசர் மனு என்பவர். அவருடைய வம்சத்தில் திலீபன் என்று ஒருவன் உண்டானான். அவன் ராஜ்யபாரத்தை செவ்வனே நடத்தி வந்தான். ஆனால் வெகு காலம் அவனுக்குப் புத்திரன் உண்டாகவில்லை. அவன் இதற்குக் காரணத்தை அறிந்து தகுந்த பரிஹாரத்தைச் செய்து புத்திரனைப் பெறவேண்டுமென் றெண்ணி தனது பட்டமகிஷியான ஸுதக்ஷிணையோடு குலகுருவாகிய வஸிஷ்ட முனிவருடைய ஆச்ரமத்திற்குச் சென்றான். அவர் அவனுக்கு அதுவரையில் புத்திர னுண்டாகாததின் காரணத்தை அறிந்து அவனுக்கும் அறிவித்து ஆச்ரமத்தில் இருந்த காமதேனுவின் கன்றான நந்தினியைப் பூஜித்தால் அத்தடைக்குப் பரிஹார முண்டாகுமென்று கூறி அதைப் பூஜிக்கக் கட்டளை யிட்டார். அவன் அப்படியேசெய்து அந்த நந்தினியினுடையவும் முனிவருடையவும் அருளைப் பெற்றான். அதனால் பட்டமகிஷியான ஸுதக்ஷிணைக்குக் கர்ப்பம் உண்டாயிற்று" என்ற இக் கதாபாகம் முதல் இரண்டு ஸர்க்கங்களில் கூறப்படுகின்றது.

இக்காலத்தில் ஸாதாரணமாக ஸம்ஸ்கிருதபாஷை கற்பதற்காகவே இந்த ரகுவம்சம் முதலிய ஸம்ஸ்கிருத காவியங்கள் படிக்கப்பட்டு வருகின்றன. இப்பயனைக் கருதிப் படிக்கும்போது பதங்களையும் வாக்கியங்களையும் இலக்கண முறைப்படி கவனித்துத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். ஆனால் இங்கு செய்திருக்கும் மொழிபெயர்ப்புக்குப் பிரதான உத்தேசம் மேற் கூறியபடி இக்காவியத்தில் பதிந்துள்ள ஆழ்ந்த சாஸ்திர நுண்மைப் பொருளைக் கூடுமான வரையில் யாவரும் அறியும்படி செய்வதே. ஆதலின் இங்கு இலக்கண முறைப்படி எப்படி மொழி பெயர்க்க வேண்டுமோ அப்படியே மொழி பெயர்ப்பது என்கிற நியமம் வைத்துக் கொள்ளாமல் எளிதில் கருத்து வெளிப்படும் வகையில் 'சுதந்திர மொழி பெயர்ப்புச்' செய்யப்பட்டிருக்கிறது. மூலத்தில் கர்மணிப்ரயோகம் இருந்தாலும் மொழி பெயர்ப்பில் கர்த்தரிப்ரயோகம் போலவே பொருள் கொடுக்கப்பட் டிருக்கும். இவ்வாறு இன்னும் பல விஷயங்களில் மாறுபாடு காணப்பெறும்.

இங்குச் செய்யப்பட்டிருக்கும் மொழி பெயர்ப்பிலிருந்து ஸம்ஸ்கிருத பதங்களின் சொரூபத்தை யாராவது நிர்த்தாரணம் செய்யக் கருதினால் அவர்கள் இந்த விஷயத்தை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். வட சொற்களைத் தமிழ் பாஷைக் கேற்றபடி மாற்றுவதிலும் ஸ்திரமான நியமமொன்றும் அநுஸரிக்கப் படவில்லை யென்பதும் ஆங்காங்கு புலப்படும்.

14-3-1951 }
திருப்பதி. } D. T. TATACHARYA.

ஸ்ரீ:

விஷயஸூசிகை.

முதல் ஸர்க்கம்

1. கவி தான் பூஜிக்கும் தெய்வங்களான பார்வதீபரமேச்வரர்களை வணங்குகின்றார். 1

2. ஸூர்யவம்ச விஷயமாக ஒருநூல் செய்யப்போகிறேன் என்கிறார். 2

3. தான் செய்யப்போகும் நூல் காவ்யமுறையில் இருக்கும் என்கிறார். 3

4. வால்மீகி முதலியவர்களின் வழியை அனுஸரித்து இக்காவ்யம் செய்கிறேன் என்று கூறி அவர்களிடத்தில் தனக்குள்ள மதிப்பைக் காட்டுகிறார். 4

5. ஸூர்யகுலத்திலும் பிறப்புமுதல் ரகுமகாராஜனின் சரித்திரத்தையும் அவனது ஸந்ததியிலுண்டான மற்ற அரசர்களின் சரித்திரத்தையும் கூறப்போகிறேன் என்கிறார். இதற்குக் காரணம் அவர்களுடைய குணச்சிறப்பு என்றும், அவர்கள் பிறவிமுதல் சுத்தர்களென்றும், பலமுண்டாகும் வரையில் ஆரம்பித்தகார்யத்தை செய்பவர்களென்றும், கடல்சூழ்ந்த பூமிக்கெல்லாம் அரசர்களென்றும், ஸ்வர்க்கலோகம் வரையில் அவர்களுடைய தேர் செல்லுமென்றும்; விதிப்படி யஜ்ஞங்கள் செய்பவர்களென்றும், கொடையில் சிறந்தவர்களென்றும், குற்றத்திற்குத் தக்கபடி சிக்ஷைசெய்பவர்களென்றும், காலந்தவறாது செய்ய வேண்டியவைகளைச் செய்பவர்களென்றும்; பிறருக்கு உதவுவதற்காகவே பொருள் ஸம்பாதிப்பவர்களென்றும், மெய்தவறாமல் இருப்பதற்காக மிதமாகப் பேசுகிறவர்களென்றும், பேராசையின்றி புகழுக்காகவே பிறமன்னர்களை ஜெயிக்க விரும்புகிறவர்களென்றும், ஸந்தான அபிவிருத்திக்காகவே மணப்பவர்களென்றும்; பால்யத்தில் கல்வி கற்பவர்களென்றும், யௌவனத்தில் போகத்தை விரும்புகிறவர்களென்றும், முதிர்ந்த வயதில் முனிவர்களின் நடத்தையை மேற்கொள்ளுமவர்கள் என்றும், முடிவில் யோகமார்க்கத்தினால் சரீரத்தை விடுமவர்கள் என்றும் கூறுகின்றார். இக்காவ்யத்தை நல்லவர்கள் கேட்டுப் பரீக்ஷிக்க வேண்டும் என்கிறார். 5—10

6. ஸூர்யனுடைய புத்திரராய் அரசர்களுக்கெல்லாம் முதல்வரான மனு என்ற ஒருவர் இருந்தார். அவருடைய வம்சத்தில் திலீபன் என்ற ஓர் அரசன் உண்டானுன். அவன் க்ஷத்திரிய தர்மத்திற்குரிய சரீரவன்மை பெற்றவன். மஹாதேஜஸ்வி. மஹாபுத்திமான். அதற்கேற்ற கல்விச்சிறப்பு வாய்ந்தவன். ஊழியர்கள் அணுகும்படியும், ஆகிலும் பயப்படும்படியும் இத்தகைய இருவகைப்பட்ட சிறந்த குணங்கள் வாய்ந்தவன். 11—16

7. அவன் ஆளும்போது குடிகள் யாவரும் இம்மிமாத்திரமும் வழி பிறழாது நடந்துவந்தனர். 17

8. அவன் வரி வாங்கினுன். ஆனுல் அது ஜனங்களின் க்ஷேமத்திற்காகவே. சத்ருக்கள் தலையெடுக்க ஒண்ணுதபடி அவ்வளவு பராக்கிரமசாலி அவன். அரசாங்க ரஹஸ்யம் ஒருபோதும் வெளிவராது. பயப்படாதவன். தர்மசீலன். பற்றுதலில்லாமல் அரசர்களுக்குரிய போகங்களை அனுபவித்தான். தற்புகழ்ச்சியே இல்லாதவன். மூப்பு இல்லாமலேயே (வயது அதிகமாக ஆகாமலேயே) பெரியவன் என்று யாவராலும் கருதப்பட்டான். 18—23

9. புத்திரர்களுக்குப் பிதா செய்யவேண்டிய கார்யங்களை எல்லாம் குடிகளுக்கு அவன் செய்துவந்தான். தர்மார்த்தகாமங்களில் அர்த்த காமங்கள் கூட தர்மமாவே முடியும்படி அவன் நடந்துவந்தான். யஜ்ஞங்களைச் செய்து தேவேந்திரனை பூஜித்து காலத்தில் வேண்டிய மழை பெய்யச்செய்து உலகத்தைக் காப்பாற்றினுன். அவன் ராஜ்யத்தில் திருடர்களே இருக்கவில்லை. குணமுண்டாகில் சத்ருக்களையும் போற்றினுன். குற்றமுண்டாகில் தனக்கு வேண்டியவர்களையும் துறந்தான். 24—28

10. பரோபகாரத்திலேயே நோக்குள்ள அவ்வரசன் அகண்ட பூமண்டலத்தையும் தனக்கு நிகராக மற்ருேர் அரசன் இல்லாதபடி ஆண்டு வந்தான். 29—30

11. அவனுக்கு ஸுதக்ஷிணை என்று ஒரு பத்தினி இருந்தாள். அவனுக்குப் பல பத்னிகள் இருந்தும் அவர்களுக்குள் அவளே சிறந்து விளங்கினுள். 31—32

12. அவளிடத்தில் தகுந்த புத்திரன் உண்டாக வேணுமென்று அவ்வரசன் விரும்பினுன். ஆனுல் உண்டாகவில்லை. 33

13. புத்திரனுண்டாவதற்காகச் செய்யவேண்டியதைச் செய்ய விரும்பி ராஜ்ய பாரத்தை மந்திரிகளிடத்தில் ஒப்புவித்தான். 34

14. பிறகு அவ்வரச தம்பதிகள் பகவானைப் பூஜித்துவிட்டு பரிசுத்தர்களாய் ஒரே ரதத்தில் ஏறிக்கொண்டு, ஆச்சிரமத்திற்கு உபத்திரவம்

வேண்டாமென்று சில வேலைக்காரர்களை மாத்திரம் அழைத்துக் கொண்டு, வழியில் ஸுகமான காற்றையும், மயில்களின் 'கேகா' சப் தங்களையும், ஸஞ்சரிக்கும் மான்களின் அழகையும், ஆகாயத்தில் ஸஞ் சரிக்கும் பக்ஷிகளின் த்வனியையும் அனுபவித்து மகிழ்ந்து, தாங்கள் செல்லும் திக்கிலேயே வீசும் குளிர்ந்த காற்றுடன் வந்த தாமரை மலர் களின் வாசனையை மோந்து கொண்டும், தாம் தானம்செய்த கிராமங்களிலுள்ள பெரியோர்கள்செய்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டும், ஆங்காங்கு இடைச்சேரி பெரியோர்கள் கொண்டுவந்த வெண்ணையைப் பெற்றுக்கொண்டும் தமது குலகுருவான வஸிஷ்ட முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்றார்கள். 35—45

15. அவ்விருவரும் ஒரேதேரில் இருந்தபடியால் ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டு ரம்யமான காக்ஷிகளைக் காட்டியும் பார்த்தும் வழிசென் றதே தெரியாமல் ஆச்சிரமத்தை அடைந்தனர். 46—47

16. அப்பொழுது வஸிஷ்ட மஹர்ஷி ஸாயங்காலத்தில் செய்யவேண் டிய அனுஷ்டானங்களைச் செய்து கொண்டிருந்தார். வனங்களுக்குச் சென்றிருந்த பல ரிஷிகள் ஸமித், தர்ப்பம், பழம் இவற்றுடன் திரும்பி வந்துகொண் டிருந்தனர். மான்குட்டிகள் ரிஷிபத்னிகள் கொடுக்கும் தான்யத்திற்காக வாசற்படிகளைத் தகைந்து கொண் டிருந்தன. ரிஷி கன்னிகைகள் மரங்களின் பாத்திகளில் தண்ணீர் வார்த்து அங்கு தண்ணீர் அருந்துவதற்காக வரும் பக்ஷிகள் பயப் படாமலிருப்பதற்காக, விலகி நின்றனர். உலர்த்தியிருந்த தான்யங் கள் வெய்யில் போனபிறகு குவிக்கப்பட்டிருக்க, அவ்விடங்களில் மான்கள் படுத்து அசைபோட்டுக்கொண் டிருந்தன. ஸாயங்கால ஹோமத்திற்காக வளர்க்கப்பட்ட அக்கினிகளிலிருந்து கிளம்பிய புகைகள் காற்றினால் அலைக்கப்பட்டு ஆஹுதி வாசனையோடு ஆச்சிரமத்தின் மேல் கிளம்பிப் பரவிக்கொண் டிருந்தன. 48—53

17. பிறகு அரசன் தேர்ப்பாகனைப் பார்த்துக் குதிரைகளை அவிழ்த்து விடும்படி கட்டளையிட்டுவிட்டுத் தேரிலிருந்து அரசியை இறக்கித் தானும் இறங்கினான். 54

18. அங்குள்ள முனிவர்கள் அவனுக்குத் தகுந்த உபசாரம் செய்து வர வேற்றனர். 55

19. முனிவருடைய ஸாயங்கால அனுஷ்டானம் முடிந்தபிறகு அருந்ததி யுடன் இருந்த அவரை அவன் தரிசனம் செய்தான். 56

20. அரசி அரசன் இருவரும் தமது குரு குருபத்னி இருவரையும் வணங்கி னார்கள். முனிவர் அரசனுடைய க்ஷேமத்தை விசாரித்தார். 57-58

21. அரசன் மறுமொழி கூறினான். தெய்விகமாயும் மானுஷமாயும் வரக்கூடிய ஸர்வ ஸங்கடங்களையும் போக்குவதற்கு தேவரீர் இருக்க என்னுடைய க்ஷேமத்திற்கு என்ன குறை. வெகு தூரத்திலிருந்து தேவரீர் ஓதும் மந்திரங்களினால் எனது சத்துருக்களெல்லாம் நசித்துப் போகின்றார்களாகையால் நான் போய் அவர்களின் மேல் விடவேண்டிய அம்புகளெல்லாம் உபயோகமற்றவையாக வன்றோ இருக்கின்றன. தேவரீர் விதிப்படி செய்யும் ஹோமங்களினால் காலத்தில் மழைபெய்து பயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. தேவரீருடைய ப்ரஹ்மவர்ச்சஸ்வின் ப்ரபாவத்தால் எனது குடிகள் யாவரும் தீர்க்காயுஸ்ஸுக்களாகவும் எவ்வித பயமுமில்லாதவர்களாகவும் அதிவ்ருஷ்டி முதலிய பீடைகள் இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். இப்படி தேவரீர் எல்லாவிதத்திலும் செய்யும் அனுக்ரஹத்தினால் எனக்கு இடைவிடாது ஸர்வ ஸம்பத்துக்களும் நிறைந்திருக்கின்றன. ஆனால் தேவரீருடைய நா (மணா) ட்டுப்பெண்ணான இவளிடத்தில் புத்திரன் உண்டாகாதது ஒரு பெரிய குறையாக விருக்கின்றது. இதனால் எனது பூர்வ புருஷர்கள் இனி வம்சத்தில் பிண்டப்ரதானம் செய்பவனும் திலோதகம் கொடுப்பவனும் இல்லையே என்று மிகவும் வருத்தமுற்றிருக்கின்றனர் என்று நினைக்கின்றேன். வேள்விசெய்து தேவருணத்தைத் தீர்த்திருந்தும் மகப்பேறு இல்லாமையால் ஒரு களங்கம் உண்டாயிருக்கின்றது. புண்யம் செய்வது பரலோகத்தில் ஸுகத்தைக் கொடுக்கும். புத்திரன் பிறந்தால் இங்கும் அங்கும் ஸுகம் உண்டு. இச்செல்வமில்லாத என்னைப்பார்த்து தேவரீருக்கும் வருத்தமுண்டா யிருக்குமென்பது நிச்சயம். இக்குறை எனக்கு ஸஹிக்கக் கூடாததா யிருக்கின்றது. ஆகையால் இந்த பித்ருருணம் எப்படித் தீருமோ அப்படி தேவரீர் அருளவேண்டும். எனது குலத்திலுள்ளோர்க்கு வேண்டியதெல்லாம் பெறுவது தேவரீ ரனுக்கிரகத்தாலன்றோ. 59—72

22. இப்படி அரசன் விண்ணப்பஞ் செய்ததைக் கேட்ட முனிவர் க்ஷண காலம் தியானம்செய்து அதனால் அவனுக்குப் புத்திரனுண்டாகாததின் காரணத்தைக் கண்டறிந்து அவனைப்பார்த்து இவ்வாறு சொன்னார் :—

முன்னொரு சமயம் நீ இந்திரனிடத்தில் போய் திரும்பி வரும் பொழுது கல்பவ்ருக்ஷத்தின் நிழலில் காமதேனு நின்று கொண்டிருந்தது. ருதுஸ்னானம் செய்த இந்த ஸுதக்ஷிணையை நினைத்துக் காலம் தவறினால் தர்மலோபம் வருமேயென பயந்து நீ மிக வேகமாக வந்துகொண்டிருந்த படியால் வழியில் நின்ற காமதேனுவை பிரதக்ஷிணம் செய்து வரவேண்டுமென்ற இம்முறை தவறி நேராக வந்துவிட்டாய்.

இப்படிக் காமதேனுவை அவமதித்ததால் புத்திரோத்பத்தி உனக்குத் தடைபட்டிருக்கிறது. பூஜிக்க வேண்டியவர்களை பூஜிக்கத்தவறு வது க்ஷேமத்திற்குத் தடை செய்யுமல்லவா. இப்பொழுது காம தேனு பாதாளலோகத்தில் வருணன் செய்யும் ஸத்ரயாகத்திற்கு வேண்டிய ஹவிஸ்ஸைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகை யால் அது இங்கு வரமுடியாது. அதன் கன்றுன இந்த நந்தினியை அதற்குப் பிரதிநிதியாக (பதிலாக) வைத்து அதை நீ உனது பத்நி யுடன் பூஜித்து வரவேண்டும். அது சந்தோஷப்பட்டால் உனக்கு வேண்டியது கிடைக்கும். 73—81

23. இப்படி முனிவர் கூறும்போதே அவருக்கு ஹோமத்ரவ்யங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் நந்தினி என்கிற பசு வனத்திலிருந்து திரும்பிவந்தது. துளிர்போல் சிவப்பாக இருந்த வதன் நெற்றியில் வளைந்து வெளுப்பு ரோமத்தினுல் உண்டான மூன்றும் பிறை சந்தி ரன்போன்ற ஒரு ரேகை இருந்தது. நந்தினி தனது கன்றைப் பார்த்து சுரந்த பரிசுத்தமான தனது பாலினுல் பூமியை நனைத்துக்கொண்டு வந்தது. அது வரும்பொழுது கிளம்பிய தூளிகள் பக்கத்தில் நின்ற அரசனுக்கு மிகுந்த பரிசுத்தியை உண்டாக்கிற்று. 82—85

24. பார்த்த மாத்திரத்திலுலேயே க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய அப் பசுவைப் பார்த்து அறிவில் மிக்க அம் முனிவர் அரசனுடைய எண் ணம் அவசியம் நிறைவேறு மென்றறிந்து அவனைக் குறித்து இவ் வாறு சொன்னர் :—"அரசனே, பேரைச் சொல்லும்போதே மங்கள கரமான இப்பசு வந்தமையால் சீக்கிரமே நீ ஸித்தி பெறுவாய் என்று எண்ணிக் கொள். காய் கிழங்குகளையே புசித்து நியமத் துடன் இருந்து இதன் பின்சென்று இதை நீ சந்தோஷப் படுத்த வேண்டும். அது சென்றுல் நீயும் செல். நின்றுல் நில். படுத்தால் உட்கார். அது நீர் குடித்தால் நீயும் குடி. ஸுதக்ஷிணையும் பக்தி யோடு பூஜித்து பரிசுத்தையாக ஆசிரமத்தின் எல்லை வரையில் காலை யில் பின்சென்று ஸாயங்காலம் எதிர்கொண் டழைத்து வரட்டும். இப்படி அது அனுக்கிரகம் செய்யும்வரை அதை உபசரிப்பாயாக. உனக்கு ஒரு இடையூறு மில்லாமல் இருக்கவேண்டும். நல்ல புத்தி ரனும் உண்டாகவேண்டும்." என்று. 86—91

25. சிஷ்யனுன அரசன் வணக்கத்தோடும் ப்ரீதியோடும் 'அப்படியே' என்று குருவான மகரிஷியின் கட்டளையை ஏற்றுன். 92

26. பிறகு 'நீ போய் படுத்துக்கொள்' என்று அனுமதிகொடுத்து முனி வர் அரசனை அனுப்பினுர். 93

27. அவர் தனது தபோபலத்தினுல் அரசனுக்குரிய ஆஹாரத்தை ஸம்பாதித்து அவனுக்குக் கொடுக்கக் கூடுமாயினும் அவன் அனுஷ்டிக்கப் போகும் விரதத்தை உத்தேசித்து வனத்தில் கிடைக்கக் கூடிய ஆஹாரத்தையே ஏற்பாடு செய்தார். 94

28. முனிவர் காட்டிய பர்ணசாலையில் தனது பத்நியோடு படுத்திருந்து இரவைக் கழித்து விடியற்காலையில் முனிவரது சிஷ்யர்கள் வேதாத்யயனம் செய்வதைக் கேட்டு எழுந்திருந்தான். 95

இரண்டாவது ஸர்க்கம்.

1. மேயும்பொருட்டு காட்டிற்கு ஓட்டிக்கொண்டு போவதற்காக அரசன் முனிவரின் பசுவை அவிழ்த்து விட்டான். 1

2. அரசனது தர்மபத்நியான ஸுதக்ஷிணை காட்டுக்குப்போகும் பசுவின் பின் சென்றுள்.

3. தனது தர்மபத்னியைத் திருப்பி அனுப்பிவிட்டு அரசன் பசுவைப் பாதுகாத்தான். 3

4. தன்னுடன் வந்த பரிஜனங்களையும் தடுத்துத் திருப்பி அனுப்பினுன். 4

5. ருசியுள்ள இளம்புற்களைக் கொடுத்தும், சொறிந்தும், ஈக்களை ஓட்டியும், தடுக்காமல் அது போனவழியே போகவிடுத்தும் உபசாரம் செய்தான். 5

6. அது நிற்கும்போது நிற்பதும், போகும்போது போவதும், படுக்கும் போது உட்காருவதும், அது நீர் குடிக்கும்போது தானும் குடிப்பதுமாக இருந்தான். 6

7. அரசர்களும் மந்திரிகளும் மற்றும் பல பல பெரியமனிதர்களும் புடைசூழ ராஜ்யத்தில் இருந்து பழகிய அவ்வரசன் காட்டில் தனியே ஸஞ்சரித்தான். 7—8

8. ஆயினும் அங்குள்ள மரங்கள் தம்மீதுள்ள பக்ஷிகளின் இனிய சப்தமாகிற பேச்சைப்பேசி கட்டியங் கூற, பூங்கொடிகளாகிற கன்னிகள் உதிரும் புஷ்பங்களாகிற பொரியைத் தூவிக்கொண்டாட, அரசன் மான்கள் துள்ளி விளையாடுவதைப் பார்த்தும், துளைகளுள்ள மூங்கில்களில் பிரவேசித்து காற்று உண்டாக்குமினிய சப்தத்தைப் புல்லாங்குழலின் ஒலியைப்போல அனுபவித்தும், மரங்களை ஆட்டி உதிர்த்த பூக்களின் மணம் நிரம்பியதும் மலையருவிகளிலிருந்து வருவதுமான

குளிர்ந்த காற்றினால் சரீர ச்ரமத்தை நீக்கியும் வனத்தில் மகிழ்ந்தான். 9—13

9. அவனது மாகாத்மயத்தினால் மழை யில்லாமலே காட்டுத் தீ அணைந்தது. பழங்களும் புஷ்பங்களும் மிக வ்ருத்தி யடைந்தன. பிராணிகள் பரஸ்பரம் இயற்கையாய் உண்டான பகையை விட்டன. 14

10. ஸாயங்காலம் ஆயிற்று. பசு காட்டிலிருந்து ஆசிரமத்திற்குத் திரும்பிற்று. 15

11. அது முன்னேவர அரசன் அதன்பின் வந்தான். 16

12. காட்டிலுள்ள பிராணிகள் தமது இருப்பிடத்திற்குச் செல்வதையும் வனங்களில் இருள்சூழ்வதையும் அவன் பார்த்தான். 17

13. பசுவும் அரசனும் காட்டிலிருந்து வெளிப்பட்டு ஆச்ரமத்திற்கு வரும் வழியில் வந்தார்கள். 18

14. அரசனது தர்மபத்னி ஆசிரமத்திற்கு வெளியேவந்து பார்த்து வரவேற்றாள். 19—20

15. பிரதக்ஷிணமும் அர்ச்சனையும் செய்து பசுவை அவள் வணங்கினாள்.

16. பசு நின்று அவள்செய்த பூஜையை ஏற்றது. அதுவே வரப்போகும் அனுக்கிரகத்திற்கு அடையாளமாதலின் அதனால் இருவரும் மிக ஸந்தோஷித்தனர். 22

17. அரசன், குரு அவரது பத்தினி இருவரையும் வணங்கி ஸந்த்யாவந்தனம் செய்துவிட்டு, பால் கறந்தபிறகு மறுபடியும் நந்தினியின் அருகிற்சென்று நின்றான். 23

18. உபசாரத்திற்காக ஸமீபத்தில் வைக்கப்பட்ட தீபம் ஜ்வலிக்க, தனது பத்நியோடு அதனருகிலிருந்து உபசரித்து அது தூங்கினவுடன் தானும் சென்று படுத்துறங்கி அது தூங்கி யெழுந்தவுடன் விடியற்காலை தானும் எழுந்திருந்தான். 24

19. இப்படி ஸந்தானம் உண்டாவதற்காக அவன் பத்தினியுடன் நோற்ற நோன்பு 21-நாட்கள் நடந்தது. 25

20. மறுநாள் அவனுடைய பக்தியைப் பரீக்ஷிக்க எண்ணிய நந்தினி மேய்ந்துகொண்டேபோய் ஹிமாலயத்தின் ஒரு குகைக்குள் ப்ரவேசித்தது. 26

21. ஒரு துஷ்டஜந்துவும் அதைக் கொல்லாதென்ற நம்பிக்கையினால் அரசன் மலையினழகைப் பார்த்துக்கொண்டிருக்க அவனுக்குத் தெரியாமலேயே ஒரு சிங்கம் நந்தினியின் மேல் பாய்ந்து அதைப் பிடித்துக் கொண்டது. 27

22. உடனே அது கதறியதைக்கேட்டு அரசன் தனது பார்வையை அதன் மேல் திருப்பினான். 28

23. அதன்மேல் ஒரு சிங்கமிருப்பதைக் கண்டான். 29

24. உடனே அதைக்கொல்ல நினைத்து பரபரப்புடன் அம்பை எடுக்கப் போனான். 30

25. அப்பொழுது அவன்கை அப்படியே ஸ்தம்பித்து விட்டது. 31

26. தனது வீர்யம் தடை பட்டதைப் பார்த்து அவன் மிகவும் வருந்தினான். 32

27. அப்பொழுது அந்த சிங்கம் மனிதரின் பேச்சினால் அவனைப் பார்த்துச் சொல்லிற்று. 33

28. உனது வீர்யம் என்னிடத்தில் பலிக்காது. நான் பரமேச்வரனின் ஊழியன். இதோ இருக்கும் தேவதாரு வ்ருக்ஷத்தைப் பார். இதில் பரமேச்வரனுக்கும் பார்வதிக்கும் புத்திர வாத்ஸல்ய முண்டு. ஒரு ஸமயம் ஒரு காட்டுயானை இதை முறிக்க, அதனால் பார்வதி மிக வருத்தமடைய, பரமேச்சுவரன் இதைக் காப்பதற்காக என்னை இங்கே வைத்திருக்கிறார். சிங்க உருவத்தில் இருந்து, தானாக அருகில் வரும் பிராணிகளைப் புசிக்கும்படி எனக்குக் கட்டளை. ஆகையால் நான் இதைக்கொண்டு எனது பசியைத் தீர்த்துக்கொள்ளப் போகிறேன். நீ திரும்பிப் போகலாம். நீ வெட்கப்படவேண்டிய அவசிய மில்லை. உன் சக்தியைக் கடந்த விஷயமிது. 34—40

29. பரமேச்வரனுடைய ப்ரபாவத்தினால் தனது வீர்யம் தடைபட்டதென்பதனால் கொஞ்சம் ஆறுதலடைந்த அரசன் சிங்கத்திற்குப் பதிலுரைத்தான். 41—42

30. என்மனதிலுள்ளதை நான் சொல்லுகிறேன் என்பதை நீ அறிவாயாதலின் நான் சொல்லுகிறேன். அதை நீ கேட்கவேண்டும். பரமேச்வரனிடத்தில் எனக்குக் கௌரவம் உளதே. ஆகிலும் எனது குருவின் சொத்தான இப்பசுவை நான் உபேக்ஷிப்பதற்கில்லை. ஆகையால் எனது சரீரத்தை நீ ஆஹாரமாகக்கொண்டு இதை விட்டு விட வேண்டும். 43—45

31. ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு சிங்கம் அரசனைப்பார்த்துக் கூறிற்று. ஒரு சிறு வஸ்துவுக்காக உனது அகண்ட ராஜ்யத்தையும் நல்ல வயதுவாய்ந்த இவ்வழகிய சரீரத்தையும் விடுகிறேனென்பது பெருத்த முட்டாள்தனம். இந்த ஒரு பசு போன போதிலும் உலகத்திலுள்ள ஸர்வ ப்ரஜைகளையும் காப்பாற்றுவாயாதலின் உனது காருண்யத்திற்குக் குறைவில்லை. இந்த ஒரு பசுவிற்குப் பதிலாகக் கோடிக்கணக்கான பசுக்களைக் கொடுத்து உனது குருவின் கோபத்

தைத் தணித்துக் கொள்ளலாம். ஆகையால் இந்திர பதவிபோன்ற ராஜ்யத்தை அனுபவிக்கும்படி உன்னை நீ காப்பாற்றிக் கொள்வாய், என்று. 46—50

32. குகையில் ப்ரதித்வனி உண்டாகும்படி சிங்கம் இப்படி கம்பீரமாகப் பேசியவுடன் பசு மிகவும் தீனமாக இவனைப் பார்க்க, அதனால் இவனுக்குண்டான காருண்யம் மேலிட, அரசன் மறுபடியும் கூறினான். 51—52

33. ஆபத்தி லுள்ளவர்களைக் காப்பாற்றாத எனக்கு ராஜ்யத்தினாலாவதென்ன. பிராணனிருந்துதான் ஆவதென்ன. எத்தனைக் கோடிக் கணக்கான பசுக்களைக் கொடுத்தபோதிலும் இந்த நந்தினிக்குச் சமானமாகுமா: குருவின் கோபத்தை அவற்றால் ஒருநாளும் தணிக்க முடியாது. ஆகையால் எனது சரீரத்தைக் கொடுத்து இதைக் காப்பாற்றுவது எனது கடமை. அப்படியாகில் உன் ஆகாரத்திற்கும் குறைவு இல்லாமல் முனிவரது கர்மானுஷ்டானத்திற்கும் குறைவில்லாமல் செய்ததாகும். இந்த தேவதாரு வ்ருக்ஷத்தைக் காப்பாற்றுவதில் உனக்கு எவ்வளவு ஊற்றமிருக்கின்றதோ அவ்வளவு ஊற்றம் இப்பசுவைக் காப்பாற்றுவதில் எனக்கு இருக்கவேண்டியது நியாயமென்பதை நீ அறியவேண்டும். என்னிடத்தில் உனக்கு தயை இருக்கின்றதாயின், அதை நீ என்னுடைய இந்த மாம்ஸசரீரத்திலன்றி கீர்த்திமயமான சரீரத்தில் காட்டவேண்டும். பேச்சினால் நட்பு ஏற்படுகின்றது என்பர். இப்பொழுது உண்டான பேச்சினால் நானும் நீயும் நண்பர்களாகின்றோம். ஆகையால் நண்பனாகிய எனது விருப்பத்தை மறுக்காமல் நான் கோருவதை நீ நிறைவேற்ற வேண்டும். 53—58

34. அப்படியே ஆகட்டுமென்று சிங்கம் நந்தினியை விட்டுவிட்டது. உடனே அரசன் சிங்கத்தினருகில் சென்று தனது சரீரத்தை அதற்கு அர்ப்பணம் செய்தான். 59

35. சிங்கம் தன்மேல் பாயப்போகிறதென்று எதிர்பார்த்த அந்த க்ஷணத்தில் அவன் மேல் பூமாரி விழுந்தது. 60

36. 'குழந்தாய் எழுந்திரு' என்கிற வார்த்தையைக் கேட்டு நிமிர்ந்து நின்று எதிரில் தாய்போன்றிருந்த நந்தினியைக் கண்டான். சிங்கத்தைக் காணவில்லை. 61

37. ஆச்சரியத்துடன் நிற்குமவனைப் பார்த்து நந்தினி கூறியது-'உன்னை நான் பரீக்ஷித்தேன். மிகவும் ஸந்தோஷ மடைந்தேன். உனக்கு வேண்டியதைக் கேள்' என்று. 62—63

38. அரசன் கைகூப்பி ஸுதக்ஷிணையினிடத்தில் குணவானான புத்திரன் உண்டாக வேண்டுமென்று வரம் கோரினான். 64

39. அப்படியே உண்டாகட்டுமென்று கூறி நந்தினி 'இலைபறித்து எனது பாலைக்கறந்து குடி' என்று அவனை ஏவிற்று. 65

40. அரசன் 'தாயே! கன்று ஊட்டியும் முனிவர் ஹோமம் செய்தும் ஆனபிறகு அவரது அனுமதியின்பேரில் நான் உனதுபாலை அருந்துவேன்' என்றான். 66

41. இதனால் மேலும் ஸந்தோஷமடைந்த பசு காட்டிலிருந்து ஆசிரமத்திற்கு வரத் திரும்பியது. 67

42. அரசன் ஆசிரமத்திற்கு வந்து நந்தினி அருள்புரிந்ததை குருவினிடத்தில் விஜ்ஞாபித்துவிட்டுத் தனது பத்நிக்கும் விஸ்தாரமாய்க் கூறினான். 68

43. ஹோமம் நடந்தபிறகு அவரனுமதி பெற்று நந்தினியின்பாலை அவன் உட்கொண்டான். 69

44. மறுநாட் காலை பாரணை முடிந்தபிறகு வஸிஷ்ட முனிவர் அரசதம்பதிகளை அவர்களுடைய நாட்டிற்கு அனுப்பினார். 70

45. அரசன் அக்கினியையும் வஸிஷ்டரையும் அவரது பத்நியான அருந்ததியையும் கன்றுடனிருந்த நந்தினியையும் ப்ரதக்ஷிணம் செய்துவிட்டுப் புறப்பட்டுத் தேர் ஏறி பத்நியுடன் ஸுகமாக தனது தலைநகரத்திற்கு வந்து சேர்ந்தான். 71—72

46. அரசன் வருவதை அறிந்து ஜனங்கள் யாவரும் நகரத்திற்கு வெளியே சென்று அவனை வரவேற்று ஸந்தோஷித்தார்கள். 73

47. ஜனங்கள் நகரம் முழுவதும் அலங்கரித்துக் களிப்புற்றுக் கொண்டாட அரசன் நகரத்திற்குள் ப்ரவேசித்து மந்திரிகளிடத்தில் முன்பு தான் ஒப்புவித்த ராஜ்யபாரத்தை ஏற்றான். 74

48. பட்டமகிஷியாய் அரசனுடன் ஆசிரமத்திற்குச் சென்று வ்ரதானுஷ்டானம் செய்த ஸுதக்ஷிணை காலக்ரமத்தில் கர்ப்பம் தரித்தாள். 75

|| श्री श्रीनिवासपरब्रह्मणे नमः ||

காளிதாஸ மஹா கவி இயற்றிய

ரகுவம்ச மஹா காவ்யம்.

முதல் ஸர்க்கம்.

மங்களமாக முதலில் தெய்வ வணக்கம் செய்யப்படுகின்றது.

1. **वागर्थाविव संपृक्तौ वागर्थप्रतिपत्तये ।**
जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ ।। श्रीः ।।

वागर्थौ इव = *சொல்லும் பொருளும் போல*

संपृक्तौ = *சேர்ந்திருக்கின்ற,*

जगतः = *உலகத்திற்கு*

पितरौ = *தாயும் தகப்பனுமான*

पार्वतीपरमेश्वरौ = *பார்வதியையும் பரமேச்வரனையும்,*

वागर्थप्रतिपत्तये = *சொல்லையும் பொருளையுமறிவதற்காக*

वन्दे = *வணங்குகின்றேன்.*

வணங்குகின்றேன் என்பதாலேயே 'நான்' என்று கர்த்தா கிடைக்கின்றது. பார்வதியும் பரமேச்வரனும் இக்கவி வழிபடும் தெய்வம். ஆதலின் அவர்களை வணங்கியது.

என்ன பயனை விரும்பி இவ்வணக்கம் செய்தது? எனில், அது 'சொல்லையும் பொருளையும் அறிவதற்காக' என்று சொல்லப்பட்டது. ஒரு நூலை இயற்றும் பொழுது அதில் சொல்லவேண்டிய பொருளைப்பற்றியும், அதை இவ்விதச்சொற்களை இப்படி அமைத்துச் சொல்ல வேண்டுமென்று சொல்லைப்பற்றியும் ஆழ்ந்து முதிர்ந்த அறிவு வேண்டும். ஆகையால் கவி இந்நூலின் ஆரம்பத்தில் அதையே பயனாகக் கோரினார்.

இவ்வறிவைத் தருவதற்குப் பார்வதியும் பரமேசுவரனுந்தானா தகுதியுள்ளவர்கள் எனில் ஆம் என்கிறார் கவி. "பொருளும் சொல்லுமே பாஷை எனப்படுவது. இதைக் குழந்தைகள் கற்பது

தாய் தகப்பன் மூலமாகவே. இவர்கள் உலகத்திற்குத் தாய் தந்தை மார்கள். நானும் அவர்களது குழந்தைகளில் ஒருவன். ஆகவே எனக்குப் பாஷையைக் கற்பிக்க அவர்களே யன்றோ தகுந்தவர் கள்" என்று கருத்து.

இக்கவியைப் பெற்றெடுத்த தாயும் தந்தையுமாய் மனுஷ்யர்க ளாக இருவர் இருந்திருப்பரே. அவ்விருவருமே இக்கவியின் குழந் தைப் பருவத்தில் இவருக்கு பாஷா ஜ்ஞானத்தை உண்டுபண்ணி யிருப்பார்களே. இப்போது புதிதாய் பாஷா ஜ்ஞானம் பெற விரும்புவது என்ன? எனலாம். ஆனால் அவர்கள் கற்பித்த பாஷை உலக நடைக்கு மாத்திரம் போதுமே யல்லது நூலியற்றுவதற்குப் போதாது. இப்போது இக்கவி இயற்ற விரும்பும் நூலை இயற்று வதற்கு உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுடையவும் பொருள் களை அழகாகச் சொல்வதற்கேற்ற எண்ணிறந்த சொற்களுடைய வும் அறிவு அவசியம் வேண்டும். இதை ஒருவரும், மனுஷ்யர்க ளான, மிகச் சிற்றறிவே உள்ளவர்களான, தமது சாதாரண தாய் தந்தைகளிடமிருந்து பெற முடியாது. ஆதலால் உலகத்திற்கே தாய் தந்தையர்களும் ஸர்வஜ்ஞர்களுமான ஈச்வர தம்பதிகளிடமே நூலியற்றுவதற்குரிய சொற்பொருளறிவு பெற வேண்டும்.

இதனால் சாகுந்தலம் முதலிய நாடகங்களின் நாந்தீ ச்லோகங் களில் ஈச்வரன் ஒருவரையே எடுத்ததுபோல் இல்லாமல் இவ் விடத்தில் பார்வதியையும் சேர்த்து எடுத்தது ஏன் என்ற கேள்விக் கும் பதில் கூறப்பட்டதாகும். குழந்தைகள் பாஷையைக் கற்று பேசப் பழகுவதில் தகப்பன்போல் தாயும் பொறுப்பேற்கின்றாள். ஆகையால் இப்பிரகரணத்தில் இருவரையும் எடுத்து வணங்குவது அவச்யம் என்று கவி கருதினர்.

நமது ஸாதாரண தாய் தந்தையர்கள் மரிக்கும் ஸ்வபாவமுள்ள வர்கள். சேர்ந்தோ முன்னும் பின்னுமாகவோ அவர்கள் மரிப்பது நிச்சயம். உலகத் தாய் தந்தையர்களுக்கும் இவ்வித ஸம்பவம் உண்டோ எனில் இல்லவே இல்லை; என்கிற இவ்விஷயத்தை ஓர் உவமையால் கவி போதிக்கின்றார். சொல்லும் பொருளும் போல் சேர்ந்திருப்பவர்கள் இவர்கள். சொல் நித்யம். ஆதியு மில்லை. அந்தமுமில்லை. அதன் பொருள் ஜாதி அதாவது இனம். இதுவும் நித்யம். இப்படி நித்யமான சொல்லுக்கும் பொருளுக்கும்

உள்ள ஸம்பந்தமும் நித்யம். இவ்வுண்மை வ்யாகரண மீமாம்ஸா சாஸ்திரங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இப்படியே உலகத்துக்குத் தாயான பார்வதியும் நித்யை. ஆதியந்த மில்லாதவள். தந்தையான பரமேச்வரனும் அப்படியே. இவர்களுடைய ஸம்பந்தமுமப்படியே. இவ்விருவருக்கும் மரணமுமில்லை, பிரிவுமில்லை. முக்காலத்திலு மிருப்பவர்கள். அதிலும் சேர்ந்தே இருப்பவர்கள்.

இதனால் முக்காலத்திலுமுள்ள சொற்களையும் பொருள்களையும் தமது குழந்தைகளுக்குப் போதிக்கத்தக்க வன்மை யுள்ளவர்கள் என்றதாயிற்று. 'உவமையிற் சிறந்த கவி காளிதாஸன்' என்பது பிரஸித்தம். அதற்குத் தக்கபடி உவமையிலேயே தனது முதல் காவ்யத்தைத் தொடங்கி யிருக்கின்றார். இந்த உவமை அர்த்தாலங்காரம். அதாவது பொருள் அணி. वागर्थौ वागर्थ, गत पित, पा(र्वती) प (र), என்று சப்தாலங்காரமும் உள்ளது. இப்படி மேலும் கண்டு கொள்வது.

இங்குள்ள விருத்தம் அநுஷ்டுப் என்னும் சந்தஸ்ஸைச் சேர்ந்தது. ஒவ்வொரு பாதத்திலும் எட்டு அக்ஷரம் இருக்கும். கவிகள் இவ்வித காவ்யங்களில் உபயோகப்படுத்தும் விருத்தங்களுக்குள் இதுதான் மிகச் சிறியது. மிகவும் கௌரவிக்கத் தக்க விஷயங்களைப் பேசுமிடங்களில் இவ்விருத்தத்தை உபயோகிக்கின்றார்கள். (1)

2. क सूर्यप्रभवो वंशः क चाल्पविषया मतिः ।
तितीर्षुर्दुस्तरं मोहादुडुपेनास्मि सागरम् ॥

सूर्यप्रभवः = ஸூர்யனிடத்திலிருந்து உண்டான
वंशः = வம்சம்
क = எங்கே;
अल्पविषया = ஸ்வல்ப விஷயத்தையே பற்றி நிற்கும் (கொஞ்சமே அறிந்த)
मतिश्च = (எனது) அறிவுதான்
क = எங்கே.
दुस्तरं = கடக்க முடியாத
सागरं = கடலை
मोहात् = மூடத்தனத்தாலே (அறியாமையாலே)
उडुपेन = தெப்பக்கட்டையினால் (அல்லது பரிசலினால்)
तितीर्षुः = கடக்க விருப்புற்றவனாக
अस्मि = இருக்கின்றேன்.

தான் வழிபடும் தெய்வத்தை வணங்கினார். எதற்காக வணங்கினது என்றால், சொல் பொருள் அறிவுபெற என்றார். இதிலிருந்து

இவர் ஒரு நூல் இயற்ற முயல்கின்றார் என்பது தெரிந்தது. எதைப் பற்றியது அந்நூல் எனின், அதை இந்த ச்லோகத்தால் அறிவிக்கின்றார்—எனது புத்திக்கெல்லாம் எட்டாது அவ்வளவு பெருமையை உடைய ஸூர்ய வம்சத்தைப்பற்றி ஒரு நூல் எழுத விரும்புகின்றேன் என்று.

அந்த வம்சம் எங்கே, எனது இந்த மதி எங்கே! இதைக் கொண்டு அந்த வம்சத்தை வர்ணிப்பது முடியாத காரியமே. ஆயினும் வர்ணிக்க விரும்புகின்றேன். இது எப்படி இருக்கிறதென்றால் தெப்பத்தைக்கொண்டு ஸமுத்திரத்தைக்கடக்க விரும்புவது போல் இருக்கின்றது. என்ற உவமை இங்கு உள்ளடங்கி நிற்கின்றது. (2)

3. मन्दः कवियशःप्रार्थी गमिष्याम्युपहास्यताम् ।
प्रांशुलभ्ये फले लोभादुद्बाहुरिव वामनः ॥

मन्दः = மூடனாக இருந்து
कवियशःप्रार्थी = கவிகளின் புகழை விரும்பும் (நான்)
प्रांशुलभ्ये = உயரமுள்ள ஒருவன் எட்டிப் பறிக்கக் கூடிய
फले = பழத்தில் (உள்ள)
लोभात् = ஆசையாலே
उद्बाहुः = கையை உயர நீட்டி நிற்கின்ற
वामन इव = குள்ளன்போல்
उपहास्यताम् = (பிறர்) பரிஹஸிக்கும் நிலையை
गमिष्यामि = அடையப் போகின்றேன்.

நூல் எழுத விரும்புகின்றேன் என்றார். எவ்வித நூல் அது என்பதை இங்கு விளக்குகின்றார். ஸாதாரண நடையில் வெறுங் கதையாக வன்று நான் இயற்ற விரும்புவது. ஸாமான்ய ஜனங்களுக்குக் கிடைக்கவரிதான அழியாப் புகழ்பெற்ற வ்யாஸ வால்மீகிகள் செய்த மகா பாரத ராமாயணங்களில் காணப்படுவதான சிறந்த நடையில் மஹா காவ்யமாக இயற்ற விரும்புகின்றேன், என்றபடி.

"उद्बाहुभावमपहाय यथैव खर्वः
प्रांशुं फलार्थमभियाचति योगिचिन्त्य ।"

என்கிற ஸ்ரீ வேதாந்த தேசிகருடைய சரணாகதி தீபிகையிலுள்ள ச்லோகத்தில் இங்குள்ள उद्बाहु, प्रांशु, फल என்ற பதங்களும்

वामन என்கிற பதத்தின் பொருளேயே கூறுகின்ற खर्व பதமும் இருப்பதால் இந்த ரகுவம்ச ச்லோகம் ஸ்ரீதேசிகருடைய நினைவில் இருந்ததென்று சொல்வது உசிதம். ஸ்ரீதேசிகர் இவ்விடத்தில் "குள்ளனு யிருப்பவன் கையை உயரத் தூக்கி நிற்கும் நிலையைவிட்டு இப் பழத்தைப் பறித்துக் கொடு என்று உயரமாயிருப்பவனைக் கேட்பது போல" என்கிறார். இதிலிருந்து இவர் இந்த ரகுவம்ச ச்லோகத்தைப்பற்றி ஒரு கருத்தை வெளியிடுகின்றார் என்று தோன்றுகிறது. பழத்தைப்பெற விரும்பும் குள்ளன், தானே அதைப் பறிக்க முடியாதாயினும் உயரமாயிருப்பவனைப் பறித்துத் தரும்படி கேட்டு அவன் மூலமாகப் பெற்று அப்பழத்தை அருந்தலாம். ஆனால் ஒருவன் மற்றொருவனை ஒரு காவியம் இயற்றித் தரும்படிக் கேட்டு அதன் மூலமாகக் கவி என்ற புகழைப்பெற முடியாது. அதனால் இழிவே உண்டாகும். இவ்வளவு அருமையானது காவ்யம் இயற்றி அடையவேண்டிய புகழ்—என்று.

मन्दः என்று சனிக்கும் **कविः** என்று சுக்கிரனுக்கும் பெயர் உண்டு. அதனால் 'சனியாயிருந்து சுக்கிரனுடைய புகழ்பெற விரும்புபவனுய்ப் பரிஹஸிக்கப்படும் நிலையை அடையப்போகின்றேன்' என்றும் இவ்விடத்தில் பொருள் என்று ஒரு ரஸிகர் கூறினர்.

4. **अथवा कृतवाग्द्वारे वंशेऽस्मिन् पूर्वसूरिभिः ।**
मणौ वज्रसमुत्कीर्णे सूत्रस्येवास्ति मे गतिः ॥

अथवा = அல்லது (இல்லாவிட்டால்)

पूर्वसूरिभिः = முன்னிருந்த அறிஞர்களால்

कृतवाग्द्वारे = செய்யப் பட்டதான வாக்கின் சந்தை உடைய (வாக்குப் புகக்கூடிய சந்துள்ளதாகச் செய்யப் பட்ட)

अस्मिन् = இந்த (ஸூர்ய னுடையதான)

वंशे = வம்சத்தில்

मे = எனக்கு

वज्रसमुत्कीर्णे = வஜ்ரத்தினுல் துளைக்கப்பட்ட

मणौ = ரத்தினத்தில்

सूत्रस्येव = நூலுக்குப்போல்

गतिः = போக்கு, நுழைதல், ப்ரவேசம்

अस्ति = உளது.

ஸூர்யவம்சத்தைப் பற்றி மஹா காவ்யம் ஒன்று இயற்ற விரும்புகின்றேன். ஆனல் விஷயமான வம்சத்தின் பெருமையும்

என் புத்திக்கு எட்டாதது; மஹாகாவ்யம் இயற்றுவதும் எனது சக்திக்கு விஞ்சியது. ஆகவே இது கூடாத காரியம் என்று கீழ் இரண்டு ச்லோகங்களில் கருதி நின்றார் கவி. இனி ஒருவிதமாய் நான் செய்யக்கூடிய காரியமே இது என்று பக்ஷாந்தரத்தைச் சொல்லுகிறார்—அதவா (இல்லாவிட்டால்) என்று. "எனது சொந்த புத்தியையும் சக்தியையும் மாத்திரம் வைத்துக் கொண்டு இக்காரியம் செய்ய முடியாது, என்பது வாஸ்தவந்தான். ஆயினும் முன்னோர்களான வால்மீகி, வ்யாஸர், ஜைமினி, இவர்கள் முதலான பெரியோர்கள் இவ்விஷயத்தில் வழிகாட்டி யிருக்கின்றமையால் அவ்வழியைப் பின்பற்றி நானும் இக்காரியத்தை ஒருவாறு தலைக்கட்ட இயலும்" என்று கருத்து.

இன்னும் ஸூக்ஷ்மமாகக் கவனித்தால்—"இன்னது விஷயம் என்று இரண்டாவது ச்லோகத்தில் சொன்னார். இன்னவிதமான நூல் இயற்ற விரும்புகிறேன் என்று மூன்றாவதில் சொன்னார். இவ்விதமான நூல் இயற்றுவதற்கு வழிகாட்டிகளான மஹான்களை இந்த நான்காவது ச்லோகத்தில் வழிபட்டார்" என்பது விளங்கும்.

உபமாந வர்க்கத்தில் மணி என்றதனால் உபமேயமான வம்சத்தின் பெருமையும் வஜ்ரமென்றதால் முன்னோர்களுடைய புத்தி வன்மையும், நூல் (ஸூத்ரம்) என்றதால் முன்னோர்களைக் காட்டிலும் தனக்குள்ள சிறுமையும், வெகு அழகாகக் காண்பிக்கப் பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

कृतं रामायणादिप्रबन्धरूपा या वाक् सैव द्वारं प्रवेशो यस्य तस्मिन् । என்பது மல்லிநாதர் காட்டிய விக்ரஹம். ரகுகுலம் ஒரு பெரிய கோட்டை. ஒருவாயில் இல்லாமல் அதில் நுழைய முடியாது. ராமாயணம் முதலிய நூல்களே வாயில். அந்த வழியாக நாம் உட்பிரவேசிக்க முடிந்தது, என்றதாயிற்று. இதன்படி 'कृत = செய்யப்பட்ட वाग्द्वारे = வாக்காகிற வாயிலை உடைய' என்று பொருள் கூற வேண்டும். 'வாக்குப் புகக்கூடிய சந்துள்ளதாகச் செய்யப்பட்ட' என்று முன் கூறிய பொருளின்படி கருத்து என்னவெனில்—ரகுகுலமாகிற கோட்டையுள் பிரவேசிப்பதற்கு அதன் மேன்மைக்குக் காரணமாகிய குணங்கள் இவை, இவ்விதமானவை, இவற்றை இப்படி இப்படி வர்ணிக்க வேண்டும் என்கிற அறிவே வாயில். இவ்விதமான இந்த வாயிலைத் தாமே தமது புத்தியாலமைத்துப் பிர

வேசித்து வால்மீகி முதலிய முற் காலத்துக் கவிகள் தமது நூல்களை இயற்றினர். அவர்களமைத்த அதே வாயில் வழியாக நானும் பிரவேசித்து அக்குலத்தின் பெருமையை அறிந்து ஒரு காவியத்தை இயற்றுகிறேன்—என்பது. (4)

5. सोऽहमाजन्मशुद्धानामाफलोदयकर्मणाम् ।
आसमुद्रक्षितीशानामानाकरथवर्त्मनाम् ॥

सः = அப்படிப்பட்ட (சிற்றறிவேயுள்ளவனாயினும் பெரியோர்கள் போன வழியிலே போவதாகத் தீர்மானமுள்ள)

अहम् = நான்

आजन्म = பிறப்பு முதல்

शुद्धानाम् = சுத்தர்களும்,

आफलोदय = கோரிய பலமுண்டாகும் வரை

कर्मणाम् = காரியத்தைச் செய்யுமவர்களும்,

आसमुद्र = ஸமுத்திரம் வரையிலுள்ள

क्षिति = பூமிக்கு

ईशानाम् = அதிபதிகளும்,

आनाक = சுவர்க்கம் வரை

रथवर्त्मनाम् = தேர் (செல்லும்) வழியை உடையவர்களும், (இவ்விசேஷணங்களுக்கும் இதற்கடுத்த மூன்று ச்லோகங்களிலுள்ள விசேஷணங்களுக்கும் 9 வது ச்லோகத்திலுள்ள रघूणां என்ற பதத்தோடு அன்வயம்.)

6. यथाविधिहुताग्नीनां यथाकामार्चितार्थिनाम् ।
यथापराधदण्डानां यथाकालप्रबोधिनाम् ॥

यथाविधि = (சாஸ்திரம்) விதித்தபடி

हुत = ஹோமம் செய்யப்பட்ட

अग्नीनाम् = அக்னிகளை உடையவர்களும் (விதிப்படி அக்னிஹோத்ரம் முதலிய தர்மங்களைச் செய்கின்றவர்களும்),

यथापराधदण्डानाम् = குற்றத்திற்குத் தகுந்தபடி தண்டிப்பவர்களும்,

यथाकामार्चितार्थिनाम् = (யாசகர்களை) அவர்கள் விருப்பப்படி வெகுமானிக்கின்றவர்களும், (வேண்டியவரையில் கொடுத்து யாசகர்களைத் திருப்தி செய்கின்றவர்களும்),

यथाकाल = காலம் தவறாமல்

प्रबोधिनाम् = விழித்துக் கொள்ளும் தன்மையுடையவர்களும்,

7. त्यागाय सम्भृतार्थानां सत्याय मितभाषिणाम् ।
यशसे विजिगीषूणाम् प्रजायै गृहमेधिनाम् ॥

त्यागाय = த்யாகம் செய்வதற்காக (கொடுப்பதற்காக)

सम्भृतार्थानाम् = பொருள் சேர்த்தவர்களும்,

सत्याय = உண்மைக்காக

मितभाषिणाम् = கொஞ்சமாகவே பேசியவர்களும்,

यशसे = புகழுக்காக

विजिगीषूणाम् = வெல்ல விரும்பியவர்களும்,

प्रजायै = புத்ர ஸந்தாநத்திற்காக

गृहमेधिनाम् = விவாஹம் செய்து கொண்டவர்களும்,

8. शैशवेऽभ्यस्तविद्यानां यौवने विषयैषिणाम् ।
वार्धके मुनिवृत्तीनां योगेनान्ते तनुत्यजाम् ॥

शैशवे = பால்யப் பருவத்தில்

अभ्यस्तविद्यानाम् = வித்யாப்யாசம் செய்தவர்களும்,

यौवने = யௌவனப் பருவத்தில்

विषयैषिणाम् = போகங்களை விரும்பியவர்களும்,

वार्धके = முதிர்ந்த வயதில்

मुनिवृत्तीनाम् = முனிவர்களின் நிலையில் நின்றவர்களும்,

अन्ते = கடைசியில் (மரிக்கும் சமயத்திதில்)

योगेन = யோக முறையால் (பிராணனை அடக்கி 'ஸுஷும்நா' என்ற மத்ய நாடியில் செலுத்தி சிரஸிலுள்ள பிரம்மரந்த்ரத்தாலே வெளிக்கிளம்பி)

तनुत्यजाम् = சரீரத்தை விட்டவர்களுமான,

9. रघूणामन्वयं वक्ष्ये तनुवाग्विभवोऽपि सन् ।
तद्गुणैः कर्णमागत्य चापलाय प्रचोदितः ॥

रघूणाम् = ரகுமஹாராஜன் குலத்தில் உண்டான அரசர்களுடைய

अन्वयम् = வம்சத்தை (சந்ததிக்ரமத்தை; இவருடைய புத்ரரிவர் இவ்விதப் பெருமை வாய்ந்தவர் என்பதை)

तनु = அல்பமான

वाग् विभवः = வாக்கினுடைய சாமர்த்யத்தை உடையவனாக

सन्नपि = இருந்த போதிலும்

तद् = அந்தஅரசர்களுடைய

गुणैः = குணங்களாலே

कर्णम् = என் காது(க்குள்)
आगत्य = வந்து
चापलाय = (அவற்றைப் புகழ்ந்து ஒரு காவ்ய மியற்ற வேணு மென்று) ஆசைப்படும்படி (ஆசைப்பட்டுமுயலும்படி)
प्रचोदित: = மிகவும் தூண்டப்பட்ட வனாய்
वक्ष्ये = சொல்லப் போகிறேன்.

ரகுவம்ச மென்கிற காவ்யத்தை நான் இயற்றப் போகிறேன். நான் இயற்றப் போகும் காவ்யத்திற்கு ரகுவம்சம் என்று பெயர்; என்றவிது இந்த மஹாவாக்யத்தில் பிரதானமாய்க் கூறப்படுகின்றது. பெரியோர் போன வழியே போகின்றேனாகையால் விரும்பிய காவ்யத்தை இயற்ற முடியு மென்பதற்காக 'सोऽहं அப்படிப் பட்ட நான்' என்றார். 'சக்தியில்லாத போது இவ்வளவு கஷ்டப் பட்டாவது காவ்யம் இயற்ற முயல்வது ஏன். வெறுமனே இருக்கக் கூடாதா' என்ற கேள்விக்குப் பதில் அளிப்பதற்காக तनुवाग्...என்றாரம்பித்து प्रचोदित: என்கிற வரையில் கூறினார். எனக்குச் சக்தி இல்லை என்பது உண்மை. ஆயினும் அவ்வரசர்களின் குணங்களைக் கேட்டறிந்த பிறகு நான் வெறுமனே இருப்பது கூடாது போயிற்று. "இவ்வித குணங்களைப் பெற்ற அரசர்களைப் புகழாமலா நாம் இருப்பது. எப்படியும் இவர்களைப் பற்றி ஒரு காவ்யம் இயற்றியே யாகவேண்டும்" என்றிப்படி அக்குணங்கள் என்னைத் தூண்டின. ஆகையால் ப்ரவர்த்திக்கின்றேன் என்று கருத்து. இப்படித் தூண்டிய குணங்கள் எவை யெனில் அவற்றை आजन्मशुद्धानाम् என்று தொடங்கி விளங்க வைக்கின்றார். குணங்கள் இத்தனை என்று வரையறை இல்லை. ஆயினும் பிரதானமான பதினாறு இங்கு கூறப்படுகின்றன. இவற்றில் ஒவ்வொன்றும் சாதாரணமாக மற்ற அரசர்கள் பெற முடியாத குணம் என்பதைத் தாமே கண்டு கொள்வது.

பிறப்பு முதல் இறப்பு வரையில் இவ்வரசர்களைப் பற்றிய ஒவ்வொரு விஷயமும் மிகச் சிறப்புற்றது என்று ஸூசனை செய்யக் கருதி முதலில் 'பிறவி முதல் சுத்தர்களான' என்றாரம்பித்துக் கடைசியில் 'யோக முறையால் சரீரத்தை விடுமவர்களான' என்று கூறி முடித்தார்.

பிறவியைக் கூறிய வுடனே இவ்வித பிறவிக் கேற்றவாறு தமது தொழிலை நடத்துவதில் ஒரு பொழுதும் உத்ஸாஹம் குன்றாத

வர்கள் என்று அவர்களது ஊக்கத்தைப் பேசினார் आफलोदय என்று. இவ்வித ஊக்கத்தின் பயனை आसमुद्र என்று அடுத்தபடி காட்டினார். இதனால் இவர்களின் பெருமை இப்பூவுலகைப் பற்றி மாத்திரமே உளதென்று தோன்றுகிறது. அப்படியல்ல என்பதற்காக आनाक என்றார். தமது ரதத்திலேறி ஸ்வர்க்க லோகம் போகக் கூடிய பெருமையும் வாய்ந்தவர்கள் இவர்கள். கடல் சூழ்ந்த இப்பூவுலகத்தின் ஏக சக்ராதிபதிகள் என்ற இவ்வளவே யன்று, என்று கருத்து. आसमुद्र என்றதாலேயே இவர்களுடைய வீரத்தன்மை விளங்கிற்று. आनाक என்பதால் தேவர்களும் இவர்களின் உதவியைக் கோரும்படி அவ்வளவு பராக்ரமம் உள்ளவர்கள் என்று தோற்றுகிறது.

இப்படி இந்த ச்லோகத்தினால் இவர்களுடைய பிறவியின் சிறப்பும் உலகமாளும் திறனும் விளக்கப்பட்டன. இனி தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் - அறம், பொருள், இன்பம், வீடு - என்கிற நான்கு புருஷார்த்தங்களைப்பற்றி உள்ள சிறப்பை வரிசையாக மேல் மூன்று ச்லோகங்களால் விளக்குகின்றார். அவற்றில் அறமே தானம், தர்மம் எனப் பிரித்துப் பேசப்படுகின்றது. தானமாவது கொடை; மனுஷ்யர்களுக்கு வேண்டிய பொருளைக் கொடுப்பது. அக்னியில் ஹோமம் செய்து தேவர்களுக்குக் கொடுப்பது தர்மம். தர்மங்களைச் சொல்ல வந்த தர்ம சாஸ்திரங்கள் ஆசாரம் வ்யவஹாரம் என்றிப்படி வகுத்துச் சொல்லுகின்றன. இதில் ஆசாரமாவது அனுஷ்டானம். அதாவது விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்வதும் விலக்கப்பட்ட கருமங்களைத் தவிர்ப்பதும். மேற் கூறிய தர்மமும் தானமும் இவ்வித ஆசாரத்திலேயே அடங்குகின்றன. வ்யவஹாரமாவது ஒருவன் செய்ய வேண்டியதைச் செய்யாத போதும், செய்யக் கூடாததைச் செய்யும் போதும், அரசன் முதலியோர் விசாரித்து நியாயம் நடத்துவது. இவ்வாறு மூன்று பிரிவுகள் தர்மத்திற்கு உள்ளன - தானம், தர்மம், வ்யவஹாரம் என்று. இவற்றில் தேவர்களை உத்தேசித்துச் செய்யப்படுவதான தர்மத்தின் சிறப்பை முன்னம் கூறினார் यथाविधि என்று. பிறகு மனுஷ்யர்களைப்பற்றிச் செய்யப்படுவதான தானத்தின் சிறப்பைக் கூறினார் यथाकाम என்று. இங்கு சிஷ்ட பரிபாலனம் கருத்தில் நின்றது. பிறகு வ்யவஹாரத்தைப்பற்றி வந்த சிறப்பைக் கூறினார் यथापराध என்று. இதனால் துஷ்ட நிக்ரஹம் குறிக்கப்பட்டது. அரசர்

களால் தண்டிக்கப்படும் குற்றவாளிகளில் பலர் "நாம் செய்த குற்றத்திற்காக நாம் தண்டிக்கப் பெற்றோம். இது ந்யாயமே. இதில் அரசன் மேல் கோபித்துக் கொள்வது தகாது" என்ற விவேகம் சிறிதுமின்றி, அரசனைக் கொல்ல எப்பொழுது ஸமயம் கிடைக்குமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்து பழிவாங்க முயற்சி செய்வார்கள். மிகுந்த முன் யோசனையுடன் இவர்கள் போக்கை எல்லாம் அறிந்து தம்மைக் காத்துக் கொள்ளாத அரசர்கள் இவ்விதமானவர்களால் தாக்கப்பட்டு முடிந்து போவது நிச்சயம். ஆகவே அரசர்கள் தக்க காலங்களில் விழிப்புற்றிருக்க வேண்டும். ரகு குலத்தரசர்கள் இப்படி இருந்தார்கள் என்கிறார் கவி யதாகால என்று.

இனி அர்த்தத்தின் அதாவது பொருளின் சிறப்புக் கூறப்படுகின்றது त्यागाय என்று. இப்படி விடுவதற்காகவே பொருள் ஈட்டப்பட்டது என்றவுடன் அதிகமாய் விடாமல் இருப்பதற்காக ஸம்பாதிக்கப்பட்ட விஷயம் ஒன்று நினைவிற்கு வந்தது. அதைக் கூறுகின்றார் सत्याय என்று. வாக்கு வன்மையைப் பெற்றிருப்பர். ஆயினும் வாக்கை விடார்கள், பொய் ஏதாகிலும் வந்து விடுமோ என்று பயந்து. மிகமிகக் கொடுத்தும் ஒருகாலும் சிறிதளவும் தற்புகழ்ச்சி செய்து கொள்ள மாட்டார்கள் என்றவிது இங்கு ஆழ்ந்து பார்க்க வேண்டிய வ்யங்க்யப் பொருள். त्यागे श्लाघाविपर्ययः என்று 22 வது ச்லோகத்தில் கூறியது இங்குள்ள இக்கருத்தை உறுதிப்படுத்துகின்றது.

கொடுப்பதற்காகப் பணம் சேர்ப்பவர்கள் என்றார். பணம் சேர்ப்பது எப்படி? மற்ற அரசர்களை வென்று அவர்களிடத்திலிருந்து கப்பம் பெற்றுத்தான். கொடுக்கும் ஸ்வபாவமுள்ளவர்கள் இப்படிச் சிலரை வென்று ஏன் பணம் பெற வேண்டும்? பலாத்காரமாகச் சிலருடைய பணத்தை வாங்கி வேறு சிலருக்கு அல்லது பலருக்குக் கொடுப்பதில் என்ன பெருமை? என்று ஒரு சங்கை உண்டாகலாம். இதற்குப் பரிஹாரமாக यशसे என்கிறார். அரசர்களுக்கு மேன்மை புஜபலத்தினால். ஸூர்ய குலத்தரசர்கள் புஜ பலத்தில் நிகரற்றவர் என்று புகழ் பெற்றவர்கள். இதனாலேயே இவர்கள் கடல் சூழ்ந்த இப் பூமிக்கு ஏக சக்ராதிபதி யாயினர். தமது குலத்திற்குள்ள இச்சிறப்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது இவர்களுடைய கடமையாயிற்று. ஆகவே இக்குலத்தில் உண்டான

ஒவ்வொரு அரசனும் உலகத்திலுள்ள மற்றெல்லா அரசர்களையும் வென்று தனது பராக்ரமத்தைக் காட்டினன். இப்படிப் புகழுக் காக வெல்லும் இவ்வரசர்களுக்குத் தோற்ற அரசர் கட்டும் கப்பம் அந்நிலையை அநுஸரித்துத் தானே வருகின்றதல்லது அப்பணத்தை உத்தேசித்து இவர்கள் பிறரை வெல்ல விரும்பினர் என்பதில்லை. அவர்கள் கொடுக்கும் பணத்தை மறுதளிக்காமல் பெற்றுச் சேமித்து வைப்பது அர்ஹறதை உள்ளவர்களுக்குக் கொடுப்பதற் காகவே என்று கருத்து. பொருள் இரண்டு விதம். நாம் இங்கு ஜீவித்திருக்கும் போதே நமக்கு உபயோகப் படக்கூடியது என்றும், அதற்குப் பிறகும் உபயோகப் படக்கூடியது என்றும். பணம் வீடு நிலம் முதலியன முதல் வகுப்பைச் சேர்ந்தவை. புத்திரப் பேறு இரண்டாம் வகுப்பு. இதிலும் குறைவற்றிருப்பவர்கள் இவ்வர சர்கள் என்கிறார் प्रजायै என்று. விவாஹம் செய்து கொள்ளும் போது 'தர்மத்திற்காகவும் ப்ரஜைக் (ஸந்தானத்திற்) காகவும் விவா ஹம் செய்து கொள்ளுகிறேன்' என்ற ஸங்கல்பத்துடன் செய்து கொள்வது சாஸ்திர முறைப்படி ஏற்பட்ட வழக்கம். ஆனால் இந்த ஸங்கல்பத்தை மறந்து காம போகத்தையே விரும்பிப் போதல் உலக வியற்கை. இத்தவறு இவ்வரசர்களுக்கு இல்லை என்பது இங்கு கருத்தில் நின்றது. தர்மம் முன்பே சொல்லப்பட்டதாதலின் ப்ரஜை மாத்திரம் இங்கே கூறப்பட்டது.

இனி காமம் மோக்ஷம் இவ்விரண்டின் சிறப்பும் ஒரே ச்லோ கத்தில் கூறப்படுகின்றது. காமமாவது விஷய போகம். இதில் உள்ள ஆசை தகுந்த வயது கழிந்த பிறகும் அநேகமாய் எல்லோ ருக்கும் இருந்து வருகின்றது. இந்நிலை இவ்வரசர்களுக்குக் கிடை யாது. தம் மனத்தைக் கட்டுப்படுத்தித் தமக்கு ஸ்வாதீனமாக வைத் துக் கொண்டவர்கள் இவர்கள். பரவசமாக இவர்களை மனது இழுக்காது. 'இது தகுந்த வயது, தகுந்த காலம், தகுந்த விஷயம், ஆகையால் இதை இப்போது உபயோகப் படுத்துவோம்' என்று தாமாக ஆராய்ந்து விஷய போகத்தை விரும்புவார்கள் என்றிப்படி இங்கே சிறப்பெனக் கொள்வது. இது यौवने विषयैषिणाम् என்றத ஞல் போதிக்கப்பட்டது. இவ்வித விஷய போகம் க்ருஹஸ்தாச்ர மத்தில் நடக்கும். இதற்கடுத்த வானப்ரஸ்தம், ஸன்ன்யாஸம் என்றவிந்த இரண்டு ஆச்ரமங்களிலும் மோக்ஷம் ப்ரதானமாய் விரும்பப்படும். இவ்விரண்டும் முறையே वार्धके என்றும், योगेनान्ते

என்றும் சொல்லப்பட்டன. அல்லது वार्धके என்ற விதனுள்ளே இவ்விரண்டு ஆச்ரமங்களையும் அடக்கி மரணத்தில் உள்ள சிறப்பு மாத்திரமே योगेनान्ते என்பதனுல் சொல்லப்பட்டதென்க. இவ்வாச்ரமங்களை எல்லாம் உள்ளபடி யறிந்து அநுஷ்டிப்பதற்குத் தகுந்த வித்யையை முதலில் பெற வேண்டும்: இது ப்ரஹ்மசர்யம் என்ற முதல் ஆச்ரமத்தில் இருந்து பெறப்படும். ஆகையால் இதை முதலில் கூறினர் शैशवे என்று.

விபக்தி என்ற வேற்றுமை இல்லாத அவ்யயீபாவஸமாஸ பதங்களான यथाविधि, आसमुद्र என்ற விவற்றை முதலில் ப்ரயோகித்தார். பிறகு त्यागाय என்று நான்காம் வேற்றுமைப் பதங்களையும் शैशवे என்று ஏழாம் வேற்றுமைப் பதங்களையும் ப்ரயோகித்தார் என்றிப்படியும் வரிசையைக் கொள்க.

இங்கு यथाविधि कृतेज्यस्य यथाकर्मार्चितार्थिनः என்றாரம்பித்து रघोरन्वयमाख्यास्ये என்று முடிப்பதே போதுமானதாயிருக்க, இப்படி ஏக வசனமில்லாது பஹுவசனமாகச் சொன்னது இவ்வம்சத்தில் உண்டான ஒவ்வொரு அரசனுக்கும் இக்குணங்கள் பெரும்பாலுமுள்ளனவென்று காட்டுவதற்காக என்றறிக. (9)

10. तं सन्तः श्रोतुमर्हन्ति सदसद्व्यक्तिहेतवः ।
हेम्नः संलक्ष्यते ह्यग्नौ विशुद्धिः श्यामिकाऽपि वा ॥

तम् = அதை (நான் சொல்லப்புகும் வம்சத்தை) (நான் செய்யப்புகும் ரகுவம்சம் என்கிற காவ்யத்தை)

सद् = நல்லது

असद् = கெட்டது (இவை)

व्यक्ति = புலப்படுவதற்கு

हेतवः = காரணர்களான

सन्तः = நல்லோர்கள் (அறிஞர்கள்)

श्रोतुम् अर्हन्ति = கேட்க வேண்டும்.

हेम्नः = தங்கத்தினுடைய

विशुद्धिः = தூய்மையோ, சுத்தியோ

श्यामिकाऽपि वा = கருமைதானே (லோஹாந்தரங்களின் சேர்க்கையால் உண்டான நிறமாற்றுக் குறைவு தானே)

अग्नौ हि = அக்னியிலன்றோ

संलक्ष्यते = செவ்வனே காணப்படுகின்றது.

ஒரு நூல் இயற்றிய பொழுது அதைப் பெரியோர்களிடத்தில் ஸமர்ப்பித்து அதிலுள்ள குண தோஷங்களை யறிய வேண்டும். காவ்ய மென்பது ஒரு தங்கம் போன்ற உயர்ந்த வஸ்து. ஆகிலும் அது தோஷங்கள் உள்ளதாயின் பித்தளை முதலிய வேறு லோஹம்

கலந்த தங்கம் போல் மதிப்புப் பெறாது. ஆதலின் தோஷங்களை அகற்ற வேண்டும். வேண்டிய சொல்லையும் பொருளையும் ஆராய்ந்து தொடுப்பதில் முனைந்து நிற்கும் கவிக்குத் தெரியாமலே தோஷங்கள் வந்து புகும். அவை கேட்போருக்கே புலப்படுவன. ஆகையால் செய்த நூலை அறிஞர்களைக் கொண்டு பரிசீலிப்பது இன்றியமையாதது என்று கருத்து.

தவிரவும் 'கவி, ஸஹ்ருதயர், ஆகிய இவ்விருவரும் ஸரஸ்வதியின் உண்மை ஸ்வரூபம்' என்றார் த்வனி வ்யாக்யானம் செய்த அபிநவகுப்தர் என்னும் பெரியவர். ஒரு கவி இயற்றிய காவ்யம் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் கவிகளின் கருத்தை உள்ளபடியறியுந் திறமை வாய்ந்து அதனால் ஸஹ்ருதயர் என்று பேர் பெற்ற பேரறிஞர்கள் அக்காவ்யத்தின் ஆழ்ந்த பொருளை எடுத்துக் காட்டாத வரையில் அக்காவ்யம் உலகத்திற்கு ஒரு பயனையும் அளிக்காது. ஆகவே இங்கு மகாகவி தான் இன்னது இவ்விதமாகச் செய்யப் போகிறேன் என்று கூறி முடித்து ஸஹ்ருதயர்கள் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்வதற்காக அவர்களைப் பிரார்த்திக்கிறார் என்றும் கொள்க.

இப்படிப் பத்து ச்லோகமுள்ள நான்முகம் என்கிற உபோத்காதம் முடிந்தது. இனி ஸாக்ஷாத் காவ்யத்தின் விஷயத்தைத் தொடங்குகின்றார்.

11. **वैवस्वतो मनुर्नाम माननीयो मनीषिणाम् ।**
आसीन्महीक्षितामाद्यः प्रणवश्छन्दसामिव ॥

मनीषिणाम् = மனத்தை அடக்கி ஆளும்படியான பெரியோர்களுக்கு (விவேகம் நிறையப் பெற்றவர்களுக்கு)
माननीयः = போற்றத்தகுந்தவராய்
वैवस्वतः = சூர்யனது புத்திரராகிய
मनुः नाम = மனு என்று ப்ரஸித்தி பெற்ற ஒருவர்
छन्दसाम् = வேதங்களுக்கு
प्रणव इव = ப்ரணவம்போல்
महीक्षिताम् = அரசர்களுக்கு
आद्यः = முதல்வராக
आसीत् = இருந்தார்.

मनीषिणां माननीयः, छन्दसां प्रणव इव महीक्षितामाद्यः, वैवस्वतो नाम वैवस्वत इति प्रसिद्धः मनुरासीत् என்று மல்லிநாதர் காட்டிய அந்வயம்.

ரகுவை முதலாக வைத்து இவருடைய வம்சத்தைச் சொல்வதாக ரகுவம்சமென்ற இப்பெயராலேயே அறிவித்தார். இவ்வம்

சத்திற்கு பரம மூலம் ஸூர்ய தேவன் என்று 'क्व सूर्यप्रभवो वंशः' என்ற வித்தால் காட்டினர். ஸூர்ய பகவானிடத்திலிருந்து தோன்றி இவ்வம்சத்திற்கு மூலபுருஷனுக விருந்த மஹாராஜனை இங்கே இப்போது கூறுகின்றார். தர்ம சாஸ்திரங்களுக்குள் சிறந்ததான மனுதர்ம சாஸ்த்ரம் இவருடைய தாதலின் 'பெரியோர்க் கெல்லாம் போற்றத் தகுந்தவர்' இவர் என்றது. 'மனு சொன்ன தெல்லாம் மருந்து', என்று வேதங்களே கூறுவதால் 'மனு என்று ப்ரஸித்தி பெற்ற' என்றது. கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் வேதங்களிலிருந்தும் அறிய முடியாத பரம ரஹஸ்யத்தை அர்ஜுனனுக்கு உபதேசித்துப் பிறகு நான்காவது அத்யாயத்தின் ஆரம்பத்தில் "இது புதிதாக இப்போது உனக்குச் சொல்லப் பட்டதல்ல. ஸ்ருஷ்டி காலத்திலேயே ஒரு பெரிய அரச குலத்திற்கு முதல் ப்ரவர்த்தகனை ஸூர்யனுக்கு நான் உபதேசித்தேன். பிறகு உபதேச பரம்பரையாக வந்து வெகு காலத்திற்குப் பிறகு நசித்துப் போய் விட்டது. அதையே மறுபடியும் உனக்கு இப்போது உபதேசித்தேன்" என்று சொல்லப் புகுந்து, "இந்த யோகத்தை விவஸ்வானுக்கு (ஸூர்யனுக்கு)ச் சொன்னேன். விவஸ்வான் மனுவுக்குச் சொன்னர். மனு இக்ஷ்வாகுவுக்குச் சொன்னர்" என்றார். இவ்வுபதேசம் பெற்ற பெருமை இவ்வரசர்களுக்கு உரியது என்பதைக் காட்டுவதற்காக 'विवस्वान् मनवे' என்று கீதையில் உள்ள பதங்களை அந்த வரிசையிலேயே ஸ்மரிக்கும்படி वैवस्वतो मनुः என்றார் இங்கு மஹா கவி.

இவ்வுபதேசத்தின் ஸாரமாவது-ஒவ்வொருவனும் தனது நிலைக்கேற்றதாக சாஸ்த்ரங்கள் கூறிய கடமையைச் செய்யத் தவறக் கூடாது. செய்யும் போது ஸங்க மில்லாமல், அதாவது அதில் பற்று அற்றுச் செய்ய வேண்டும் - என்பது. இப்படி ஸங்க மில்லாமல் கடமைகளைச் செய்வதற்கு முக்ய ஸாதநமாக வேண்டப்படுவது மனத்தைக் கட்டுப் படுத்துவதேயாம். தனது தகப்பனை ஸூர்ய பகவானிடத்திலிருந்து யோக ரஹஸ்யோபதேசம் பெற்ற மனுவுக்கு இவ்வித மனோஜயம் பூர்ணமாக விருந்தது என்பது இங்கே கருதப் பட்டது. இதனாலேயே 'வித்வான்களுக்குப் போற்றத் தக்கவர்.' என்றிப்படி வேறொரு விதமாகச் சொல்லாமல் 'மனத்தை அடக்கி ஆளும்படியான பெரியோர்க்கு' என்றிப்படிச் சொன்னர்.

'வேதங்களுக்கு ப்ரணவம் போல்' என்ற உபமையினால் முறை தவறாது நடக்கும் அரசர்கள் நமக்கு வேதங்கள் போல் போற்றத் தக்கவர்கள் என்றும், அரசர்களுக்குள்ளும் மனு மிக மிகப் போற்றத் தகுந்தவர் என்றும் அறியப்படும். அக்ஷரங்கள் யாவையும் ப்ரணவத்தில் அடங்கினவை. ப்ரணவத்தின் விரிவே வேதங்கள் எல்லாம். இப்படியே மனு போதித்த தர்மமே உலகில் பல விதமாய் நிற்கின்றது. இதன் விரிவுதான் எல்லா தர்மமும். இதை விட்டால் ஒரு தர்மமும் நிற்காது என்றும் அறிக.

12. **तदन्वये शुद्धिमति प्रसूतः शुद्धिमत्तरः ।**
दिलीप इति राजेन्दुरिन्दुः क्षीरनिधाविव ॥

शुद्धिमति = தூய்மையுள்ள (பரிசுத்தமான)	**दिलीप इति** = திலீபன் என்கிற
तदन्वये = அந்த மனுவின் வம்சத்தில்	**राजेन्दुः** = சிறந்த அரசன்
शुद्धिमत्तरः = மிகவும் தூய்மையுள்ள (மிகவும் பரிசுத்தனான)	**क्षीरनिधौ** = பாற்கடலில்
	इन्दुः इव = சந்திரன் போல்
	प्रसूतः = உண்டானான் (உண்டாகியிருந்தான்.)

अतिशयेन शुद्धिमान् शुद्धिमत्तरः । சுத்தமான குலத்தில் மிகவும் சுத்தமான ஒருவன் உண்டாகிறான். எல்லா ஸம்ஸ்காரங்களும் செவ்வனே செய்யப் பெற்று ஆசாரானுஷ்டானங்களைச் சிறிதும் தவறாது பரிபாலித்துவரும் ஒரு தகப்பனுக்கு உண்டாகும் புத்ரன் தகப்பன் சுத்தனானகையால் சுத்தனாகவே பிறக்கிறான். இந்தப் புத்திரனும் அவ்வித மாகவே எல்லா ஸம்ஸ்காரங்களையும் செய்யப் பெற்று ஆசாரானுஷ்டானங்களையும் செய்து வந்து ஒரு புத்திரனைப் பெற்றால் இப்புத்திரனது சுத்தி இவன் தகப்பன் சுத்தியை விட அதிகமானதாயிருக்கும். எனெனில் பாட்டன் சுத்தி ஒன்றாலேயே தகப்பனுக்குப் பிறப்பில் சுத்தி உண்டாயிற்று. பேரனை இவனுக்கோவெனில் பாட்டன் சுத்தி தகப்பன் சுத்தி ஆக இவ்விரண்டாலுமுண்டான சுத்தி உளது. ஆகவே இந்த சுத்தி அதிகம். இப்படி மேன் மேலும் கண்டு கொள்வது.

राजा इन्दुरिव राजेन्दुः । சந்திரன் போன்ற அரசன், சந்திரன்போல் உலகத்தை மகிழ்விக்கும் அரசன்.

கவிகள் சுத்தியை வெளுப்பு வர்ணமாக பாவிப்பது வழக்கம். ஆகையால் வெளுப்பான பாற்கடலும் சந்திரனும் உபமானமாக எடுக்கப்பட்டன. பாற் கடல் போல் பெரிது வம்சம். அதில் உண்டாகி அதைக் காட்டிலும் அதிக வெளுப்பான சந்திரன் போன்றவன் அவ் வம்சத்தில் உண்டான திலீபன்.

ரகுவம்சத்தைச் சொல்ல வந்தவர் ரகுவிலிருந்து தொடங்குவது தகும். ஆயினும் आजन्मशुद्धानां என்று முன்பு சொன்ன பிறவி முதல் உள்ள சுத்தியை ரகுவுக்கும் காட்ட வேண்டு மாதலின் ரகுவின் பிதாவான திலீபனிடத்திலிருந்து தொடங்குகின்றார். (12)

13· व्यूढोरस्को वृषस्कन्धः सालप्रांशुर्महाभुजः ।
आत्मकर्मक्षमं देहं क्षात्रो धर्म इवाश्रितः ॥

व्यूढोरस्कः = அகன்ற மார்பை உடைய,
वृषस्कन्धः = காளையின் கொண்டையை ஒத்த தோள்களுடைய,
सालप्रांशुः = ஸால (ஸர்ஜ) (தேக்கு) விருக்ஷம்போல் உயரமான,
महाभुजः = பெரிய (நீண்ட) புஜங்களை உடைய, (இக்காரணங்களால்)
आत्म = தனது
कर्म = தொழிலுக்கு
क्षमम् = ஏற்ற,
देहम् = உடலை (வடிவத்தை)
आश्रितः = எடுத்துக் கொண்ட
क्षात्रो धर्म इव = க்ஷத்ரிய ஜாதிக்குண்டான தர்மம் போல் (இருந்த)

"திலீபன் என்கிற சிறந்த அரசன் உண்டானன்" என்று கீழோடு அன்வயம்.

திலீபனது சரீரம் இங்கு வர்ணிக்கப் படுகிறது. திலீபனது முழு உருவத்தை எதிரில் நிறுத்தி உற்றுப் பார்க்க ஆரம்பித்தார் கவி. கவி அவ்வளவு உயர மில்லாதவர். ஆதலால் இவர் நேராகப் பார்த்த உடனே இவருடைய பார்வை திலீபனின் மார்பில் விழுந்தது. மார்பு அகன்று தேகப் பயிற்சியால் ஏற்பட்ட பாகுபாடு விளங்கத் தோன்றியது. ஆகவே அதை முதலில் சொன்னர். பிறகு அதற்கு மேல் தம் கண்களைச் செலுத்தினர். தோள்கள் தோன்றின. அவற்றை வர்ணித்தார். அதற்கு மேல் கண்கள் ஓடின. நிமிர்ந்து பார்க்க வேண்டியதாயிற்று இவர்க்கு. ஆகவே வெகு

உயரம் என்று இக் குணத்தைக் கூறினர். பிறகு மேலிருந்து கீழே பார்த்துக்கொண்டு வந்தார். இரண்டு புஜங்களும் தோன்றின. அவைகளைக் குறித்தார். ச்லோகத்தில் ஒரு பாதி ஆகி விட்டது. இனித் தனித் தனியே ஒவ்வொரு அவயவத்தையும் வர்ணித்தால் காவ்யம் வளரும். ஆகையால் சுருக்கமாக க்ஷத்ரியர்களுக்கு லக்ஷணப்படி எவ்வாறு சரீரம் இருக்க வேண்டுமோ அப்படியிருந்தது என்று கருதி ச்லோகத்தின் மற்றொரு பாதியை இயற்றி ச்லோகத்தை முடித்தார். (13)

14. सर्वातिरिक्तसारेण सर्वतेजोऽभिभाविना ।
स्थितः सर्वोन्नतेनोर्वीं क्रान्त्वा मेरुरिवात्मना ॥

सर्व = எல்லோரைக் காட்டிலும்	सर्व = எல்லோரைக் காட்டிலும்
अतिरिक्त = அதிகமான (எல்லோரையும் கடந்து நின்ற)	उन्नतेन = மேற்பட்ட (உயர்ந்த)
सारेण = பலத்தையுடைய,	आत्मना = தன்னால் (தனது ஸ்வரூபத்தால்)
सर्व = எல்லோருடைய	मेरुरिव = மேரு பர்வதம் போல்
तेजः = ப்ரகாசத்தையும்	उर्वीं = பெரிதான பூமியை
अभिभाविना = மறைக்கிற (இல்லையென்னும்படி யாக்குகிற) (இக்காரணம் பற்றி)	क्रान्त्वा = ஆக்ரமித்து
	स्थितः = இருந்த ;

அந்வயம் முன் போல். आत्मना என்பது மேருவின் ஸ்வரூபத்தையும் குறிக்கின்றது. அப்போது, எல்லாவற்றைக் காட்டிலும் அதிகமான ஸாராம்சத்தையுடைய, (தங்கமயமான தன் ஒளியினாலே) மற்றெல்லாவற்றினுடைய ப்ரகாசத்தையும் மறைக்கின்ற, அல்லது ஸூர்யன் சந்திரன் முதலிய ஸர்வ தேஜஸுக்களும் தனக்கு மேல் போகாமல் தன்னையே சுற்றி வரும்படி அவற்றை அடக்கி வைக்கின்ற, எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்த, என்றிப்படி முறையே மூன்று விசேஷணங்களுக்கும் அர்த்தங் கொள்ள வேண்டும்.

மேரு தங்க பர்வதமென்றும் ஜ்யோதிர் மண்டலம் முழுதும் அதையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றதென்றும் புராணங்கள் கூறுகின்றன,

க்ராந்த்வா (ஆக்ரமித்து) என்பதற்கு திலீபன் விஷயத்தில் 'ஆளு கைக்கு உட்படுத்தி' என்றும் மேரு விஷயத்தில் 'வ்யாபித்து' என்றும் தாத்பர்யம்.

முன் ச்லோகத்தில் தேகத்தின் ஸந்நிவேசத்தை, அதாவது அமைப்பை, வர்ணித்தார். இந்த ச்லோகத்தில் தேகத்தின் குணங்களை வர்ணிக்கிறார். பலம் அதாவது வன்மை, ஒளி, இவ்விரண்டு குணங்கள் வர்ணிக்கப்பட்டன. பார்த்தவர் கண் கூசும்படியும், மற்றவர் எவராகிலும் ஒளியே இல்லாதவர் என்னும்படியும், அவ்வளவு சிறப்புள்ளது தேகத்தின் பளபளப்பு. நடந்தால் பூமியே தாழ்கிறது என்னும்படி அவ்வளவு அதிகம் அதன் குருத்வம்; என்று இதன் கருத்து.

'ஸர்வ' என்று மூன்று தடவை யெடுத்தது 'ஒரு விஷயத்திலும் இவருக்கு நிகர் ஒருவருமிலர். எல்லா விஷயத்திலும் எல்லாரும் இவருக்குத் தாழ்ந்தவர்களே' என்பதற்காக. (14)

15. आकारसदृशप्रज्ञः प्रज्ञया सदृशागमः ।
आगमैस्सदृशारम्भ आरम्भसदृशोदयः ॥

आकार = உடலோடு (உடல்தோற்றத்தோடு)

सदृश = ஒத்த (ஆகாரத்திற்கேற்ற)

प्रज्ञः = புத்தியுள்ள,

प्रज्ञया = புத்தியோடு

सदृश = ஒத்த (புத்திக் கேற்ற)

आगमः = சாஸ்திரங்களை உடைய (கல்வியை உடைய),

आगमैः = சாஸ்திரங்களோடு

सदृश = ஒத்த (கல்விக் கேற்ற)

आरम्भः = கார்யங்களை உடைய,

आरम्भ = கார்யங்களோடு

सदृश = ஒத்த (கார்யங்களுக்கேற்ற)

उदयः = பல ஸித்தியையுடைய ;

திலீபனென்கிற அரச ச்ரேஷ்டன் உண்டானான் என்று முன்போலவே அந்வயம்.

கல்வியின் சிறப்பு இங்கு முக்கியமாய்க் கூறப்படுகின்றது. இதைக் கூறும் கவி நேராகக் கூறாது கவிகளுக்குரிய வக்ர மார்க்கத்தால் கூறுகின்றார். முன் இரண்டு ச்லோகங்களில் திலீபனுடைய உருவம் கூறப்பட்டது. அவ்விரண்டு ச்லோகங்களின் பொருளை

நன்ருய் அறிந்தவர் மனத்தில் அவ்வுருவத்தின் சிறப்பு இவ்விதமான தென்று ஸ்பஷ்டமாய்த் தோன்றி நிற்கும். இதிலிருந்து இதற்குத் தகுந்த புத்தி இன்னவிதமா யிருக்குமென்று நம்மையே மனத்தில் பாவித்துக் கொள்ளும்படி கவி உய்த்துணர வைக்கிருர். அவ்வித புத்தி திலீபனுக்கு இருந்ததென்கிருர்.

பிரஜ்ஞை என்ருல் புத்தி என்று ஸாமான்யமாய் அர்த்தம் சொல்வது வழக்கம். ஆனுல் உண்மையில் அது ஒரு சிறப்புப் பொருளைக் கூறுகின்றது. நடந்ததை மறவாமல் அப்படியே தரித்து வைத்துக் கொள்ளக் கூடிய அறிவு ஸ்ம்ருதி (நினைவு) எனப்படு கின்றது. வர்த்தமானத்தை அதாவது நடப்பதை அல்லது தற் கால விஷயத்தைச் செவ்வையாய் உணரும் அறிவு புத்தி எனப்படு கின்றது. வரப் போவதைத் செவ்வனே உணரும் அறிவு மதி. இம் மூன்று கால விஷயங்களையும் கூர்ந்து உணரக் கூடிய அறிவே பிரஜ்ஞை எனப் படுகின்றது. இவ்வித பிரஜ்ஞை திலீபனுக்கு சிறந்திருந்த தென்கிருர் கவி.

இத்தகைய பிரஜ்ஞை உள்ளவன் எப்படி எவ்வளவு கல்வி கற்க முடியுமோ அப்படி அவ்வளவு கல்வி கற்ருன் திலீபன் என் கிருர் மேல் प्रज्ञया सदृशागमः என்று. இப்படி சரீர பலம், கல்வி பலம், இவற்றைச் சொல்லி இவைகள் எல்லாம் வீணுகாமல் பெரும் பயனளித்தன என்கிருர் மேல். ஸர்வ ஜனங்களும் க்ஷேம மாயிருப்பதற்கேற்ற நீர்வசதி, நிலவசதி, முதலியன நிறைந்திருக் கும்படி பெரும் கார்யங்களைச் செய்வான். இக் கார்யங்களுக் கேற்றபடி உத்தேசித்த பலன் அபரிமிதமாக உண்டாகும். இப்படி உலகமெல்லாம் நிறைந்த ஐச்வர்யத்தோடும், அபரிமித ஆனந்தத் தோடும் வாழும்படி ராஜ்ய பரிபாலநம் செய்வதற் கேற்ற கல்விச் சிறப்பு திலீப மஹா ராஜனுக்கிருந்த தென்று கருத்து.

இந்த மூன்று ச்லோகங்களில் உள்ள விசேஷணங்களை அடுத்த மேல் ச்லோகத்திலுள்ள सः என்ற திதில் அந்வயித்தாலும் குற்ற மொன்றுமில்லை. (15)

16. भीमकान्तैर्नृपगुणैः स बभूवोपजीविनाम् ।
अधृष्यश्चाऽभिगम्यश्च यादोरत्नैरिवार्णवः ॥

सः = அந்த திலீப மஹாராஜன்
उपजीविनाम् = (தன்னை) அடுத்துப் பிழைப்பவர்களுக்கு
भीम = அச்சத்தைத் தருவனவாயும்
कान्तैः = விரும்பப் படுவனவாயும் உள்ள
नृप = அரசர்களுக்குரிய
गुणैः = குணங்களாலே
यादः = (திமிங்கிலம் முதலிய) நீர் வாழும் பிராணிகளாலும்
रत्नैः = ரத்தினங்களாலும்
अर्णव इव = ஸமுத்திரம் போல்
अधृष्यश्च — லேசாகக் கடக்க முடியாத (அவமதிக்கக் கூடாத) வனாகவும் (மிகுந்த பய பக்தியோடு பழக வேண்டியவனாகவும்)
अभिगम्यश्च — அணுகத் தகுந்தவனாகவும்
बभूव — இருந்தான்.

திலீபனுடைய ஸ்வரூபமும் ஸ்வபாவமும் கீழ் சொல்லப்பட்டன. இனி அவன் அரசு நடத்தும் சீர்மை கூறப்படுகின்றது. அதில் முதலில் அவன் தனது ஸொந்த பரிஜனங்களிடத்தில் எப்படி இருந்தான், அவர்களை எப்படி நடத்தினான் என்பது, இந்த ச்லோகத்தில் கூறப்படுகின்றது.

தன்னை அடுத்துப் பிழைக்கும் ஜனங்கள் தன்னிடத்தில் ஸர்வ ஸாதாரணமாகப் பழகி அச்சமற்று விளையாடும்படி ஒரு அரசன் அவர்களை விடுவானாகில், இவ்வித நிலை உண்டாகும்படி தான் இருந்தானாகில், அவன் வாக்கில் மதிப்பும் அவனிடத்தில் கௌரவமும் இவர்களுக்கு உண்டாகாதாகையால், ஒரு காரியமும் சரிவர நடைபெறாது. தனது பரிஜனங்களிடத்திலேயே மதிப்புப்பெற முடியாதவன் தேசத்திலுள்ள பிரஜைகளிடத்தில் மதிப்புப் பெறுவது மிகவும் அரிது. ஆகவே இவ்விதமானவன் அரசு புரிவதற்குத் தகுதியற்றவனாவான். இந்நிலை ஏற்படாவண்ணம் அரசனாயிருக்குமவனுக்குத் தனது பரிஜனங்கள் தன்னிடத்தில் பயத்தோடும் மரியாதையோடும் பழகும்படியான குணங்கள் இருக்க வேண்டும். இவ்விதமான குணங்கள் எவை எனில் தேஜஸ்ஸு, பலம், உறுதி, பெருந் தன்மை, காலந் தவறாமை என்ற இவை போன்றனவென்று நீதி சாஸ்திரகாரர் கூறினர். இவை எல்லாம் இங்கு भीम என்று சுருக்கமாகக் குறிக்கப்பட்டன. இவ்வித குணங்களைப் பெற்று ஒருவன் தனது ஜனங்கள் எப்பொழுதும் தன்னைக் கண்டவுடன் நடுங்கும்படி அவ்வளவு உக்ரமாகவே இருப்பானாகில், அவனாலும் உலகிற்கு ஒருவித நன்மையும் உண்டாகாது. அவனும்

'கொடுங்கோல் மன்னன்' என்று பேர் பெற்றுக் கடைசியில் கெடுவான். ஆகையால் தனது பரிஜனங்களும் மற்றவரும் தன்னை நெருங்கி வேண்டியதைப் பெற்றுத் தன்னை நேசிக்கும்படியான வேறுவித குணங்களும் வேண்டும். இவை யாவன - குலம், சீலம், தயை, தானம், தர்மம், ஸத்யம், செய்ந்நன்றி யறிதல், முதலியன. இவை இங்கு காந்தை: என்று குறிக்கப்பட்டன. இப்படி இரண்டுவிதமான குணங்களும் திலீபனிடத்தில் இருந்தன. ஆகையால் அண்டிப் பிழைப்பவர்கள் அவனிடத்தில் பயத்துடனும், மரியாதையுடனும், ப்ரீதியுடனும் இருந்து ஸுகமாய் வாழ்ந்தார்கள். இவ்விதச் சிறப்பு வாய்ந்தவன் என்றபடி. திமிங்கிலம் முதலிய அபாயகரமான பிராணிகள் இருப்பதால் ஸமுத்திரத்தில் இஷ்டப்படி இறங்கி விளையாட ஜனங்கள் பயப்படுகின்றனர். ரத்னங்கள் இருப்பதால் அவற்றிற்காக இறங்கவும் இறங்குகின்றனர். இதே போல் ப்ரக்ருதத்திலும். ஸமுத்ர உபமையால் திலீபனது பெருமை விளங்குவதைக் காண்க. (16)

17. रेखामात्रमपि क्षुण्णादा मनोर्वर्त्मनः परम् ।
न व्यतीयुः प्रजास्तस्य नियन्तुर्नेमिवृत्तयः ॥

नियन्तुः = அடக்கி ஆளுகின்ற
तस्य = அந்த திலீபனுடைய,
नेमिवृत्तयः = (வண்டிச்சக்ரத்தின் நுனி பாகமாகிய) வட்டையின் நிலைபோன்ற நிலையையுடைய
प्रजाः = பிரஜைகள் (குடிகள்)
आमनोः = மனு முதல்

क्षुण्णात् = அனுஷ்டித்து வரப்பட்ட (தேய்ந்த)
वर्त्मनः = வழியிலிருந்து
परम् = புறம்பே
रेखामात्रमपि = ஒரு கீற்றளவும் (மயிரிழை மாத்திரமும்)
न व्यतीयुः = கடந்து சென்றார்களில்லை (வழியை இம்மியளவும் கடந்தார்களில்லை).

இங்கு அரசன் தனது ப்ரஜைகளை எப்படி நடத்தினான், எப்படி ஆண்டான், என்பது கூறப்படுகின்றது. ஜனங்களில் இவரிவர்களுக்கு இது இது தர்மமென்று மனு தமது தர்ம சாஸ்திரத்தில் விளக்கியிருக்கின்றார். அதன்படியே அவர் காலம் முதல் ஜனங்கள் நடந்து வந்தனர். திலீபன் ஆளுகையிலும் ஜனங்கள் அப்படியே நடந்தார்கள். மனு காட்டிய வழியைச் சிறிதும் கடந்தனர் அல்லர். அரசன் திறமையற்றவனாகில் ஜனங்கள் தமக்குத் தோன்றிய

படி நடந்து பெருந் தீங்கை விளைவித்துக் கொள்வர். சாஸ்திர வரம்பை லக்ஷ்யம் செய்யாமல் மீறியே நடப்பர். இவ்வித நிலை திலீப ராஜ்யத்தில் ஏற்படவில்லை. அவன் வெகு திறமை வாய்ந்தவன். அவனைப் பார்த்து, அவனுக்குப் பயந்து, சாஸ்திரம் காட்டிய வழியே ஜனங்களில் ஒவ்வொருவரும் நடந்தனர்.

வண்டி ஓட்டுகிறவன் அசடனாகில் மாடுகள் இப்படியும் அப்படியும் இழுக்கும். அதனால் சக்கரங்கள் தேய்ந்த வழியே போகாமல் இப்பக்கமும் அப்பக்கமுமாக முட்டிச் சங்கட முண்டாகும். அவனே கெட்டிக்காரனாகில் மாடுகள் ஒழுங்காகப் போகும். சக்கரங்களும் முன் வண்டிகள் போய்த் தேய்ந்த வழியே போகும். ஒரு இம்மியளவும் இப்புறம் அப்புறம் செல்லா. அது போலவே இங்கும்.

விசாலமான இந்தப் பரதநாட்டிலுள்ள ஜனங்கள் எல்லோரையும் அடக்கி ஆளும்படியான அவ்வளவு திறமை வாய்ந்தவன் திலீப மஹாராஜன். கெட்டிக்காரனை வண்டிக்காரன் மாடுகளை அடித்துத் தொந்தரவு செய்யவே வேண்டியதில்லை. அவன் ஸுகமாய் உட்கார்ந்திருப்பான். மாடுகளின் கயிறுகளை கையில் பிடித்திருக்கலாம். அல்லது வண்டியின் ஒரு பக்கத்தில் கட்டி இருக்கலாம். மாடுகள் அவனது விருப்பப்படித் தாமாகவே ஒழுங்காகச் சென்று கொண்டிருக்கும். அதேபோல் அரசன் ஸமர்த்தனாகில் அவன் விருப்பப்படி பிரஜைகள் தாமாகவே நடப்பர். திலீபன் வெகு கெட்டிக்கார அரசனானையால் ப்ரஜைகள் தாமாகவே வெகு ஒழுங்காக நடந்து வந்தனர். (17)

18. प्रजानामेव भूत्यर्थं स ताभ्यो बलिमग्रहीत् ।
सहस्रगुणमुत्स्रष्टुमादत्ते हि रसं रविः ॥

सः = அந்த திலீபன்	बलिम् = வரியை
प्रजानाम् = ப்ரஜைகளுடைய	अग्रहीत = வாங்கினன்.
भूत्यर्थमेव = க்ஷேமத்திற்காகவே (அவைகள் சுகமாய் வாழ்வதன் பொருட்டு ஆயிரம் மடங்கு அதிகமாகச் செலவிடுவதற்காகவே)	रविः = ஸூர்யன்
	सहस्रगुण् ஆயிரம் மடங்காக
	उत्स्रष्टुं = விடுவதற்காக (பொழிவதற்காக)
	रसम् = ஜலத்தை
ताभ्यः = அவைகளிடத்திலிருந்து	आदत्ते हि = க்ரஹிக்கிறானன்றோ.

நதி, குளம், கிணறு, ஏரி, இவற்றின் ஜலத்தைத் தனது கிரணங்களால் க்ரஹித்து ஸூர்யன் அவற்றை வற்றச் செய்கிறான். பிறகு அவையெல்லாம் நிறையும்படியும் பயிர் செடி கொடிகள் செழிப்பாக வளர்ந்து ஆஹார வ்ருத்தி உண்டாம்படியும் ஏராளமான மழை பொழிகின்றான். இதற்காகவன்றி ஸூர்யன் தனக்காக ஜலத்தை க்ரஹிக்கிறான் இல்லை. இவ்விதமே திலீபன் ஜனங்களிடத்திலிருந்து வரி வசூல் செய்ததும்.

ப்ரஜைகளை ஆளுந் திறமை முன் சொல்லப்பட்டது. இனி ப்ரஜைகளுக்குச் செய்த நன்மையைச் சொல்ல வேண்டும். நன்மை செய்வதற்குப் பணம் வேண்டும். பணம் வரும் வழி என்ன எனில் அது இங்கே சொல்லப்பட்டது—ஜனங்களிடத்திலிருந்து வரி வசூலிப்பது அரசாங்கத்தின் பண வருமானத்திற்கு ஒரு வழி, என்று. இவ்வழியாக வந்த பணம் அரசாங்கத்தைச் சேர்ந்ததாகையால் இதை அரசன் தனது சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாதென்பதும் குறிப்பாகக் காட்டப்பட்டது. (18)

19. सेना परिच्छदस्तस्य द्वयमेवार्थसाधनम् ।
शास्त्रेष्वकुण्ठिता बुद्धिर्मौर्वी धनुषि चातता ॥

तस्य = அவனுக்கு
सेना = சேனை (படை) யானது
परिच्छदः = (வெண் குடை சாமரம் முதலியன போல்) கௌரவத்திற்காக ஏற்பட்ட வஸ்து.
अर्थसाधनम् = கருதிய காரியத்தை ஸாதிப்பது (நிறைவேற்றக் கருவியாயிருப்பது)
द्वयमेव = இரண்டே. (அவ்விரண்டும் எவை எனில்)
शास्त्रेषु = நீதி சாஸ்திரங்களில் (உள்ள)
अकुण्ठिता = தடுமாற்றமில்லாத
बुद्धिः = அறிவும்,
धनुषि = வில்லில்
आतता = (ஏற்றப்பட்ட) நீண்டு [நின்ற
मौर्वी च = நாணும்.

அரசர்கள் கற்க வேண்டிய அர்த்த நீதி சாஸ்திரங்களில் திலீபனது அறிவு அபாரம். அதனால் இந்த ஸமயத்தில் இந்த இடத்தில் இந்த தந்திரத்தைச் செய்ய வேண்டும். இந்த வேற்றரசனை இந்த விதமாக எதிர்த்து வசப்படுத்த வேண்டும் என்று தீர்மானிப்பான். தீர்மானித்தபடி தனது சேனையுடன் சென்று வெற்றி பெறுவான். இவ்வெற்றிக்கு அவனது சேனையின் பலமே யன்றி அவனது

சொந்த பராக்ரமமே முக்கிய காரணம். செய்யும் தீர்மானம் ஒழுங்கீனமாயிருந்தாலும், ஒழுங்கான தீர்மானப்படி காரியத்தைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய திறமையற்றிருந்தாலும் பயனொன்றுமில்லை. இப்படியிராமல் திலீபனிடத்தில் அறிவு திறமை இரண்டும் பூர்ணமாயிருந்தன. ஆகவே வேற்றரசர்களிடமிருந்து கப்பமாகப் பெறுவதும் பணம் வருவதற்கு ஒரு வழியாயிருந்தது என்பது கருதப்பட்டது எனக் கொள்க. (19)

20. तस्य संवृतमन्त्रस्य गूढाकारेङ्गितस्य च ।
फलानुमेयाः प्रारम्भाः संस्काराः प्राक्तना इव ॥

संवृत = செவ்வனே (வேறு ஒருவரும் அறிய முடியாமல்) காக்கப்பட்ட

मन्त्रस्य = மந்த்ராலோசனையை உடையவனும்

गूढ = வெளியில் தோன்றாத

आकार = முகம் புருவம் முதலியவற்றின் மாறுபாடு,

इङ्गितस्य च = உள்கருத்து, இவற்றை உடையவனுமான

तस्य = அவனுடைய

प्रारम्भाः = முயற்சிகள்

प्राक्तनाः = முன் (ஜன்மத்தில்) உண்டான

संस्कारा इव = வாஸனைகள் போல்

फल = பலங்களாலே (விளைவுகளாலே)

अनुमेयाः = அநுமிக்க (ஊஹிக்க)ப்பட வேண்டியவைகளாக (இருந்தன.)

வேற்றரசர்களை வெல்வது கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்டது. அப்படி அவர்களை வெல்வதற்காகத் திலீபன் செய்யும் முயற்சி முன்னாலேயே பிறர்க்குத் தெரியுமாகில் உத்தேசப்படி வெற்றி பெறுவது கஷ்டமாகும். ஆகவே விஷயங்களை மிக மிக ரஹஸ்யமாக வைத்திருக்க வேண்டியது அவச்யம். அப்படியே திலீபன் அரசாங்கத்தில் நடந்தது. வேற்றரசர்களுடைய ராஜதானியில் திடீரென்று யுத்தபேரி முழங்கும். திலீபன் படை கோட்டையை வளைத்துக் கொள்ளும். திலீபனைச் சரணமடைவது தவிர வேறு கதி அவ்வரசர்களுக்கு இராது. ஏராளமான காணிக்கையுடன் சரணம் புகுவார்கள். இப்படித் திலீபனது வெற்றி இருக்கும். இவ்வளவு பிரமாதமான படையெடுப்பு வெகு காலத்திற்கு முன்பே ஆலோசிக்கப்பட்டு அதற்குத் தக்க ஸகல ஏற்பாடுகளும் காலக்ரமத்தில் நடந்

இருக்கும். இதெல்லாம் யுத்த பேரியின் முழக்கத்திற்கு முன் ஒருவருக்கும் தெரியாது. தெரிவதானல் திலீபன் தனது மந்திரிகளுடன் மந்த்ராலோசனை நடத்தும்போது யாராவது ஒருவர் உற்றுக்கேட்டு அவர் மூலம் தெரியலாம். அதற்கு இடமே அங்கே அப்போது இருந்ததில்லை. மந்த்ராலோசனை செய்யும் இடத்தில் வேறொருவர் அணுகவும் முடியாது. அணுக முயற்சியும் நடவாது. மந்திரிகளிலேயே ஒருவர் மூலம் தெரியலாம். ஆனல் அவ்வளவு பொறுப்பற்ற, அல்பபுத்தியுள்ள மந்திரி ஒருவரும் அங்கில்லை. ராஜ ரஹஸ்யம் தன் மூலம் வெளிவந்தால் தனது தலையே போய்விடுமென்று ஒவ்வொரு மந்திரியும்கூட பயப்படும்படி அவ்வளவு உக்ரமானது திலீபனது ஆஜ்ஞை. 'நமது அரசன் செய்யும் மந்திராலோசனை எல்லாம் நமது க்ஷேமத்திற்காகவே யன்றே. அதை நாம் முன்னலேயே தெரிந்து கொண்டு என்ன செய்ய வேண்டும். தெரிந்து கொண்டு ஏதோ தவறி வெளியிட்டால் நமது ராஜ்யத்திற்குத்தானே தீங்கு' என்று ஜனங்களும் விவேகம் பெற்றிருந்தனர். இஃதெல்லாம் संवृतमन्त्रस्य என்றபதத்தின் கருத்து.

மந்திராலோசனை முடிந்து வெளியில் வரும்போது உள்ளே நடந்த ஆலோசனைக்குத் தக்க தீர்மானத்தைக் காட்டக் கூடிய அறிகுறிகள் எவையாவது முகம் முதலியவற்றில் தோற்றுமாகில் அதைக் கொண்டே ஜனங்கள் ஊஹம் செய்து உலகமெல்லாம் பரவும்படியான பெரும் வதந்திகளைக் கிளப்பிவிடுவார்கள். ஏதோ குற்றம் செய்த ஒரு வேற்றரசனிடத்தில் கடுங்கோபம் இருக்கும். மற்றொருவரிடத்தில் மிகுந்த அன்பு இருக்கும். இதெல்லாம் முகக்குறிகளால் பிறருக்குத் தெரிந்தால் உத்தேசப்படி நடத்தப்படும் காரியங்களுக்குப் பல இடையூறுகள் உண்டாகும்படியான நிலை ஏற்படும். இப்படி ஏற்படாமல் இருப்பதற்காகத் தனது முகத்தில் ஒருவித மாறுதலும் தோற்றுதபடி தனது மனே நிலையை அடக்கி வைத்திருந்தான் திலீப மஹாராஜன் என்றவிது गूढाकारेङ्गितस्य च என்று குறிக்கப்பட்டது.

எல்லோருக்கும் எளிதிலே தோன்றக் கூடிய வேறு பாட்டை आकार என்றும் மிகக் கவனத்துடன் பார்த்தே அறியக் கூடிய ஸூக்ஷ்மமான மாறுபாட்டை इङ्गितम् என்றும் சொல்வது, என்றும் சிலர் சொல்வர்.

காரியத்தாலன்றி வேறு எவ்விதமாயும் ஒருவராலும் அறிய முடியாத பூர்வஜன்ம வாசனைகளை உபமானமாகக் காட்டியிருக்கும் அழகை ஆழ்ந்து அனுபவிக்க வேண்டும். (20)

21. जुगोपात्मानमत्रस्तो भेजे धर्ममनातुरः ।
अगृध्नुराददे सोऽर्थमसक्तः सुखमन्वभूत् ॥

सः = அந்த திலீபன்
अत्रस्तः = பயமற்றவனாக இருந்து
आत्मानम् = தன்னை
जुगोप = காத்தான்.
अनातुरः = பிணியால்பீடிக்கப்படாமல் இருந்து
धर्मम् = தர்மத்தை
भेजे = பற்றினான் (செய்தான்).
अगृध्नुः = ஆசை யற்றவனாக இருந்து
अर्थं = பொருளை (பணத்தை)
आददे = பெற்றுக் கொண்டான். (க்ரஹித்தான்.)
असक्तः = பற்றில்லாதவனாக இருந்து
सुखम् = இன்பத்தை
अन्वभूत् = அனுபவித்தான்.

ஸாதாரணமாக அரசர்களுக்குப் பகைவர்கள் பலர் இருப்பர். அவர்களில் யார் எந்த ஸமயத்தில் என்ன செய்வார்களோ என்று பயந்து மெய்காவலர்களாகப் பலரை நியமித்து அவர்களுடனேயே அரசர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். திலீபனுக்கு மெய்காவலாளர் பலர் இருந்தனர். அவன் அவர்களோடு கூடவே எப்பொழுதும் இருந்து வந்தான். ஆனால் பயத்தால் அல்ல. நம்மைக் காத்துக் கொள்ளாவிட்டால் நாம் மரித்துப் போவோமே என்ற பயம் திலீபனுக்குக் கிடையாது. பாபம் செய்தவர்களுக்கன்றோ பரலோகத்தில் என்னகதி வருமோ என்ற எண்ணத்தால் மரிப்பதில் பயம் உண்டாகும். புண்ணியாத்மாக்களுக்கு இவ்வித பயம் ஏது. எவ்வுலகத்திலும் சுகமே யன்றோ அவர்களுக்குள்ளது. எதற்காக அவர்கள் பயப்பட வேண்டும்? இப்படித் திலீபன் தனது மரணத்திற்காகப் பயப்படாதவனாயிருந்தும் தன்னைக் காப்பதில் தவறுவதில்லை. ஏனெனில் ராஜ்ய பாரத்தை நடத்த வேண்டியவன் அவனே. தனக்குப் பிறகு இந்த பாரத்தை ஏற்றுக் கொள்ள ஒருவன் உண்டாகும் வரையில் இத்தர்மத்தைச் சரிவர நடத்த வேண்டியது அவனது கடமை. தான் திடீரென்று மரித்தால் இது நடவாதே என்று.

ஸௌக்யமாக இருக்கும்போது ப்ரபுக்களுக்கு தர்ம சிந்தையிருப்பது உலகத்தில் மிகவும் அரிது. வியாதி அல்லது வேறு ஆபத்து வந்த போது கோவிலுக்குப் போவோமா குளத்தைக்கட்டுவோமா என்றிப்படி தர்மம் செய்வதில் மிகுந்த ச்ரத்தையைக் காட்டுவார்கள். இப்படி யன்று திலீபன். சாஸ்திரம் சொன்ன தர்மங்களைச் செய்ய வேண்டியது நமது கடமை. ஸௌக்கியமாக இருக்கும் போதே அவற்றைச் செய்ய வேண்டும். சரீரம் அல்லது மனது கெட்டு நிம்மதியில்லாமல் இருக்கும்போது அவற்றைச் செவ்வனே செய்வது இயலாது. ஆகையால் இப்போதே செய்வோம் என்று எப்போதும் அவன் தர்மங்களைச் செய்து வருவான்.

பொருள் வரும்போது உலகத்திலுள்ள யாவருக்கும் அதில் ஒரு பற்று (விருப்பம்) இருக்கும். இது ஸஹஜம். வந்த பொருளைக் கொண்டு என்ன செய்ய வேண்டும், எப்படிச் செலவழிக்க வேண்டும், எப்படிச் சேமிக்க வேண்டும் என்று இவ்விதமான ஆலோசனைகள் ஒருபுறமிருக்க, இது பொன், இது வெள்ளி, இது ரத்நம், இது நமது, என்றிப்படி ஒரு ஆனந்தமும், இழக்க நேர்ந்தால் மிக வருத்தமும் உண்டாகும்படியாக அதனிடத்தில் ஒரு விருப்பம் ஏற்படுகின்றது. திலீபனால் வெல்லப்பட்ட அரசர்கள் ஏராளமாக பணக் குவியல்களைக் காணிக்கையாகக் கொணர்ந்து கொட்டுவார்கள். தனது தர்ம காரியங்களுக்கு வேண்டிய சௌகர்யங்களையெல்லாம் செய்வதற்கு அவை வேண்டி யிருப்பதாலும், அவற்றைப் பெற்றுக் கொள்வது லோக சாஸ்திர முறைப்படி ந்யாய மாகையாலும் திலீபன் அவற்றைப் பெற்றுக் கொள்வான். அப்போது கொஞ்சமேனும் அவற்றில் ஒரு ஆசை இராது. மனது நிர்மலமாக இருக்கும். இந்நிலை வருவது கடினம். ஆனால் திலீபனுக்கு மாத்திரம் இது ஸுலபமாயிற்று.

பிரபுக்கள் கண்ணால் பல காட்சிகளைக் காண்பது, காதினால் இனிமையான ஸங்கீதம் முதலியவற்றைக் கேட்பது என்றிப்படி அந்தந்த இந்திரியத்தினால் அந்தந்த விஷயத்தை அனுபவித்து ஸுகிப்பார்கள். இப்படி அனுபவிக்கப்படும் ஸுகத்தில் அவர்களுக்கு விசேஷப் பற்று இருக்கும். இவ்விதமான ஸுகத்தை நான் அனுபவிக்க வேண்டுமென்று விரும்பி, இதற்காக இதை நான் செய்கிறேன் என்று ஸங்கல்பித்துச் செய்து, என் முயற்சியால் இந்த ஸுகத்தை நான் அனுபவிக்கிறேன் அனுபவித்தேன் என்றிப்

படி மிகுந்த அபிமான முள்ளவர்களாகிறார்களாதலின் அந்த ஸௌகத்தில் அவர்களுக்கு ஸங்கம் மிகுந்திருக்கும். இது திலீபனுக்கு இல்லை. அருமையான நாடகங்களைப் பார்ப்பான். தேவகானம் போன்ற ஸங்கீதம் கேட்பான். ஷட்ரஸோபேதமான ஆஹாரம் புஜிப்பான். உத்தமமான வாஸனை த்ரவ்யங்கள் பூசி ஹம்ஸ தூலிகா மஞ்சத்தில் துயிலமர்வான். ஆனாலும் அவற்றில் அபிமானம், ஸங்கம், அதாவது 'வெகு நன்றாயிருக்கிறது. இதை அனுபவிக்கப் பெற்றோமே. உத்தரோத்தரம் இப்படியே இந்த அனுபவம் இருக்க வேண்டும். இல்லாமல் போனால் கஷ்டம். இவ்வனுபவமே ஜீவிப்பதற்குப் பயன், என்றிப்படியெல்லாம் தோன்றக் கூடிய ஒரு பற்று அவற்றினிடத்தில் இவனுக்கு இருந்ததில்லை. அரசாங்க ஸம்பந்தமாகச் செய்யப்பட்ட பல ஆலோசனைகளினால் களைப்புற்ற புத்திக்கு மேற் காரியங்களில் சோர்வில்லாமல் ஊக்க மேற்படுவதற்காக இவற்றை யெல்லாம் மறுதளிக்காமல் அனுபவிப்பது மாத்திரமே.

இப்படித் திலீபன் தனது சரீரத்தைக் காப்பாற்றி, தர்மஞ் செய்து, பொருள் ஸம்பாதித்து, ஸௌகானுபவம் செய்தான் என்று நான்கு விஷயங்களை வரிசையாக வைத்து அவற்றில் ஒவ்வொன்றிலும் மற்றவர்களைக் காட்டிலும் திலீபனுக்குள்ள விசேஷத்தையும் கவி கூறினார்:

ஆகிலும் ப்ரகரணத்தை அனுசரித்து अगृध्नुराददे सोऽर्थम् என்றவித்தால் கருதப்பட்ட 'வேற்றரசர்களிடத்திலிருந்து அபரிமிதமாகப் பொருள் பெற்றான்' என்ற விதுவே இவ்விடத்தில் ப்ரதானமான விஷயம்.

22. ज्ञाने मौनं क्षमा शक्तौ त्यागे श्लाघाविपर्ययः ।
गुणा गुणानुबन्धित्वात् तस्य सप्रसवा इव ॥

ज्ञाने (सति) = அறிந்த போதும்
मौनम् = பேசாமல் இருப்பது
शक्तौ (सत्याम्) = சக்தியிருந்தும்
क्षमा = பொறுத்திருப்பது
त्यागे (सति) = கொடுத்த போதும்
श्लाघाविपर्ययः = தற்புகழ்ச்சி யில்லாமல் இருப்பது (இவ்வாறு)
तस्य = அந்தத் திலீபனுடைய
गुणाः = குணங்கள்.
गुणानुबन्धित्वात् = குணங்களோடு தொடர்புள்ளவையாயிருந்தமையால்
सप्रसवा इव = தம்மினத்தைச் சேர்ந்த ப்ரஸவம் உள்ளவை போன்றன (உடன் பிறந்தவை போன்றன.)

வேற்றரசர்களை வென்று தம் வசப்படுத்திப் பொருள் திரட்டும் அரசர்களுக்கு துர்க்குணங்கள் பல இருப்பது உலகத்தில் எங்குமுள்ள வழக்கம். ஆனால் திலீபனிடத்தில் அவை இல்லை. பின் நற்குணங்களே இருந்தன எனப் படுகிறது. தோற்ற அரசர்களிடத்தில் உள்ள பல இழிவான விஷயங்கள் அவரவர் தேசத்துக்குப் போன போது தெரியும். யுத்தத்தில் மிகவும் பயந்து அரசர் நிலைக்குத் தகாத முறையில் பயந்து ஓடியோ கெஞ்சிக் கூத்தாடியோ பிராணனையும் தம்மைச் சேர்ந்தவர்களையும் காப்பாற்றிக் கொள்ள முயன்று பல அரசர்கள் பரிஹஸிக்கத் தக்கவர்களாய் இருப்பார்கள். இப்படி யிருந்தும் இதெல்லாம் தெரிந்தும் திலீபன் ஒருவரைப் பற்றியும் வாயைத் திறந்து ஒன்றும் சொல்ல மாட்டான். மற்றவர்களானால் அவர்களைப் பழித்துப்பேசாமல் இரார். தாங்கள் தோல்வி யடையக் கூடா தென்றும் திலீபனைத் தோற்கடிக்க வேண்டுமென்றும் எண்ணி பல பல அரிய தந்திரங்களைச் செய்திருப்பார்கள். அவற்றை எல்லாம் இவன் கொடிப்பொழுதில் அறிந்து விலக்கி விடுவான். ஆயினும் இப்படி அவர்கள் செய்தார்கள் நான் இப்படி எல்லாவற்றையும் விலக்கினேனென்று வாய் திறந்து கூறமாட்டான்.

எதிரி அரசர்கள் நம்மையா இவன் வெல்ல வந்தான் என்று கடுங் கோபங் கொண்டு மனது வாக்கு காயம் என்ற மூன்று காரணங்களாலும் திலீபன் விஷயத்தில் பெருங் குற்றம் செய்திருப்பார்கள். இதை யெல்லாம் இவன் மறந்து விடுவான். கொஞ்சமேனும் பாராட்ட மாட்டான். மற்றவர்களானால் எதிரிகள் தோற்ற பிறகும் 'அவர்கள் இப்படி த்ரோஹம் செய்தார்கள். இப்படி நிந்தனை செய்தார்கள்' என்று தீராப் பகை வைத்து அவர்களை முழு நாசம் செய்து தீர்ப்பார்கள். கொஞ்சமேனும் பொறுமை இராது. க்ஷமாநிதி திலீபன். அவர்களைச் சாம்பலாக எரிக்க இவனுக்குச் சக்தி உண்டு. ஆனால் ஒன்றும் செய்யான். எல்லாக் குற்றங்களையும் மன்னித்து விடுவான்.

வெற்றியும் புகழுமாக மிக விளங்கும் திலீபனை அணுகி அங்கங்கே பலர் வேண்டிய அளவு கேட்டுப் பொருள் பெறுவர். அவர்கள் வேண்டும் வரையிலும் இன்னும் அதிகமாகவும் திலீபன் கொடுப்பான். பிறர் ஏதாவது தானம் செய்தால் உடனே இது கொடுத்தேன் இவ்வளவு கொடுத்தேன் இவருக்குக் கொடுத்தேன்

என்று தன்னையே புகழ்ந்து பேச ஆரம்பித்து விடுவார்கள். இந்த வழக்கம் திலீபனுக்குக் கிடையாது.

எதிரிகள் விஷயங்கள் யாவற்றையும் உள்ளபடி அறிவது; அவர்களைத் தன்னிஷ்டப்படித் தண்டிக்கப் போதிய சக்தியுடைமை; ஈட்டிய பொருளைத் தாராளமாகக் கொடுத்தல்; என்ற இக் குணங்களே மிக வரிதானவை. இவை உண்டான போதும் இவை முறையே எதிரிகளைப் பழித்தல், பழிவாங்குதல், தற்புகழ்ச்சி என்ற இத்துர்க்குணங்களை உண்டாக்கும். ஆனால் திலீபனிடத்தில் அக் குணங்கள் நிரம்பி யிருந்தும் இத்துர்க்குணங்கள், இத்தோஷங்கள் உண்டாகவில்லை. அவற்றுக்கு எதிரிடையான மௌனம், பொறுமை, தற்புகழ்ச்சியின்மை என்றவிச் சிறந்த குணங்களே இருந்தன.

ப்ரஸவம் கார்யம். குணம் ஓர் இனம். தோஷம் மற்றோர் இனம். குணத்தினால் தோஷம் உண்டானால் இது வேற்றினத்தைச் சேர்ந்த கார்யம். குணமே உண்டானால் இது தன்னினத்தைச் சேர்ந்த கார்யம். இப்படித் தன்னினத்தைச் சேர்ந்த காரியங்கள் உள்ளனவாக இங்கு உத்ப்ரேக்ஷை செய்யப்படுகிறது. உண்மையில் மௌனம் முதலானவை அறிவு முதலானவற்றின் கார்யங்களல்ல. தனது பெருந் தன்மையினால் திலீபன் அறிவு முதலியவை யிருந்தும் மௌனம் முதலிய குணங்களுடன் இருந்தான். பிறரிடத்தில் தோஷாநுபந்தியாய்—தோஷங்களோடு தொடர்புள்ளனவாய்-இருக்கும் குணங்கள் இங்கு குணாநுபந்தியாய் - குணங்களோடு தொடர்புள்ளனவாய் - இருத்தலால், 'தன்னினத்தைச் சேர்ந்த கார்யங்கள் உள்ளவை போன்றன' என்று உத்ப்ரேக்ஷிக்கப்பட்டது.

समानाः प्रसवाः येषां ते என்று விக்ரஹம். உரையாசிரியர் " सह प्रसवः येषां ते सप्रसवाः सोदरा इवाभवन् । विरुद्धा अपि गुणाः तस्मिन् अविरोधेनैव स्थिताः ॥ விருத்த குணங்களும் ஸஹோதரர் போல் அவனிடத்தில் இருந்தன " என்றார். (22)

23. अनाकृष्टस्य विषयैर्विद्यानां पारदृश्वनः ।
तस्य धर्मरतेरासीद् वृद्धत्वं जरसा विना ॥

विषयैः = விஷயங்களால் (அனுபவிக்கத்தக்க வஸ்துக்களால்)

अनाकृष्टस्य = இழுக்கப்படாத,

विद्यानाम् = வித்யைகளுடைய (சாஸ்த்ரங்களுடைய)

पारदृश्वनः = கரையைக்கண்ட,
धर्मरतेः = தர்மத்திலே ஊற்றமுள்ள
तस्य = அந்த திலீபனுக்கு
जरसा विना = மூப்பு இல்லாமலே
वृद्धत्वम् = முதிர்ச்சி, மூத்தோன் (பெரியோன்) என்ற நிலை
आसीत् = இருந்தது (உண்டாயிற்று).

பொருள் திரட்டும் வழியைப் பற்றிய ப்ரகரணம் மூன் ச்லோகத்துடன் முடிந்தது. இனி நன்மை செய்வதைப்பற்றிய ப்ரகரணம். திலீபன் மக்களுக்குச் செய்யும் நன்மைகளைப் பார்க்கும் போது அவனே இவர்களுக்குத் தகப்பன் எனல் வேண்டுமென்று இதற் கடுத்த மேல் ச்லோகத்தில் சொல்லப் போகிறார். தகப்பனாயிருப்பவன் பெரியவனாக இருக்க வேண்டுமேயெனில் பெரியவனாகவே இருந்தான் என்கிறார் இங்கு. வயது முதிர்ந்து மூத்தோராயிருப்போர்க்கு இலக்கணம் மூன்று விதம். இதை அனுபவிக்க வேண்டும் அதை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை இராது. பலவிதமாகக் கேட்டும் கற்பித்தும் வித்யைகளின் ஆழ் பொருள்களின் நுண்ணுணர்வு பெற்றிருப்பார்கள். தர்மத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருப்பார்கள். இம்மூன்றுவித இலக்கணமும் திலீபனிடத்தில் இருந்தமையால் அவன் மூத்தோன், பெரியவன், என்பதற்கு ஐயமொன்றுமில்லை. இனி நான்காவது ஒரு இலக்கணமுண்டு. தலை நரைத்திருக்கும்; உடம்பு தசை எல்லாம் சுருங்கியிருக்கும்; தடி பிடித்து நடக்கவேண்டி யிருக்கும் என்று. இது அப்போது திலீபனிடத்தில் இருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் இது இல்லாமல் இருப்பது குணமே யன்றி தோஷ மல்ல. மற்ற விஷயத்தில் பெரியவனா யிருப்பது மாத்திரம் இங்கு வேண்டியது. (23)

24. प्रजानां विनयाधानाद् रक्षणाद् भरणादपि ।
स पिता पितरस्तासां केवलं जन्महेतवः ॥

विनयाधानात् = (தவறின போது) சிக்ஷை செய்வதாலும்,
रक्षणात् = (ஆபத்து ஒன்றும் வராமல்) காப்பதாலும்,
भरणादपि = (ஜீவனத்திற்கு வேண்டிய அன்னபானாதிகளைக் கொடுத்துத்) தாங்குவதாலும்
प्रजानाम् = ப்ரஜைகளுக்கு (ஜனங்களுக்கு)
सः = அந்தத் திலீபன்
पिता = தகப்பன்.
तासाम् = அந்தப் பிரஜைகளுடைய
पितरः = தகப்பனார்கள்
जन्महेतवः केवलम् = பிறவிக்குக் காரணமாய் மாத்திரம் இருந்தவர்கள்.

பா என்பது ஒரு தாது (வினை முதல்). ரக்ஷித்தல் அதன் பொருள். இந்தத் தாதுவிலிருந்து पिता (பிதா) என்ற சொல் உண்டானது. ரக்ஷணம் பலவிதம். தவறின போது சிக்ஷித்து நல்ல வழியில் நடத்துவது; அபாயம் வராமல் தடுப்பது; ஜீவிப்பதற்கு வேண்டிய பொருள் ஸம்பாதித்துத்தருவது, என்று. பெற்ற தகப்பன் பிள்ளைகளுக்கு இதை எல்லாம் செய்யக் கடமைப்பட்டவன். இதை எல்லாம் திலீப ராஜ்யத்தில் திலீபனே செய்து விட்டான். ஆகவே பிதா என்பதற்குப் பொருத்தமுடையவன் அவனே. ஆனால் பெற்ற தந்தையரைத் தந்தைகள் என்பது எப்படியெனில் பெற்றதனாலேயே தான். பிதா என்ற சொல்லுக்குப் பெற்றவன் என்ற பொருள் இல்லையே எனில் உண்மையே. சொல்லுக்குப் பொருளாக ஆகாதவற்றையும் ரூடியால் (அநாதி வழக்கினால்) பொருளாகக் கொள்வர். அப்படியே இங்கும் என்று கருத்து.

குற்ற முள்ளவர்களைத் தண்டித்தல், திருட்டு முதலிய பயமில்லாமை, உணவு வசதி நிரம்பியிருத்தல், என்ற இவை போன்ற விஷயங்களைக் கவனிக்கத் தனித் தனியே அதிகாரிகள் இருப்பர். ஆயினும் அவர்களிடத்திலேயே அப்பொறுப்புகளை எல்லாம் ஒப்படைத்துவிட்டு இவற்றில் சிறிதும் கவனம் செலுத்தாமல் தான் தன் மனம் போனபடி ஏதோ செய்து கொண்டு காலம் கழித்தான் திலீபன் என்பதில்லை. குழந்தைகள் விஷயத்தில் தகப்பனுக்கு எப்படி எப்பொழுதும் கவனமும் கவலையும் அன்புமாகக் காலம் செல்லுமோ அப்படியே திலீபனுக்கும் தன் குடிமக்களின் விஷயத்தில் நீதிபரிபாலனம் செவ்வனே நடக்கின்றதா, வெளிக்குத் தெரியாமலே திருட்டு நடக்காமல் இருக்கின்றதா, பலமுள்ளவர்கள் மாத்திரம் தின்றுவிட்டு ஏழைகளைப் பரிதவிக்கவிடாமல் இருக்கின்றார்களா வென்று வெகு கவலையுடன் நுணுக்கமாக விசாரித்து அநியாயம் ஒன்றும் நடவாமல் செய்வான். (24)

25. स्थित्यै दण्डयतो दण्ड्यान् परिणेतुः प्रसूतये ।
अप्यर्थकामौ तस्यास्तां धर्म एव मनीषिणः ॥

स्थित्यै = வரம்பு கடவாமல் இருப்பதற்காகவே

दण्ड्यान् = தண்டிக்க வேண்டியவர்களை (குற்ற முள்ளவர்களை)

दण्डयतः = தண்டிப்பவனாய்,

प्रसूतये = ஸந்தானத்திற்காகவே

परिणेतुः = விவாஹம் செய்து கொண்டவனாய் (இருந்த)

तस्य = அந்த
मनीषिण: = அறிவாளிக்கு (மனத்தைக் கட்டுப் படுத்திய திலீபனுக்கு)

अर्थकामावपि = பொருள் காமம் இவை இரண்டும் கூட
धर्म एव = தர்மமாகவே
आस्ताम् = இருந்தன.

சிக்ஷித்தல், காத்தல், தாங்குதல் என்ற மூன்று வ்யாபாரங்கள் முன் ச்லோகத்தில் கூறப்பட்டன. அவற்றில் சிக்ஷித்தலாவது வித்யா ப்ரசாரத்தினாலும் விளம்பரங்களாலும் 'இன்னின்ன கார்யங்களைச் செய்யக் கூடாது. இன்னின்ன கார்யங்களைச் செய்ய வேண்டும். இப்படி யிப்படிச் செய்யக் கூடாது. இப்படி யிப்படிச் செய்ய வேண்டும்' என்று ஒவ்வொருவர் புத்தியிலும் செவ்வனே படும்படி போதிப்பதும் தவறினபோது தண்டிப்பதும் ஆகும். தண்டிப்பது இரண்டு விதம்; சிறையில் அடைப்பது, அபராதம் விதிப்பது, என்று. அபராதம் விதித்த போது வசூல் ஆகும் பணம் அரசனது சொந்த உபயோகத்திற்கு உரியது. அவனையே சேர்ந்தது. அரசாங்கத்தைச் சேர்ந்ததல்ல, என்று தர்ம சரஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகவே குணமற்ற அரசர்கள் 'இந்த விதமாகப் பெரும் ஊதியம் ஸம்பாதிக்கலா' மென்று துராசை கொண்டு தண்டிக்கத் தகாதவர்களையும் தண்டிப்பது, தண்டிக்கும் போதும் குற்றத்திற்குத் தக்கபடியின்றி பெருந் தொகையை அபராதமாக விதித்துத் தண்டிப்பது, என்றிவ்வாறு பல அநீதிகளைச் செய்யத் தலைப்படுவர்கள். இவ்வித மல்ல திலீபன் விஷயம். அபராதம் விதிப்பது தனக்குப் பணத்திற்காக என்ற இந்தத் தாழ்ந்த எண்ணமே அவன் உள்ளத்தில் புகாது. அபராதம் விதிக்காமலே இருக்க முடியுமானல் ஒருவருக்கும் அபராதம் விதிக்கக் கூடா தென்றே அவன் ஒரு உத்தரவு போடுவான். ஆனல் அப்படி யிருக்க முடிய வில்லை. குற்றம் செய்தவர்களுக்கு அபராத மில்லையாகில் பலரும் அக் குற்றத்தைச் செய்வார்கள். தர்ம நெறி கெட்டு விடும். ஜனங்கள் அவரவர்களுக்குரிய வரம்பு மீறி நடப்பார்கள். அதனல் பெருங் குழப்பமுண்டாகும். இத்தீங்கு விளையாமைக்காக ஜனங்கள் அவரவர்களுக்குரிய வரம்பிலேயே நிற்க வேண்டு மென்கிற இந்த ஒரு பெரும் நோக்கத்துடனேயே திலீபன் குற்றம் செய்தவர்களுக்கு அபராதம் விதிக்கச் செய்தான். ஆகவே பொருள் கிடைக்கும் காரியத்தைச் செய்யும் போதும் பொருளை உத்தேசிக்காமல் உலகத்தின் க்ஷேமத்தையே உத்தேசித்த காரணத்தினல் அர்த்தமும் தர்மமே

யாயிற்று. அதாவது பொருளும் அறமே யாயிற்று திலீபனுக்கு என்றூர் கவி.

இப்படி உத்தேசம் வேறுன போது ஒரே வஸ்து மற்றென்றுகத் கருதப்படும் என்றவிதை உறுத்திச் சொல்ல விரும்பி அவனுக்குக் காமமும் தர்மமாயிற்று என்றூர். தான் ஒரு மடந்தையை மணம் புரிந்தது தன் ஸுகானுபவத்திற்காக என்று ஒருவன் உத்தேசித்தானுகில் அதை அவன் பெறலாம். அதனுல் காமம் என்ற புருஷார்த்தம் அவனுக்குப் பூர்ணமாகின்றது. ஆனுல் விவேகம் பெற்றவர்களுக்கு இதுவன்று உத்தேச்யம். திலீபன் ஏகசக்ராதிபதி. இவ்வுலகத்தை முழுவதும் இவன் காப்பாற்ற வேண்டும். இது குல பரம்பரையாய் வந்த கடமை. இவன் காலத்திற்குப் பிறகும் இக் கடமையை நிறைவேற்றக் கூடியவர்களை உண்டு பண்ணுமல் இவன் காலம் சென்று விட்டால் இவன் தனது கடமையிலிருந்து தவறினவனுகவே ஆவன். அவனது தகப்பனுர் அவர் காலத்திற்குப் பிறகு அரசனுகத் தன்னை உண்டாக்கியது போல் இவனும் இவன் காலத்திற்குப் பிறகு உலகை ரக்ஷிக்க ஸந்தானத்தைப் பெற வேண்டும். திலீபன் இதை எல்லாம் நன்ருய் அறிவான். அதனுல் அவன் தன் விவாஹத்திற்கு உத்தேச்யமாக ஸந்தானத்தைக் கருதினுனே யன்றி காமத்தையல்ல. உத்தேசிக்காமலே கிடைத்த அதை அநுபவித்தது மாத்திரமே. ஆகவே காமம் தர்மமாயிற்று. இது போலவே முற் கூறியபடி உத்தேச மில்லாமலே கிடைத்த பொருள் அதாவது பணம் தர்மமாயிற்று.

இவ்வுலகத்தில் பிறந்த ஒருவனுக்கு இவ்வித நிலை கூடுமா என்று சிலர் சங்கைப்படலாம். அதற்காக मनीषिण: என்றூர். மனத்தை அடக்கி ஆளுந் திறமை பெற்ருல் இந்நிலை தானே கூடும். திலீபன் அத்திறமை வாய்ந்தவன் என்று கருத்து.

यथापराधदण्डानाम्, प्रजायै गृहमेधिनाम् என்று முன் சொன்ன இரண்டு விஷயங்கள் இங்கு திலீபன் விஷயத்தில் எடுத்துக் காட்டப் பட்டன. (25)

26. दुदोह गां स यज्ञाय सस्याय मघवा दिवम् ।
सम्पद्विनिमयेनोभौ दधतुर्भुवनद्वयम् ॥

स: = அந்த திலீபன் [விக்காக) | गाम् = பூமியை
यज्ञाय—யஜ்ஞத்திற்காக (வேள் | दुदोह = கறந்தான்

मघवा = இந்திரன்
सखाय = பயிருக்காக
दिवम् = வானத்தை (கறந்தான்.)
उभौ = இருவரும்
सम्पद् = செல்வத்தை
विनिमयेन = மாற்றிக்கொள்வதனால் (மாற்றிக்கொண்டு)
भुवनद्वयम् = இரு உலகங்களையும்
दधतु: = தாங்கினார்கள் (காப்பாற்றினார்கள்.)

இனிக் காத்தல் இரண்டு விதம். தெய்வ பயத்திலிருந்து காத்தல் மனுஷ்ய பயத்திலிருந்து காத்தல் - என்று. தெய்வ பயத்தில் மிகப் பெரிது மழையில்லாமை. மழை இல்லையாயின் பூமி வரண்டு உணவின்றி மக்கள் அழிவர். ஆகையால் மாதம் மும்மாரி என்கிற படி, காலத்தில் வேண்டிய அளவு மழை பெய்யும்படி செய்வது அரசன் கடமை. அரசன் எப்படி மழை பெய்யும்படி செய்வது? இதற்கு வழி நம் சாஸ்திரங்களில் கூறப் பட்டிருக்கிறது. வேதங்களில் பலவித யஜ்ஞங்கள் கூறப் பட்டிருக்கின்றன. இவைகளை அரசன் தானும் செய்து அவைகளைச் செய்வதற் குரிய மற்றவர்களையும் செய்விக்க வேண்டும். இந்த யஜ்ஞங்களால் இந்திரன் முதலிய தேவர்கள் மகிழ்ந்து நமது ஜீவனத்திற்கு முதல் காரணமான மழையைப் பொழிவார்கள். யஜ்ஞங்களில் நாம் கொடுக்கும் ஹவிஸ்ஸு தேவர்களுக்கு உணவு. இது அவர்களுக்கு வெகு திருப்தியைக் கொடுக்கும். நாம் தேவர்களுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டும். அவர்கள் நமக்கு வேண்டியதைத் தருவர். இப்படித் தேவர்களும் மனுஷ்யர்களும் பரஸ்பரம் உதவி க்ஷேமப்பட வேண்டும். இது பகவத் கீதை மூன்றாவது அத்யாயத்தில் தெளிவாய்க் கூறப் பட்டிருக்கின்றது.

திலீபன் பூமியைக் கறந்தான். அதாவது தான்யம் தனம் எல்லாம் போதிய வளவு கிடைக்கும்படி செய்து யஜ்ஞங்களைச் செய்தான். இவற்றால் மகிழ்வுற்ற தேவர்களின் அரசனான இந்திரன் வானத்தைக் கறந்தான். அதாவது மழை பொழிந்தான். தனமும் தான்யமும் இங்குள்ள செல்வம். இதை யஜ்ஞங்களில் உபயோகித்துத் திலீபன் வானுலகைக் காப்பாற்றினான். மழை மேலுலகத்திலுள்ள செல்வம். அதை வழங்கி இந்திரன் இவ்வுலகத்தைக் காப்பாற்றினான். ஆகவே திலீபனது அரசாட்சியில் மழையின்றிக் கஷ்டம் நேர்ந்தது என்பது கிடையாது என்றதாயிற்று.

தேவேந்திரன் போல் அவ்வளவு பெருமை வாய்ந்தவன் திலீபன் என்றும் கொள்க. (26)

27. न किलानुययुस्तस्य राजानो रक्षितुर्यशः ।
व्यावृत्ता यत्परस्वेभ्यः श्रुतौ तस्करता स्थिता ॥

रक्षितुः = காக்கின்ற
तस्य = அந்தத் திலீபனுடைய
यशः = புகழை
राजानः = (மற்ற) அரசர்கள்
नानुययुः किल = பின் பற்றவேயில்லை (பின் செல்லவேயில்லை, அதாவது அவன் புகழ் போன்ற புகழைப் பெறவே இல்லை.)
यत् = ஏனெனில்
तस्करता = களவென்பது
परस्वेभ्यः = பிறர் பொருள்களிலிருந்து
व्यावृत्ता = ஒழிந்து
श्रुतौ = சொல்லில்
स्थिता = நின்றது.

இவன் பிறர் பொருளைத் திருடினுன் என்னும்படி (இவன் தஸ்கரன் திருடன் என்னும்படி) ஒருவனும் அப்போது இருக்கவில்லை. திருடன் (தஸ்கரன்) என்ற ஒரு சொல் மாத்திரம் இருந்தது என்று கருத்து. அக்காலத்தில் ஒருவருடைய பொருள் களவு போயிற்றென்பது கிடையாது. ஆனல் (தஸ்கரன்) என்ற சொல் களவு போயிற்று. அச்சொல் வழக்கில் இல்லாமல் மறந்தே போயிற்று என்று கருத்து என்றும் கூறுவர்.

மனுஷ்யர்களால் உண்டாகும் பயம் பலவிதமானது. பகைவர்களான பிற தேசத்து அரசர்களால் அல்லது திருடர்களால் அல்லது இவர் போன்றவர்களால் என்று. அதில் முதலாவது மற்ற அரசர்கள் யாவரும் தோற்று இவனுக்குக் கப்பம் கட்டும்படியான நிலையில் நின்றனராதலின் உண்டாக இடமில்லை யென்பது வெளிப்படை. இரண்டாவதும் இல்லை என்கிறுர் இங்கு. திருட்டு நடக்கும் தேசத்தில் அரசாங்கம் செவ்வையாக நடக்கிற தென்பது உண்மை யன்று. அரசனது கடமை குடிகளைக் காத்தல். திருட்டு நடந்தால் காத்தல் இல்லை என்பது நிச்சயம். திலீபன் காத்தலில் வெகு ஸமர்த்தன். அதில் கண்ணும் கருத்துமாய் இருந்தான். ஆகையால் அவன் ராஜ்யத்தில் பிறர் பொருளை அபஹரிப்பவன் இருக்கவே யில்லை. ஒரு பொருளும் அபஹரிக்கப் பட்டதேயில்லை.

மற்ற அரசர்கள் இவ்வாறு காக்க முடியாது. இவன மாதிரியே நாமும் செய்ய வேண்டு மென்று முயற்சி செய்தனர். ஆனல் செய்ய முடியவில்லை. அதனல் இவன் புகழை மற்றவர் பெறக் கூடவில்லை.

தேசத்தில் திருடர்கள் இருப்பதற்குப் பல காரணங்கள் உள. காலத்தில் மழை இல்லை. தானியம் விளைய வில்லை. பஞ்சம் உண்டாயிற்று. பசியினல் பீடிக்கப்பட்ட ஜனங்கள் வரம்பு மீறிப் பிறர் வைத்திருக்கும் பொருளைக் கொள்ளையிட்டுப் பிழைக்க முயன்றனர் என்ற நிலை உலகத்தில் உண்டு. ஆனல் இந்நிலை திலீபன் காலத்தில் இல்லை. அவனும் அவனது ப்ரஜைகளும் அவரவர் கடமைகளைத் தவருது செய்து வந்தபடியால் முன் ச்லோகத்தின்படி மழை காலத்தில் வேண்டியவளவு பெய்து கொண்டே யிருந்தது. தானியம் குறை வில்லாமல் விளைந்தது. ஆகவே இக் காரணத்தால் திருட வேண்டிய அவச்யம் உண்டாகவில்லை. இனி அவ்வப்போது வேண்டிய சில பொருள்கள் ஜனங்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்காகச் சிலர் திருட நேர்ந்தது என்பதுமில்லை. எது எப்போது யாருக்கு வேண்டு மாயினும் அதையெல்லாம் கொடுத்துதவ திலீபன் காத்திருந்தான். ஒருவன் ஒருவஸ்துவை விரும்பினன். அதைப் பெருமல் போனன் என்பது இந்த ஸூரிய வம்சத்து அரசர்களுக்குள் ஒருவனிடத்திலும் இல்லை. தனது உயிரையும் கொடுக்க இவர்கள் சித்தமாயிருந்தனர் என்கிருர் கவி மேல். அரசன் இவ்வாறு நடக்க ப்ரஜைகளில் தனம் உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு உதவி புரிந்து மகிழ்வரேயன்றி லோபிகளாய் இரார். இனி எல்லாம் பூர்ணமா யிருந்தும் சிலருக்கு ஸ்வபாவமாய்ப் பல துர்க்குணங்கள் உண்டு. அதில் திருடுவதும் ஒன்று. ஆகவே சில திருடர்கள் இருந்தனர் என்பது மில்லை. யோகாப்பியாசம் செய்து ஸித்தி பெற்ற யோகிகள் இருக்கு மிடத்தில் எலி பூனை, பசு புலி, என்றிப்படி ஜன்ம த்வேஷிகளான ப்ராணிகளும் பகையற்று அந்யோன்யம் மிகுந்த நேச முள்ளவைகளாய் இருக்கு மென்று யோக சாஸ்திரம் கூறுகின்றது. ஸூரிய வம்சத்தரசர்கள் அவ்வளவு ஆத்ம சக்தியுள்ளவர்களாதலின் இவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பிரஜைகளில் ஒருவருக்கும் இத்தகைய தீயகுணம் உண்டாவதில்லை. தன்னலியன்ற மட்டும் பிறருக்கு உதவி புரிவது என் கடமை என்ற விரதம் பூண்டு அப்படியே நடந்த தன்றி ஒருவனும் பிறருக்கு ஒரு

தீங்கையும் மனத்தாலும் நினைத்தானல்லன். ஆகவே அப்போது திருட்டு அறவே ஒழிந்திருந்தது. திலீபன் போன்ற அரசன் இருந்து அச்வமேதம் முதலிய உயர்ந்த யஜ்ஞங்கள் விதிப்படி நடந்து வருமிடத்தில் தீயகுணமுள்ளவன் ஒருவனுமிருக்க முடியாதென்று நம்மதப் பெருமை யறிந்தோர் உணர்வர்.

"எனது நாட்டில் திருடன் இல்லை. லோபி இல்லை. கல்லாதவன் இல்லை. யஜ்ஞானுஷ்டானம் பண்ணுதவன் இல்லை. குடிப்பவன் இல்லை. வ்யபிசாரம் செய்பவன் இல்லை; இதைச் செய்பவள் எப்படி இருப்பாள்" என்று ஓர் அரசன் தந்நாட்டின் நிலைமையைத் தன்னை நாடிவந்த பெரியோர்களிடத்தில் தெரிவித்து அதனுல் தான் கொடுக்கும் தக்ஷிணையை அவர்கள் பெறலாமென்று விண்ணப்பித்ததாகச் சாந்தோக்ய உபநிஷத்துக் கூறுகின்றது. (27)

28. द्वेष्योऽपि सम्मतः शिष्टस्तस्यार्तस्य यथौषधम् ।
त्याज्यो दुष्टः प्रियोऽप्यासीदङ्गुलीवोरगक्षता ॥

तस्य = அந்தத் திலீபமஹாராஜனுக்கு	सम्मतः = வேண்டியவனுக (இருந்தான்).
शिष्टः = நன்னடத்தை உடையவன்	दुष्टः = துர்நடத்தை யுள்ளவன்
द्वेष्योऽपि = அருவருக்கத் தக்கவனுகிலும்	प्रियोऽपि = இஷ்டனுகிலும்
आर्तस्य = நோயாளிக்கு	उरगक्षता = பாம்பு கடித்த
औषधं यथा = மருந்து போல்	अङ्गुलीव = விரல் போல்
	त्याज्यः = விட்டுவிட வேண்டியவனுக
	आसीत् = இருந்தான்.

ஏதோ காரணம் ஒன்று இருந்தோ அல்லது இல்லாமலேயோ ஒருவனுக்கு ஒருவன் மிகவும் ப்ரியனு யிருப்பதும், வேண்டாதவனுய், அதாவது பார்த்த உடனே முகத்தை வேறுபக்கமாகத் திருப்பிக்கொள்ளும்படி அவ்வளவு அருவருப்பைக் கொடுப்பவனுய் இருப்பதும் உலகத்தில் ஸாதாரணமாய்க் காணப்படும் விஷயம். தனித்த முறையில் திலீபனுக்குக்கூட இப்படிப் பகைக்கும் விருப்பத்திற்கும் இலக்கானவர்களாகச் சிலர் இருந்தனர் என வைத்துக்கொள்வோம். இவர்களில் பகைக்கு இலக்கானவர்களையும் அப்பகை காரணமாகத் திலீபன் சிறிதும் துன்பப் படுத்தமாட்டான். இது மாத்திரமல்ல. அவர்கள் ஒழுங்கு தவருதவர்களா யிருப்பின் மற்றப் பெரியோர்களைப் போலவே கொண்டாடிக் கௌரவமாக

நடத்துவான். அவர்கள் இருக்கு மிடத்தைத்தேடி அழைத்து வரச் செய்து உபசரித்து அவர்களைக் கொண்டு எவ்வித நன்மையைப் பிரஜைகளுக்குச் செய்யமுடியுமோ அதைச் செய்வித்துப் போற்று வான். மருந்து கசப்பு. நாக்குக்கு மிகுந்த அருவருப்பைத் தரு கின்றது. ஆயினும் பெரு முயற்சியால் அதைப் பெற்று உட் கொள்ளுகிறோம் பிணி நீங்குமென்று. அதுபோல் உலக நன்மை இவர்களால் உண்டாமாயின் இவர்களைப் பகை காரணமாக உபே க்ஷிக்காமல் உபயோகப்படுத்திப் போற்றுவது கடமை. இப்படியே திலீபன் செய்தான். இனி விருப்பத்திற்கு இலக்கானவர்களை அவ் விருப்பம் காரணமாக அவர்கள் ஒழுங்கீனமாக நடந்தபொழுதும் பாராட்டி அவர்களின் தவற்றைப் பொருட்படுத்தாது இருந்தான் என்பதும் இல்லை. குற்ற முள்ளவர்களைத் தனது இஷ்டர்கள் என்ற காரணத்தால் தண்டியாது விடுத்தானாகில் அரசாங்க முறை பாழ்படும். மற்றவர் குற்றம் செய்யும்போது அவர்களை எப்படித் தண்டிப்பானோ அப்படியே தனது இஷ்டர்களும் குற்றஞ் செய் தனராயின் அவர்களையுந் தண்டிப்பான். தாக்ஷிண்யப்பட்டு அக் குற்றத்தைப் பொறுத்திருந்தா னில்லை.

திருடர்களால் உண்டாகக் கூடிய பயத்திலிருந்து காத்தல் கீழ்ச் சொல்லப்பட்டது. அரசன்ஸமீபத்திலேயே இருந்து பழகி அவனது ப்ரீதியைப் பெற்று அந்தரங்கராய் இருப்பவர்க ளாலும் உயர்ந்த அதிகாரத்தில் இருப்பவர்களாலும் ஏற்படக் கூடிய பயத்தி லிருந்து காத்தல் இங்கே கருதப்பட்டது. அரசனுக்குத் தம்மிடத் தில் இருக்கும் ப்ரீதியைக் கொண்டு சில அந்தரங்க ஜனங்களும் அதிகாரிகளும் தமது விருப்பு வெறுப்புக்களை அனுஸரித்து ப்ரஜை களில் சிலருக்குத் தகாத துன்பங்களைக் கொடுத்தும் சிலருக்குத் தகாத ஸௌகரியங்களைச் செய்தும் அநீதி புரிவார்கள். பொரு ளாசை பிடித்து லஞ்சம் வாங்கி, கொடுத்தவர்களுக்கு ஒன்றைச் செய்தும், கொடாதவர்களுக்கு ஒன்றைச் செய்யாமலும் அநியா யம் செய்வார்கள். அரசனிடத்தில் கோள் சொல்லுவார்கள். இவ்வித அநீதி ஒன்றும் திலீபன் ராஜ்யத்தில் இருந்ததில்லை.

கோள் சொல்லி ஒருவனிடத்தில் அரசனுக்கு வெறுப்பு உண் டாக்கலாம். ஆனால் அரசன் அக்காரணத்தாலேயே அவ்வொரு வனைத் துன்புறுத்த நினையான். கவனமாக விசாரித்துப் பல ப்ரீ

சைஷகள் செய்து உண்மையில் அவன் எவ்விதமானவன் என்று கண்டு பிடிப்பான். உண்மையில் அவன் துஷ்டன் என்று தீர்மானம் ஏற்பட்டால் அவன் செய்யும் குற்றங்களை நிரூபித்துத் தகுந்த தண்டனை விதிப்பான். துஷ்டன் அல்ல, நல்லவனே என்று தீர்மானம் ஏற்பட்டால் அதற்குத் தக்கபடி அவனை நடத்துவான். கோள் சொன்னவர்களைத் தனது அருகிலேயே வரவொட்டாமல் தடுத்து விடுவான். தாக்ஷிண்யம் பாராமல் அவர்கள் ஸ்நேஹத்தை அறவே விட்டு விடுவான். அநீதி செய்யும் அதிகாரிகளை அதிகாரத்திலிருந்து நீக்கி விடுவான். தேசத்திலிருந்தே அப்புறப் படுத்தும்படி அவ்வளவு கடுமையான அநீதி செய்யப் பட்டிருந்தால் தேசப்ரஷ்டர்களாகவும் அவர்களைச் செய்வான். நமது சொந்தக்கை; சொந்த விரல்; இதைப் பாம்பு கடித்தால் நமது விரல் என்று பாராமல் உடனே வெட்டிவிடவேண்டு மென்பது ஆயுர்வேதம் செய்யும் உபதேசம். அப்படிச் செய்யாதபோது விஷம் உடல் முழுதும் பரவி ப்ராணுபத்து வந்துவிடும். இப்பெருங் கேட்டைத் தடுப்பதற்காக நம்முடையதாயினும் விரலை வெட்டி யெறியவேண்டும். இப்படியே நமது மனிதர் என்ற எண்ணத்தை விட்டு அநீதி செய்பவர்களை பரித்யாகம் செய்யவேண்டும். செய்யாவிட்டால் இவர்கள்போல் மற்றவர்களும் செய்ய ஆரம்பித்து நீதிநிலை அழிந்து அரசாங்கமும் ப்ரஜைகளின் க்ஷேமமும் பாழாய்விடும். இப்பெரிய தீங்கு விளையாமல் இருப்பதற்காக அநீதி செய்தவர்களை அவ்வப்போது விலக்கி விடுவான். இப்படி த்ருடமான கொள்கை யுள்ளவன் திலீபன் என்பதைச் செவ்வனே அறிந்தார்களாதலால் ஒருவரும் அப்போது ஒரு சிறு அநீதியையும் செய்யத் தலைப்பட மாட்டார்கள். இப்படிக் காத்தான் திலீபன். (28)

29. तं वेधा विदधे नूनं महाभूतसमाधिना ।
तथाहि सर्वे तस्यासन् परार्थैकफला गुणाः ॥

वेधाः = பிரஹ்மா
तं = அந்தத் திலீபனை
महाभूत समाधिना = (ஐம்) பெரும் பூதங்களின் படியே (அவைகளைப்படைத்தவிதமாகவே)
विदधे = படைத்தார்;
नूनम् = நிச்சயம்.
तथाहि = அப்படி யல்லவோ (அப்படி எண்ணும்படியாக வல்லவோ)
तस्य = அவனுடைய
सर्वे = எல்லா

गुणा: = குணங்களும் பயனுக உடையனவாக
परार्थैकफला: = பிறர் நன்மைகளையே | आसन् = இருந்தன.

இவ்வுலக மெல்லாம் ஐம்பூதங்களா லாகியது. பிருதிவி ஜலம் தேஜஸ்ஸு வாயு ஆகாசம் என்ற இவை ஐந்து மஹா பூதங்கள். வாஸனை சுவை ஒளி ஸ்பர்சம் சப்தம் இவை முதலியன இவற்றின் குணங்கள். சதுர்முகன் ஐந்து பூதங்களைப் படைத்து அவற்றிற்கு இக்குணங்களையும் கொடுத்திருக்கின்றனே, அதனால் யாருக்கு என்ன பயன் எனப் பார்ப்போம். இக்குணங்களைத் தாம் பெற்றிருப்பதால் அவ்வைந்து பூதங்களும் ஏதாவது பயன் பெறுகின்றனவா? இல்லவே யில்லை. அப்பூதங்கள் அறிவில்லாப் பொருள்கள். அவற்றிற்கு ஸுகம் துக்கம் நன்மை தீமை என்பது ஒன்று மில்லை. ஆகவே அப்பூதங்களைப் படைக்கும்போது பிரமதேவன் இவற்றின் குணங்களை உபயோகித்து அறிவாளிகளான ஜீவராசிகள் ஸுகானுபவம் செய்யட்டும் என்று பிறர் நன்மையையே பயனுகக் கருதிப் படைத்தான் எனல் வேண்டும். அக்குணங்களையுடைய பூதங்களுக்கு அக்குணங்களால் ஒரு பயனும் இல்லை. பழம் பழுத்தரல் மரம் அப்பழத்தை அருந்துவதில்லை. நாமே அருந்துகின்றோம். இப்படியே ஒவ்வொரு அறிவில்லா வஸ்துவும். இப்படி ஐம்பெரும் பூதங்களின் குணங்கள் எவ்வாறு பிறர் நலத்தையே பயனுகக் கொண்டவையோ அவ்வாறு திலீபனுடைய குணங்களும் பிறர் நலத்தையே பயனுகக் கொண்டவை. நல்லறிவு அவனுக்குண்டு. இதனுல் பிறருக்கு இப்போது இது வேண்டுமென்றறிந்து அதைக் கொடுப்பான். இவ்விதக் கஷ்டம் இவருக்கு இப்போதுண்டென வறிந்து அதைத் தவிர்ப்பான். பூர்ணசக்தியுண்டு. இதனுல் ஜனங்களுக்கு அல்லல் விளைவிப்போரை அடக்குவான். ஐச்வர்ய முண்டு. இதனுல் ஒருவரும் பட்டினி இல்லாமல், உடுக்கத் துணி யில்லை, வியாதியைத் தவிர்க்க மருந்தில்லை என்றிவ்வித ஸங்கடம் ஒருவருக்கு மில்லாமல் தாராளமாக உதவுவான். இப்படித் தனக்குள்ள ஸகல சிறப்புக்களையும் பிறர் நன்மைக்காக உபயோகப் படுத்துவானே யன்றி இது நாம் ஸுகமனுபவிப்பதற்காக என்று ஒன்றையும் ஒருநாளும் கருதமாட்டான் திலீபன். இதனுல் பிரமதேவன் திலீபனை ஸ்ருஷ்டிக்கும்போது இவனுடைய இக்குணங்கள் ப்ரஜைகளின் நன்மையை விளைவிக்க வேண்டும் என்ற இந்நோக்கத்துடனே படைத்தாரே யன்றி இக்குணங்க

ளால் இவன் பெருமை பெறட்டும் என்ற நோக்கம் சிறிது மில்லை என்று எண்ணவேண்டியதா யிருக்கிறது என்று கருத்து.

முன் இருபத்து நான்காவது ச்லோகத்தில் கூறப்பட்ட வ்யாபாரங்களில் முதலிரண்டு வ்யாபாரங்கள் கீழ்சுலோகம் (29) வரையில் விவரிக்கப் பட்டன. மூன்ருவதான பரணம் அதாவது தாங்குதல் இந்த ச்லோகங்களில் கூறப்பட்டது. தனது ப்ரஜைகளில் ஒருவர் பட்டினி கிடந்தார், வ்யாதியுற்று வைத்யமில்லாது இருந்தார், உடுக்கத் துணியில்லாது தவித்தார் என்ற இந்நிலை இருக்கவே கூடாதென்ற கருத்துடன் திலீபன் ஒவ்வொருவரும் ஸுகஜீவனம் செய்யும்படி அன்புடனும் கவலையுடனும் உதவி புரிந்தான். இதுவே பரண மெனப்பட்டது என்றபடி. (29)

30. स वेलावप्रवलयां परिघीकृतसागराम् ।
अनन्यशासनामुर्वीं शशासैकपुरीमिव ॥

सः = அந்தத் திலீபன்	उर्वीम् = பூமியை
वेलावप्रवलयाम् = கடற் கரைகளையே கோட்டை மதிள்களாகவும்	अनन्यशासनां = மற்றொருவருடைய ஆட்சி யின்றி
परिघीकृतसागराम् = ஸமுத்திரங்களையே அகழாகவு முடைய	एकपुरीमिव = ஒரு பட்டணத்தைப் போல்
	शशास = ஆண்டான்.

ஒரு தேசத்தை ஆளும் அரசன் ப்ரதான நகரமாக ஒன்றைக் கட்டி அதில் வாழ்வான். வேற்றரசர் படையெடுத்து ஸுகமாக உள் புகாதபடி அந்நகரத்தைச் சுற்றி மதிள்களைக் கட்டுவான். அவற்றிற்கு வெளியில் அகழ் அமைப்பான். இவ்விதமான தலைநகரத்தில் அரசன் வாழ்கின்றபடியால் அதிகாரிகளும் ப்ரஜைகளும் சற்று ஒழுங்காகவே நடந்து வருவார்கள். நீதி பரிபாலனமும் ஜனங்களுடைய யோக க்ஷேமங்களும் சரிவர நடப்பதாகவே தோன்றும். ஆனல் அத்தேசத்தின் மற்ற இடங்களில் போய்ப் பார்த்தால் அரசாட்சி என்று ஒன்று நடக்கின்றது என்பதே தோற்ருதபடி ஒவ்வொரு விஷயமும் அவ்வளவு சீர்கெட்டிருக்கும். இதைக் கவனிக்க முடியாது அரசனுக்கு. இப்படிப்பட்ட தல்ல திலீபன் விஷயம். ஒரே பட்டணத்தை ஆளும் ஒருவன் எப்படி அப்பட்டணத்தின் ஒவ்வொரு விஷயத்தையும் செவ்வையாகக் கவ

னித்து எல்லோருக்கும் திருப்தி உண்டாம்படி ஸகல ஸௌகர்யங்களையும் செய்து வைக்கக் கூடுமோ அப்படியே அவன் இக்கடல் சூழ்ந்த தேசம் முழுவதையும் கவனித்துப் பாதுகாத்து வந்தான். தலை நகரத்தின் நிலை ஒருவிதமாகவும் அதற்கு வெகு தூரத்திலுள்ள விடங்களின் நிலை வேறு விதமாகவும் இருந்த தென்பதில்லை. அவன் வாழ்ந்த தலைநகரம் போலவே மற்ற எல்லா இடங்களும் இருந்தன. திலீபன் அரசாட்சி அவ்வளவு திறமையுடன் நடத்தப்பட்டு வந்தது. இத்துடன் அரசாட்சியை வர்ணிக்கிற ப்ரகரணம் முடிகின்றது. 30

31. तस्य दाक्षिण्यरूढेन नाम्ना मगधवंशजा ।
पत्नी सुदक्षिणेत्यासीदध्वरस्येव दक्षिणा ॥

तस्य = அந்தத் திலீபனுக்கு
दाक्षिण्य = தாக்ஷிண்யத்தால்
रूढेन = ப்ரஸித்தமான
नाम्ना = பெயருடன்
मगधवंशजा = மகததேசத்து (அரச) குலத்தி லுண்டான
सुदक्षिणेति = ஸுதக்ஷிணை என்கிற
पत्नी = பத்னி
अध्वरस्य = யஜ்ஞத்திற்கு
दक्षिणेव = தக்ஷிணைபோல்
आसीत् = இருந்தாள்.

மனிதர்களுக்கு இடும்பெயர் அனேகமாய் அர்த்தமில்லாமலே இருக்கும். குருடனுக்கு புண்டரீகாக்ஷன் என்றும், தரித்ரனுக்கு ஸ்ரீனிவாஸன் என்றும் பெயர் உண்டு. இப்படியல்ல திலீபனுடைய பத்னிக்கு உள்ள ஸுதக்ஷிணை என்ற பெயர். இச்சொல்லின் பொருள் மிகுந்த தாக்ஷிண்யமுள்ளவர் என்பது. தாக்ஷிண்யமாவது பிறர் கருத்துப்படி நடத்தல். பிறர் மனம் கோணுமல் இருக்கவேண்டு மென்ற நோக்கத்துடன் நடந்துகொள்வது. இப்பொருள் அப்படியே அமைந்திருந்தது ஸுதக்ஷிணையி னிடத்தில். யார் யார் எப்படி எப்படி விரும்புவரோ அப்படியே அவள் நடப்பாள். பிறர் மனம் நோவ ஸஹிக்கமாட்டாள். இதனுல் ஸுதக்ஷிணை என்ற பெயர் இவளுக்கு மிகவும் பொருந்தியது என்று உலகம் முழுவதும் புகழ்ந்தது. இப்படித் தனது பொருளான தாக்ஷிண்யத்தால் ப்ரஸித்தமாயிற்று இப்பெயர்.

யஜ்ஞத்தில் மிக ப்ரதானமானது தக்ஷிணை. இதனுல் யஜ்ஞம் நிறைவேறும். யஜ்ஞமாகிற கந்தர்வனுக்கு தக்ஷிணையே அப்ஸரஸ் (காதலி) என்கிறது வேதம். இந்த வைதிக உபமானத்தால் இவ்

வர்சதம்பதிகளிடத்தில் மிகுந்த கௌரவம் கருதப்பட்டது. 'परि-णेतुः प्रसूतये' 'ஸந்தானத்திற் காகவே விவாஹம் செய்து கொண்ட' என்று கீழ்ச் சொன்னபடி ஸந்தானத்தைப் பற்றிய புது ப்ரகரணம் இங்கு ஆரம்ப மாகின்றது. (31)

32. कलत्रवन्तमात्मानमवरोधे महत्यपि ।
तया मेने मनस्विन्या लक्ष्म्या च वसुधाधिपः ॥

वसुधाधिपः = அரசன் (திலீபன்)
अवरोधे = அந்தப்புரம்
महत्यपि = பெரிதாய் இருந்தபோதிலும் (பல பலபெண்டாட்டிகள் இருந்தபோதிலும்)
मनस्विन्या = (கம்பீரமான, நல்ல,) மனத்தை உடைய
तया = அந்த ஸுதக்ஷிணையினுலும்
लक्ष्म्या च = ராஜ்ய லக்ஷ்மியினுலும் (மாத்திரம்)
आत्मानं = தன்னை
कलत्रवन्तं = களத்ர முள்ளவனுக
मेने = எண்ணினுன்.

திலீபமஹாராஜனுக்குப் பல பத்னிகள் இருந்தனர். அவர்களுக்குள் மிகவும் உயர்ந்த உத்தமமான ஸ்வபாவமுள்ளவள் ஸுதக்ஷிணை. ஆகையால் இவளிடத்திலேயே அரசனுக்கு மிகுந்த ப்ரீதி. ராஜ்ய ஸம்பத்தை எவ்வளவு ப்ரதானமாக நினைத்தானே அவ்வளவு ப்ரதானமாக இவளையும் அவன் நினைத்தான். (32)

33. तस्यामात्मानुरूपायामात्मजन्मसमुत्सुकः ।
विलम्बितफलैः कालं स निनाय मनोरथैः ॥

सः = அவன்
आत्मानुरूपायां = தனக்குத் தகுந்தவளான
तस्यां = அந்த ஸுதக்ஷிணையினிடத்தில்
आत्मजन्मसमुत्सुकः = புத்ரன் உண்டாக வேணுமென்ற அவா உள்ளவனுய்
विलम्बितफलैः = தாமதித்த பயனையுடைய (நிறைவேறுவதில் தாமதமுள்ள; நிறைவேருத)
मनोरथैः = எண்ணங்களோடு
कालम् = காலத்தை
निनाय = கழித்தான்.

தனக்குப் பிறகு ராஜ்ய பரிபாலனம் செய்தற்குத் தகுந்த ஸந்தானம் உண்டாக வேணுமென்று அவன் ஆசைப்பட்டான். உண்டாகும் அவ்வித ஸந்தானம் ஸுதக்ஷிணையினிடத்தில் உண்டாக வேண்டுமென்பது அவனது ஆசை. ஏனெனில் எல்லாவிதத்திலும்

தனக்கேற்றவள் ஸுதக்ஷிணை ஒருத்தியே என்று அவன் கருதினன். குலம் சீலம் ரூபம் எல்லாம் மற்ற பத்னிகளுக்கும் உள்ளதாயினும் அவன்மனத்திற்கு மிகவும் பிடித்தவள் ஸுதக்ஷிணையே. உண்டாகும் ஸந்தானம் தாயின் குணங்களைக் கொள்ளும். தாய் கம்பீரமான மனப்பான்மை உள்ளவளாயின் பிள்ளையும் அப்படியே யிருக்கும். தாழ்ந்த மனப்பான்மை உள்ளவளாயின் அப்படியே யிருக்கும். அகண்ட பூமண்டலத்தை ஆளுதற்குரிய மகப்பேற்றை திலீபன் விரும்பினன். அவ்வித மகனைப் பெறும்படியாய் மஹா கம்பீரமான மனப்பான்மை வாய்ந்தவள் ஸுதக்ஷிணையைத் தவிர மற்ருருத்தி அவனது அந்தப்புரத்தில் இருக்கவில்லை.

ஸந்தானத்தை விரும்பிய திலீபன் "உண்டாகும் குழந்தை அழகாகவும் புத்திசாலியாகவும் ராஜ்ய பாரத்துக் கேற்ற திறமை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். அந்தந்த காலத்தில் ஜாதகர்மம் முதலிய ஸம்ஸ்காரங்களை அதற்கு நாம் செய்ய வேண்டும். கெட்டிக்காரர்களான உபாத்தியாயர்களைக் கொண்டு வித்யாப்பியாசம், குதிரை யேற்றம், யானை யேற்றம் எல்லாம் கற்பிக்க வேண்டும். அவனை ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்கச் செய்துவிட்டு நாம் அரண்யத்திற்குப் போய் யோக மார்க்கத்தால் பரம்பொருளைக் கண்டு வீடுபெற வேண்டும்" என்றிப்படி பல எண்ணங்கள் உள்ளவனுயிருந்தான். ஆனல் இவை நிறை வேறவில்லை. புத்திரன் உண்டாகாமலே வெகு காலம் கழிந்தது. (33)

34. सन्तानार्थाय विधये स्वभुजादवतारिता ।
तेन धूर्जगतो गुर्वी सचिवेषु निचिक्षिपे ॥

तेन = அந்தத் திலீபனுல்	**अवतारिता** = இறக்கப்பட்ட
सन्तानार्थाय विधये = ஸந்தானத்தை உண்டாக்கக் கூடிய உபாயத்தை அநுஷ்டிப்பதற்காக	**गुर्वी** = பெரிய (கனமான)
	जगतः धूः = உலகத்தின் பாரம்
	सचिवेषु = மந்திரிகளிடத்தில்
स्वभुजात् = தனது புஜத்திலிருந்து	**निचिक्षिपे** = வைக்கப்பட்டது.

வெகு காலம் சென்ற பிறகும் ஸந்தானம் உண்டாகவில்லை. 'இனி தாமதிப்பது தகாது. உடனே புத்ரன் உண்டாகும்படியான காரியம் ஏதாவது செய்து ஆக வேண்டும்' என்று தீர்மானித்தான். அதற்காக ராஜ்ய பாரத்தை மந்திரிகளிடத்தில் ஒப்புவித்

தான். மந்திரிகளில் ஒவ்வொருவரும் 'இது பெரும் பாரம். இப் பொறுப்பை ஏற்க என்னால் முடியாது என்னால் முடியாது' என்று மிகுந்த பயத்தோடு மறுதளித்தார். பிறகு அரசன் இல்லாத போது அரசாங்கத்தை நடத்த யாராவது அதிகாரத்தை வஹித்தே ஆக வேண்டுமே என்று யோசித்துப் பார்த்து தனித்தனியே முடியா தாகினும் எல்லோருமாகச் சேர்ந்து இப்பெரும் பாரத்தை வஹிப் போம் என்று தீர்மானம் செய்து ஒப்புக் கொண்டார்கள்; என் பது गुर्वी सचिवेषु என்றதன் கருத்து. (34)

35. अथाभ्यर्च्य विधातारं प्रयतौ पुत्रकाम्यया।
तौ दम्पती वसिष्ठस्य गुरोर्जग्मतुराश्रमम्॥

अथ = பிறகு

पुत्रकाम्यया = தங்களுக்குப்புத்திரன் உண்டாக வேண்டுமென்ற விருப்பத்தினால்

तौ दम्पती = அந்த ஸதிபதிகள்

प्रयतौ = பரிசுத்தர்களாய்

विधातारं = உலக கர்த்தாவான பரம் பொருளை

अभ्यर्च्य = வழிபட்டு (பூசித்து)

गुरोः = (குல) குருவான

वसिष्ठस्य = வஸிஷ்ட முனிவருடைய

आश्रमम् = ஆச்ரமத்திற்கு

जग्मतुः = போனார்கள்.

குலகுருவான வஸிஷ்ட முனிவரிடத்தில் சென்று தனது குறையை அறிவித்து அவர் உபதேசிக்கும் கார்யத்தைச் செய்வ தாகத் திலீபன் தீர்மானித்தான்: அதனால் ராஜ்யபாரத்தை மந்திரிக ளிடத்தில் ஒப்படைத்துவிட்டு ஸுதக்ஷிணையோடு ஸ்நானம் பண்ணி பரிசுத்தனாய் குலதைவத்திற்குப் பூசை செய்து வணங்கி அதன் உத்தரவு பெற்று வஸிஷ்டரின் ஆசிரமத்திற்குப் போனான். (35)

36. स्निग्धगम्भीरनिर्घोषमेकं स्यन्दनमास्थितौ।
प्रावृषेण्यं पयोवाहं विद्युदैरावताविव॥

स्निग्ध = இனிய

गम्भीर = கம்பீரமான (பெரிய; வெகு தூரத்தில் கேட்கக் கூடிய)

निर्घोषं = சப்தத்தை உடைய

एकम् = ஒரே

स्यन्दनम् = தேரை(ரில்)

प्रावृषेण्यम् = மழைக் காலத்திலுண் டான

पयोवाहम् = மேகத்தை(தில்)
विद्युदैरावताविव = மின்னலும் ஐராவதம் என்கிற தேவலோகத்து யானையும் போல்
आस्थितौ = ஏறிக் கொண்டவர்களாய் (போனார்கள் என்று முன் ச்லோகத்தோடு அன்வயம்.)

சிறந்த வேலைப்பாடுள்ளது திலீபன் ரதம். இவ்வளவு இனிமையாயும் கம்பீரமாயுமுள்ள த்வனி மற்றொரு ரதம் போகும்போது இராது. அரசாங்க முறையில் திலீபன் எங்காவது சென்றால் அப்போது காவலாளர் பலர் கூட விருப்பாராதலின் பட்ட மஹிஷிகள் ஒரே ரதத்தில் அவனோடு கூட இருக்க வியலாது. அவ்விதத் தடை இப்போது இல்லை. ஆகவே தம்பதிகள் இருவரும் ஒரே ரதத்தில் ஏறிச் சென்றனர்.

சப்திக்கும் ரதத்திற்கு சப்திக்கும் மேகமே உபமானமாதலின் சப்திக்கும் நிலை தோற்ற 'மழைக் காலத்திலுண்டான' என்ற விசேஷணம் கொடுக்கப்பட்டது.

திலீபனுக்கு உபமானம் ஐராவதம். உருவம் பெரியது, வலிது, உடையினால் வெண்மை பெற்றது என்றவிக் காரணங்களால். மேகத்தின் மேலிருக்கும் மேகத்திற்கு ஐராவதம் என்று பெயர் என்று சில உரையாசிரியர்கள் கூறுவர். ஸுதக்ஷிணைக்கு உபமானம் மின்னல். உருவம் மெலிந்து பொற்கொடி போன்றிருத்தலின். (36)

37. मा भूदाश्रमपीडेति परिमेयपुरस्सरौ ।
अनुभावविशेषात्तु सेनापरिवृताविव ॥

आश्रमपीडा = ஆச்ரமத்திற்கு உபத்ரவம்
मा भूत् = வேண்டாம்
इति = என்று (கருதி)
परिमेयपुरस्सरौ = சில வேலைக்காரர்களையே உடையவர்களாய்
अनुभाव = மஹிமையின் (தேகஒளியின்)
विशेषात् = சிறப்பினாலோ வென்றால்
सेना = ஸேனையினால்
परिवृताविव = சூழப்பட்டவர்கள் போன்றவர்களாய்(போனார்கள்.)

பலர் கூட வந்தால் அத்தனை பேர்களுக்கும் இடம் ஆஹாரம் முதலிய ஸகல ஸௌகர்யங்களையும் ஆச்ரமத்தில் ஏற்படுத்த வேண்டியிருக்கும். இதனால் ஆச்ரமத்திற்கு உபத்ரவமே. இது வேண்டியதில்லை என்று இவர்கள் கருதினார்கள்,

पुरस्सर என்ற சொல் முன்னே போகிறவர் என்ற பொருளுடையது. ஆகிலும் இங்கு ஸேவகர் என்ற பொதுவான பொருளில் கொள்ளப்படும். சில ஸேவகர்களே அவர்களுடன் சென்றார்கள். பல பேர்கள் கூடப் போகாத காரணத்தால் அவர்களுடைய மேன்மைக்குக் குறைவு சிறிதுமில்லை என்று கருத்து. (37)

38. सेव्यमानौ सुखस्पर्शैः सालनिर्यासगन्धिभिः ।
पुष्परेणूत्किरैर्वातैराधूतवनराजिभिः ॥

सुख = ஸுகத்தைத்தருகிற (அநுகூலமான)
स्पर्शैः = ஸ்பர்சத்தை உடைய,
साल = ஸாலவ்ருக்ஷங்களின்
निर्यास = பெருக்கின் (பிசினுடைய)
गन्धिभिः = வாசனை நிறைந்த,
पुष्प = புஷ்பங்களின்
रेणु = தூள்களை
उत्किरैः = அள்ளி வீசுகின்ற,
आधूत = அசைக்கப்பட்ட
वन = காடுகளின்
राजिभिः = வரிசைகளை உடைய (பல காடுகளின் மரங்களை எல்லாம் ஆட்டி அசைத்துக் கொண்டு வருகிற)
वातैः = காற்றுக்களால்
सेव्यमानौ = உபசரிக்கப் பட்டவர்களாய் (போனார்கள்.)

அயோத்தியா பட்டணத்தைத் தாண்டிச் சென்றார்கள். வழியில் அடர்ந்த காடுகள் இருந்தன. அவற்றிலிருந்து வருங்காற்று இவர்களுக்கு மிகுந்த இன்பத்தை விளைவித்தது. மெதுவாக வீசி ஜில்லென்று மேலே பட்டவுடன் அநுகூலமாக இருந்தது. ஸால வ்ருக்ஷங்களின் பால் பெருக்கின் வாசனை ரம்யமாக இருந்தது. புஷ்பத் தூளிகள் மேலே விழுந்தன. இவ்விசேஷங்கள் எல்லாம் காற்றுக்கு காடுகளில் உள்ள மரங்களை ஆட்டி அசைத்துக்கொண்டு வருவதால் ஏற்பட்டன.

காற்று இவர்களை வரவேற்று அர்க்யபாத்யாதிகள் கொடுத்து தூபங் காட்டி புஷ்பங்களால் அர்ச்சனை செய்தது போலும். இங்கு ஸ்பர்சமே ப்ரதானம். (38)

39. मनोभिरामाः शृण्वन्तौ रथनेमिस्वनोन्मुखैः ।
षड्जसंवादिनीः केका द्विधा भिन्नाः शिखण्डिभिः ॥

रथनेमि = ரதத்தின் வட்டைகளுடைய
स्वन = சப்தங்களாலே (சப்தங்களைக் கேட்டு)

उन्मुखैः = முகங்களைத் தூக்கிக் கொண்டிருக்கிற
शिखण्डिभिः = மயில்களால்
द्विधा = இரண்டு விதமாக
भिन्नाः = பேதிக்கப்பட்ட (வேறு படுத்தப்பட்ட),
षड्जसंवादिनीः = ஷட்ஜஸ்வரம் போன்ற,
मनोभिरामाः = மனத்திற்கு இனிய
केकाः = (மயில்களின்) சப்தங்களை
शृण्वन्तौ = கேட்பவர்களாய் (கேட்டுக் கொண்டு) (போனார்கள்.)

மேகங்களைக் கண்டால் மயில்களுக்கு மிகுந்த உத்ஸாஹம். திலீபனுடைய ரதத்தின் சப்தத்தைக் கேட்டக் காட்டு மயில்கள் அது மேககர்ஜனையே என்றெண்ணி தலை தூக்கி சப்தித்தன. இங்கு இப்படி வர்ணிக்கப் போவதைக் கருதியே स्निग्धगम्भीरनिर्घोषम् என்ற விசேஷணம் முன் ச்லோகத்தில் கொடுக்கப்பட்டது.

ஷட்ஜஸ்வரம் சுத்தம் விக்ருதம் என்றும் ச்யுதம் அச்யுதம் என்றும் இரண்டு விதம். அதற்குச் சமானமான மயில் தொனியும் அப்படியே இரண்டுவிதமென்று சிலர். ஆண் மயில்களின் தொனி ஒரு விதம், பெண் மயில்களின் தொனி ஒரு விதம்; ஆக இரண்டு விதம். அல்லது புதிதாக மனிதர்களைப் பார்த்து ஆச்சரியத்தினுல் ஒருவிதத் தொனி, பயத்தினுல் ஒருவிதத் தொனி என்றிரண்டுவிதமென்று சிலர். முன் ஸ்பர்சேந்திரிய ஸுகம் கூறப்பட்டது. இங்கு ச்ரவணேந்திரிய (செவி) ஸுகம். (39)

40. परस्पराक्षिसादृश्यमदूरोज्झितवर्त्मसु ।
मृगद्वन्द्वेषु पश्यन्तौ स्यन्दनाबद्धदृष्टिषु ॥

अदूर = அதிக தூரமில்லாமல்
उज्झित = விடப்பட்ட
वर्त्मसु = வழியையுடைய (வழியை விட்டு வெகு தூரம் போகாமல் விலகி நின்ற),
स्यन्दन = தேரிலேயே
आबद्ध = வைக்கப்பட்ட
दृष्टिषु = பார்வையை உடைய,
मृगद्वन्द्वेषु = மான் இணைகளில்
परस्पर = ஒருவர்க்கொருவருடைய
अक्षि = கண்களுடைய
सादृश्यम् = ஒப்புமையை
पश्यन्तौ = பார்த்துக் கொண்டு (போனார்கள்.)

ராஜ தம்பதிகள் வெகு சாந்தர்களானதால் மான்களுக்கு மனத்தில் அச்சம் ஒன்றும் உண்டாகவில்லை. ஆகவே அவைகள் விரைந்து ஓடி மறையாமல் வழியை மாத்திரம் விட்டு விலகி நின்றன. தேரும் குதிரைகளும் புதிய தோற்றங்களாகையால் அவைகளையே பார்த்துக் கொண்டிருந்தன. இப்படி இவைகள் இமைக்

காது கண்களைக் காட்டிக் கொண்டு நின்றதால் ராஜ தம்பதிகளுக்கு அக்கண்களை நன்ருய்ப் பார்க்க வசதி உண்டாயிற்று. ஸுதக்ஷிணை தன் பதியின் கண்களையும் ஆண்மான் கண்களையும் பார்த்து எவ்வளவு ஒத்திருக்கின்றன என்று வியந்தாள். திலீபன் தன் பத்நியின் கண்களையும் பெண்மான் கண்களையும் பார்த்து அவ்விதமே வியந்தான். இப்படி இவர்களுக்கு நேத்ராநந்தமும் கிடைத்தது. இத்துடன் அரண்ய மார்க்கம் முடிந்துவிட்டது. (40)

41. श्रेणीबन्धाद्वितन्वद्भिरस्तम्भां तोरणस्रजम् ।
सारसैः कलनिर्ह्रादैः क्वचिदुन्नमिताननौ ॥

श्रेणी = வரிசையை
बन्धात् = அமைப்பதாலே (ஒரே வரிசையாய் இருப்பதாலே)
अस्तम्भाम् = கம்பமில்லாத
तोरणस्रजम् = தோரணமாலையை
वितन्वद्भिः = உண்டாக்குகிற (உண்டாக்குவன போன்ற),
कलनिर्ह्रादैः = இனிய சப்தமுள்ள,
सारसैः = ஸாரஸபக்ஷிகளால்
क्वचित् = சில இடங்களிலே
उन्नमिताननौ = நிமிர்த்திய முகத்தை உடையவர்களாய் (முகத்தை மேல் பக்கமாகத் திருப்பிப் பார்த்தவர்களாய்) (போனுர்கள்.)

ஸாரஸ பக்ஷிகள் வரிசையாய் திலீபன் தேருக்கு நேராக ஆகாசத்தில் பறந்தன. அவை அப்போது கம்பமில்லாமலே கட்டிய தோரணம் போல் இருந்தன. அவைகள் செய்யும் இனிய சப்தம் காதில் பட்டவுடனே இருவரும் நிமிர்ந்து பார்வையை மேலே செலுத்தி பக்ஷிகளின் அழகான வரிசையைப் பார்த்துக் களித்தனர். இங்கும் நேத்ரானந்தமே கருதப்பட்டது. பூமியிலுள்ள வஸ்துக்களும் திசைகளிலுள்ள வஸ்துக்களும் மாத்திரமேயன்றி ஆகாசத்திலுள்ளவைகளும் இவர்களை மகிழ்வித்தன என்பது இங்கே வ்யங்க்யம். (41)

42. पवनस्यानुकूलत्वात् प्रार्थनासिद्धिशंसिनः ।
रजोभिस्तुरगोत्कीर्णैरस्पृष्टालकवेष्टनौ ॥

प्रार्थना = விருப்பத்தின்
सिद्धि = பூர்த்தியை (கைகூடுதலை)
शंसिनः = சொல்லுகிற(காட்டுகிற)
पवनस्य = காற்றின்
अनुकूलत्वात् = அனுகூலத் தன்மையால் (எதிர் முகமாக வீசாது போகும் திக்கைக் குறித்தே காற்று வீசியதால்)

तुरगोत्कीर्णैः = குதிரைகளால் கிளப்பப்பட்ட
रजोभिः = புழுதிகளால்
अस्पृष्ट = தீண்டப்படாத
अलकवेष्टनौ = முன் நெற்றி மயிர்களையும் தலைப்பாகையையும் உடையவர்களாய் (போனார்கள்.)

ஸுதக்ஷிணையின் நெற்றியில் தொங்கும் முன் மயிர்களிலாவது திலீபனின் தலைப்பாகையிலாவது தூசி படியவேயில்லை. காற்று பின் பக்கத்திலிருந்து முன் பக்கமாக வீசியதால். இப்படி வீசும் காற்றுக்கு அனுகூலவாதம் என்று பெயர். உத்தேசித்த கார்யம் நிறைவேறு மென்பதைக் காட்டும் சுப சகுனம் இது.

கீழ் இரண்டு ச்லோகங்களிலும் அழகிய வஸ்துக்களைக் கண்ணால் கண்டு களித்தனர் ராஜ தம்பதிகள் என்று கூறப்பட்டது. குதிரைகள் வேகமாக ஓடும்போது தூசி கிளம்பி கண்ணைத் திறக்க வொட்டாதாகையால் இந்த வர்ணனம் சோரமென்ற சங்கைக்குப் பரிஹாரம் இங்கு வெகு அழகாகக் குறிக்கப் பட்டது. (42)

43. सरसीष्वरविन्दानां वीचिविक्षोभशीतलम् ।
आमोदमुपजिघ्रन्तौ स्वनिश्वासानुकारिणम् ॥

सरसीषु = தடாகங்களில்
वीचि = அலைகளினால் உண்டான
विक्षोभ = கலக்கத்தால்
शीतलम् = குளிர்ந்து
स्वनिश्वासानुकारिणम् = தமது மூச்சுக் காற்று போன்ற (மூச்சுச் காற்றின் மணம் போன்றிருந்த)
अरविन्दानां आमोदम् = தாமரைப் பூக்களின் மணத்தை
उपजिघ्रन्तौ = முகருகின்றவர்களாய் (போனார்கள்.)

உயர்ந்த ஸ்திரீ புருஷர்களின் மூச்சு நல்ல மணமுள்ளதாக விருக்கு மென்று சாஸ்திரம் கூறுகின்றது.

இதனால் மூக்குக்கும் திருப்தி கூறப்பட்டது. ஜ்ஞானேந்த்ரியம் ஐந்து - கண், காது, மூக்கு, நாக்கு, பரிசம் என்று. அவற்றுள் நாக்கை விட்டு மற்றவைகளுக்கெல்லாம் வழியில் தானாக உண்டான திருப்தி சொல்லப்பட்டது. இவர்கள் ஸ்நானஞ் செய்து தெய்வத்தை வணங்கிப் பழம் பால் புசித்தோ அதுவும் இல்லாமலோ விரதம் பூண்டு குருவின் ஆச்ரமத்திற்குச் செல்கின்றார்களாதலின் வழியில் ஒன்றும் புசியார்கள். ஆகவே நாக்கின் பும் கூறுது விடப்பட்டது. (33)

44. ग्रामेष्वात्मविसृष्टेषु यूपचिह्नेषु यज्वनाम् ।
अमोघाः प्रतिगृह्णन्तावर्घ्यानुपदमाशिषः ॥

आत्म = தன்னால்
विसृष्टेषु = தானம் செய்யப்பட்ட,
यूपचिह्नेषु = யூபஸ்தம்பங்களை அடையாளமாக உடைய
ग्रामेषु = கிராமங்களில்
यज्वनाम् = விதிப்ரகாரம் யஜ்ஞம் செய்பவர்களுடைய
अमोघाः = வீண் போகாத
आशिषः = ஆசீர்வாதங்களை
अर्घ्यानुपदम् = அர்க்யத்திற்குப் பிறகு
प्रतिगृह्णन्तौ = பெற்றுக் கொண்டு (போனார்கள்).

யஜ்ஞங்களில் பசுவைக் கட்டுவதற்காக நடும் கம்பம் யூபம். திலீபன் போகும் வழிக்கு ஸமீபத்தில் பல ச்ரோத்திரிய க்ராமங்கள் இருந்தன. அவற்றில் வஸிக்கும் பெரியோர்கள் அடிக்கடி யஜ்ஞம் செய்வார்களாதலின் ஆங்காங்கு யஜ்ஞ சாலைகளில் நட்ட யூப ஸ்தம்பங்கள் அப்படியே நின்றன. அவற்றைக் கண்டதும் ரதத்திலிருந்து இறங்கி பெரியோர்களை வணங்குவதற்காக க்ராமங்களுக்குள் சென்றான் அரசன். திலீபன் வருவதை யறிந்த வேள்வியர்கள் அர்க்யத்துடன் வந்து அவனை வரவேற்று உபசரித்து நல்ல புத்திரனைப் பெற வேண்டுமென்று ஆசீர்வதித்தனர். இவர்களுடைய ஆசீர்வாதம் வீண் போகா தென்ற நம்பிக்கையுடன் இவ்வாசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டனர் ராஜ தம்பதிகள். (44)

45. हैयङ्गवीनमादाय घोषवृद्धानुपस्थितान् ।
नामधेयानि पृच्छन्तौ वन्यानां मार्गशाखिनाम् ॥

हैयङ्गवीनम् = புத்துருக்கு நெய்யை
आदाय = எடுத்துக்கொண்டு
उपस्थितान् = வந்த
घोषवृद्धान् = இடைச்சேரிப் பெரியோர்களை
वन्यानाम् = காட்டில் உண்டான
मार्गशाखिनाम् = வழி (யின் இரண்டு பக்கங்களிலுமுள்ள) மரங்களின்
नामधेयानि = பெயர்களை
पृच्छन्तौ = கேட்டுக் கொண்டு (போனார்கள்).

அரசனை வெறுங் கையுடன் பார்க்கக் கூடாதென்று தங்களுக்கு ஸுலபமாய்க் கிடைப்பதான நெய்யை எடுத்துக் கொண்டு வழியில் போய் நின்றார்கள் விருத்தர்களான இடையர்கள். நகரத்

தில் காணக்கிடையாது புதிதாய்க் காணப்பட்ட மரங்களின் பெயர்களைத் தெரிந்து கொள்வதற்கு இவர்களை உபயோகப்படுத்திக் கொண்டான் அரசன். இவ்விதமாக அவர்களுடன் ஸம்பாஷணம் செய்து அவர்களை அரசன் கௌரவித்தான். வேள்விசெய்யும் பெரியோர்களை வணங்குவதற்காக அரசன் தேரிலிருந்து இறங்கி அவர்களிருக்குமிடத்திற்குச் சென்றான். இடைச்சேரிப் பெரியோர்கள் அரசன் செல்லும் வழியிலேயே வந்து காத்திருக்க அரசன் தேரை நிறுத்தி அதிலிருந்தபடியே அவர்களுடன் பேசி அவர்களைக் கௌரவித்து அனுப்பினான். உலகம் தீங்கொன்றுமிராமல் க்ஷேமமாய் வாழ்வதற்கு அடிப்படையான காரணம் இரண்டு. அவையாவன வேள்வி செய்வதையே முக்யத் தொழிலாகக் கொண்ட அந்தணர்களும்; வேள்விக்குரிய நெய் தயிர் பால் இவற்றைத் தரும் பசுக்களும். இதனாலேயே गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु என்கிறது. இவ்விரண்டின் க்ஷேமத்தையும் பிரதானமாகக் கவனித்தான் அரசன் என்று கருத்து.

இப்படிப் பத்து ச்லோகங்கள் ஸுதக்ஷிணையும் திலீபனும் ரதமேறிப் புறப்பட்டு வழியில் செய்ததைச் சொல்லுமவையாய் 35-வது ச்லோகத்தோடு ஒரே வாக்யமாய் அந்வயித்து முடிகின்றன.

46. काऽप्यभिख्या तयोरासीद्व्रजतोः शुद्धवेषयोः ।
हिमनिर्मुक्तयोर्योगे चित्राचन्द्रमसोरिव ॥

शुद्धवेषयोः = பரிசுத்தமான தோற்றத்தை உடையவர்களாக
व्रजतोः = போகின்ற
तयोः = அவ்வரச தம்பதிகளுக்கு
हिमनिर्मुक्तयोः = பனியிலிருந்து நீங்கிய
चित्राचन्द्रमसोरिव = சித்திரை நக்ஷத்திரம் சந்திரன் இவ்விரண்டுக்கும் போல்
योगे = சேர்க்கையில்
काऽपि = ஒரு (வாக்குக்கு நிலமல்லாத)
अभिख्या = சோபை (அழகு)
आसीत् = உண்டாயிற்று.

மற்ற காலங்களில் அரசாங்க முறைக்குத் தக்கபடி ஆடைகளாலும் ஆபரணங்களாலும் மறைக்கப்பட்டு உருவம் செவ்வனே தோற்றாது. இப்போது அப்படியில்லாமல் ஸாதாரண உடை தரித்திருந்தமையால் இயற்கையாயுள்ள சாந்தமான தேஜஸ்ஸு ஜ்வலித்தது. அத்துடன் மற்ற காலங்களில் காணக் கிடையாதது ஸுத

க்ஷிணையின் சேர்க்கை. இவ்விருவர்களையும் பார்த்த ச்ரோத்ரியர்களும் மற்ற ஜனங்களும் "என்ன தேஜஸ்ஸு, என்ன பளபளப்பு, என்ன கவர்ச்சி, ஒருவர்க் கொருவர் எவ்வளவுதான் ஏற்றிருக்கிறார்கள்" என்று ஆச்சரியப் பட்டனர் என்று கருத்து. (46)

47. तत्तद् भूमिपतिः पत्न्यै दर्शयन् प्रियदर्शनः ।
अपि लङ्घितमध्वानं बुबुधे न बुधोपमः ॥

बुधोपमः = தேவன் போன்று
प्रियदर्शनः = இனிய தோற்றமுள்ள
भूमिपतिः = அரசன்
पत्न्यै = பத்னிக்கு
तत् तत् = அந்தந்த வஸ்துவை
दर्शयन् = காண்பித்துக்கொண்டு
अध्वानम् = வழி
लङ्घितमपि = கடக்கப் பட்டிருந்தும் (அதை)
न बुबुधे = அறிய வில்லை.

அரசன் பத்தினியினிடத்தில் உள்ள மிகுந்த அன்பினால் அங்கங்கே காணும் வஸ்துக்களைக்காட்டி இது இன்னது இது இன்னது என்று சொல்லிக்கொண்டு வந்தான். ஸுதக்ஷிணை தனது பதியைக் கௌரவிப்பதற்காக அவன் காட்டிய வஸ்துக்களைப் பார்த்தாள், சொன்ன வார்த்தைகளைக் கேட்டாள். ஆனால் அவள் உண்மையில் கண்டு களித்தது அரசன் அழகைத்தான். **दर्शयन् प्रियदर्शनः** அவன் அந்தந்த வஸ்துக்களின் தர்சனம் பண்ணச் சொல்லுகிறான். அவளுக்கு இவன் தர்சனமே இனியதா யிருக்கின்றது.

இப்படிப் பத்னியை மகிழ்வித்தலில் அரசனும், பதியின் அழகை அனுபவிப்பதில் ஸுதக்ஷிணையும் மிகுந்த கவனத்தைச் செலுத்தியிருந்த படியால் வழி சென்றதே தெரியவில்லை. வழி முடிந்தது என்பது இங்கே ப்ரதானமான பொருள். (47)

48. स दुष्प्रापयशाः प्रापदाश्रमं श्रान्तवाहनः ।
सायं संयमिनस्तस्य महर्षेर्महिषीसखः ॥

दुष्प्राप = மற்றொருவருக்குக் கிட்டாத
यशाः = புகழ் படைத்த
सः = அந்தத் திலீபன்
श्रान्तवाहनः = களைப்புற்ற குதிரைகளை உடையவனாய்
महिषीसखः = பட்டமஹிஷியுடன்
सायम् = ஸாயங்காலத்தில்
संयमिनः = அவ்வேளைக்குரிய அனுஷ்டானங்களைச் செய்து கொண்டிருந்த
तस्य = முன் (35-வது ச்லோகத்தில்) குரு என்று சொல்லப்பட்ட

महर्षेः = வஸிஷ்ட மஹர்ஷியி னுடைய	आश्रमम् = ஆச்ரமத்தை प्रापत् = அடைந்தான்.

பத்னியோடு வருவதால் இருட்டாவதற்கு முன் ஆச்ரமத்திற்குப் போய்ச் சேரவேண்டுமென்ற எண்ணத்துடன் ரதம் வெகு வேகமாகச் செலுத்தப்பட்டது. அதனால் குதிரைகள் களைப்புற்றன. அதை அரசன் ஸஹிக்கவில்லை. ஆச்ரமம் வந்து விட்டது; இனி குதிரைகள் களைப்பாறலாம் என்று ஸந்தோஷித்தான்.

உலகத்தில் அரசர்கள் விஷயாலோசனை செய்யவேண்டிய போது யாரோடு ஆலோசனை செய்ய வேண்டுமோ அவர்களைத் தமது அரண்மனைக்கு வரவழைப்பார்கள். அல்லது மந்திரி முதலானவர்களை அனுப்பிக் கேட்டு வரச்செய்வார்கள். தாங்களே அவர்கள் இருக்குமிடத்திற்குப் போவது என்பது தோன்றாது. அதிலும் பட்டமஹிஷியை எல்லோரும் காணும்படி அழைத்துப் போவதை ஒருகாலும் இசையார்கள்.

அவ்வாறன்றி அகண்ட பூமண்டலாதிபதியான திலீபன் தனது பத்னியோடு கடும் பிரயாணம் செய்து முனிவர் ஆச்ரமத்திற்கு வந்தான். இத்தகைய குணம் மற்ற யாருக்கு உண்டு? இத்தகைய குணமில்லாதவருக்கு இவனுடைய புகழ் கிடைக்குமா? ஒருநாளும் கிடைக்காது என்று கவி வியந்து கொண்டாடுகிறார். இப்படி அஹங்காரத்தை விட்டுத் திலீபமஹாராஜன் வந்து ஸேவிக்கக் கூடிய மாஹாத்ம்யம் வஸிஷ்டருக்குமுண்டு. இவர் மஹர்ஷி. காலந் தவறாது தர்மானுஷ்டானம் செய்து உலக க்ஷேமத்தை விளைவிப்பவர், என்றிவரையும் கொண்டாடுகிறார் கவி.

ஸுதக்ஷிணை இப்போது தான் முதல் தடவையாக ஆச்ரமத்திற்கு வருகிறாள். ஆகையால் இதுதான் ஆச்ரமம், ஆச்ரமத்திற்கு நாம் வந்துவிட்டோம் என்பது அவளுக்குத் தெரியாது. அதனால் தம்பதிகள் ஆச்ரமத்தை அடைந்தார்கள் என்னமல் அவளை விட்டு அவன் அடைந்தான் என்றது. (48)

49. वनान्तरादुपावृत्तैः समित्कुशफलाहरैः ।
पूर्यमाणमदृश्याग्निप्रत्युद्यातैस्तपस्विभिः ॥

वनान्तरात् = காட்டுக்குள்ளிருந்து
उपावृत्तैः = திரும்பி
समित्कुशफलाहरैः = ஸமித் (பலாசங் குச்சி) தர்ப்பம் பழங்கள் இவைகளைக் கொண்டு வருகின்ற,
अदृश्य = கண்ணுக்குப் புலப்படாத
अग्नि = அக்னிகளாலே
प्रत्युद्यातैः = எதிர்கொண்டழைக்கப்பட்ட
तपस्विभिः = ரிஷிகளால்
पूर्यमाणम् = நிரப்பப் படுகின்ற(ஆச்ரமத்தை அடைந்தான் என்று கீழ் ச்லோகத்தோடு அந்வயம்).

காட்டுக்கு ஸமீபத்தில் அல்லது காட்டின் ஓரத்தில் ஆச்ரமம். ரிஷிகள் காட்டிற்குள் போய் ஸமித்து முதலியவற்றைச் சேமித்துக் கொண்டு ஸாயங்காலம் ஆச்ரமத்திற்குத் திரும்பி வருவார்கள். वनान्तरात् "வேறு காட்டிலிருந்து" என்பது உரையாசிரியர் கூறும் பொருள்.

அக்னியை வளர்த்துத் தினந்தோறும் விதித்த காலத்தில் ஹோமம் செய்யும் முனிவர் வெளியில் செல்லும்போது அக்னியின் அனுமதி பெற்றுச் செல்வர். அவர்கள் திரும்பி வரும்போது அக்னி பிறர் கண்ணுக்குப் புலப்படாத உருவத்தில் எதிர்கொண்டழைக்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது. அக்னி பகவானை ஆஹுதி முதலியவற்ருல் பூசிக்கும் ரிஷிகளுக்கு அக்னியினிடத்தில் எவ்வளவு அன்பும் ஆதரவும் உண்டோ அவ்வளவு அன்பும் ஆதரவும் அக்நிக்குத் தன்னைப் பூசிக்கும் ரிஷிகளிடத்தில் உண்டு. (49)

50. आकीर्णमृषिपत्नीनामुटजद्वाररोधिभिः ।
अपत्यैरिव नीवारभागधेयोचितैर्मृगैः ॥

नीवार = நீவார தான்யத்தின்
भागधेय = பங்குக்கு (பங்கைப் பெறுவதற்கு)
उचितैः = தக்கவையாய்,
उटज = பர்ணசாலையின்
द्वार = வாசல் வழியை
रोधिभिः = தடுக்கின்ற,
ऋषिपत्नीनाम् = ரிஷிபத்னிகளுடைய
अपत्यैरिव = குழந்தைகள் போன்ற
मृगैः = மான் (குட்டி) களாலே
आकीर्णम् = சூழப்பெற்ற (ஆச்ரமத்தை அடைந்தான்).

ரிஷிபத்னிகள் ஆச்ரமத்திலிருந்து வெளியே சென்று நீவார தான்யத்தைச் சேகரித்துக்கொண்டு வருவார்கள். வந்தவுடன், வெளியே போய் மேய்ந்துவரச் சக்தியற்ற இளமான் குட்டிக

ளுக்குத் தாம் கொண்டுவந்த தான்யத்தில் சிறிது போடுவார்கள். இதை அவை புஜிக்கும். இவ்வழக்கத்தால் மான்குட்டிகள் ஸாயங் காலம் ரிஷிபத்னிகள் தான்யத்தோடு வந்ததைப் பார்த்த தக்ஷணம் துள்ளிக் குதித்து விரைந்தோடி அவர்கள் உள்ளேவரும் வழியைத் தடுத்துச் சுற்றிவந்து பெரும் பரபரப்புக் காட்டும். இது இங்கே வர்ணிக்கப்பட்டது. (50)

51. सेकान्ते मुनिकन्याभिः तत्क्षणोज्झितवृक्षकम् ।
विश्वासाय विहङ्गानामालवालाम्बुपायिनाम् ॥

आलवाल = பாத்தியிலுள்ள
अम्बु = தண்ணீரை
पायिनाम् = குடிக்கின்ற
विहङ्गानाम् = பக்ஷிகளுக்கு
विश्वासाय = (தீங்கு வாராதென்ற)நம்பிக்கை உண்டாவதற்காக

सेकान्ते = தண்ணீர்கொட்டி முடிந்ததும்
मुनिकन्याभिः = ரிஷி பெண்களால்
तत्क्षण = அதே க்ஷணத்தில்
उज्झित = விடப்பட்ட
वृक्षकम् = செடிகளை உடைய (ஆச்ரமத்தை அடைந்தான்).

ஆச்ரமத்தில் செடிநட்டுப் பாத்தி கட்டி ஜலங்கொட்டி வளர்ப்பார்கள். அப்பாத்திகளில் தேங்கும் ஜலத்தைப் பக்ஷிகள் பருகும். மனிதர் பக்கத்தில் இருந்தால் பக்ஷிகள் பயப்படும். ஜலங்கொட்டிக் கொஞ்சநேரம் போனால் ஜலம் பூமியில் சுவறிப்போய்ப் பக்ஷிகள் குடிப்பதற்கு இல்லாமற் போம். ஆகவே ரிஷிபெண்கள் பாத்திகளில் ஜலத்தைக் கொட்டிவிட்டு அதே க்ஷணத்தில் அவ்விடத்தை விட்டகன்றார்கள், உடனே வந்து பக்ஷிகள் சங்கை யில்லாமல் தண்ணீர் குடிக்கட்டுமென்று கருதி. (51)

52. आतपात्ययसंक्षिप्तनीवारासु निषादिभिः ।
मृगैर्वर्तितरोमन्थमुटजाङ्गणभूमिषु ॥

आतपात्यय = வெய்யில் போனதனால்
संक्षिप्त = குவிக்கப்பட்ட
नीवारासु = நீவாரதான்யங்களை உடைய
उटज = பர்ணசாலைகளின்
अङ्गण = கட்டுகளுடைய
भूमिषु = ஸ்தலங்களில் (தரைகளில்)

निषादिभिः = படுத்துக்கொண்டிருக்கிற
मृगैः = மான்களால்
वर्तित = செய்யப்பட்ட
रोमन्थम् = அசைபோடுதலையுடைய (மான்கள் அசைபோடுகின்ற; ஆச்ரமத்தை அடைந்தான்).

இவை பெரிய மான்கள். ரிஷிகளுடைய சிக்ஷையினுல் விவேகம் பெற்றவை. ஆகவே அவ்விடத்தில் பக்கத்திலேயே தான்யக் குவியல்கள் இருந்தபோதிலும் கொஞ்சமும் தின்னமாட்டா. அவற்றின் அருகிலேயே அசைபோட்டுக் கொண்டு படுத்திருக்கும்.

53. अभ्युत्थिताग्निपिशुनैरतिथीनाश्रमोन्मुखान् ।
पुनानं पवनोद्धूतैर्धूमैराहुतिगन्धिभिः ॥

अभ्युत्थित = ஹோமத்திற்காக எடுத்து வைக்கப்பட்டு ஜ்வலிக்கின்ற
अग्नि = அக்னிகளை
पिशुनैः = அறிவிக்கின்ற,
आहुतिगन्धिभिः = ஹோமம் செய்யப்பட்ட திரவியங்களின் மணமுள்ள,
पवनोद्धूतैः = காற்றினுல் அலைக்கப்பட்ட
धूमैः = புகைகளால்
आश्रमोन्मुखान् = ஆச்ரமத்திற்கு வருகின்ற
अतिथीन् = அதிதிகளை
पुनानम् = பரிசுத்தமாக்குகின்ற (ஆச்ரமத்தை அடைந்தான்).

மூட்டி ஜ்வலிக்கச் செய்யும் போது புகை கிளம்பிக் காற்றினுல் பரவுகின்றது. இது மந்திரத்துடன் வளர்த்த பரிசுத்தமான அக்னியின் புகையானதால் இது தான் பட்டவுடன் எல்லாருக்கும் சுத்தியைச் செய்யும்.

இப்படி ஐந்து ச்லோகங்களால் ஆச்ரமம் வர்ணிக்கப்பட்டது. ஆச்ரமம் கண்ணில் பட்டவுடனே திலீபன் கொஞ்ச தூரத்திலேயே ரதத்தை நிறுத்திவிட்டு ஆச்ரமத்தில் என்ன நடக்கிறதென்று பார்த்தான். காடுகளிலிருந்து ஸமித்து முதலானவற்றை எடுத்துக் கொண்டு ரிஷிகள் உள்ளே புகுவது தெரிந்தது. பிறகு ஆச்ரமத்திற்குள் இருக்கும் பர்ணசாலைகளின் வாசற்படியில் தான்யத்திற்காக மான் குட்டிகள் ரிஷிபத்நிகளை வளைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பிறகு பர்ணசாலைகளைச் சுற்றிப் பெண்கள் செடிகளுக்கு ஜலம் கொட்டுவதும் தான்யக்குவியல்களும் அவற்றின் பக்கத்தில் மான்கள் படுத்துக் கொண்டிருப்பதும் தெரிந்தன. ஹோமம் முடியும் ஸமய மென்பதை உணர்ந்து இனி ஆச்ரமத்திற்குள் போகலா மென்று எண்ணினுன். (53)

54. अथ यन्तारमादिश्य धुर्यान् विश्रामयेति सः ।
तामवारोहयत्पत्नीं रथादवततार च ॥

अथ = பிறகு
सः = அந்தத் திலீபன்
धुर्यान् = குதிரைகளை
विश्रामय = அவிழ்த்துவிடு (இளைப் பாற்று)
इति = என்று
यन्तारं = தேர்ப்பாகனை
आदिश्य = ஆக்ஞாபித்து
ताम् = அந்த
पत्नीम् = பத்னியை
रथात् = தேரிலிருந்து
अवारोहयत् = இறங்கச் செய்தான்.
अवततारच = தானும் இறங்கினான்.

'அடைந்தான்' என்று முடித்து விட்டுப் பிறகு ஆச்ரமத்தில் நடந்தவற்றை வர்ணித்து இங்கே 'பிறகு' என்று ஆரம்பித்து ரதத்திலிருந்து இறங்கியதைக் கூறுவதால் திலீபன் ரதத்திலேயே கொஞ்ச காலம் இருந்து கவனித்து ரிஷிகளின் ஸாயங்காலாநுஷ்டானங்களுக்குச் சிறிதும் விரோதமில்லாமலிருக்க வேண்டுமென்று கருதி ஆச்ரமத்திற்குள் போகும் ஸமயத்தை எதிர் பார்த்தான் என்பது ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது.

அந்தப் பத்னியை: அதாவது புத்ரன் உண்டாக மஹர்ஷியின் அநுக்ரஹத்தைப் பெறுவதற்காகத் தான் மிகுந்த ஆதரவோடும் ப்ரீதியோடும் அழைத்துக் கொண்டு வந்த பத்னியை. இறங்கும் போது தடுமாற்றம் ஏற்பட்டால் அபசகுனமாகும். கார்யஸித்தியில் ஸம்சயம் ஏற்படலாம். ஆகவே பலகைகள், பீடங்கள், வைத்து ஸ்த்ரீகளும் ஸுகமாய்த் தேரிலிருந்து கீழே இறங்கக் கூடிய ஏற்பாட்டைச் செய்து இங்கே காலை வைக்க வேண்டும் இதைக் கையால் பிடித்துக் கொள்ள வேண்டும் என்றிப்படி எல்லாம் சொல்லித் தானும் அவளைப் பிடித்து வெகு ஜாக்கிரதையாக இறங்கச் செய்தான்.

अवारोहयत् என்றதற்குத்தகுந்தபடி अवरुरोहच என்ருவது अवततार च என்றதற்குத் தக்கபடி अवातारयत् என்ருவது ப்ரயோகிப்பது உசிதம். ஆயினும் வெவ்வேறு தாதுவை எடுத்ததற்குக் காரணம் உண்டு. तॄ என்ற தாதுவுக்குக் குதித்தல் தாண்டுதல் என்று பொருள். திலீபன் ரதத்திலிருந்து இறங்குவதற்கு விசேஷித்துப் படிக்கட்டு ஒன்றும் வேண்டியதில்லை. இங்கு ஒரு காலும் அங்கு ஒரு காலுமாக வைத்து இறங்கி விடுவான். இவ்வித மன்று ஸுதக்ஷிணை

இறங்குவது. வெகு வெகு மெள்ள அவள் இறங்குவாள். ஆகவே இவள் விஷயத்தில் அந்த தாதுவை ப்ரயோகிப்பது உசிதமல்ல. செடி கொடிகள் முளைப்பதும் வளர்வதும் போல் கொஞ்சம் கொஞ்சமாக இருக்கும் இவள் இறங்குவது. இதைப்பற்ற ருஹ தாது உபயோகப் படுத்தப்பட்டது. (54)

55. तस्मै सभ्याः सभार्याय गोप्त्रे गुप्ततमेन्द्रियाः ।
अर्हणामर्हते चक्रुर्मुनयो नयचक्षुषे ॥

सभ्याः = சபைகளுக்குரிய (பெரும் ஸபைகளில் நடந்து கொள்ளவேண்டிய முறையில் தேர்ச்சி பெற்ற);	गोप्त्रे = (எல்லோருக்கும்) ரக்ஷகனை
गुप्ततम = மிகவும் அடக்கப்பட்ட	नयचक्षुषे = சாஸ்திரங்களையே கண்ணாக உடைய
इन्द्रियाः = இந்திரியங்களை உடைய	अर्हते = உபசரிக்கத் தகுதியுள்ள
मुनयः = ரிஷிகள்	तस्मै = அவனுக்கு
सभार्याय = பார்யையோடு கூடின	अर्हणाम् = உபசாரத்தை
	चक्रुः = செய்தார்கள்

மஹாராஜனும் மஹாராணியும் அதிதிகள். இத்தகைய பெரிய மனிதர்களை எப்படி வரவேற்று உபசரிப்பது என்பதெல்லாம் வஸிஷ்டாச்ரமத்திலுள்ள அவர் சிஷ்யர்களான ரிஷிகளுக்குத் தெரியும். காட்டில் வஸிப்பவர்களானதால் அரச தம்பதிகளைத் தகுந்தபடி வரவேற்றுப் பேசி உபசரிக்கத் தெரியாதவர்கள் என நினைத்தல் கூடாது. வெகு நாகரீக முள்ளவர்கள் இம் முனிவர்கள் என்கிறார் கவி.

அரசன் உலகத்தைப் பாதுகாக்கின்றவன். ரிஷிகள் தமது இந்திரியங்களைப் பாதுகாக்கின்றவர்கள். இவர்கள் மனக் கண்ணை உபயோகிப்பவர்கள்; அவன் சாஸ்திரக் கண்ணை உபயோகிப்பவன். இப்படி அதிதியாய் வந்தவனும் அவனை உபசரிக்கின்றவர்களும் ஸமமான பெருமை வாய்ந்தவர்கள். இவ்வித சேர்க்கை அரிது, இரு சாராருக்கும் மிகுந்த ஆநந்தத்தை தருவது என்று கவி தானும் ஸஹ்ருதயராய்க் களிக்கின்றார்.

இந்திரிய ஜயமுள்ளவராதலின் மஹா ராணியாய் மஹா ஸுந்தரியான ஸுதக்ஷிணையை அசட்டுத் தனமாகப் பார்க்கக் கருதார் என்பதும் குறிக்கப்பட்டது. ஜிதேந்த்ரியராதலால் ராஜ பத்நியையும்

பார்க்கத் தகுந்தவர்கள் என்றார் சிலர். ஏதோ ரதம் வந்து நிற்கிறதே யாருடையது என்று ஆச்ரம வாஸிகள் அறிய ஆவல் கொண்டனர். அப்போது திலீபன் ஸேவகர்கள் வந்து மகாராஜன் வந்திருப்பதை அறிவித்தனர். உடனே ரிஷிகள் அவனை வரவேற்கச் சென்று ரதத்திலிருந்து இறங்கி வந்து கொண்டிருக்குமவனைக் கண்டு அழைத்து வந்து கை கால் கழுவத் தீர்த்தம் கொடுத்து ஆஸனத்திலிருக்கச் செய்து விசிறி கொடுத்துக் களைப்பாறச் செய்தார்கள். கொஞ்சம் ச்ரம பரிஹாரம் எற்பட்டவுடன் திலீபன் ஸந்த்யா வந்தனம் செய்தான். (55)

56. विधेः सायन्तनस्यान्ते स ददर्श तपोनिधिम् ।
अन्वासितमरुन्धत्या स्वाहयेव हविर्भुजम् ॥

सः = அந்தத் திலீபன்
सायन्तनस्य = ஸாயங்காலம் செய்ய வேண்டிய
विधेः = கர்மானுஷ்டானத்தின்
अन्ते = முடிவில்
अरुन्धत्या = (பத்னியான) அருந்ததி தேவியினால்
अन्वासितम् = பின் நின்று ஸேவிக்கப் பெற்ற
तपोनिधिम् = வஸிஷ்ட மஹர்ஷியை
स्वाहया = (பத்நியான) ஸ்வாஹா தேவியினால்
(अन्वासितम् = பின் நின்று ஸேவிக்கப் பெற்ற)
हविर्भुजमिव = அக்னியைப் போல்
ददर्श = பார்த்தான்.

இங்கு எடுக்கப்பட்ட ஸாயங்கால கர்மானுஷ்டானம் வஸிஷ்டருடைய தென்பர் உரையாசிரியர். திலீபனுடைய தென்பதும் பொருந்தும். தனது ஸாயங்கா லானுஷ்டானத்தை முடித்துக் கொண்டு ரிஷிகள் துவாரா குருவின் அனுமதி பெற்று அவர் இருக்கும் பர்ண சாலைக்குள் சென்று அவரைப் பார்த்தான். தபஸ்ஸின் சிறப்பினால் அவர் ஜ்வலித்துக் கொண்டிருந்தார். உவமையினால் இது ஸ்பஷ்டம். அந்தத் தேஜஸ்ஸினால் கொஞ்சம் திகைத்து நின்றான் அரசன். இதைக் குறிப்பாகக் காட்டுவதற்காகக் கவி 'பார்த்தான்' என்று முற்று வினையைப் போட்டார். அவரை வணங்கினான் என்றே அமையும். பார்த்தான் என்று தனித்துச் சொல்வதற்கு ஒரு கருத்திருக்க வேண்டும். அக்னி ஹோத்ரம் செய்யும் போது பத்நியும் கூட இருக்க வேண்டுமாதலின் அங்கே வஸிஷ்டருடைய பத்நி அருந்ததி தேவியும் இருந்தாள். திலீபன் வந்ததை

ரிஷிகள் தெரிவித்த வுடனே அவனை ஆசீர்வதிப்பதற்காக அருந்ததி தேவியும் அவ்விடத்திலேயே பர்த்தாவின் பின் நின்ருள். (56)

57. तयोर्जगृहतुः पादान् राजा राज्ञी च मागधी ।
तौ गुरुर्गुरुपत्नी च प्रीत्या प्रतिननन्दतुः ॥

राजा = அரசனும்
मागधी = மகத வம்சத்திலுதித்த
राज्ञी च = அரசியும்
तयोः = அந்த அருந்ததி வஸிஷ்டர் இவர்களுடைய
पादान् = பாதங்களை
जगृहतुः = பிடித்தார்கள் (வணங்கினார்கள்)
गुरुः = குருவும்
गुरुपत्नी च = குருபத்நியும்
तौ = அவ்விருவரையும்
प्रीत्या = அன்புடன்
प्रतिननन्दतुः = ஆசீர்வதித்தார்கள்.

முதலில் திலீபன் மட்டும் உள் சென்று இருவரையும் வணங்கினான். அவர்கள் ஆசீர்வதித்துவிட்டு இன்னும் யாராவது வந்திருக்கின்றனரோ என்று வினவ, பத்நி வந்திருப்பதாகச் சொன்னான். பிறகு அவளும் வந்து இருவரையும் நமஸ்கரித்தாள். திலீபனுக்குள்ள பல பத்நிகளுக்குள் இவள் யார் என்று அவர்கள் கேட்டபோது மகத வம்சத்துப் பெண் ஸுதக்ஷிணை என்று பதில் கூறப்பட்டது. . இதை எல்லாம் 'ராஜா ராஜ்ஞீச மாகதீ' என்று தனித் தனிப்பதம் ப்ரயோகித்துக் கவி வெகு சமத்காரமாகக் காட்டியிருக்கிருர். ராஜ தம்பதிகள் முதலில் வஸிஷ்டரையும் பிறகு அருந்ததி தேவியையும் வணங்கிஞர்கள். இவ்வரிசை தோன்றுவதற்காக உத்தரார்த்தத்தில் குருவும் குருபத்னியும் என்று தனித் தனியே எடுத்தது.

உலகுக் கெல்லாம் ஏக சக்ராதிபதியாய் பல பல மன்னர்களால் அடிதொழப் பெற்று வீற்றிருக்கும் பெருமை யுள்ளவர்களாயிருப்பினும் சிறிதும் கர்வமில்லாது ஸாதாரண மனிதர்கள் போலவே வணங்கினார்கள். விவேக முள்ளவர் குருமார்களிடத்தில் இப்படியன்றோ இருக்க வேண்டும் என்பது தோன்றத் திலீபன் ஸுதக்ஷிணை வஸிஷ்டர் அருந்ததி என்றிப்படிப் பெயரை எடுக்காமல் ராஜா ராணி குரு குருபத்நி என்று குறிப்பிட்டது. (57)

58. तमातिथ्यक्रियाशान्तरथक्षोभपरिश्रमम् ।
पप्रच्छ कुशलं राज्ये राज्याश्रममुनिं मुनिः ॥

मुनिः = தவசி நிலேயில் நிற்கும் முனிவர் (வஸிஷ்டர்)
आतिथ्यक्रिया = ரிஷிகள் செய்த அதிதிக்குரிய உபசாரங்களாலே
शान्त = நீங்கிய
रथक्षोभ = தேர் குலுக்கியதால் உண்டான
परिश्रमम् = சோர்வை யுடைய
राज्याश्रम = அரசாகிற ஆச்ரமத்தில் (நிலேயில்) நின்ற
मुनिम् = முனிவனை
तम् = அந்தத் திலீபனே
राज्ये = ராஜ்ய விஷயமாய்
कुशलम् = க்ஷேமத்தை
पप्रच्छ = கேட்டார் (விசாரித்தார்)

ஆசீர்வதித்துவிட்டு அவனேப் பார்த்தார் வஸிஷ்டர். வெகு தேஜஸ்வியாய் அதிபுண்யாத்மாவாய் அவன் காணப்பட்டான். நம்மைக் காட்டிலும் எவ்விதத்திலும் குறைந்தவனல்லன் இவன் என்று அவருக்குத் தோன்றிற்று. காட்டில் தபஸ்ஸுக்காக என்று ஆச்ரமத்தைக் கட்டிக் கொண்டு வாழ்கின்றனர் ஸாமான்யமாய் முனிவர் எனப்படுவோர். இவன் நாட்டில் 'அரசு புரிவது' என்ற தர்மத்திற்காக அரண்மனே என்ற பெயருள்ள ஆச்ரமத்தைக்கட்டிக் கொண்டு வாழ்கின்ருன். இவ்வளவேதான் மற்ற முனிவருக்கும் இவனுக்கு முள்ள பேதம். அவர்கள் எவ்வாறு சிற்றின்பங்களில் பற்றற்றுத் தமக்குரிய கடமைகளேச் செய்து ஞானக் கண்ணுல் காண வேண்டியதைக் கண்டு முடிவில் பேரின்பம் பெறுவரோ அவ்வாறே இவனும். ஆதலின் அவர்கள் போல் இவனும் முனிவனே என்று வஸிஷ்டர் கருதினர்.

பிறகு வஸிஷ்டர் 'வழிப்ரயாணம் வந்தது ச்ரமமாயிருக்குமே. கொஞ்சம் ச்ரம பரிகாரம் ஆன பிறகு பேசலாமே' என்ருர். அதற்குத் திலீபன் 'கொஞ்சமும் ச்ரமமில்லே. தேரீவர்களுடைய சிஷ்யர்களான மஹாத்மாக்கள் என்னே வரவேற்று அளவிற்கு விஞ்சி உபசரித்தார்கள். இப்போதே ஸ்வாமியின் திருவாக்கைக் கேட்க அவாவுற்றவனு யிருக்கின்றேன்' என்று விடையளித்தான். இதைக் கேட்ட மஹரிஷி 'ராஜ்ய மெல்லாம் க்ஷேமமா? எல்லாம் ஸரியாக நடக்கின்றதா?' என்று கேட்டார்.

'நீ க்ஷேமமா, உன் குடும்பம் க்ஷேமமா' என்று கேட்கவில்லே. ராஜ்யத்தில் உள்ள ஸகல ப்ரஜைகளும் அவன் குடும்பமே. ராஜ்யம் முழுவதும் க்ஷேமமாயிருப்பதைத் தவிர்த்து அவனுக்கு க்ஷேம மென்று தனியாக ஒன்றில்லே. இதெல்லாம் மஹரிஷிக்குத்

தெரியும். ஆகையால் ராஜ்யம் க்ஷேமமா என்று வெகு சாதுர்ய மாகக் கேட்டார். (58)

59. अथाथर्वनिधेस्तस्य विजितारिपुरः पुरः ।
अर्थ्यामर्थपतिर्वाचमाददे वदतां वरः ॥

अथ = பிறகு
विजितारिपुरः = சத்ருக்களுடைய நகரங்களை வென்ற
वदतां वरः = பேசுகிறவர்களுக்குள் உயர்ந்தவனான
अर्थपतिः = பெருஞ் செல்வம் படைத்த திலீபன்
अथर्वनिधेः = அதர்வ வேதத்திற்கு நிதியான
तस्य = அம்முனிவருடைய
पुरः = முன்னிலையில்
अर्थ्याम् = பொருள் நிறைந்த
वाचम् = வார்த்தையை
आददे = எடுத்தான் (பேசினான்).

வஸிஷ்டர் அதர்வ மந்திரங்களைக் கொண்டு சாந்தி ஹோமம் செய்வர். பிறகு திலீபன் சத்துருக்களை ஜயிக்கக் கிளம்புவான். எவ்வளவு உறுதியான பெரிய கோட்டைகளா யிருந்தாலும் சத்ருக்களின் நகரங்கள் விழுந்து திலீபன் வசமாகும். இப்படி எங்கும் வெற்றி பெற்றுப் பெருஞ் செல்வ முள்ளவனானன் திலீபன். இப்படி முனிவரின் அநுக்ரஹத்தால் உண்டான நன்மைகளை யெல்லாம் அவர் முன்னிலையில் கூறிவிட்டுப் பிறகு இப்போது தனக்கு வேண்டிய புத்ர ஸந்தானத்தைப் பற்றி ப்ரஸ்தாவம் செய்யக் கருதினன். இதனால் பேச்சில் கெட்டிக்காரன் திலீபன் என்கிறார் கவி. திலீபன் முனிவரைப் பற்றிச் சொல்வது வெறும் புகழ்ச்சியன்று. அஃதெல்லாம் உண்மையே என்று கருதி अर्थ्याम् (பொருள் நிறைந்த) என்றார். (59)

60. उपपन्नं ननु शिवं सप्तस्वङ्गेषु यस्य मे ।
दैवीनां मानुषीणां च प्रतिकर्ता त्वमापदाम् ॥

यस्य = எவனுடைய
दैवीनाम् = தேவர்களா லுண்டான வையும்
मानुषीणां च = மனிதர்களாலுண்டானவையுமான
आपदाम् = ஆபத்துக்களுக்கு
त्वं = தேவரீர்
प्रतिकर्ता = சாந்தி செய்கின்றவரோ
(तस्य = அத்தகைய)
मे = எனக்கு
सप्तसु अङ्गेषु = ஏழு அங்கங்களிலும்
शिवम् = க்ஷேமம்
उपपन्नं ननु = ஸித்தமேயன்றோ (உளதேயன்றோ).

"ராஜ்யத்திற்கு ஒருவித ஆபத்தும் வாராமல் தேவரீர் ரக்ஷிக்கும் போது க்ஷேமத்திற்கு என்ன குறைவு" என்று சொன்னான் என்று கருத்து. இப்படிச் சுருக்கமாய்ப் பதில் கூறப்பட்டது. இதன் விரிவு மேல் ச்லோகங்களில்.

ஏழு அங்கங்களான:—அரசன், மந்திரி, நண்பர், பொக்கிஷம், நாடு, துர்க்கம் (எதிரிகள் உள்ளே புகாதபடி காக்கும் அகழ், கோட்டை, மலை, காடு முதலியன,) ஸேனை என்றவிவை.

தேவர்களாலுண்டாகும் கஷ்டங்களாவன :—நெருப்பு, ஜலம், வியாதி, கருப்பு (துர்பிக்ஷம்) சாவு என்பன. மனுஷ்யர்களாலுண்டாகும் கஷ்டங்களாவன :—அதிகாரிகள், திருடர், பகைவர், அரசனுக்கு வேண்டியவர்கள், இவர்களாலும் அரசனின் பேராசையாலும் உண்டானவை. प्रतिहर्ता, प्रतिहन्ता என்றும் பாடங்கள் உள. (60)

61. तव मन्त्रकृतो मन्त्रैर्दूरात् प्रशमितारिभिः ।
प्रत्यादिश्यन्त इव मे दृष्टलक्ष्यभिदः शराः ॥

दूरात् = தூரத்திலிருந்தே
प्रशमितारिभिः = சத்ருக்களை அடக்குகின்றவையான
मन्त्रकृतः = மந்திரங்களைக் கண்டு பிடிக்கும் பெருமை வாய்ந்த
तव = தேவரீருடைய
मन्त्रैः = மந்திரங்களால்
मे = என்னுடையவையான
दृष्ट = (நேரில்) காணப்பட்ட
लक्ष्य = குறிகளையே
भिदः = அடிக்கின்ற
शराः = அம்புகள்
प्रत्यादिश्यन्त इव = உபயோகமற்றவையாகச் செய்யப்படுகின்றனபோலும் (நீங்கள் எதற்கு என்று தடுக்கப்படுகின்றன போலும்).

வஸிஷ்டர் அரிய மந்திரங்களைக் கொண்டு செய்யும் க்ரியைகளால் சத்ருக்களின் பலம் எவ்வளவு பெரிதாகினும் குன்றிவிடும். வெகு எளிதாக வெல்லப்படுவர். இப்படியே வேண்டிய மற்ற விஷயங்களையும் இவரது மந்திர மஹிமையால் அரசன் கைகூடப் பெற்றான். ஆகவே இங்குச் சில மனுஷ்யர்களால் வரும் கஷ்டங்களுக்குச் சாந்தி கூறப்பட்டது. (61)

62. हविरावर्जितं होतस्त्वया विधिवदग्निषु ।
वृष्टिर्भवति सस्यानामवग्रहविशोषिणाम् ॥

(हे) होत: = ஹோமம் செய்வதையே முக்யப் பணியாக உடைய ஸ்வாமியே
त्वया = தேவரீரால்
विधिवत् = முறைப்படி
अग्निषु = அக்னிகளில்
आवर्जितम् = ஆஹுதி செய்யப் பட்ட (ஸமர்ப்பிக்கப்பட்ட)
हवि: = ஹவிஸ்ஸானது (ஹோம த்ரவ்யமானது)
अवग्रह = மழையின்மையால்
विशोषिणाम् = உலர்கின்ற
सस्यानाम् = பயிர்களுக்கு
वृष्टि: = மழையாக
भवति = ஆகின்றது.

பெரியோர் செய்யும் யஜ்ஞங்களில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸு ஸூர்யனிடம் சேர்ந்து மழையாக ஆகின்றதென்று மனு முதலிய சாஸ்திரங்கள் கூறுகின்றன. இங்கு மழையின்மையாகிற ஒரு தெய்விகக் கஷ்டத்திற்கு சாந்தி கூறப்பட்டது. (62)

63. पुरुषायुषजीविन्यो निरातङ्का निरीतय: ।
यन्मदीया: प्रजास्तस्य हेतुस्त्वद्ब्रह्मवर्चसम् ॥

मदीया: = என்னுடையவர்களான
प्रजा: = மக்கள் (குடிகள்)
पुरुषायुष = மனிதர்களுக்குண்டான ஆயுட் காலம் முழுவதும் (நூறு வயது)
जीविन्य: = பிழைத்திருப்பவர்களாயும்
निरातङ्का: = கிலி, பயம் ஒன்றுமில்லாதவர்களாயும்
निरीतय: = ஈதிபாதையற்றவர்களாயும்
यत् (सन्ति) = இருப்பதுண்டே
तस्य = அதற்கு
हेतु: = காரணம்
त्वद् = தேவரீருடைய
ब्रह्मवर्चसम् = ப்ரஹ்மவர்ச்சஸ்ஸேயாம்.

திருடர் என்ன செய்வரோ, அதிகாரிகள் என்ன செய்வரோ, என்ற கிலி பயம் முதலியவை ஆதங்கமெனப்படும். அதிக மழை, எலிகள், விட்டில் பூச்சிகள், குருவிகள், இவை முதலியவை ஈதிகள் எனப்படுவன. இவையெல்லாம் பயிர்களை அழித்து நாட்டுக்குப் பெருந் தீங்கை விளைவிப்பன.

தகுந்த காலங்களில் முறைப்படி எல்லா ஸம்ஸ்காரங்களும் செய்யப் பெற்று வேதாத்யயனஞ் செய்து கர்மானுஷ்டானங்களையும் தவறாது செய்யும் ப்ராஹ்மணோத்தமர்களிடத்தில் காணப்படும் தேஜஸ்ஸு ப்ரஹ்மவர்ச்சஸ் எனப்படும். இத்தகைய மஹான்கள்

இருக்கும் நாட்டில் ஒரு உபத்ரவமும் ஜனங்களுக்கு உண்டாகா தென்றும் ஸகல ஸௌகர்யங்களும் சாந்தியும் நிறைந்திருக்குமென் றும் வேதங்கள் கூறுகின்றன. இதனால் முன் இரண்டு ச்லோகங் களில் கூறியவைகளைத் தவிர மற்ற தெய்வ மாநுஷ கஷ்டங்களுக் கும் சாந்தி கூறப்பட்டது. இப்படி மூன்று ச்லோகங்களால் 60-வது ச்லோகத்தில் சுருக்கமாய்ச் சொன்னது விவரிக்கப் பட்டது. (63)

64. त्वयैवं चिन्त्यमानस्य गुरुणा ब्रह्मयोनिना ।
सानुबन्धाः कथं न स्युः सम्पदो मे निरापदः ॥

ब्रह्मयोनिना = ப்ரஹ்மாவின் புத்திரரான (அல்லது வேத மந்திரங்கள் உண்டாகும் இடமான)
गुरुणा = குருவான
त्वया = தேவரீரால்
एवम् = இப்படி
चिन्त्यमानस्य = சிந்தையில் (கருத்தில்) வைக்கப்படுகிற
मे = எனக்கு
निरापदः = ஆபத்துக்களே இல்லாத
सानुबन्धाः = மேல் மேல் தொடர்ந்து வருகின்ற
सम्पदः = ஸம்பத்துக்கள்
कथम् = ஏன்
न स्युः = இருக்கமாட்டா?

"எப்பொழுதும் என்னையே கருத்தில் வைத்து ஒரு தீங்கும் வராதபடி தேவரீர் செய்து வருகின்றபோது எனக்கு ஏன் ஸகல க்ஷேமமும் உண்டாகாமலிருக்கும்? ஒருவிதமான க்ஷேமக் குறை யும் இல்லை" என்று கூறி அரசன் ராஜ்ய க்ஷேமத்தைப்பற்றி முனிவர் கேட்ட கேள்விக்கு விடையளித்து முடித்தான். இனிமேல் தான் வந்த காரியத்தைப் ப்ரஸ்தாவிக்கின்றான். (64)

65. किन्तु वध्वां तवैतस्यामदृष्टसदृशप्रजम् ।
न मामवति सद्वीपा रत्नसूरपि मेदिनी ॥

किन्तु = ஆனால்
तव = தேவரீருடைய
एतस्याम् = இந்த
वध्वाम् = மா(மணு)ட்டுப் பெண்ணிடத்தில் (ஸுதக்ஷிணையினிடத்தில்)
अदृष्ट = காணப்படாத
सदृशप्रजम् = தகுந்த புத்திரனையுடைய (உண்டான தகுந்த புத்திரனைக் காணாத)
माम् = என்னை

सद्वीपा = ஸர்வ த்வீபங்களோடு கூடிய
मेदिनी = பூமியானது
रत्नसूरपि = ரத்தினங்களைக் கொடுக்கின்றதாயிருந்தும் (ஸர்வ ஸம்பத்தும் நிரம்பப் பெற்றதாயினும்)
नन्दति = மகிழ்விக்கின்றதில்லை.

பெரியோர்களிடத்தில் 'என் பெண்டாட்டி' என்று சொல்வது மரியாதையல்ல. ஆகையால் 'தேவரீருடைய மாட்டுப் பெண்' என்றான். சிஷ்யனான தான் அவருக்குப் புத்திரன் போன்றவனாதலின் இவன் பத்நி அவருக்கு மாட்டுப் பெண்.

மகிழ்விக்கின்றதில்லை. ஸர்வைச்வர்யமும் பெற்று அகண்ட பூமண்டலாதிபதியாயிருந்தும் புத்திரனில்லாத குறையால் துன்புறுகின்றேன் என்று கருத்து.

இப்பாரதநாடு ஒன்றே இம்மண்ணுலகில் ப்ரதானமான பெரிய தேசமாகவும் மற்ற நாடுகள் எல்லாம் தீவுகளாய் அப்ரதானங்களென்றும் எண்ணப்பட்டு வந்தன. அதனால் सद्वीपा मेदिनी என்றார். (65)

66. नूनं मत्तः परं वंश्याः पिण्डविच्छेददर्शिनः ।
न प्रकामभुजः श्राद्धे स्वधासङ्ग्रहतत्पराः ॥

मत्तःपरम् = எனக்குப் பிறகு
पिण्डविच्छेददर्शिनः = பிண்டம் விட்டுப் போவதைப் பார்த்து
वंश्याः = என் வம்சத்து பித்ருக்கள்
स्वधासङ्ग्रह = தங்கள் ஆஹாரத்தைச் சேமித்து வைப்பதில்
तत्पराः = ஊற்றமுள்ளவர்களாய்
श्राद्धे = ச்ராத்தத்தில்
प्रकामभुजः न = போதிய அளவு புஜிக்கின்றார்களில்லை
नूनम् = நிச்சயம்.

இனி வரும்படி இல்லை என்றால் இருப்பதைச் சீராய்ச் செலவழிப்பது இயற்கை. அவ்வாறு திலீபனுக்குப் பிறகு பிண்டம் போடுபவர் இரார் என்பதைப் பார்த்து அவன் பித்ருக்கள் ச்ராத்தங்களில் அவன் போடும் பிண்டங்களை முழுவதும் புசியாது மிகுத்து மிகுத்து வைத்துக் கொள்ளுகின்றார்கள் என்று தான் ஊஹிப்பதாகச் சொல்லுகின்றான். தனக்குப் புத்திரனில்லாமையால் தன் பித்ருக்கள் இப்போதே பாதிப் பட்டினி என்று திலீபனின் எண்ணம். (66)

67. मत्परं दुर्लभं मत्वा नूनमावर्जितं मया ।
पयः पूर्वैः स्वनिश्वासैः कवोष्णमुपभुज्यते ॥

मत्परम् = எனக்குப் பிறகு
दुर्लभम् = கிடைப்பதரிது என்று
मत्वा = எண்ணி
पूर्वैः = (என்) முன்னோர்களால்
मया = என்னால்
आवर्जितम् = (தர்ப்பணகாலங்களில்) கொடுக்கப்பட்ட
पयः = ஜலம்
स्वनिश्वासैः = தமது மூச்சுக் காற்றுக்களால்
कवोष्णम् = வெது வெதுப்பாக்கப் பட்டு
उपभुज्यते = பருகப்படுகின்றது
नूनम् = நிச்சயம்.

முன் ச்லோகத்தில் பிண்டமாகக் கொடுக்கப்பட்ட அன்னத்தை அவர்கள் செவ்வையாகப் புசியார்கள் எனப்பட்டது. இங்கு நீரையும் சரிவர அருந்தார்கள் எனப்படுகின்றது. (67)

68. सोऽहमिज्याविशुद्धात्मा प्रजालोपनिमीलितः ।
प्रकाशश्चाप्रकाशश्च लोकालोक इवाचलः ॥

इज्या = யஜ்ஞானுஷ்டானத்தினால்
विशुद्ध = பரிசுத்தமான
आत्मा = ஸ்வரூபமுள்ளவனும்
प्रजालोप = குழந்தையில்லாமையால்
निमीलितः = மங்கினவனுமான
सः = அந்த (தேவரீர்களுடைய பரிபூர்ண கிருபைக்குப் பாத்ரமான சூர்ய குலத்தி லுதித்து முறைப்படி வேதாத்யயனம் செய்தவனை)
अहम् = நான்
लोकालोकः = லோகாலோக மென்கிற
अचल इव = பர்வதம்போல்
प्रकाशश्च = ப்ரகாசிக்குமவனும்
अप्रकाशश्च = ப்ரகாச மற்றவனும் (இருக்கின்றேன்).

பிறக்கும் போதே த்விஜன் மூன்று கடனோடு பிறக்கின்றான். அதில் வேதாத்யயனத்தினால் ரிஷிகளின் கடனும், யக்ஞானுஷ்டானத்தால் தேவர்கள் கடனும், புத்ரனைப் பெறுவதால் பித்ருக்கள் கடனும் தீருகின்றன. கடன் தீர்ந்தால் ப்ரகாசமும், தீராவிட்டால் ப்ரகாச மின்மையும் இருக்கும். திலீபன் தனக்கு முதல் இரண்டு கடன்களும் தீர்ந்துவிட்ட படியால் ப்ரகாசமும் கடைசிக் கடன் தீராதபடியால் அஃதில்லாமையும் உளதாகக் கூறுகின்றான்.

இவ்வுலகத்தைச் சுற்றி லோகாலோகம் என்று ஒரு மலைத் தொடர் இருப்பதாகவும் ஸூர்ய சந்திரர்களின் ஸஞ்சாரம் இதற்குள்ளடங்கினதாகவும் புராணங்கள் கூறுகின்றன. ஸூர்ய சந்திரர்களின் ஒளி உள்பக்கம் படுவதால் ப்ரகாசமும் வெளிப்பக்கத்தில் படாமையால் ப்ரகாச மில்லாமையும் அம்மலைக்குண்டு. ஆகவே அது உபமானமாயிற்று. (68)

69. लोकान्तरसुखं पुण्यं तपोदानसमुद्भवम् ।
सन्ततिः शुद्धवंश्या हि परत्रेह च शर्मणे ॥

तपोदानसमुद्भवम् = தபஸ்ஸு தானம் இவற்றால் உண்டாகின்ற
पुण्यम् = புண்யமானது
लोकान्तरसुखम् = மறு லோகத்தில் ஸுகத்தைத் தருகின்றது.
शुद्धवंश्या = சுத்தமான குலத்தி லுண்டான
सन्ततिर्हि = ஸந்தானமன்றோ
परत्र = பரலோகத்திலும்
इह च = இவ்வுலகிலும்
शर्मणे = ஸுகத்தின் பொருட்டு (ஆகின்றது).

முன்னோர்களுக்குக் கஷ்டமில்லாம லிருப்பதற்காக ஸந்தானம் வேண்டு மெனப்பட்டது கீழ். இங்குத் தன்து ஸுகத்திற்காகவும் புத்திரன் வேண்டு மெனப்படுகின்றது. மரித்துத் தான் பித்ரு கோஷ்டியில் சேர்ந்த பிறகு தனக்குத் திருப்தி புத்திரன் செய்யும் ச்ராத்தத்தினாலும் தர்ப்பணத்தினாலும் ஏற்படும். இது புத்திரனால் பரலோகத்தில் உண்டாகும் இன்பம். கொஞ்சி விளையாடியும், உபநயனம் செய்யப் பெற்று வித்யாப்யாஸ விவாஹ ராஜ்ய நிர்வாஹாதிகளைச் செய்தும் புத்திரன் விளைவிக்கும் ஸுகம் இந்த லோகத்தில் உள்ளது. இந்த ஸுகம் தபஸ்ஸினாலும் தானத்தினாலும் உண்டாகாது. இவற்றின் பலத்தை மரித்த பிறகு தான் அனுபவிக்க முடியும். (69)

70. तया हीनं विधातर्मां कथं पश्यन्न दूयसे ।
सिक्तं स्वयमिव प्रीत्या वन्ध्यमाश्रमवृक्षकम् ॥

(हे) विधातः = எல்லாம் (எனக்குப் பட்டாபிஷேகம் வரையிலுள்ள ஸகல கார்யங்களையும்) செய்து வைத்த ஸ்வாமியே
तया = அவ்வித ஸந்ததி
हीनम् = இல்லாத
माम् = என்னை
स्वयम् = தானே
सिक्तं = ஜலம் கொட்டி வளர்த்த,

वन्ध्यम् = காய், பூ இல்லாத
आश्रमवृक्षकमिव = 'ஐயோ பாவம்' எனத் தக்க ஆச்ரமத்து மரத்தைப் போல்
पश्यन् = பார்த்து
कथम् = ஏன்
न दूयसे = தேவரீர் வருந்தவில்லை? (தேவரீர்களுக்கும் வருத்தமிருக்குமென்றே நினைக்கிறேன்).

" विधातः நினைத்ததை எல்லாம் செய்யக் கூடியவர். कथं न दूयसे தேவரீர் வருந்தவில்லை. அது ஏன்? எனக்கு ஸந்ததி உண்டாகும்படியான அநுக்ரஹம் செய்ய முடிந்தும் அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலையற்றிருப்பதால் உபேக்ஷிப்பதாக எண்ணுகிறேன்" என்பது கருத்தென்கிறார் உரையாசிரியர்.

वृक्षकम् இதில், 'अनुकम्पायाम्' 'இரக்கம் என்ற அர்த்தத்தில் 'क' என்னும் ப்ரத்யயம் வரும்' என்ற ஸூத்ரத்தால் வந்தது கப்ரத்யயம். 'अल्पे' என்ற ஸூத்திரத்தினால் (சிறிது என்ற பொருளில்) வந்தது இது. वृक्षकम् சிறிய மரம் (செடி) என்று அர்த்தம் என்றார் உரையாசிரியர். (70)

71. असह्यपीडं भगवन् ऋणमन्त्यमवेहि मे ।
अरुन्तुदमिवालानमनिर्वाणस्य दन्तिनः ॥

(हे) भगवन् = ஓ பகவானே
अन्त्यं ऋणम् = கடைசிக் கடனை (பித்ரு கடனை)
मे = எனக்கு
अनिर्वाणस्य = முழுகாத (குளிப்பாட்டப்படாத)
दन्तिनः = யானைக்கு
अरुन्तुदम् = கொடிய துன்பத்தைத் தருகின்ற
आलानमिव = தளையைப்போல்
असह्य = தாங்க முடியாத
पीडम् = பாதையைத் தருவதாக
अवेहि = (தேவரீர்) அறியவேணும்.

யானையைக் கட்டும் கம்பம் आलानम् எனப்படும். இதுவே இங்கு மல்லிநாதர் கூறிய பொருள். யானையைக் கட்டும் சங்கிலி அல்லது கயிறு இங்கே பொருள் என்றார் சிலர். (71)

72. तस्मान्मुच्ये यथा तात संविधातुं तथार्हसि ।
इक्ष्वाकूणां दुरापेऽर्थे त्वदधीना हि सिद्धयः ॥

(हे) तात = அப்பனே
तस्मात् = அந்தக் கடனிலிருந்து
यथा = எவ்வாறு
मुच्ये = (நான்) விடுபடுவேனோ

तथा = அவ்வாறு	अर्थे = பொருள் விஷயத்தில்
संविधातुमर्हसि = (தேவரீர்) ஏற்பாடு செய்ய வேணும்.	सिद्धयः = விருப்பங்கள் நிறைவேறுவது
इक्ष्वाकूणां = இக்ஷ்வாகு வம்சத்தாருக்கு,	त्वदधीना हि = தேவரீர் வசமாகவே இருக்கிறதன்றோ.
दुरापे = கிட்டாத	

இப்படி எட்டு ச்லோகங்கள் ஸந்தான விஷயமாக உள்ளன. இவற்றில் முதலாவதில் ஸந்தானமில்லாமையால் தனக்குண்டான வருத்தத்தையும் மேல் நான்கு ச்லோகங்களில் அதனால் உண்டான குறைகளையும் தெரிவித்து மேல் ச்லோகத்தில் குருவுக்கும் இதில் வருத்தம் இருக்கவே இருக்குமென்று கூறினான். 'இதெல்லாம் உண்மையே. ஆயினும் இன்னும் கொஞ்ச நாள் பார்க்கலாமே' என்னக் கூடாது. எவ்வளவு காலம் எதிர்பார்த்துச் சும்மா இருக்கலாமோ அவ்வளவு காலம் இருந்தாகி விட்டது. இனி ஒரு நாள் கூட இப்பாதையைத் தாங்க முடியாதென்று அடுத்த ச்லோகத்தில் கூறி "இதுவரையில் நான் ப்ரார்த்திக்காமையால் தேவரீருக்கு வருத்தமிருந்தும் ஒன்றும் செய்ய முடியாமற் போயிற்று. இப்போது நான் செய்யும் பிரார்த்தனையை ஏற்று அருள்புரிய வேண்டும்" என்று இந்த ச்லோகத்தில் கூறி முடித்தான்.

திலீபனுக்குக் குறை யுண்டான போது அவனை விருத்திக்குக் கொண்டு வந்தவருக்கும் குறையிருக்குமென்று தோற்ற முன் विधातः என்ற ஸம்போதநம். உள்ளதை உள்ளபடி அறிவதற்கும் குறைகளைத் தீர்ப்பதற்கும் சக்தி வாய்ந்தவர் என்பது தோற்ற भगवन् என்றது. புத்திரன் வேண்டுகோளைப் பிதா ஏற்பது போல் ப்ரீதியோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தோற்ற இங்கு तात என்றது. (72)

73. इति विज्ञापितो राज्ञा ध्यानस्तिमितलोचनः ।
क्षणमात्रमृषिस्तस्थौ सुप्तमीन इव ह्रदः ॥

इति = என்று	स्तिमित = அசையாத (மூடிய)
राज्ञा = அரசனால்	लोचनः = கண்களையுடையவராய்
विज्ञापितः = விஞ்ஞாபனம் செய்யப்பட்ட	सुप्तमीनः = தூங்கின மீன்களையுடைய
ऋषिः = ரிஷி	ह्रद इव = மடுவுபோல்
क्षणमात्रम् = க்ஷண காலம்	तस्थौ = இருந்தார்.
ध्यान = த்யானத்தினால்	

அரசன் தனது பேச்சை முடித்த உடன் 'அவன் சொன்னது எல்லாம் உண்மை. அவனது விருப்பத்தைத் தாமதமில்லாமல் பூர்த்தி செய்ய வேண்டும்' என்று எண்ணிய முனிவர் ஒரு பேச்சும் பேசாமல் ஏன் அவனுக்கு அது வரையில் ஸந்ததி உண்டாகவில்லை என்பதை அறிவதற்காக த்யானத்தில் அமர்ந்தார். கம்பீரமாய்க் கருணையின் மிகுதியால் குளிர்ந்ததான அவர் தோற்றத்தை மீன்கள் தூங்க அதனால் சிறிது மசைவில்லாத ஜலத்தை யுடைய ஒரு பெரிய மடுவைப்போல் அநுபவித்துக் கொண்டு திலீபன் அங்கு நின்றான்.()

74. सोऽपश्यत्प्रणिधानेन संततेः स्तम्भकारणम् ।
भावितात्मा भुवो भर्तुरथैनं प्रत्यबोधयत् ॥

भावितात्मा = ஸ்வாதீனப்படுத்தப்பட்ட மனத்தையுடைய
सः = அந்த ரிஷி
प्रणिधानेन = மற்ற விஷயங்களைத் தவிர்த்து அவ்விஷயத்திலேயே மனத்தைச் செலுத்துவதாலே (ஜ்ஞான திருஷ்டியாலே)
भुवो भर्तुः = அரசனுடைய
सन्ततेः = ஸந்தானத்தின்
स्तम्भ = தடைக்கு
कारणम् = காரணத்தை
अपश्यत् = பார்த்தார் (அறிந்தார்).
अथ = பிறகு
एनम् = இவனுக்கு
प्रत्यबोधयत् — அறிவித்தார்.

த்யானத்திலிருந்து நடந்த விஷயத்தை அறிந்தார். அறிந்த பிறகு த்யான நிலையை விட்டு ஸாதாரண விழிப்பு நிலைக்கு வந்து திலீபனோடு பேசினார். இது தோன்றுவதற்காக முதல் வாக்யத்தை अपश्यत् என்று முடித்து अथ என்று வேறு வாக்யம் ஆரம்பித்தது. இக் கருத்தில்லையாகில் 'பார்த்து அறிவித்தார்' என்று ஒரு வாக்யமாகவே இருக்கும். (74)

75. पुरा शक्रमुपस्थाय तवोर्वीं प्रतियास्यतः ।
आसीत् कल्पतरुच्छायामाश्रिता सुरभिः पथि ॥

पुरा = முன்
शक्रम् = இந்திரனை
उपस्थाय = ஸேவித்துவிட்டு
उर्वीं = பூமிக்கு
प्रतियास्यतः तव = திரும்பிப் போவதற்காக நீ புறப்பட்டபோது
पथि = வழியில்
सुरभिः = காமதேனு
कल्पतरुच्छायाम् = கல்ப வ்ருக்ஷத்தின் நிழலில்
आश्रिता आसीत् = நின்று கொண்டிருந்தது.

திலீபன் இந்திரனால் அழைக்கப்பட்டு, தேவ லோகத்திற்குப் போய் இந்திரனைத் தரிசித்துவிட்டுத் திரும்பி வரும்போது அவன் வரும் வழியில் காமதேனு கல்ப வ்ருக்ஷத்தின் நிழலில் நின்று கொண்டிருந்தது.

தேவ லோகம் போகும் படியான மஹிமை இவ்வரசர்களுக்கு உண்டென்பது முன்னமே சொல்லப்பட்டது आनाकरथवर्त्मनाम् என்று. (75)

76. धर्मलोपभयाद्राज्ञीमृतुस्नातामिमां स्मरन् ।
प्रदक्षिणक्रियार्हायां तस्यां त्वं साधु नाचरः ॥

धर्मलोपभयात् = தர்மம் தவறுமோ என்ற அச்சத்தினால்
ऋतुस्नाताम् = பஹிஷ்டையாயிருந்து ஸ்நானம் செய்த
इमां राज्ञीं = இந்த ராணியை
स्मरन् = நினைத்துக் கொண்டிருந்த
त्वम् = நீ
प्रदक्षिण = ப்ரதக்ஷிணம்
क्रियार्हायाम् = செய்ய வேண்டியதற்குரிய
तस्याम् = அக் காமதேனுவிடத்தில்
साधु = (செவ்வனே) முறைப்படி
नाचरः = நடக்கவில்லை.

ஸந்ததி உண்டாகாமல் இருக்கும்போது மாதவிடாய்க்குப் பிறகு ஸ்நானம் செய்த ஸ்த்ரீகளிடத்தில் ஆரோக்யமுள்ள புருஷன் அவச்யம் போக வேண்டுமென்று சாஸ்திரம் கூறுகின்றது. பசு தைவம் ப்ராஹ்மணன் இவற்றைப் பார்த்தபோது வலமாக வைத்து (பிரதக்ஷிணமாக)ப் போக வேண்டுமென்று கூறுகின்றது. காலந் தவறி விடுமோ என்ற பயத்தால் வீட்டையே நினைத்துக் கொண்டிருந்த திலீபன் காமதேனுவைப் பார்த்தும் கவனியாது அதை ப்ரதக்ஷிணம் செய்துவராமல், அதை வலஞ்செய்யாமல் இடஞ் செய்து நேராக வழியிலேயே வந்து விட்டான். (76)

77. अवजानासि मां यस्मादतस्ते न भविष्यति ।
मत्प्रसूतिमनाराध्य प्रजेति त्वां शशाप सा ॥

यस्मात् = எக்காரணத்தால்
माम् = என்னை
अवजानासि = அவமதிக்கின்றாயோ
अतः = அக்காரணத்தால்
ते = உனக்கு
मत्प्रसूतिम् = என் கன்றை
अनाराध्य = பூஜிக்காமல்
प्रजा = குழந்தை

न भविष्यति, = உண்டாகாது,
इति = என்று
सा = அந்தக் காமதேனு
त्वाम् = உன்னை
शशाप = சபித்தது. (77)

78. स शापो न त्वया राजन्न च सारथिना श्रुतः।
नदत्याकाशगङ्गायाः स्रोतस्युद्दामदिग्गजे ॥

(हे) राजन् = ஓ அரசனே
आकाशगङ्गायाः = ஆகாச கங்கையின்
उद्दाम = கட்டிலடங்காத
दिग्गजे = திக்கஜங்களையுடைய
स्रोतसि = ப்ரவாஹம்
नदति सति = இரைச்சலிடும் போது
स शापः = அந்தச் சாபம்
त्वया = உன்னால்
न श्रुतः = கேட்கப்படவில்லை.
सारथिना च = ஸாரதியினாலும்
न श्रुतः = கேட்கப்படவில்லை. (78)

79. ईप्सितं तदवज्ञानाद्विद्धि सार्गलमात्मनः।
प्रतिबध्नाति हि श्रेयः पूज्यपूजाव्यतिक्रमः ॥

तदवज्ञानात् = அக்காமதேனுவை அவமதித்ததினால்
आत्मनः = தன்னுடைய
ईप्सितम् = இஷ்டம்
सार्गलम् = தடைப்பட்டது என்று
विद्धि = அறி
पूज्यपूजाव्यतिक्रमः = பூஜிக்க வேண்டியவரைப் பூஜிக்கத் தவறுவது
श्रेयः = நன்மையை
प्रतिबध्नाति हि = தடை செய்கிறதன்றோ.

76-வது ச்லோகத்தில் 'நீ வழியில் நின்ற காம தேனுவை ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டியிருக்கச் செய்யாமல் வந்து விட்டாய்' என்று சொல்லப்பட்டது. ப்ரதக்ஷிணமாய் வருவது ஒரு பூஜை. இப் பூஜையைச் செய்யாதது அதை அவமதித்ததாக ஆகின்றது. அதனால் உனக்கு உண்டாக வேண்டிய புத்திர ஸம்பத்து தடைப்பட்டிருக்கிறது என்று இந்த ச்லோகத்தில் கூறப்படுகிறது.

இப்படி இதுவே 77-வது ச்லோகமாக இருக்கலாமாதலின் இதற்கு முன் இருக்கும் இரண்டு ச்லோகங்களும் இங்கு அவசியமில்லை. பின்னால் யாரோ சேர்த்தது என்று சிலர் கூறுவர். அது மிகவும் பொருத்தமுள்ளது. சபித்தல் காமதேனுவின் ஸ்வபாவத்திற்கேற்றதன்று. சாபத்தைக் கவி முன் சொல்லியிருந்தால் அந்தச் சாபத்தினால் உன் புத்திர ஸம்பத்து தடைபட்டிருக்கிறது என்ன வேண்டுமே யன்றிச் சாபத்திற்குக் காரணமாக अवजानासि मां यस्मात्

என்று சொல்லப்பட்ட அவமதிப்பையே இங்கு ईप्सितं तदवज्ञानात् என்று புத்திரன் உண்டாகாமலிருப்பதற்குக் காரணமாகக் காட்டுவது யுக்தமன்று. (79)

80. हविषे दीर्घसत्रस्य सा चेदानीं प्रचेतसः।
भुजङ्गपिहितद्वारं पातालमधितिष्ठति ॥

सा च = அந்தக் காமதேனுவோ
इदानीम् = இப்பொழுது
दीर्घसत्रस्य = நீண்ட காலம் செய்ய வேண்டிய ஒரு ஸத்ர யாகத்தைச் செய்கின்ற
प्रचेतसः = வருண பகவானுக்கு (வேண்டிய)
हविषे = (பால் தயிர் முதலிய) ஹவிஸ்ஸுக்காக
भुजङ्ग = பாம்பினால்
पिहित = மூடப்பட்ட (அடைபட்ட)
द्वारम् = வழியையுடைய
पातालम् = பாதாளத்தில்
अधितिष्ठति = இருக்கின்றது.

காம தேனுவினிடத்தில் அபசாரப் பட்டதால் இந்த க்லேசம் ஏற்பட்டதாகையால் அதைப் பூஜித்து அபசாரத்தைப் பரிஹரித்துக் கொள்ள வேண்டும். ஆனால் அது இப்போது கிடைக்காது. அது பாதாளத்தில் நீண்ட காலம் இருக்க வேண்டியிருக்கின்றது. நீ அங்கே போவதும் முடியாது. ஒருவரும் உள்ளே வரக் கூடாதென்ற கண்டிப்பான உத்திரவுடன் ஸர்ப்பம் வழியைக் காத்துக் கொண்டிருக்கின்றது என்று கருத்து. இதனால் च என்பது இங்கு तु என்பதின் பொருளில் வந்திருக்கின்றதென்பது ஸ்பஷ்டம். பல பேர் சேர்ந்து ஒருவரை ப்ரதான யஜமானனாக்கிச் செய்யும் ஒரு வித யாகம் ஸத்ர மெனப்படும்.

அபசாரத்திற்குப் பரிஹாரம் காமதேனுவைப் பூஜித்தே ஏற்படவேண்டும் என்று வைத்து அது இப்பொழுது ஸாத்யமன்று என்று இங்குக் கூறப்படுகின்றது. 'என் கன்றைப் பூஜிக்காமல் உனக்கு ஸந்ததி உண்டாகாது' என்று அது சபித்திருந்தால் இப்படிச் சொல்வதற்கு இடமே இல்லை. ஆதலாலும் சாபவ்ருத்தாந்தம் அபத்தமே என்று தெரிகின்றது. (80)

81. सुतां तदीयां सुरभेः कृत्वा प्रतिनिधिं शुचिः।
आराधय सपत्नीकः प्रीता कामदुघा हि सा ॥

तदीयाम् = அந்தக் காமதேனுவினுடையதான
सुताम् = புத்திரியை
सुरभेः = காமதேனுவுக்கு

प्रतीनिधिम् = ப்ரதிநிதியாக (பதிலாக)
कृत्वा = செய்து (வைத்து)
शुचिः = பரிசுத்தனுக
सपत्नीकः = பத்னியுடன்
आराधय = பூஜி
हि = ஏனெனில்
सा = அது
प्रीता = ப்ரீதியுண்டானபோது
कामदुघा = வேண்டியதைச் சுரக்கக் கூடியது.

காம தேனுவையே ஆராதிப்பது முதல் பக்ஷம். அது கூடாமையால் இரண்டாம் பக்ஷமாக அதன் புத்திரியை ஆராதிப்பாய் என்கிருர். இதனுலும் मत्प्रसूतिम् என்று புத்திரியையே ஆராதிக்க வேணும் என்ற சாபத்திலடங்கிய அபிப்பிராயம் பொருத்தமற்றதென்பது விளங்குகின்றது. (81)

82. इति वादिन एवास्य होतुराहुतिसाधनम् ।
अनिन्द्या नन्दिनी नाम धेनुराववृते वनात् ॥

इति वादिन एव = இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே
होतुः = ஹோமத்தைத் தவருது செய்பவரான
अस्य = இந்த ரிஷியினுடைய
आहुति = ஹோமதிரவ்யங்களுக்கு
साधनम् = ஸாதனமான (அவற்றைக் கொடுக்கின்ற)
अनिन्द्या = நிந்திக்கத்தகாத (பூஜிக்கத் தக்க)
नन्दिनी नाम = நந்தினி என்கிற
धेनुः = கறவைப் பசு
वनात् = காட்டிலிருந்து
आववृते = திரும்பி வந்தது. (82)

83. ललाटोदयमाभुग्नं पल्लवस्निग्धपाटला ।
बिभ्रती श्वेतरोमाङ्कं सन्ध्येव शशिनं नवम् ॥

पल्लव = துளிர்போல்
स्निग्ध = வழுவழுப்பாயும்
पाटल = சிவப்புமாய்
ललाटोदयम् = நெற்றியில் உண்டான
आभुग्नम् = கொஞ்சம் வளைவான
श्वेतरोमाङ्कम् = வெளுப்பு ரோமங்களாகிற குறியை
सन्ध्या = (சிவப்பான) அந்தியானது
नवम् = புதியதான (அமாவாஸ்யைக்குப் பிறகு தோன்றின)
शशिनमिव = சந்திரனைப்போல்
बिभ्रती = தரிக்கின்றதான (பசு என்று முன் சுலோகத்தோடு அந்வயம்)

மூன்றாம் பிறை போன்றிருந்தது அதன் நெற்றியிலுள்ள வெளுத்த ரோமங்களின் அமைப்பு. (83)

84. भुवं कोष्णेन कुण्डोध्नी मेध्येनावभृथादपि ।
प्रस्नवेनाभिवर्षन्ती वत्सालोकप्रवर्तिना ॥

कुण्डोध्नी = அக்னி குண்டம் போன்ற மடியையுடைய தாய்
कोष्णेन = வெது வெதுப்பான (கொஞ்சமுஷ்ணமான)
अवभृथादपि = (யஜ்ஞங்களின் முடிவில் செய்கிற) அவப்ருதம் என்கிற ஸ்நானத்தைக் காட்டிலும்
मेध्येन = பரிசுத்தமான
वत्सालोकप्रवर्तिना = கன்றைப் பார்த்ததினால் சுரந்த
प्रस्नवेन = சுரப்பினால் (பால் பெருக்கினால்)
भुवम् = பூமியை (தரையை)
अभिवर्षन्ती = நனைக்கின்றதான (பசு). (84)

85. रजःकणैः खुरोद्धूतैः स्पृशद्भिर्गात्रमन्तिकात् ।
तीर्थाभिषेकजां शुद्धिमादधाना महीक्षितः ॥

अन्तिकात् = ஸமீபத்தில்
खुरोद्धूतैः = குளம்புகளால் கிளப்பப்பட்ட
गात्रम् = (அரசனது) தேஹத்தை
स्पृशद्भिः = தொடுகின்ற (அவன் மேல் விழுகின்ற)
रजः कणैः = தூளியின் துணுக்குக்களால்
महीक्षितः = அரசனுக்கு
तीर्थाऽभिषेकजाम् = புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதால் உண்டாகின்ற
शुद्धिम् = சுத்தியை (புனிதத் தன்மையை)
आदधाना = உண்டாக்குகின்ற (பசு).

முனிவரும் அரசனும் இருந்த இடத்திற்கு அருகே போகின்ற வழியாகக் கொட்டிலுக்குப் போயிற்று, காட்டில் மேய்ந்து விட்டுத் திரும்பி வந்த நந்தினி என்கிற பசு. அது ஆச்ரமத்தில் நுழைந்த உடனே எல்லோருடைய கண்களும் அதன் மேல் விழுந்தன. முதலில் அதன் முகம் காணப்பட்டது. பிறகு அதன் மடி; இவர்களைத் தாண்டி அப்புறம் போனபோது அதன் தூளி மேல்விழ மஹா பரிசுத்தி உண்டாயிற்றென்று அரசன் மகிழ்ந்தான். (85)

86. तां पुण्यदर्शनां दृष्ट्वा निमित्तज्ञस्तपोनिधिः ।
याज्यमाशंसितावन्ध्यप्रार्थनं पुनरब्रवीत् ॥

निमित्तज्ञः = சகுனமறிந்த
तपोनिधिः = (வஸிஷ்ட) முனிவர்
पुण्य = புண்யமான (சுபத்தைத் தரக் கூடிய)

दर्शनाम् = தர்சனத்தை உடைய
तां = அந்த நந்தினியை
दृष्ट्वा = பார்த்து
आशंसित = ஊஹிக்க (எதிர்பார்க்க)ப்பட்ட
अवन्ध्य = வீணுகாத (ஸபலமான)
प्रार्थनम् = கோரிக்கையையுடைய
याज्यम् = யஜ்ஞம் பண்ணிவைக்கத் தகுந்தவனுன (சிஷ்யனுன) திலீபனை
पुनः = மறுபடியும்
अब्रवीत् = சொன்னுர்.

நந்தினியின் பேச்சை எடுத்தவுடனே அது வந்ததாகையால் சகுன அறிவு பெற்ற வசிஷ்டர் திலீபனது விருப்பம் சீக்கிரமே கை கூடுமென்று ஊஹித்தார். உஹித்த விஷயத்தை உடனே திலீபனுக்குச் சொன்னுர். க்ருஹஸ்தர்கள் யக்ஞம் செய்வார்கள். புரோஹிதர்கள் கூட இருந்து செய்து வைப்பார்கள். செய்து வைப்பவர்கள் யாஜகர் எனப்படுவர். யாருக்குச் செய்து வைக்கின்றனரோ அந்த க்ருஹஸ்தர்கள் யாஜ்யர்கள் எனப்படுவர். ஸூர்ய வம்சத்தரசர்களுக்குப் புரோஹிதரான வசிஷ்டர் யாஜகர். அவர்கள் யாஜ்யர்கள். ஆகவே இங்குத் திலீபனை வசிஷ்டனுக்கு யாஜ்யனுகச் சொன்னது. சிஷ்யன் என்ற கருத்தில் ஒருவாறு முடியும். आशंसितावन्ध्याप्रार्थनम् என்றதை உரையாசிரியர்கள் வேறு விதமாக வ்யாக்கியானம் செய்திருக்கின்றனர். पुण्यदर्शनाम् என்பதால் வஸிஷ்டரும் தினம் தினம் அதைத் தரிசித்துத் தம்மைப் பவித்ரராக்கிக் கொள்வதாகக் கருதினர் என்பதும், திலீபனுக்கும் அப்போதுண்டான அதன் தர்சனம் வீணுகாது என்று கருதினர் என்பதும் தோற்றுகின்றன.

நந்தினி வந்தவுடன் வஸிஷ்டரும் அதையே பார்த்துக் கொண்டு பேச்சை நிறுத்தி யிருந்தாராதலின் 'पुनरब्रवीत्' மறுபடியும் சொன்னுர் எனப்பட்டது. (86)

87. अदूरवर्तिनीं सिद्धिं राजन् विगणयात्मनः ।
उपस्थितेयं कल्याणी नाम्नि कीर्तित एव यत् ॥

(हे) राजन् = ஓ அரசனே
आत्मनः = தன் (உன்)னுடைய
सिद्धिम् = இஷ்டம் பூர்த்தியாவது
अदूरवर्तिनीं = ஸமீபத்திலேயே இருக்கிறதென்று (உனது விருப்பம் சீக்கிரமே நிறைவேறுமென்று)
विगणय = நிச்சயமாக எண்ணிக் கொள். (எனெனில்)
नाम्नि = பெயர்

कीर्तित एव = சொல்லப்பட்ட போதே	யான
कल्याणी = ஸர்வ மங்கள மூர்த்தி	इयम् = இந்த நந்தினி
	यत् उपस्थिता = வந்ததே (அதனால்).()

88. वन्यवृत्तिरिमां शश्वदात्मानुगमनेन गाम् ।
विद्यामभ्यसनेनेव प्रसादयितुमर्हसि ॥

वन्य = காட்டு வஸ்துக்களையே (காய் கிழங்குகளையே)	इमां गाम् = இப்பசுவை
वृत्तिः = புசிக்கின்றவனாய்	अभ्यसनेन = அப்யாஸத்தால்
शश्वत् = இடைவிடாது	विद्यामिव = வித்தையைப்போல்
आत्मानुगमनेन = தன் அநுஸரணத்தினால் (தானே பின் சென்று)	प्रसादयितुमर्हसि = அருள்புரியும்படி (தெளிவு பெறும்படி) செய்வாயாக.

ப்ரஸாதம் என்பதற்கு அருள், தெளிவு என்று இரண்டர்த்தம். நந்தினி விஷயத்தில் அருளையும் வித்யை விஷயத்தில் தெளிவையும் கொள்ள வேண்டும். நந்தினி மேய்வதற்காகக் காட்டுக்குப் போகும் போது அதை யநுஸரித்து அதற்குப் பின் போய் வந்து கொண்டிருப்பது தான் திலீபன் செய்ய வேண்டிய கார்யம். இதை மேல் ச்லோகங்களில் விளக்குகிறார். (88)

89. प्रस्थितायां प्रतिष्ठेथाः स्थितायां स्थितिमाचरेः ।
निषण्णायां निषीदास्यां पीताम्भसि पिबेरपः ॥

अस्यां = இது	निषण्णायाम् = படுத்துக் கொண்ட போது
प्रस्थितायाम् = சென்றபோது	निषीद = உட்கார்.
प्रतिष्ठेथाः = செல்.	पीताम्भसि = தண்ணீர் குடித்த போது
स्थितायाम् = நின்றபோது	आपः पिबेः = தண்ணீர் குடி.
स्थितिमाचरेः = நில்.।	

தானாக இவன் அதை ஓட்டவோ நிறுத்தவோ கூடாது. அது நிற்கும் போது இவன் உட்காரக் கூடாது. அது தண்ணீர் குடிக்காத போது இவன் குடிக்கக் கூடாது. இந்த நியமங்களுடன் அதன் பின் சென்று வரவேண்டும். (89)

90. वधूर्भक्तिमती चैनामर्चितामा तपोवनात् ।
प्रयता प्रातरन्वेतु सायं प्रत्युद्व्रजेदपि ॥

वधूश्च = பெண்ணும் (ஸுதக்ஷிணை யும்)
भक्तिमती = பக்தியுள்ளவளாய்
प्रयता = பரிசுத்தையாய்
प्रातः = காலையில்
अर्चिताम् = பூஜை செய்து
एनाम् = இப்பசுவை
आतपोवनात् = ஆச்ரமம் வரையில்
अन्वेतु = பின் செல்ல வேண்டும்.
सायम् = ஸாயங்காலத்தில்
प्रत्युद्व्रजेदपि = எதிர் சென்றும் அழைக்க வேண்டும்.

கீழ் 81-வது ச்லோகத்தில் பத்னியுடன் பூஜி யென்றார். பத்னி செய்ய வேண்டிய கார்யம் என்ன வென்பது இங்குச் சொல்லப் பட்டது. பூப்போட்டு, சந்தனம் பூசி, தூப தீபம் காட்டிப் பூஜை செய்து, மேயப்போகும்போது ஆச்ரம எல்லைவரையில் பின் சென்று அனுப்பிவிட்டு, ஸாயங்காலம் ஆச்ரமத்து எல்லையில் சென்று வரவேற்றுக் கூட வர வேண்டியது. இது தான் சுதக்ஷிணை யின் கார்யம். (90)

91. इत्याप्रसादादस्यास्त्वं परिचर्यापरो भव ।
अविघ्नमस्तु ते स्थेयाः पितेव धुरि पुत्रिणाम् ॥

इति = இவ்விதமாக
आप्रसादात् = ப்ரீதி (அருள்) உண்டாகும் வரையில்
अस्याः = இந்த நந்தினியின்
परिचर्या = பணிவிடையில்
परः = ஊற்ற முள்ளவனாக
भव = இரு.
ते = உனக்கு
अविघ्नम् = இடையூறில்லாமை
अस्तु = இருக்கட்டும் (இடையூறின்றி இந்த விரதம் முடியட்டும்).
पितेव = (உன்) தகப்பன் போல்
पुत्रिणाम् = புத்ரவான்களுக்குள்
धुरि = முதலில்
स्थेया = இருக்கக் கடவாய்.

வ்ரதம் இவ்விதமானது இதை இப்படிச் செய்ய வேண்டு மென்று உபதேசித்து முடித்து விட்டு வ்ரதம் இடையூறின்றி முடிய வேண்டும், பலமும் உண்டாக வேண்டு மென்று ஆசீர்வாதத் தையும் முனிவர் செய்தார். (91)

92. तथेति प्रतिजग्राह प्रीतिमान् सपरिग्रहः ।
आदेशं देशकालज्ञः शिष्यः शासितुरानतः ॥

देशकालज्ञः = தேச காலங்களை யறிந்த (இன்ன இடத்தில் இன்ன ஸமயத்தில் இதை இப்படிச் செய்ய வேண்டு மென்றறிந்த)
शिष्यः = சிஷ்யனான திலீபன்

सपरिग्रहः = பத்நியோடு	கூப்பி) வணங்கினவனுய்
शासितुः = குருவினுடைய	तथा = அப்படியே
आदेशम् = கட்டளையை	इति = என்று
प्रीतिमान् = களிப்புற்றவனுய்	प्रतिजग्राह = அங்கீகரித்தான்.
आनतः = (விநயத்திஞல் கை	

ஆச்ரமத்தில் குருவின் முன்னிலேயில் உபதேசத்தையும் உத்தரவையும் இப்படிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அறிந்தவஞதலால் ஆசாரியனுக்கு 'உலகத்தை யெல்லாம் ஒரு குடையின் கீழ் ஆளும் சக்ரவர்த்தி நான், என்ற அஹம்பாவம் கொஞ்சம் இவனுக்கு உண்டு என்ற எண்ணம் கொஞ்சமும் உதிக்காதபடி பரிபூர்ணமான விநயத்தோடு நடந்து கொண்டு அவரை மகிழ்வித்தான் திலீபன் என்பது கருத்து. (92)

93. अथ प्रदोषे दोषज्ञः संवेशाय विशाम्पतिम् ।
सूनुः सूनृतवाक् स्रष्टुर्विससर्जोर्जितश्रियम् ॥

अथ = பிறகு	ऊर्जितश्रियम् = ஸ்திரமான தேஜஸ்ஸை உடைய
प्रदोषे (सति) = ராத்திரியானபோது	विशाम्पतिम् = அரசனை
दोषज्ञः = வித்வானுன	संवेशाय = படுத்துக் கொள்வதற்காக
सूनृतवाक् = ப்ரியமும் உண்மையுமான வார்த்தையையுடைய	विससर्ज = விட்டார் (விடைகொடுத்தனுப்பினுர்).
स्रष्टुःसूनुः = ப்ரஹ்மாவின் புத்திரரான வஸிஷ்டர்	

ஸந்தானத்திற்காகச் செய்ய வேண்டிய உபாயத்தின் உபதேசம் முடிந்து விட்டது. இனி வேறு விஷயம் என்பதற்காக अथ என்றுரம்பித்தது. வ்ரதோபதேசம் முடிந்த பிறகு வேறு எத்தனையோ விஷயங்கள் ப்ரஸ்தாவத்திற்கு வந்தன. அவற்றை எல்லாம் பேசிக் கொண்டிருந்தனர். பேசுவதெல்லாம் ரிஷிதான், பேச்சுக்கள் பலபல உண்மைகளைத் தெரிவிப்பனவாயிருக்கும். அதோடு கேட்கக் கேட்க இன்பமாயிருக்கும். ஆகையால் திலீபனுக்கு மேல் மேல் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டேயிருக்கலாமென்ற எண்ணம். பார்ப்போரை வசீகரிக்கக் கூடிய, பளபளவென்று ப்ரகாசிக்கிற தோற்றத்தோடு புத்திமானுயும் குணவானுயுமுள்ள அரசனுக்கு இன்னும் பல விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்கிற எண்ணம் ரிஷிக்குமுண்டு. ஆகையால் பேச்சு வெகு

நேரம் நடந்தது. ஸாயங்காலம் கழிந்து ராத்திரி ஆரம்பமாகி விட்டது. இனியும் அரசனை நிறுத்திப் பேசினால் அவன் ஆரோக்யத்திற்குத்தகாது என்று எண்ணி அறிஞரான முனிவர் 'அரசனே இனி நீ போய் ஆஹாரம் செய்து விட்டுப் படுத்துக்கொள். மற்றது விடியற்காலம் பேசிக் கொள்ளலாம்' என்று கூறி அனுப்பினார். என்றிவ்விஷயங்களைக் கவி ஸ்வாரஸ்யமாக விசேஷணங்களை இட்டுக் காட்டுகிறார். (93)

94. सत्यामपि तपस्सिद्धौ नियमापेक्षया मुनिः।
कल्पवित्कल्पयामास वन्यामेवास्य संविधाम् ॥

तपः = தபஸ்ஸினாலுண்டான
सिद्धौ = நினைத்த வஸ்துக்களைத் தருவிக்கக் கூடிய சக்தியானது
सत्यामपि = இருந்தபோதிலும்
कल्पवित् = கல்பத்தை (அது அது செய்யப்பட வேண்டிய முறையை) அறிந்தவரான
मुनिः = முனிவர்
नियमापेक्षया = வ்ரதத்தை உத்தேசித்து
अस्य = இந்தத் திலீபனுக்கு
वन्याम् = காட்டிலுண்டான (காய் கிழங்கு முதலிய) வஸ்துக்களாகிய
संविधामेव = (ஆஹார) வசதியையே
कल्पयामास = செய்து வைத்தார்.

அரசன் உத்தமமான ஆஹாரம் புசிப்பவன். ஆகையால் அவனுக்குரிய ஆஹாரம் கொடுக்கப் படவேண்டும். ஆயினும் விரதத்துடன் இருந்து அவன் நந்தினியை உபசரிக்க வேண்டியிருப்பதால் அவ்வித ஆஹாரம் உசிதமில்லை என்று கருதி முனிவர் ரிஷிகளின் ஆஹாரத்தையே புசிக்கும்படி கட்டளையிட்டார்.

இவ்வரசன் இவ்வித ஆஹாரத்தைப் புசித்து வழக்கப்பட்டவனல்லன். அறுசுவையோடுண்ணும் வழக்கமே உள்ளவன். ஆயினும் இம்மாறுதலை ச்ரமமின்றி அவன் ஸஹித்தான். முன் உத்தமமான உணவு உண்ணும் போது அதில் அவனுக்குப் பற்று இல்லை. ஆதலால் அது இல்லாத போது கஷ்டமே தெரியவில்லை. மேல் ச்லோகத்தில் கூறும் படுக்கை விஷயமும் இப்படியே. இங்கு இப்படிக் கருத்தைக் கொள்ளவேணு மென்பதற்காகவே கவி முன் 21-வது ச்லோகத்தில் असक्तः सुखमन्वभूत् என்றார். (94)

95. निर्दिष्टां कुलपतिना स पर्णशालामध्यास्य प्रयतपरिग्रहद्वितीयः ।
तच्छिष्याध्ययननिवेदितावसानां संविष्टः कुशशयने निशां निनाय॥

इति श्रीकालिदासीये रघुवंशे महाकाव्ये सन्तानोपायनिर्णयो नाम प्रथमःसर्गः

सः = அந்த அரசன்
प्रयत = பரிசுத்தையான (நியமானுஷ்டான முள்ள)
परिग्रह द्वितीयः = பத்னியான சுதக்ஷிணையோடு கூட
कुलपतिना = குலபதியான வஸிஷ்ட முனிவரால்
निर्दिष्टाम् = குறிக்கப்பட்ட
पर्णशालाम् = பர்ணசாலையில்
अध्यास्य = இருந்து கொண்டு
कुशशयने = தர்ப்பப் புல்களால் செய்யப்பட்ட படுக்கையில்
संविष्टः = படுத்து
तत् = அம்முனிவருடைய
शिष्य = சிஷ்யர்களுடைய
अध्ययन = வேதாத்யயனத்தால் (சிஷ்யர்கள் வேத மோதியதால்)
निवेदित = அறிவிக்கப்பட்ட
अवसानाम् = முடிவையுடைய
निशाम् = இரவை
निनाय = கழித்தான்.

ஆயிரக் கணக்கில் பல பேர்களுக்கு ஆஹாரம் போட்டு வஸிக்கச்செய்து வித்தை கற்பிப்பவர்களுக்குக் குலபதி என்று பெயர். வஸிஷ்டர் ஒரு குலபதி. அவரது பர்ணசாலையைச் சுற்றி எத்தனையோ ரிஷிகள் தனித்தனியே பர்ண சாலைகளில் வஸித்து வந்தனர். அவற்றில் தற்காலம் ஒருவரும் இல்லாத ஒரு பர்ணசாலையைக் காட்டித் திலீபனை அதில் வஸிக்கச் சொன்னார். ஆஸனம், படுக்கை, எல்லாம் தர்ப்பமயம். ஆஹாரத்திற்குப் பிறகு அரசன் தர்ப்பப் படுக்கையில் படுத்துக் கொண்டான். கார்யத்திலேயே கருத்துடையவனாதலின் அவன் வெகுவாகத் தூங்கவே இல்லை. காலங் காட்டுங் கருவி அங்கு ஒன்றுமில்லை. இன்னும் விடிவதற்கு எத்தனை நாழிகை இருக்குமோ என்று எண்ணிக் கொண்டு விழித்திருந்தான். வேதமோதும் சப்தம் கேட்டது. அதனால் இரவு சென்றுவிட்டது என்று அறிந்தான். அந்த சப்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான். பொழுது விடிந்தது. தனது காலைக்கடன்களைச் செய்து முடித்துக் கொண்டு குருவை வணங்கி நந்தினியைப் பூஜிக்க அவர் அனுமதி பெற்றான். (95)

இத்துடன் ஸந்தானத்தைப் பற்றிய ப்ரகரணத்தில் அதற்காக நந்தினியை உபசரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டதென்பதைச் சொல்லுகிற ஒரு பாகம் முடிவு பெற்றது.

|| முதல் ஸர்க்கத்தின் உரை மூற்றிற்று ||

॥ இரண்டாவது ஸர்க்கம் ॥

1. **अथ प्रजानामधिपः प्रभाते जायाप्रतिग्राहितगन्धमाल्याम् ।**
वनाय पीतप्रतिबद्धवत्सां यशोधनो धेनुमृषेर्मुमोच ॥

अथ = பிறகு

प्रभाते = காலையில்

यशोधनः = புகழையே செல்வமாக உடைய

प्रजानामधिपः = அரசன்

जाया = மனைவியினால் (ஸுதக்ஷிணையினால்)

प्रतिग्राहित = ஸமர்ப்பிக்கப்பட்ட (பெற்றுக் கொள்ளச் செய்யப்பட்ட)

गन्धमाल्याम् = சந்தனம் பூமாலை இவற்றையுடைய,

पीत = பால் ஊட்டினதற்குப் பிறகு

प्रतिबद्ध = தரியில் மறுபடியும் கட்டப்பட்ட

वत्साम् = கன்றையுடைய

ऋषेः धेनुम् = முனிவருடைய பசுவை

वनाय = காட்டிற்கு (காட்டில் மேயப் போவதற்காக)

मुमोच = (அவிழ்த்து) விட்டான்.

முனிவருடைய கட்டளைப்படி ஸுதக்ஷிணை சந்தனம் பூசிப் பூமாலை போட்டுப் பசுவைப் பூஜித்தாள். அப்போது பால் கறந்த பிறகு கன்று ஊட்டிக் கொண்டிருந்தது. ஸுதக்ஷிணையின் பூஜை முடிந்தும் ஊட்டி நின்ற கன்றைக் கட்டிவிட்டுத் திலீபன் பசுவை அவிழ்த்து விட்டான்.

प्रजानामधिपः—மக்களுக்கெல்லாம் அதிபதி. இவன் ஏவினால் மாட்டை மேய்க்க எத்தனை மனிதர் காத்திருப்பர். அவ்விதமானவன் தானே மேய்ப்பதற்காக அதை அவிழ்த்து விட்டான். ஏனெனில் அவன் यशोधनः புகழையே செல்வமாக உடையவன். அரிய குணங்களால் உண்டாகும் ப்ரஸித்தி புகழ் எனப்படுகிறது. பித்ருக்களின் கடனைத் தீர்ப்பதில் உள்ள ச்ரத்தையினால் 'தானு மாடு மேய்ப்பது' என்று அஹந்தை கொள்ளாமல் பசுவை உபசரித்தான். 'கர்வம் பிடித்தவன் ; ஸந்தானம் உண்டாக வழியிருந்தும் சும்மாவிருந்து விட்டான்' என்ற அபக்யாதியை ஸஹிக்கமாட்டான்.

பசுவே பூஜிக்கத்தக்கப் பிராணி. அதிலும் இது குருவான வஸிஷ்டருடையது. அவருடைய ஹோம த்ரவ்யங்களைக் கொடுக்

கும் காமதேனுவின் கன்று. இதைப் பூஜிப்பதில் அகௌரவ மென்ன? இதைச் செவ்வனே உணர்ந்தான் விவேகியான திலீபன்.

பத்நீ, பார்யா, என்றிப்படி வேறு பதங்களை உபயோகப்படுத்தாமல் ஜாயா என்கிற பதத்தை உபயோகப்படுத்தினது அவளிடத்தில் புத்திரன் உண்டாக வேண்டுமென்ற கருத்தைக்குறிக்கின்றது.

இந்த்ரவஜ்ரா, உபேந்த்ரவஜ்ரா, என்ற இரண்டுவித பாதங்களாலாகிய உபஜாதி வருத்தம் இது. இருவரின் சேர்க்கையையோ சேர்ந்து செய்யும் கார்யத்தையோ சொல்லுமிடத்தில் இவ்விருத்தத்தைக் கவி கையாளுகிறார். இங்கு அரச தம்பதிகள் இருவரும் செய்கின்ற நந்தினியின் உபசாரம் கூறப்படுகின்றது. நந்தினியும் திலீபனும் சேர்ந்து செய்வதைக் கூறுகின்றது என்றும் சொல்லலாம். (1)

2. तस्याः खुरन्यासपवित्रपांसुमपांसुलानां धुरि कीर्तनीया ।
मार्गं मनुष्येश्वरधर्मपत्नी श्रुतेरिवार्थं स्मृतिरन्वगच्छत् ॥

अपांसुलानाम् = குற்றமற்றவர்களுக்குள் (ஸ்த்ரீகளுக்குரிய எல்லா குணங்களும் நிரம்பப் பெற்றவர்களுக்குள்)	पवित्र = பரிசுத்தமான
धुरि = முதலில்	पांसुम् = புழுதியையுடைய
कीर्तनीया = சொல்லத்தக்கவளான	तस्याः = அப்பசுவின்
मनुष्येश्वर = அரசனது	मार्गम् = வழியை
धर्मपत्नी = தர்ம பத்நியான ஸுதக்ஷிணை	स्मृतिः = (மனுமுதலியோர் செய்த) ஸ்ம்ருதி நூல்
खुरन्यास = குளம்பு (அடி) வைப்பினால்	श्रुतेः = ச்ருதியின் (வேதத்தின்)
	अर्थमिव = அர்த்தத்தைப் (பின்பற்றிச் செல்வது) போல்
	अन्वगच्छत् = அநுஸரித்தாள் (பின் சென்றாள்).

முன் ஸர்க்கம் 90 - வது ச்லோகத்தில் சொன்னபடி நந்தினியைப் போகும் போது ஸுதக்ஷிணை ஆச்ரமத்தின் எல்லை வரையில் பின் சென்றாள். திலீபன் போலவே ஸுதக்ஷிணையும் கர்வமற்றிருந்தாள். இது தோன்றவே मनुष्येश्वरधर्मपत्नी என்ற நீண்ட பதத்தால் அவளைக் குறித்தது.

ஒரு ப்ரமாணத்தால் ஒன்றை அறிந்து பிறகு அதை நினைப்பது ஸ்ம்ருதி எனப்படுகின்றது. மனு முதலியோர் வேதமாகிற ப்ரமா

ணத்தைக் கொண்டு அறிந்த விஷயங்களை நினைத்து மனு ஸ்ம்ருதி முதலிய நூல்களில் அவற்றை எழுதி வைத்திருக்கின்றனர். ஆகையினாலேயே இந்நூல்களும் ஸ்ம்ருதி எனப்படுகின்றன. இதனால் இத்தகைய ஸ்ம்ருதி நூல், வேதம் சொல்லும் விஷயத்தையே தானும் பின் பற்றுகிறதென்பது ஸ்பஷ்டம். ச்ருதி போன்றது நந்தினி. அதன் பொருள் போன்றது நந்தினி போன வழி. ஸ்ம்ருதி போன்றவள் ஸுதக்ஷிணை. ச்ருதியின் பொருளைப் பின்பற்றாதொழியுமாயின் ஸ்ம்ருதி ப்ரமாணமாகாது. பெரியோர் அதை ஆதரிக்க மாட்டார்கள். அதுபோல் வஸிஷ்டரது கட்டளைப்படி நந்தினியின் வழியைப் பின்பற்றிப் போகாதொழியில் ஸுதக்ஷிணையின் ஸ்வரூபம் குணம் எல்லாம் கெடும். பெரியோர்கள் நிந்திப்பர். இவ்வித விவேகம் அவளுக்குண்டு. ஆகவே பின் சென்றாள். பின் செல்லும் போது மிகுந்த பக்தியோடு சென்றாள். நந்தினி போன வழியாயிற்றே. அதன் காலடிபட்டு உண்டான தூளி நமது சரீரத்தில் படும்படியான பாக்கியம் பெற்றோமே யென்று களித்தாள். உத்தமியான பதிவ்ரதை யன்றோ இவள். (2)

3. निवर्त्य राजा दयितां दयालुस्तां सौरभेयीं सुरभिर्यशोभिः ।
पयोधरीभूतचतुस्समुद्रां जुगोप गोरूपधरामिवोर्वीम् ॥

दयालुः = இரக்கமுள்ளவனை,
यशोभिः = புகழ்களால்
सुरभिः = வாஸனை பெற்ற (இனியவனை)
राजा = அரசன்
दयिताम् = (தன்) காதலியை
निवर्त्य = திருப்பி அனுப்பிவிட்டு
ताम् = அந்த
सौरभेयीम् = காமதேனுவின் புத்ரியான நந்தினியை
पयोधरीभूतचतुस्समुद्राम् = நான்கு ஸமுத்ரங்களும் முலையாக [தரித்த
गोरूपधराम् = பசுவின் உருவம்
उर्वीमिव = பூமியைப்போல்
जुगोप = காத்தான்.

ஆச்ரமத்தின் எல்லை முடிந்தது. இனி ஸுதக்ஷிணை திரும்ப வேண்டும். ஆனால் அவள் திரும்பவில்லை. அன்பினாலும் பக்தியினாலும் சென்று கொண்டே யிருந்தாள். திலீபன் பார்த்தான். மஹர்ஷி கட்டளையிட்ட இடம் வரையில் வந்தாய் விட்டது. அதற்கு மேல் சென்று அவள் ம்ருதுவான தனது சரீரத்தை வாட்டிக் கொள்வதில் என்ன பயன்? என்று ஆலோசித்து அவள் கஷ்டப் படுவதை ஸஹியாமல் 'இனி, திரும்பி ஆச்ரமம் செல்லலாம்' என்றான். அதன் பிறகு அவள் ஆச்ரமத்திற்கு வந்தாள்,

பிறகு அவன் வெகு ச்ரத்தையோடு நந்தினியைக் காத்தான். அகண்ட பூ மண்டலத்தைப் பரிபாலனம் செய்வதில் எவ்வளவு கவலையும் கவனமும் இருக்குமோ அவ்வளவு கவலையுடனும் கவனத்துடனும் அதைக் காத்தான். இது உபமானத்திலுல்தோன் றும் கருத்து. (3)

4. व्रताय तेनानुचरेण धेनोर्न्यषेधि शेषोऽप्यनुयायिवर्गः ।
न चान्यतस्तस्य शरीररक्षा स्ववीर्यगुप्ता हि मनोःप्रसूतिः ॥

व्रताय = விருதத்திற்காக	तस्य = அவனது
धेनोः = பசுவின்	शरीररक्षा = சரீரத்தின் காப்பு
अनुचरेण = பின் செல்கின்ற	अन्यतः = மற்றொருவரால்
तेन = அந்தத் திலீபனுல்	न च = இல்லையே.
शेषः = மற்ற [டைய கூட்டமும்	मनोः = மனுவின்
अनुयायिवर्गोऽपि = ஸேவகர்களு-	प्रसूतिः = ஸந்ததி
न्यषेधि = தடுக்கப்பட்டது (நிறுத் தப்பட்டது.) (எனெனில்)	स्ववीर्य = தன் வீர்யத்திலுலேயே
	गुप्ता हि = காக்கப்பட்டதன்றோ.

இரண்டு விதமான ப்ரயோஜனத்திற்காகத் திலீபன் பிறரை அபேக்ஷிக்கலாம் எனத் தோன்றும். நந்தினியை உபசரிப்பதில் தனக்கு உதவி புரிவது ஒன்று. தன்னைப் பாதுகாப்பது ஒன்று. நந்தினியைத் தானே உபசரிக்கவேண்டுமென்ற நியமமிருக்கின்ற படியால் அவ்விஷயத்தில் எவ்வித உதவியும் பிறர் செய்வதற்கில்லை. தன்னைத் தானே பாதுகாக்கும் திறமையுடையவனுதலால் இதற் காகவும் பிறர் வேண்டியதில்லை. सेना परिच्छदस्तस्य (19) என்று முன் சொன்னதைக் கவனிக்கவும். ஆகவே அவன் ஒருவரையும் தன் னேடு அழைத்துச் செல்லாது எல்லோரையும் திருப்பி அனுப்பி விட்டான்.

அரசன் செல்லும் போது நாமும் அவனுடன் செல்ல வேண் டும் என்று தமது கடமையையுணர்ந்தும் அவனிடத்திலுள்ள பக்தியினுலும் சேவகர்கள் அவன் போகும் போது அவனேடு கூடச் செல்வதற்காகத் தாமும் புறப்பட்டார்கள். ஸுதக்ஷிணை நின்ற பிறகும் பின் தொடர்ந்தார்கள். ஆகவே அவன் அவர்களை யும் தன்னுடன் வர வேண்டாமென்று திருப்பி அனுப்பினுன். (4)

5. आस्वादवद्भिः कवलैस्तृणानां कण्डूयनैर्दंशनिवारणैश्च ।
अव्याहतैः स्वैरगतैः स तस्याः सम्राट् समाराधनतत्परोऽभूत् ॥

सम्राट् = ராஜாதி ராஜனான
सः = அந்தத் திலீபன்
आस्वादवद्भिः = ருசியுள்ள
तृणानां कवलैः = புல் கவளங்களா-
कण्डूयनैः = சொறிவதாலும் [லும்
दंशनिवारणैः = காட்டு ஈக்களை ஓட்டு வதாலும்
अव्याहतैः = தடுக்கப்படாத
स्वैरगतैश्च = இஷ்டப்படி உள்ள ஸஞ்சாரத்தாலும் (தடுக்காமல் அதனிஷ்டப்படி ஸஞ்சரிக்க விடுவதாலும்)
तस्याः = அந்த நந்தினியின்
समाराधन = சுச்ரூஷையில்
तत्परः = ஊற்றமுள்ளவனாக
अभूत् = ஆனான்.

அது மேயும் போது தான் சும்மா இராமல் நல்ல புல்லாகப் பார்த்துக் கையால் பிடுங்கிக் கவளம் கவளமாக அதற்குக் கொடுத்தான். மேயாது நின்றபோது சொறிந்தான். அதன்மேல் வந்து உட்காரும் ஈக்களை எல்லாம் ஓட்டினான். அங்கு நல்ல புல் இல்லை, இங்கு நல்ல புல் இருக்கிறது என்று தனக்குத் தோன்றுவதை அநுஸரித்து அது தானாக ஒரு இடத்திற்குப் போவதைத் தடுக்காமலும் மற்றோர் இடத்திற்கு ஓட்டாமலும் அதன் இஷ்டப்படி அதைப் போகவிட்டான். இப்படி உபசரித்தான். (5)

6. स्थितः स्थितामुच्चलितः प्रयातां निषेदुषीमासनबन्धधीरः ।
जलाभिलाषी जलमाददानां छायेव तां भूपतिरन्वगच्छत् ॥

भूपतिः = அரசன்
स्थिताम् = (அது) நின்றபோது
स्थितः = நின்றவனாய்
प्रयाताम् = போன போது
उच्चलितः = போனவனாய்
निषेदुषीम् = படுத்த போது
आसनबन्धधीरः = ஆஸனம் போடுவதில் வல்லவனாய் (உட்கார்ந்தவனாய்)
जलमाददानाम् = நீரை உட்கொள்ளும் போது
जलाभिलाषी = நீரை விரும்புபவனாய் (குடிக்கின்றவனாய்)
ताम् = அந்த கோவை
छायेव = நிழல்போல்
अन्वगच्छत् = பின்பற்றினான் (அநுஸரித்தான்).

முன் ஸர்க்கம் 89 - ச்லோகத்தில் கூறப்பட்ட குருவின் கட்டளையைச் சிறிதும் தவறில்லாது அரசன் அநுஷ்டித்தான் என்று குறிப்பால் காட்டுவதற்காக அவ்விடத்தில் கூறிய படியே இங்குக் கூறியிருப்பதைக் காண்க.

உட்கார்ந்திருக்கும் போது அரசன் கால்களை இப்பக்கம் அப்பக்கம் நீட்டுவது மடக்குவது தொங்கவிடுவது கைகளால் துரும்பு

கிள்ளுவது முதலிய பயனற்றச் செய்கைகளைச் செய்வது, அங்கு மிங்கும் கண்ணைச் செலுத்தி எதையோ பார்ப்பது, சோம்பல் முறிப்பது என்றிவ்விதமாக ஒன்றும் செய்யமாட்டான். யோகாப் பியாசத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் எப்படி ஆடாமல் அசங்காமல் தாம் அப்யஸித்த ஓர் ஆஸனம் போட்டு மனத்தையும் கண்களையும் தாம் ஒரே லக்ஷ்யத்தில் நிறுத்தி வைப்பார்களோ அப்படியே இவனும் நந்தினியிடத்தில் நிறுத்தி உபாஸனம் செய்தான் என்பது தோற்ற 'உட்கார்ந்தவனாய்' என்னாது 'ஆஸனம் போடுவதில் வல்லவனாய்' என்றது. (6)

7. स न्यस्तचिह्नामपि राजलक्ष्मीं तेजोविशेषानुमितां दधानः ।
आसीदनाविष्कृतदानराजिरन्तर्मदावस्थ इव द्विपेन्द्रः ॥

न्यस्तचिह्नाम् अपि = (வெண் சாமரம் வெண்குடை முதலிய) வரிசைகள் இல்லாமல் இருந்தாலும்	सः = அவன்
तेजोविशेष = தேஜஸ்ஸின் சிறப்பி-[னால்]	अनाविष्कृत = வெளிப்படுத்தப் படாத
अनुमिताम् = அநுமானம் செய்யப் பட்ட (ஊஹிக்கப்பட்ட)	दानराजिः = மதஜலப் பெருக்கை யுடைய,
राजलक्ष्मीम् = இவன் அரசனே என் னும்படியான சீர்மையை	अन्तः = உள்ளடங்கி நின்ற
दधानः = தாங்கிய	मदावस्थः = மதம் பிடித்த நிலையி லுள்ள
	द्विपेन्द्र इव = பெரும் யானைபோல்
	आसीत् = இருந்தான்.

காட்டில் நந்தினி மேயப் போனபோது அதற்கு அரசன் செய்த உபசாரத்தைக் கீழ் இரண்டு ச்லோகங்களால் சொல்லி முடித்தார். இனி நாட்டைவிட்டு மாடு மேய்ப்பதற்காகத் தனியே காட்டில் இருக்கும் அரசனுக்கு இதனால் எவ்விதக் குறைவுமில்லை என்று காட்ட உத்தேசித்து இது முதல் எட்டு ச்லோகங்களால் கவி அரசனது விஷயங்களையே கூறுகின்றார். அதில் இங்குக் குடை சாமரம் முதலிய சின்னங்கள் இல்லையாயினும் இவன் அரசன் என்பதற்குரிய கம்பீரத் தோற்றம் அவனை விட்டகலவில்லை என்றார். (7)

8. लताप्रतानोद्ग्रथितैः स केशैरधिज्यधन्वा विचचार दावम् ।
रक्षापदेशान्मुनिहोमधेनोर्वन्यान् विनेष्यन्निव दुष्टसत्त्वान् ॥

लता = கொடிகளிலிருந்தெடுத்த
प्रतान = நூல்களால்
उद्ग्रथितैः = தூக்கிக் கட்டப்பட்ட
केशैः = மயிர்களுடன்
सः = அவன்
अधिज्यधन्वा = நாணேற்றிய வில்லைத் தரித்தவனாய்
मुनिहोमधेनोः = (வஸிஷ்ட) முனிவரின் ஹோமத்திற்கு உதவுகின்ற பசுவின்
रक्षापदेशात् = பாதுகாப்பு என்ற வ்யாஜத்தினால் (அதைச் சாக்கிட்டு)
वन्यान् = காட்டிலுள்ள
दुष्टसत्त्वान् = கொடிய ப்ராணிகளை
विनेष्यन्निव = அடக்கப் போகிறவன் [போல்
दावम् = காட்டில்
विचचार = ஸஞ்சரித்தான்.

சிரஸ்ஸில் கிரீடமில்லை. விரத நியமத்தினால் மயிர்களை வழக்கம்போல் தைலம் தடவி வாரி நூல்களால் முடிவதற்கில்லை. ஆகையால் கொடிகளின் மெல்லிய நரம்புகளாகிற நூல்களை எடுத்து, வெறும் முழுக்கினால் பசையற்று ஒன்றுக்கொன்று சேராமலும் கைகளால் அடிக்கடி தொடச் சௌகர்யமில்லாமலும் இருந்த மயிர்களைத் தூக்கிக் கட்டிக் கொண்டு, நந்தினியைக் காட்டு மிருகங்கள் ஹிம்ஸிக்காமல் காப்பாற்றுவதற்காக நினைத்த உடனே உபயோகப்படும்படி நாணேற்றிய வில்லைக் கையில் தரித்துக் காட்டில் ஸஞ்சரித்தான் அரசன். அப்போதும் அரசாங்க வேலையாகவே அவன் அங்கு வந்ததாகத் தோன்றினான் என்கிறார் இங்குக் கவி. வில் தரிப்பதால் யாரையோ எவற்றையோ அடக்க வந்தான் என்பது தோன்றுகிறது. கிரீடம் கவசம் ஒன்றுமில்லாமையால் மனிதரை அடிக்க வல்லவென்பது ஸ்பஷ்டம். இடம் காடானபடியால் அங்குள்ள கொடிய மிருகங்களை அடக்கவென்று தோன்றுகிறது. ஆகவே 'இதற்காகத்தான் போலும்' என்று உத்ப்ரேக்ஷை. (8)

9. विसृष्टपार्श्वानुचरस्य तस्य पार्श्वद्रुमाः पाशभृता समस्य ।
उदीरयामासुरिवोन्मदानामालोकशब्दं वयसां विरावैः ॥

विसृष्टपार्श्वानुचरस्य = ஸேவகர்களை விட்டு வந்த
पाशभृता समस्य = வருண பகவானுக் கொப்பான
तस्य = அவ்வரசனுக்கு
पार्श्वद्रुमाः = பக்கத்து மரங்கள்
उन्मदानाम् = கொழுத்த
वयसाम् = பக்ஷிகளுடைய
विरावैः = சப்தங்களால்
आलोकशब्दम् = ஜய (விஜயீபவ) என்ற உபசாரச் சொல்லை
उदीरयामासुरिव = கூறினபோலும்.

நாட்டில் பகைவர்களை வெல்வது முதலானவற்றை உத்தேசித்து இவன் புறப்படும் போது முன் பலர் "ஜய விஜயீபவ ராஜாதி ராஜ" என்றிப்படி விருது கூறிக் கொண்டே போவர். அம்மாதிரியான அனுபவமே இங்கும் இருந்தது போலும் எனப் படுகின்றது. தனித்திருந்தும் அவனது கம்பீரத் தோற்றம் அகல வில்லை என்பதற்காகவே 'வருண பகவானுக்குச் சமமான' என்றது. வருண பகவான் மஹா சாந்தமூர்த்தி. (9)

10. मरुत्प्रयुक्ताश्च मरुत्सखाभं तमर्च्यमारादभिवर्तमानम् ।
अवाकिरन् बाललताः प्रसूनैराचारलाजैरिव पौरकन्याः ॥

च = மேலும்
मरुत्प्रयुक्ताः = காற்றினால் அலைக்கப் பட்ட
बाललताः = இளங்கொடிகள்
आरात् = ஸமீபத்தில்
अभिवर्तमानम् = வந்து கொண்டிருக்-
मरुत्सखाभम् = அக்னி போன்ற[கிற
अर्च्यम् = பூஜிக்கத்தக்க
तम् = அவனை (அவன்மேல்)
प्रसूनैः = பூக்களால்(ளை) [கள்
पौरकन्याः = பட்டணத்துப் பெண்-
आचारलाजैरिव = வழக்கமாய் (ஸம்ப்ரதாயப்படி) வாரியிறைக்கும் பொரிகளால்(ளைப்) போல்
अवाकिरन् = இறைத்தன.

தலை நகரத்தில் அரசன் வீதிவலம் வரும்போது பெண்கள் தம் வீடுகளின் மேல்கட்டுகளில் இருந்து புஷ்பங்களை அரசன்மேல் எறிவது அநாதியான வழக்கம். அது போன்ற ஸம்பவம் இங்கும் நடந்தது என்கிறார் கவி. (10)

11. धनुर्भृतोऽप्यस्य दयार्द्रभावमाख्यातमन्तःकरणैर्विशङ्कैः ।
विलोकयन्त्यो वपुरापुरक्ष्णां प्रकामविस्तारफलं हरिण्यः ॥

धनुर्भृतोऽपि = வில் தரித்தானாகிலும்
विशङ्कैः = சங்கையில்லாத (பிடிப்பான் என்ற எண்ணம் சிறிதுமில்லாத)
अन्तःकरणैः = தம் மனங்களால்
दयार्द्रभावम् = கருணையினால் குளிர்ந்த கருத்துள்ளதென்று
आख्यातम् = கூறப்பட்ட (செவ்வனே அறிவிக்கப்பட்ட)
अस्य = இவனுடைய
वपुः = சரீரத்தை
विलोकयन्त्यः = பார்க்கின்ற
हरिण्यः = பெண் மான்கள்
अक्ष्णाम् = கண்கள்
प्रकामविस्तार = மிக விசாலமாய் இருப்பதின்
फलम् = பயனை
आपुः = பெற்றன.

நகரத்து வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் ஏராளமான ஜனங்கள் நின்று பார்த்துக் கொண்டிருப்பார்கள். இங்கு மான்கள் பார்த்தன.

இவன் வில் வைத்திருந்தானாகிலும் இவனைப் பார்க்கும் மிருகங்களினுடைய மனத்தில் சிறிதும் அச்சம் உண்டாகவில்லை. ஆகையால் அவை ஓடாமல் நின்று அவனைப் பார்த்துக் கொண்டிருந்தன. அவ்வளவு சாந்தி உள்ளவன் அவன். (11)

12. स कीचकैर्मारुतपूर्णरन्ध्रैः कूजद्भिरापादितवंशकृत्यम् ।
शुश्राव कुञ्जेषु यशः स्वमुच्चैरुद्गीयमानं वनदेवताभिः ॥

सः = அவன்
मारुतपूर्णरन्ध्रैः = காற்றினால் பூரிக்கப்பட்ட தொளைகளை யுடையனவாய்
कूजद्भिः = (அதனால்) சப்திக்கின்ற
कीचकैः = மூங்கில்களால்
आपादित = உண்டாக்கப்பட்ட (செய்யப்பட்ட)
वंश = புல்லாங்குழலினுடைய
कृत्यम् = கார்யத்தை உடையதாய் இருக்கும்படி (தொளைகளில் காற்றுப் புகுந்து சப்திக்கும் மூங்கில்களே புல்லாங்குழலாக)
कुञ्जेषु = புதர்களில்
वनदेवताभिः = வன தேவதைகளால்
उच्चैः = கெட்டியாக
उद्गीयमानम् = பாடப்பட்ட
स्वम् = தன்னுடையதான
यशः = புகழை
शुश्राव = கேட்டான்.

அரசன் வெளியில் புறப்பட்டுப் போகும் போது அவன் புகழைக் கூறும் பாட்டும் வாத்யமும் இருக்கும். இங்கும் இருந்தன. (12)

13. पृक्तस्तुषारैर्गिरिनिर्झराणामनोकहाकम्पितपुष्पगन्धी ।
तमातपक्लान्तमनातपत्रमाचारपूतं पवनः सिषेवे ॥

गिरिनिर्झराणाम् = மலையிலுள்ள ஜல ப்ரவாஹங்களின்
तुषारैः = திவலைகளோடு
पृक्तः = ஸம்பந்தப்பட்ட,
अनोकह = மரங்களின்
आकम्पित = கொஞ்சம் அசைந்த
पुष्पगन्धी = புஷ்பங்களுடைய மணத்தையுடைய
पवनः = காற்று
अनातपत्रम् = குடையில்லாதவனாய்
आतपक्लान्तम् = வெய்யிலில் வாடின,
आचारपूतम् = ஆசாரத்தினால் பரிசுத்தனை
तम् = அந்த அரசனை
सिषेवे = சேவித்தது (மேல் வீசி உபசரித்தது).

அரசன் சென்றவிடத்தில் பல உபசாரங்கள் நடக்கும். இங்கும் குளிர்ந்து வாஸனை நிறைந்த காற்று வீசிக் குடையில்லாது வெய்யிலில் நடந்து வந்த அரசனுக்கு வேண்டிய உபசாரத்தைச் செய்தது. ஆசாரமாக அதாவது நியமத்தோடு இருக்க வேண்டியவன் ஆதலால் அவன் குடைபிடித்துக் கொள்ளவில்லை. (13)

14. शशाम वृष्ट्याऽपि विना दवाग्निरासीद्विशेषा फलपुष्पवृद्धिः ।
ऊनं न सत्त्वेष्वधिको बबाधे तस्मिन्वनं गोप्तरि गाहमाने ॥

गोप्तरि = (உலகத்தையெல்லாம்) ரக்ஷிக்கின்ற
तस्मिन् = அவ்வரசன்
वनम् = காட்டில்
गाहमाने = புகும்போது
वृष्ट्या विनापि = மழை இல்லாமலிருந்தும்
दवाग्निः = காட்டுத் தீ
शशाम = அணைந்தது.
फलपुष्पवृद्धिः = பழம் பூ இவற்றின் வ்ருத்தி
विशेषा = அதிகமாக
आसीत् = ஆயிற்று.
सत्त्वेषु = பிராணிகளில்
अधिकः = பெரிது
ऊनम् = சிறியதை
न बबाधे = பீடிக்கவில்லை.

உலக மெல்லாம் ரக்ஷிக்கும் அவன் காட்டிலும் ரக்ஷணம் செய்தான். ஸ்தாவரம் ஜங்கமம்; நிற்பன நடப்பன: என இரண்டுவகைப் பொருள்கள் உள்ளன. அவற்றில் நிற்பனவற்றிற்குத் தீயினல் வரும் ஆபத்து நீங்கிற்று. தழைத்துப் பூத்துக் காய்த்து வ்ருத்தியும் அடைந்தன. இவற்றிற்கு ரக்ஷணம் இவ்விதமானது. நடப்பனவற்றிற்குள் பெரிதால் சிறியதற்கு ஆபத்துவரும். அது இப்போது இல்லை. இப்படி இவற்றின் ரக்ஷணம். இவ்வித ரக்ஷணத்திற்காகத் திலீபன் என்ன செய்தான்? ஒன்றுமில்லை. அவன் காட்டில் புகுந்த மாத்திரத்தினலே இவ்வித ரக்ஷணம் உண்டாயிற்று. யோக மார்க்கத்தில் ஸித்தி பெற்ற பெரியோர் ஸமீபத்தில் இருக்கும் பொழுது ஜந்ம வைரிகளான பிராணிகளும் வைரம் பாராட்டாது சாந்தமாக ப்ரீதியாக இருக்கு மென்று சாஸ்திரம் கூறுகின்றது. திலீபன் அத்தகைய மேன்மை பெற்றவன். வனத்திலும் இவனது அரசாட்சி நடந்தது. காட்டில் தனியே இருந்து எப்படிப் பொழுது போக்குவது என்று சிறிதும் வருந்தாமல் இன்பமாகவே சிரமமில்லாமலே, நாட்டில் அரசு புரியும்போது எப்படியோ அப்படியே பொழுது போக்கினன் என்பதும் இவ்வித சுபஸூசகங்களால் தனது விரதம் இனிது முடியுமென்ற நம்பிக்கை

உண்டாகி அரசன் களிப்புடனிருந்தான் என்பதும் இங்கு ஆழ்ந்த கருத்து. இத்துடன் திலீபன் வர்ணனம் முடிகின்றது. (14)

15. सञ्चारपूतानि दिगन्तराणि कृत्वा दिनान्ते निलयाय गन्तुम् ।
प्रचक्रमे पल्लवरागताम्रा प्रभा पतङ्गस्य मुनेश्च धेनुः ॥

पल्लवराग = துளிர்களின் வர்ணம்போல்	सञ्चार = ஸஞ்சாரத்தினால்
ताम्रा = சிவந்ததான	पूतानि = பரிசுத்தங்களாக
पतङ्गस्य प्रभा = ஸூர்யனுடைய ஒளியும்	कृत्वा = செய்து
मुनेः = முனிவருடைய	दिनान्ते = ஸாயங்காலத்தில்
धेनुश्च = பசுவும்	निलयाय = அஸ்தமிப்பதற்கு, இருப்பிடத்திற்கு
दिगन्तराणि = திசைகளின் இடைவெளிகளை	गन्तुम् = போக
	प्रचक्रमे = ஆரம்பித்தது.

இங்குக் காட்டிலிருந்து ஸாயங்காலம் திலீபன் நந்தினியுடன் ஆச்ரமத்திற்குத் திரும்பி வருவதைக் கூறும் ப்ரகரணம் ஆரம்பமாகின்றது. ஸூர்யன் ஒளிக்கும் நந்தினிக்கும் பொதுவாகச் சொற்கள் அமைந்திருக்கின்றன. நந்தினியும் சிவப்பு, ஸாயங்கால வெய்யிலும் சிவப்பு. நந்தினி போகும் இடமெல்லாம் சுத்தமென்பது முன்பே கூறப்பட்டது. ஸூர்யன் ஒளிவிழும் இடமெல்லாம் சுத்தமென்பதும் சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

ஒளி, பசு ஆக இரண்டு கர்த்தாக்கள் இருப்பதால் ஆரம்பித்தது, என்ற ஏக வசனம் சேருமோவெனத் தோன்றும். ஒளி ஆரம்பித்தது. பசுவும் ஆரம்பித்தது என்று தனி வாக்யமாக அந்வயம் செய்ய வேணும். அப்போது அவ்வித சங்கைக்கு இடமில்லை.

தங்கத்தில் பதித்து ஆபரணமாகச் செய்யப்படும் உயர்ந்த சிவப்புக் கற்களுக்குப் புஷ்பராகம் என்றும் பத்மராகம் என்றும் பெயர் உண்டென்பது பிரஸித்தம். அவ்வாறே பல்லவராகம் என்றும் ஒருவித சிவப்புக் கல்லுக்குப் பெயர். அப் பொருளே இங்குக் கொள்வது தகும் என்று சிலர் கூறுவர்.

நந்தினி தானாகவே ஆச்ரமத்திற்குப் போகப் புறப்பட்டது. திலீபன் ஓட்டவில்லை. ஸூர்யன் தானாகவே அஸ்தமிப்பான். அதை அனுஸரித்துத் திலீபன் தான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடிப்பான். அது போலவே நந்தினியினிடத்தில் அவன் நடப்பது. (15)

16. तां देवतापित्रतिथिक्रियार्थामन्वग्ययौ मध्यमलोकपालः ।
बभौ च सा तेन सतां मतेन श्रद्धेव साक्षाद्विधिनोपपन्ना ॥

देवता = தேவர்கள்
पितृ = பித்ருக்கள்
अतिथि = விருந்தினர்கள் (இவர்களுக்காகச் செய்ய வேண்டிய)
क्रियार्थाम् = கர்மாக்களில் உபயோகப்படுகின்ற (யஜ்ஞம் ச்ரார்த்தம் விருந்து இவற்றைச் செய்ய உதவுகின்ற)
ताम् अन्वक् = அந்த நந்தினிக்குப் பின்னால்
मध्यमलोकपालः = நடு வுலகமான இப் பூவுலகத்தைக் காக்கின்றவனான திலீபன்
ययौ = சென்றான்.
सा च = அந்நந்தினியும்
सतां मतेन = நல்லோர்களால் கொண்டாடப் பெற்ற
तेन = அவனோடு
विधिना = முறைப்படியுள்ள அநுஷ்டானத்தோடு
उपपन्ना = கூடிய
साक्षात् = ப்ரத்யக்ஷமாகக் காண்கின்ற
श्रद्धेव = சிரத்தைபோல்
बभौ = விளங்கிற்று.

நந்தினி ஆச்ரமத்திற்குப் புறப்படுவதைப் பார்த்தான் திலீபன். உடனே அதன் பின் இருந்து தானும் புறப்பட்டான். முன் செல்லும் நந்தினியையும் பார்த்து இவனையும் பார்த்தால் என்ன தோன்றுகிற தென்றால் "இவன் இப் பூவுலகம் ஒன்றையே பாதுகாக்க முடி சூட்டியவன். ஆயினும் இப்போது நந்தினியை ரக்ஷிப்பதால் தேவர்கள், பித்ருக்கள் இவர்கள் வஸிக்கும் மேல் உலகத்தையும் பாதுகாக்கும் பாக்யமும் பெருமையும் பெற்றவன்" என்று தோன்றுகிறது.

இப்படி நந்தினியுடன் சேர்த்து அரசனைப் பார்த்தார் கவி. இனித் திருப்பி அரசனுடன் நந்தினியைப் பார்க்கின்றார். சாஸ்த்ரோக்த அநுஷ்டான மில்லையாயின் ஒரு பலனும் கிட்டாது. அநுஷ்டானமும் ச்ரத்தை யில்லையாயின் நிஷ்பலனாம். ஆகவே அநுஷ்டான முடையார்க்கும் ச்ரத்தை யின்றியமையாதது. அவ்வித அநுஷ்டானத்துடன் கூடிய ச்ரத்தை போன்றிருந்தது அரசனுடன் கூடிய நந்தினி. இவ்வுலகம் மேலுலகம் இரண்டிற்கும் க்ஷேமத்தைத் தருவதாகத் தோன்றிற்று. (16)

17. स पल्वलोत्तीर्णवराहयूथान्यावासवृक्षोन्मुखबर्हिणानि ।
ययौ मृगाध्यासितशाद्वलानि श्यामायमानानि वनानि पश्यन् ॥

सः = அவன்	बर्हिणानि = மயில்களை உடைய,
पल्वल = குட்டைகளிலிருந்து	मृग = மான்கள்
उत्तीर्ण = வெளியேறின	अध्यासित = படுத்துக் கொண்டிருக்கும்
वराहयूथानि = பன்றிக் கூட்டங்களை உடைய,	शाद्वलानि = புல் தரைகளை உடைய,
आवासवृक्ष = வாஸ ஸ்தானமான வ்ருக்ஷங்களை	श्यामायमानानि = இருள்கின்ற
	वनानि = காடுகளை
	पश्यन् = பார்த்துக் கொண்டு
उन्मुख = நோக்கிச் செல்கின்ற	ययौ = சென்றான்.

போகும் போது நந்தினியின் உள்ளத்தில் என்ன இருந்ததோ? ஆச்ரமத்தையும் கன்றையும்தான் நினைத்துக் கொண்டிருந்ததோ, அல்லது வேறு எண்ணங்கள் இருந்தனவோ, ஒன்றும் சொல்வதற்கில்லை. போய்க் கொண்டிருந்தது என்றிவ்வளவு தான் சொல்லலாம். வழியில் இங்கும் அங்கும் நடப்பதை எல்லாம் பற்றி அதற்குச் சிறிதும் கவலையில்லை. திலீபன் மாத்திரம் பல காட்சிகளைக் கண்டு களித்தான்.

பன்றிகள் குட்டைகளின் தரையைத் தோண்டி உள்ளிருக்கும் கோரைக் கிழங்கு முதலியவற்றைத் தின்னும். அஸ்தமிக்கும் போது வெளியேறும். இப்படி அவை வருவதை ஓரிடத்தில் கண்டான். மற்றோரிடத்தில் மயில்கள் இரைதேட வந்த இடத்திலிருந்து வஸிக்கு மிடங்களுக்குப் போவதைக் கண்டான். மற்றோரிடத்தில் மான்கள் மேய்ந்த பிறகு படுத்திருப்பதைக் கண்டான். பறவைகளும் விலங்குகளும் தமது விருப்பப்படி ஸ்வதந்த்ரமாய் வாழும் நிலையைக் கண்டு அரசன் மிகவும் களித்தான். இஃதெல்லாம் நகரத்தில் காண இயலாது. இப்படி இவன் அங்கங்கே காணும் காட்சியை யனுபவித்து வர, எங்கும் இருள்சூழ ஆரம்பித்தது.

'பன்றிகள் மயில்கள் இவை முதலியவற்றின் வர்ணத்தால் கருத்த' என்று உரையாசிரியர் கூறுகின்றார். (17)

18. आपीनभारोद्वहनप्रयत्नाद्गृष्टिर्गुरुत्वाद्वपुषो नरेन्द्रः ।
उभावलञ्चक्रतुरञ्चिताभ्यां तपोवनावृत्तिपथं गताभ्याम् ॥

आपीनभार = மடியின் பாரத்தை (கனத்தை)
उद्वहन = தூக்குவதில் உள்ள
प्रयत्नात् = முயற்சியால்
गृष्टिः = பசு,
वपुषः = சரீரம்
गुरुत्वात् = கன(பார)மாயிருப்பதினால்
नरेन्द्रः = அரசன் (இப்படி)
उभौ = இருவரும்
अभिताभ्याम् = அழகான
गताभ्याम् = நடைகளால்
तपोवनावृत्तिपथम् = ஆச்ரமத்திற்குத் திரும்பிவரும் பாதையை
अलञ्चक्रतुः = அலங்கரித்தார்கள் (அழகு பெறச் செய்தார்கள்.

மடியைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு இப்படியும் அப்படியும் கால்களை அகற்றி வைப்பதால் பசுவின் நடை அழகாயிருந்தது. பெருஞ் சரீரத்தைப் பெற்ற அரசன் அசைந்தசைந்து நடந்தானுதலின் அவன் நடை அழகாயிருந்தது. இவ்வழகிய நடைகளால் வழியே அழகு பெற்றது.

காடுகளைத் தாண்டிப் பலர் நடமாடும்படியான ஸாதாரண நிலத்திற்கு இருவரும் வந்தனர். இருவருடைய நடையழகைக் கண்டு காண்போர் களித்தனர் என்பது இங்கே உள் கருத்து. (18)

19. वसिष्ठधेनोरनुयायिनं तमावर्तमानं वनिता वनान्तात् ।
पपौ निमेषालसपक्ष्मपङ्क्तिरुपोषिताभ्यामिव लोचनाभ्याम् ॥

वसिष्ठधेनोः = வஸிஷ்டருடைய பசுவின்
अनुयायिनम् = பின் சென்ற
वनान्तात् = காட்டின் ஓரத்திலிருந்து
आवर्तमानम् = திரும்பி வருகின்ற
तम् = அந்தத் திலீபனை
वनिता = மடந்தை (ஸுதக்ஷிணை)
निमेषालस = சிமிட்டுவதில் சுறுசுறுப்பற்ற
पक्ष्मपङ्क्तिः = இமைமயிர்களின் வரிசையை யுடையவளாய் (இமை கொட்டாமல்)
उपोषिताभ्यामिव = உபவாஸமிருந்தவை போன்ற
लोचनाभ्याम् = கண்களாலே
पपौ = பருகினாள்.

தம்மைச் சேர்ந்தவர்களைக் காணுதபோது ஸ்த்ரீகளுக்கு எவ்வளவு கவலையும் பயமும் இருக்குமோ அதெல்லாம் ஸுதக்ஷிணைக்கிருந்தது. இதைக் குறிப்பால் காட்டுவதற்காகவே பொதுவாக ஸ்திரீகளைச் சொல்லும் 'வநிதா' என்னும் சொல்லை இங்கே எடுத்தது. இவளது உடல் ஆச்ரமத்திலிருந்ததே யன்றி மனது இல்லை. அது பசுவின் பின் சென்ற திலீபனையே நாடிச் சென்றிருந்தது. மிகப் பலர் உபசரிக்க அரண்மனையில் வாழ்ந்த மன்னர் தனியே

காட்டில் என்ன துன்புறுகின்றனரோ என்று வருந்துவாள். வஸிஷ்ட மஹர்ஷியின் கட்டளையினால் அவருடைய பசுவின் பின் சென்றவருக்கு அவருடைய அனுக்கிரக பலத்தினால் ஒரு சிறு துன்பமும் உண்டாக மாட்டாது என்று தேறுவாள். இப்படி வருத்தமும் தேற்றமுமாக வெகு நேரம் கழிந்த பிறகு ஸூர்யன் அஸ்தமிக்கப் பல நாழிகைகள் இருக்கும் போதே ஆச்ரமத்தின் எல்லையிற் சென்று மன்னர் பசுவுடன் திரும்பி வருகின்றாரோ என்று பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். காடுகளைத் தாண்டிய பிறகு பசுவிற்குப் பின் வந்து கொண்டிருக்கும் தனது கணவனைத் தூரத்திலேயே கண்டாள். கண்களை இப்படி அப்படிச் செலுத்தாமல் இமை கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பட்டினி யிருந்தவனுக்குப் பாயஸம் போல் அவன் அவளுடைய கண்களுக்கு அவ்வளவு உவகையைத் தந்தான். (19)

20. पुरस्कृता वर्त्मनि पार्थिवेन प्रत्युद्गता पार्थिवधर्मपत्न्या ।
तदन्तरे सा विरराज धेनुर्दिनक्षपामध्यगतेव सन्ध्या ॥

वर्त्मनि = வழியில்	सा धेनुः = அந்தப் பசு
पार्थिवेन = அரசனால்	तदन्तरे = அவ்விருவர் நடுவில்
पुरस्कृता = முன்னிடப்பட்டதாயும்	दिन = பகலுக்கும்
पार्थिवधर्मपत्न्या = அரசனுடைய தர்ம பத்தினியினால்	क्षपा = இரவுக்கும்
प्रत्युद्गता = எதிர் கொள்ளப்பட்டதாயும் இருந்த	मध्यगता = நடுவிலுள்ள
	सन्ध्येव = அந்திபோல்
	विरराज = விளங்கிற்று.

பசுவும் திலீபனும் கொஞ்சம் அருகில் வந்தவுடன் ஸுதக்ஷிணை எதிர் சென்றாள். அந்தி என்பது பகவானுடைய ஓருருவம். ஸந்த்யா வந்தனம் என்பது அந்தியை மூர்த்தியாக உடைய பகவானுடைய வந்தனம் அதாவது அவனைத் தொழுவதே என்பர் பெரியோர். இப்படி ஸந்த்யாஸ்வரூபியான பகவானிடத்தில் எப்படியோ அப்படியே அங்குள்ளோர்க்கு அப்பசுவினிடத்தில் அப்போது பக்தி மேலிட்டிருந்தது என்பது இங்கே வ்யங்க்யப் பொருள். மகாராஜனும் மகா ராணியும் இப்படி நந்தினியை உபசரிப்பதையும் அதை நந்தினி பெறுவதையும் பார்த்த அங்குள்ள யாவரும் இம்மூவரையும் தெய்வப் பிறவியாகவே பாவித்துப் போற்றினார்கள் என்றதாயிற்று. (20)

21. प्रदक्षिणीकृत्य पयस्विनीं तां सुदक्षिणा साक्षतपात्रहस्ता ।
प्रणम्य चानर्च विशालमस्याः शृङ्गान्तरं द्वारमिवार्थसिद्धेः ॥

साक्षतपात्रहस्ता = கையில் அக்ஷத பாத்ரம் வைத்திருந்த
सुदक्षिणा = ஸுதக்ஷிணை
पयस्विनीम् = சிறந்த பாலுள்ள
ताम् = அந்த நந்தினியை
प्रदक्षिणीकृत्य = ப்ரதக்ஷிணம் செய்து
प्रणम्य च = நமஸ்காரமும் செய்து
अस्याः = இப் பசுவினுடைய
शृङ्गान्तरं = கொம்புகளின் மத்யத்தை
अर्थसिद्धेः = உத்தேசம் நிறைவேறுவதற்குரிய
द्वारमिव = த்வாரத்தை (மார்க்கத்தை)ப் போல்
आनर्च = அர்ச்சித்தாள் (பூஜித்தாள்.)

உத்தேசம் நிறைவேறுவதற்குரிய இடம் போன்ற மத்ய ஸ்தலத்தை அர்ச்சித்தாள் என்றும் அந்வயிக்கலாம்.

எதிர் சென்று பார்த்த இடத்திலே ப்ரதக்ஷிணமும் நமஸ்காரமும் செய்து அக்ஷதைகளால் பூஜித்தாள். மஞ்சள் பொடி கலந்து அவ்வர்ண மாக்கப்பட்ட அரிசி அக்ஷதை (தம்) எனப்படுகின்றது. அதை புஷ்பத்தைப் போல் எடுத்துப் போடுவது அர்ச்சனையாகும். नन्दिन्यै नमः, कामधेनुरूपिण्यै नमः, प्रार्थितार्थप्रदायिन्यै नमः என்றிப்படி மந்திரங்களைச் சொல்லி அர்ச்சித்தாள் என்று கொள்ளலாம். (21)

22. वत्सोत्सुकाऽपि स्तिमिता सपर्यां प्रत्यग्रहीत् सेति ननन्दतुस्तौ ।
भक्त्योपपन्नेषु हि तद्विधानां प्रसादचिह्नानि पुरःफलानि ॥

सा = அந்த நந்தினி
वत्सोत्सुकाऽपि = கன்றைப் பற்றி விருப்புற்றதாயினும்
स्तिमिता = அசையாமலிருந்து
सपर्याम् = பூஜையை
प्रत्यग्रहीत् = பெற்றுக் கொண்டது
इति = என்று
तौ = அவ்விருவரும்
ननन्दतुः = ஸந்தோஷித்தார்கள்
भक्त्या = பக்தியோடு
उपपन्नेषु = கூடினவர்கள் (பக்தியுள்ளவர்கள்) விஷயத்தில்
तद्विधानाम् = அந்த நந்தினியைப் போன்றவர்களுடைய
प्रसादचिह्नानि = அனுக்ரகத்தின் அடையாளங்கள்
पुरःफलानि हि = முன் தோன்றும் பலங்களே யன்றோ.

செய்த பூஜையை நந்தினி அசையாமல் நின்று பெற்றுக் கொண்டது. அதனால் இது நமக்கு அநுக்ரஹம் செய்வது நிச்ச

யம் என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தது. ஆனால் அவர்களுக்கு அப்போது உண்டான ஸந்தோஷம் 'இது இப்போது பூஜையைப் பெற்றுக் கொண்ட படியால் நாம் கோரும் காரியம் அவச்யம் கைகூடப் போகின்றது' என்ற எண்ணத்தால் அன்று. பின், செய்த பூஜையை ஏற்றது என்றவிதனாலேயே. இதுவே ஒரு பலமாகக் கருதப்பட்டது. இது ஒரு பலமாகுமோ எனில், பக்தியுள்ளவர்களுக்கு ஆகும். உத்தேசித்த பலம் வேறொன்றிருக்கிறதே எனில், ஆம். இருக்கின்றது. அது பின் உண்டாகும் பலன். உண்டாகப் போகும் அனுக்ரஹத்தின் குறிகளான பூஜாங்கீகாரம் முதலியன முன் உண்டாகும் பலன்கள். பக்தியுள்ளவர்கள் இப்படி எண்ணுவார்கள். உத்தேசித்த பலம் கிடைத்தபோது எவ்வித மகிழ்ச்சி உண்டாகுமோ அவ்வித மகிழ்ச்சியே இப்போது உண்டாயிற்று என்பது இங்கே கருத்து. (22)

23. गुरोः सदारस्य निपीड्य पादौ समाप्य सान्ध्यं च विधिं दिलीपः ।
दोहावसाने पुनरेव दोग्ध्रीं भेजे भुजोच्छिन्नरिपुर्निषण्णाम् ॥

भुजोच्छिन्नरिपुः = புஜபலத்தினால் பகைவரைத் தொலைத்த	समाप्य = முடித்து
दिलीपः = திலீபன்	दोहावसाने = கறந்தபிறகு
सदारस्य = பத்னியுடன் கூடிய	निषण्णाम् = படுத்திருந்த
गुरोः = குருவினுடைய	दोग्ध्रीम् एव = (அந்த) கறக்கும் பசுவையே
पादौ = திருவடிகளை	पुनः = மறுபடியும்
निपीड्य = பிடித்து (வணங்கி)	भेजे = ஸேவித்தான் (பக்தியோடு அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான்)
सान्ध्यम् = ஸந்த்யாகாலத்திற்குறிய	
विधिं च = அனுஷ்டானத்தையும்	

காட்டிலிருந்து வந்தவுடன் அரசன் குருவையும் குரு பத்னியையும் வணங்கி விட்டு ஸந்த்யா வந்தனம் செய்தான். குருவின் கட்டளைப்படி இனி மறுநாள் காலை வரையில் அவன் நந்தினி விஷயமாகச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. ஆயினும் அதிக பக்தி ச்ரத்தைகள் உள்ளவனாதலின் தானாகவே மறுபடியும் பசுவின் அருகில் வந்து அதை உபாஸித்தான். (23)

24. तामन्तिकन्यस्तबलिप्रदीपामन्वास्य गोप्ता गृहिणीसहायः ।
क्रमेण सुप्तामनु संविवेश सुप्तोत्थितां प्रातरनूदतिष्ठत् ॥

गृहिणीसहाय:—பத்னியுடன் கூடிய
गोप्ता—ரக்ஷகன் (திலீபன்)
अन्तिकन्यस्त—அருகே வைக்கப் பட்ட
बलिप्रदीपाम्—நைவேத்ய த்ரவியங் கள் தீபங்கள் இவைகளை யுடைய
ताम्—அந்த நந்தினி பசு (தூங்கா மல் படுத்திருந்த வரையில்)
अन्वास्य = (தானும்) உடனிருந்து
क्रमेण = க்ரமமாக
सुप्तामनु = அது தூங்கின பிறகு
संविवेश = படுத்துக் கொண்டான்.
प्रातः = காலையில்
सुप्तोत्थितामनु = அது தூங்கி எழுந்த வுடன்
उदतिष्ठत् = எழுந்தான்.

பலிப்ரதீபம் உபசாரத்திற்காக வைக்கும் தீபம் என்றும் கொள் ளலாம். க்ரமமாவது அசை போடுவது, கால்களைச் சரியாக வைத் துக் கொள்வது, தூக்க மயக்கம் கொள்வது, தலையைத் தக்கபடி வைத்துக் கொள்வது, என்றிவ்விதமான செயல் வரிசை. அப் பொழுதும் பக்கத்தில் தீபங்கள் இருந்தமையால் ஈ கொசு ஒன்றும் அதைக் கடிக்காமல் பார்த்துக்கொள்ள சவுகரியம் இருந்தது.

அது படுத்துக் கொண்டு விட்டதே. இனி நாம் போகலா மென்று அரச தம்பதிகள் உடனே அதை விட்டுப் போவதில்லை. அது நன்றாய்த் தூங்குகிறது. இனி நாம் செய்ய வேண்டிய உப சாரம் ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகே விலகுவார்கள். ()

25. इत्थं व्रतं धारयतः प्रजार्थं समं महिष्या महनीयकीर्तेः ।
सप्त व्यतीयुस्त्रिगुणानि तस्य दिनानि दीनोद्धरणोचितस्य ॥

इत्थम् = இப்படி
महिष्या समम् = பட்டமஹிஷி யுடன்
प्रजार्थम् = புத்திரன் உண்டாவதற் காக
व्रतम् = வ்ரதத்தை
धारयतः = அனுஷ்டிக்கிற,
महनीयकीर्तेः = கொண்டாடத் தக்க புகழையுடைய,
दीनोद्धरणोचितस्य = ஏழைகளைத் தூக்கி விடுவதற்கேற்ற
तस्य = அவ்வரசனுக்கு
त्रिगुणानि = மூன்றுமடங்கான
सप्त = ஏழு (இருபத்தொரு)
दिनानि = நாட்கள்
व्यतीयुः = கழிந்தன.

அரசர்களுக்குரிய ஸுகம் சிறிதுமில்லாமலும் தூங்கும் காலந் தவிர மற்றப் பொழுதெல்லாம் பசுவுடன் இருந்தும் அனுஷ்டிக்க வேண்டிய இக்கடின வ்ரதத்தை திலீப மஹா ராஜன் தனது

பட்ட மகிஷியுடன் அனுஷ்டித்தான். மற்ருேர் அரசன் இப்படிச் செய்வானு? இவனே இப்படிச் செய்தான். இப்புகழ் மற்ருெருவருக்குக் கிடைப்பதரிது- இதை உலகமே கொண்டாடியது. புத்திரன் உண்டாவதற்காயினும் இவ்வளவு கடினமான வ்ரதத்தை என் திலீபன் மேற்கொண்டான்? ஏழைகளுக்குத் தக்க உதவி புரிந்து கைதூக்கி விடுவது தனது கடமையென உணர்ந்தவன் இவன். தான் பிறந்ததே அதற்காக என்ற கருத்துள்ளவன். தனக்குப் புதல்வனொருவன் தோன்ருவிடில் தானுதித்த ஸூர்ய குலமே ஏழையாய்விடும். அதனுல் ராஜ்ய பாரத்தை நடத்தத்தக்க ஒருவன் இல்லாமல் உலகமே ஏழையாய்விடும், என்று இவன் பயந்தான். இந்நிலை வராது தடுப்பதற்காகவே இவ்வளவு கடினமான வ்ர்தத்தத்தை இவன் மேற்கொண்டான். (25)

26. अन्येद्युरात्मानुचरस्य भावं जिज्ञासमाना मुनिहोमधेनुः ।
गङ्गाप्रपातान्तविरूढशष्पं गौरीगुरोर्गह्वरमाविवेश ॥

अन्येद्युः = மறு நாள்
आत्मानुचरस्य = தனக்குப் பணிவிடை செய்கின்ற திலீபனுடைய
भावम् = கருத்தை (தன் விஷயத்தில் அவனுக்குள்ள பக்தியை)
जिज्ञासमाना = அறிய விரும்பிய
मुनिहोमधेनुः = மஹர்ஷியின் ஹோமத்திற்காக விருக்கும் பசு (நந்தினி)
गङ्गा = கங்கா நதியின்
प्रपात = வீழ்ச்சியினுடைய
अन्त = ஓரத்தில்
विरूढ = செழிப்பாய் முளைத்திருக்கின்ற
शष्पम् = இளம் புல்லையுடைய,
गौरीगुरो = பார்வதியின் தகப்பனை ஹிமவத்கிரியின்
गह्वरम् = குகையில்
आविवेश = நுழைந்தது.

மறுநாள் திலீபனுடைய பக்தியைப் பரீக்ஷிக்க விரும்பிய நந்தினி ஜலமும் செழித்து வளர்ந்த புல்லுமுள்ள இடத்திற்குப் போவதுபோல் போய் நீர் குடிப்பதாகவும் புல் மேய்வதாகவும் காட்டி அருகிலிருந்த குஹைக்குள் சென்றுவிட்டது. (26)

27. सा दुष्प्रधर्षा मनसाऽपि हिंस्रैरित्यद्रिशोभाप्रहितेक्षणेन ।
अलक्षिताभ्युत्पतनो नृपेण प्रसह्य सिंहः किल तां चकर्ष ॥

सा = அந்த நந்தினி
हिंस्रैः = (சிங்கம் புலி முதலிய) துஷ்டப் பிராணிகளால்
मनसाऽपि = மனத்தினுலும்
दुष्प्रधर्षा = வெல்ல முடியாதது,
इति = என்று (எண்ணி)

अद्रिशोभा = மலையின் அழகில்
प्रहितेक्षणेन = கண் செலுத்திய
नृपेण = அரசனால்
अलक्षित = காணப்படாத
अभ्युत्पतन: = பாய்ச்சலை உடைய (அரசனுக்குத் தெரியாமலே நந்தினியின் மேல் பாய்ந்த)

सिंह: = ஒரு சிங்கம்
ताम् = அந்த நந்தினியை
प्रसह्य = பலாத்காரமாய்
चकर्ष किल = இழுத் த தா ம்(இழுத்துப் பிடித்துக் கொண்டதாம்.)

"நந்தினி குகைக்குள் சென்றதே. அங்கு சிங்கம் புலி முதலிய கொடிய பிராணிகள் இருந்து இதை ஹிம்ஸித்தால் என்ன செய்வது" என்கிற அச்சம் அவனுக்கு இல்லை. நந்தினியின் பெருமை இவனுக்கு நன்குய்த் தெரியும். எந்தக் கொடிய ஜந்துவும் இதற்குத் தீங்கு செய்ய முடியாது என்ற த்ருடமான எண்ணமுள்ளவனயிருந்தான். ஆகையால் நந்தினி குகைக்குள் சென்றதை அறிந்தும் மலை, நீர் வீழ்ச்சி, உயர்ந்த பெரிய மரங்கள் இவை முதலியவற்றின் இனிய தோற்றத்தில் வைத்த கண்ணை வாங்காமலேயிருந்தான். அப்போது இவனுக்குத் தெரியாமலே ஒரு சிங்கம் நந்தினியின்மேல் பாய்ந்து அதைப் பிடித்துக் கொண்டது.

किल (ஆம்) என்பது இது உண்மையல்ல என்று காட்டுகின்றது. (27)

28. तदीयमाक्रन्दितमार्तसाधोर्गुहानिबद्धप्रतिशब्ददीर्घम् ।
रश्मिष्विवादाय नगेन्द्रसक्तां निवर्तयामास नृपस्य दृष्टिम् ॥

गुहानिबद्ध = குகையில் உண்டாக்கப்பட்ட
प्रतिशब्द = ப்ரதித்வனி(எதிரொலி)-யினால்
दीर्घम् = நீண்ட
तदीयम् = அந்த நந்தினியினுடைய-தான
आक्रन्दितम् = கதறல்
आर्तसाधो: = ஆபத்திலுள்ளவர்களுக்கு வேண்டியதைச் செய்யுமவனை

नृपस्य = அரசனுடைய
नगेन्द्रसक्ताम् = உத்தமமான (அப்) பர்வதத்தில் பதிந்திருந்த
दृष्टिम् = பார்வையை
रश्मिषु = கடிவாளத்தில்
आदाय इव = பிடித்து (த்திருப்புவது) போல்
निवर्तयामास = திருப்பிற்று.

யார் துன்புற்றாலும் அதை உடனே தவிர்க்கும் சீலமுள்ளவன் இவன். நந்தினி கதறும் த்வனியைக் கேட்ட மாத்திரத்திலே அதற்கு ஏதோ துன்பம் நேர்ந்ததென்பதை உணர்ந்தான். முனிவ

ரின் ஹோமத்திற்காக ஏற்பட்ட பசு அது. அதைக் காப்பதற்காகவே தான் அதனுடன் வந்திருக்கின்றான். அதன் தொனி பெரிதாகக் கேட்கின்றது. கதறும் தொனி எவ்வளவுக் கெவ்வளவு பெரிதாக விருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அதற்குண்டாயிருக்கும் துன்பம் பெரிதென்று விளங்குகின்றது. ஆகவே உத்தமமான மலையழகில் ஈடுபட்டதாயினும் அவன் கண் ஒரு நொடிப் பொழுதும் தாமதிக்காமல் அந்த க்ஷணமே குகையின் கண் சென்றது.

குதிரை ஓடிக் கொண்டிருக்கும். அதை ஓட்டுபவன் காரணம் நேர்ந்து கடிவாளத்தைப் பிடித்து இழுக்கும்போது உடனே திரும்ப வேண்டியது தவிர தன்னிச்சையாய் ஒன்றை யோசிப்பது செய்வது என்பது கிடையாது. அவ்விதமே இங்கு. இவன் கண் ஐயோ, இவ்வளவு ஆச்சரியமான காட்சியைப் பாராது மீள்கின்றோமே என்று கொஞ்சம் தயங்கிற்று என்பதில்லை. தொனி கேட்ட அந்நொடியே திரும்பிற்று. (28)

29. स पाटलायां गवि तस्थिवांसं धनुर्धरः केसरिणं ददर्श।
अधित्यकायामिव धातुमय्यां लोध्रद्रुमं सानुमतः प्रफुल्लम्॥

धनुर्धरः = வில் ஏந்திய
सः = அவ்வரசன்
पाटलायां = சிவந்த
गवि = பசுவின்மேல்
तस्थिवांसम् = இருந்த
केसरिणम् = சிங்கத்தை
सानुमतः = மலையின்
धातुमय्याम् = காவிக்கல் மயமான
अधित्यकायाम् = மேல் ப்ரதேசத்தில்
प्रफुल्लम् = மலர்ந்த
लोध्रद्रुमम् इव = வெள்ள லோத்த மரத்தைப் போல்
ददर्श = பார்த்தான்.

திரும்பிப் பார்த்தவுடன் சிவப்பான நந்தினியின் முதுகில் வெள்ளை வெளேரென்று ஒரு பெரும் சிங்கம் உட்கார்ந்திருப்பது இவன் கண்ணுக்குப் புலப்பட்டது.

ஸமயத்தில் கொஞ்சமும் தாமதமின்றி உபயோகிப்பதற்காக இவன் காட்டில் ஸஞ்சரிக்கும் போதெல்லாம் வில்லை நாணேற்றிக் கையில் தரித்துக் கொண்டிருந்தான். அதை உபயோகிக்க வேண்டிய ஸமயம் இப்பொழுது வந்துவிட்டதென்று எண்ணினான். (29)

30. ततो मृगेन्द्रस्य मृगेन्द्रगामी वधाय वध्यस्य शरं शरण्यः।
जाताभिषङ्गो नृपतिर्निषङ्गादुद्धर्तुमैच्छत्प्रसभोद्धृतारिः॥

ततः = அதன் பிறகு
मृगेन्द्रगामी = ஸிம்மம் போல் நடக்கின்ற,
शरण्यः = (துன்புற்றவர்களைக்) காப்பதில் கைதேர்ந்த,
प्रसभोद्धृतारिः = வலுவில் போய்ச் சத்ருக்களை ஒழிக்கின்ற
नृपतिः = அரசன்
जाताभिषङ्गः = அவமானமுற்றவனாய்
वध्यस्य = கொலை செய்து தண்டிக்க வேண்டிய
मृगेन्द्रस्य = ஸிம்மத்தின்
वधाय = வதத்திற்காக
निषङ्गात् = அம்பறாத் தூணியிலிருந்து
शरम् = அம்பை
उद्धर्तुम् = எடுக்க
ऐच्छत् = விரும்பினான்.

जाताभिषङ्गः —கோபமுற்றவனாய் என்று சிலர். கவலை கொண்டவனாய் என்பது மிகப் பொருத்தமுள்ளது.

சிங்கத்தைப் பார்த்தவுடன், அரசனும் நந்தினியைக் காப்பதற்காகவே அதைப் பின் தொடர்ந்து வந்தவனுமிருக்கின்ற தனக்கு நந்தினியைக் காப்பாற்றுவதும் அதற்காக ஸிம்மத்தைக் கொல்வதும் கடமை என்று எண்ணினான். தீங்கு இழைக்கக் கூடிய பகைவர் இருப்பதாகத் தெரிந்தால் அவர்கள் தீங்கு இழைப்பதற்கு முன்னமே அவர்கள் இருக்கும் இடத்தைத் தேடிப் பிடித்து அவர்களை ஒழிப்பவன் இப்போது எதிரிலேயே நந்தினியைக் கொல்ல வந்த ஸிம்மத்தையா விடுவான்? ஸிம்மத்தைக் கொல்வதற்காகக் குகையின் அருகில் சென்றான். இயற்கையாயுள்ள நடையின் காம்பீர்யமும் அழகும் அப்போதும் இருந்தன. ஸிம்மமாயிற்றே, என்ன செய்துவிடுமோ, என்ற பயமோ சங்கையோ இருந்தாலன்றோ நடையில் தடுமாற்றமுண்டாகும். பரமதீரன் இவன். ஆகையால் கம்பீரமாகவே சென்றான். (30)

31. वामेतरस्तस्य करः प्रहर्तुर्नखप्रभाभू(रू)षितकङ्कपत्रे ।
सक्ताङ्गुलिः सायकपुङ्ख एव चित्रार्पितारम्भ इवावतस्थे ॥

प्रहर्तुः = கொல்லப் புகுந்த
तस्य = அவனுடைய
वामेतरः करः = வலக்கை
नखप्रभाभू(रू)षित = நகங்களின் ஒளியினால் அலங்கரிக்க (பூச)ப் பெற்ற
कङ्कपत्रे = கழுகின் இறகுகளையுடைய
सायकपुङ्ख एव = அம்பின் அடிபாகத்திலேயே
सक्ताङ्गुलिः (सन्) = ஸம்பந்தப்பட்ட (ஒட்டிக் கொண்ட) விரல்

களை யுடையதாய்-
चित्र = சித்திரத்தில் [கொண்டு)
अर्पित = எழுதப் பெற்ற
आरम्भ इव = செய்கையை உடையதுபோல்
अवतस्थे = நின்றுவிட்டது.

ஸிம்ஹத்தைக் கொல்வதற்காக அம்பை எடுக்க அம்பராத் தூணியிலிருந்த அதன் அடியில் வலதுகையைப் பின் பக்கமாக மடக்கி வைத்தான். அம்பின் அடியைத் தொட்டுக் கொண்டிருக்கிற விரல்களுடன் கை அப்படியே ஸ்தம்பித்து விட்டது. மடக்கின கை அப்படியே நின்று விட்டது. எடுக்க முடியவில்லை.

வில்லிலிருந்து கிளம்பும் அம்புகள் வேகமாய்ச் செல்வதற்காக அவற்றில் பக்ஷிகளின் இறகுகளைக் கட்டுவது வழக்கம். உத்தம புருஷனை அரசனது செந்தாமரை போன்ற கையிலுள்ள நகங்களின் காந்தி அம்பில் கட்டப் பெற்ற இறகுகளின் மேல் பட்டுக் கொண்டிருக்கக் கையும் விரல்களும் அசையாமல் அப்படியே ஸ்திரமாய் இருந்தன. இவ்வழகைக் கவி இங்கு அனுபவித்தார். இவ்வளவு லக்ஷணம் பொருந்திய மஹா புருஷனை இவ்வரசனும் இப்போது அவமானம் அடைய வேண்டியதாயிற்று. (31)

32. बाहुप्रतिष्टम्भविवृद्धमन्युरभ्यर्णमागस्कृतमस्पृशद्भिः ।
राजा स्वतेजोभिरदह्यतान्तर्भोगीव मन्त्रौषधिरुद्धवीर्यः ॥

बाहु = புஜம்
प्रतिष्टम्भ = தடைபட்டதினால்
विवृद्ध = மிகுந்த
मन्युः = கோபத்தையுடைய
राजा = அரசன்
अभ्यर्णम् = ஸமீபத்திலேயே(அதவா ஸமீபத்திலேயே இருக்கின்ற)
आगस्कृतम् = குற்றம் செய்கின்ற அதை (சிங்கத்தை)
अस्पृशद्भिः = தொடாமல் (தண்டிக்காமல்) இருக்கின்ற
स्वतेजोभिः = தன் தேஜஸ்ஸுக்களால் (தனது பராக்ரமங்களால்)
मन्त्रौषधि = மந்திரங்களாலும் ஔஷதிகளாலும்
रुद्धवीर्यः = ஒடுக்கப்பட்ட வீர்யத்தையுடைய
भोगीव = ஸர்ப்பம் போல்
अन्तः = உள்ளுக்குள்ளே
अदह्यत = எரிக்கப்பட்டான்.

தன் புஜம் ஸ்தம்பித்துப் போனதினால் உண்டான கோபம் ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில் இதுவரையில் எவ்விடத்திலும் எக்காலத்திலும் தடைபடாத தனது வீர்யம் பயன் படாமல் போனதி

ஞலுண்டான வருத்தம் ஸஹிக்க முடியாததாயிருந்தது. அதிலும் குற்றம் செய்கின்ற, அக் குற்றத்தையும் தனக் கெதிரிலேயே செய்கின்ற, ஒரு பிராணியினிடத்தில் தான் ஒன்றும் செய்ய முடியாமல் போனதைப் பற்றி உண்டான வருத்தமும் தாபமும் அளவிட முடியாதவை.

தேஜஸ்ஸு தஹிக்கும் (கொளுத்தும்) ஸ்வபாவ முள்ளது. அது இங்கே வெளியில் அபராதியை தஹிக்க முடியவில்லை. ஆகவே தனது இருப்பிடத்தையே உள்ளுக்குள் தஹித்தது.

தேஜஸ்ஸு என்று ஒருமையே அமையுமாயினும் இங்கே வருத்தத்தின் மிகுதியைக் காட்டுவதற்காகப் பன்மையால் கூறப்பட்டது.

கட்டப்பட்ட ஸர்ப்பத்தின் நிலை நமக்குக் காணக்கிடைக்கும். இதிலிருந்து திலீபனுக்கு அப்போது இருந்த நிலையை நாம் ஊஹித்தறியலாம். (32)

33. तमार्यगृह्यं निगृहीतधेनुर्मनुष्यवाचा मनुवंशकेतुम् ।
विस्माय(प)यन् विस्मितमात्मवृत्तौ सिंहोरुसत्त्वं निजगाद सिंहः ॥

निगृहीतधेनुः = பசுவைப் பிடித்துக் கொண்ட

सिंहः = (அந்த) சிங்கம்

आर्यगृह्यम् = ஸத்துக்களால் 'இவன் நம்மைச் சேர்ந்தவன்' என்று கருதப்பட்ட

मनुवंशकेतुम् = மனுவின் குலத்திற்குக் கொடியான (த்வஜம் அதாவது கொடிபோல் இருந்த),

आत्मवृत्तौ = தனக்குண்டான நிகழ்ச்சியை (ஸம்பவத்தைப் பற்றி

विस्मितम् = ஆச்சர்யமடைந்த,

सिंहोरुसत्त्वम् = ஸிம்மம்போல் வெகு வலிமையுள்ள

तम् = அவனை (அவ்வரசனை)

मनुष्यवाचा = மனிதர் பேசும் பேச்சினால்

विस्माय(प)यन् = (மேலும்) ஆச்சரியப்படும்படி செய்து கொண்டு

निजगाद = சொல்லிற்று.

தனது குலமென்ன, பராக்ரம மென்ன, பெரியோர்கள் கொண்டாடும்படி லோக பரிபாலனம் செய்து வருகின்ற நிலையென்ன, இதற்கெல்லாம் தக்கபடித் தான் அப்பொழுது செய்ய வேண்டிய கடமையைச் செய்ய முடியாமல் இருப்பது ஏன் என்று தனக்குண்டான நிலையைப் பற்றி அரசன் ஆச்சரியப் பட்டுக்

கொண்டிருந்தான். எதிரில் பசுவும் சிங்கமுமே உள்ளது. மனிதர் ஒருவருமில்லை. ஒருவரோடும் பேசுவதற்கில்லை. எப்பொழுதும் நிகழாத ஒரு நிகழ்ச்சி தனக்குண்டானதின் காரணம் தெரியாமையால் வியப்புற்று நின்றிருந்தான்.

சிங்கம் மாம்ஸ போஜியான ஒரு மிருகம். அது நந்தினியைப் பிடித்துக் கொண்டது. இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால், அது மனிதர் பேசுவது போல் பேச ஆரம்பித்தது. இதில் அரசனுக்கு வியப்பு உண்டாயிற்று. இதுவரையில் தன் விஷயத்தில் மாத்திரமே ஆச்சரிய மடைந்திருந்த அவன் இப்போது ஸிம்மத்தின் விஷயத்திலும் ஆச்சரியப்பட்டான். "இதென்ன; ஸிம்மம் மனிதர் போல் பேசுகின்றதே. நமக்குப் புரியாமலே ஏதோ விசேஷம் நடக்கின்றதே" என்று.

அன்றியும் தனக்கு ஆஹாரமான நந்தினியைப் பிடித்துக் கொண்ட போதிலும் அந்தச் சிங்கம் அதைக் காப்பாற்றுவதற்கு முயன்ற அந்தத் திலீபனை அவமதிக்காமல், 'உன்னையும் பிடித்துக் கொன்று தின்றுவிடுவேன்' என்று பயமுறுத்தாமல் அவனது குலப் பெருமையையும் குணங்களின் சீர்மையையும் பார்த்து மனிதர்களுக்குரிய பேச்சினால் பணிவுடன் பேசிற்று. இதனாலும் அரசன் ஆச்சரியப்பட்டான். (33)

34. अलं महीपाल तव श्रमेण प्रयुक्तमप्यस्त्रमितो वृथा स्यात् ।
न पादपोन्मूलनशक्ति रंहः शिलोच्चये मूर्च्छति मारुतस्य ॥

(हे) महीपाल = (ஓ) அரசனே
तव श्रमेण अलम् = நீ சிரமப்பட்டது போதும் (நீ சிரமப்பட வேண்டாம்).
प्रयुक्तमपि अस्त्रम् = (நீ) அம்பு போட்டாலும் (அது)
इतः = இங்கு (என்னிடத்தில்)
वृथा स्यात् = வீணாகும்.
पादपोन्मूलनशक्ति = மரத்தைப் பெயர்க்கும் ஆற்றலுடைய
मारुतस्य रंहः = காற்றின் வேகம்
शिलोच्चये = மலையினிடத்தில்
न मूर्च्छति = ஓங்காது.

உலகினில் தனக்கு நிகரில்லாத புஜபலம் வாய்ந்த அவ்வரசன் தனது பலம் வீணானதைப்பற்றி மிக வருத்தப்பட்டான். அவ்வருத்தத்தைப் போக்கி அவனைத் தேற்றப் புகுந்த சிங்கம் அவனது பலத்தைக் காட்டிலும் அதிகமான பலம் தன்னிடத்தில் இருக்கின்ற

தாகையால் அவன் வருத்தப்பட வேண்டியதற்குக் காரணமில்லை என்கிறது.

வ்ருக்ஷங்களை எல்லாம் வேருடன் பெயர்த்துத்தள்ளக் கூடிய பலம் வாயுவினிடத்தில் இருப்பினும் அது மலைகள் விஷயத்தில் ஒன்றும் செய்ய முடிகிறதில்லை. விருக்ஷத்தைக் காட்டிலும் மலைக்கு எவ்வளவு வன்மையோ அவ்வளவு வன்மை அவ்வரசனைக் காட்டிலும் தனக்கு இருக்கிறதாக அது அறிவிக்கின்றது. (34)

35. कैलासगौरं वृषमारुरुक्षोः पादार्पणानुग्रहपूतपृष्ठम् ।
अवेहि मां किंकरमष्टमूर्तेः कुम्भोदरं नाम निकुम्भमित्रम् ॥

कैलासगौरम् = கைலாஸ பர்வதம் போல் வெளுப்பான
वृषम् = விருஷபத்தை, அதாவது நந்தியின்மேல்
आरुरुक्षोः = ஏற விரும்பும்போது
पादार्पण = காலை வைப்பதாகிற
अनुग्रह = (சிவபெருமானுடைய) அருளினுல்
पूत = பரிசுத்தமான
पृष्ठम् = முதுகை உடைய
निकुम्भमित्रम् = நிகும்பனுடைய தோழன்
कुम्भोदरं नाम = கும்போதரனென்று பேருடையவன்,
अष्टमूर्तेः = சிவபெருமானுடைய
किंकरम् = ஸேவகன், என்று
मां = என்னை
अवेहि = அறிவாயாக.

முன் பொதுவாகத் தனக்கு மிகுந்த பல முண்டென்பதைக் கூறி இப்பொழுது அதை விவரிக்கின்றது. பகவானுடைய அனுக்ரஹத்தினுல் இப்பெருமை தனக்கு உண்டென்று காண்பிக்கின்றது. பகவானுடைய அனுக்ரஹத்தினுல் இவ்வித பலம் வாய்ந்தவர் பலர் இருக்கின்றனர் என்று காட்டுவதற்காக தன்னை நிகும்பனுடைய தோழன் என்கிறது. தமக்குண்டான மிகுந்த பலத்திற்குத் தகுந்த ஆகாரம் புசிக்க வேண்டுமென்று காட்டுவதற்காக கும்போதரன் (பானை போன்ற வயிறுடையவன்) என்று தனது பெயரைக் குறிக்கின்றது. இப்படி பகவானுலுண்டான என் பெருமையை அறியாமையினுல் நீ இவ்வாறு பரிதபிக்கின்றாய். அதை அறிந்தால் அதற்கு இடமில்லை என்று உணர்த்துவதற்காக 'அறிவாயாக' என்று கூறுகின்றது. முன் 'महीपाल' (பூமியாளுமவனே) என்றும் இங்கு 'मां किंकरमष्टमूर्तेः' (ப்ருதிவீ முதலிய ஐந்து பூதங்கள், ஸூர்யன், சந்திரன் யஜ்ஞானுஷ்டானம் செய்பவன் என்ற இந்த) எட்டு மூர்த்திகளை உடைய பகவானுடைய கிங்கரன் நான், என்றும் கூறியதால்,

பூலோகத்திலுள்ள எல்லா அரசர்களைக் காட்டிலும் மேன்மை பெற்றிருந்த போதிலும், தெய்வத் தன்மை வாய்ந்தவர்களைக் காட்டிலும் நீ சிறியவனே என்று ஸூசனம் செய்யப்பட்டது. (35)

36. अमुं पुरः पश्यसि देवदारुं पुत्रीकृतोऽसौ वृषभध्वजेन ।
यो हेमकुम्भस्तननिस्सृतानां स्कन्दस्य मातुः पयसां रसज्ञः ॥

पुरः = முன்னே இருக்கிற
अमुं देवदारुम् = இந்த தேவதாரு மரத்தை
पश्यसि = பார்க்கின்றாயன்றோ.
असौ = இது
वृषभध्वजेन = பரமேச்வரனால்
पुत्रीकृतः = தனது புத்திரனாகக் கருதப்பட்டிருக்கின்றது.
यः = (யாதொன்றான) இந்த மரம்
स्कन्दस्य मातुः = பார்வதியினுடைய
हेमकुम्भस्तननिःसृतानाम् = பொற்குடமாகிற கொங்கையினின்றும் பெருகிய
पयसाम् = நீரின் (பாலின்)
रसज्ञः = சுவையை அறிந்ததொன்று.

'பலமதிகமானால் நான் மேய்க்கும் கோவை ஹிம்ஸித்து என்னை அவமதிக்க வேண்டுமோ? என்ற கேள்விக்கு விடை இது முதல் கூறுகின்றது. எதிரிலே இருக்கும் தேவதாரு வ்ருக்ஷத்தைப் பார் என்று முதலில் அவன் அசைவற்று நின்ற நிலையை மாற்றி அவன் கவனத்தை அம்மரத்தின் மேல் செலுத்திற்று. அவன் அதைக் கண்டான். பிறகு அதன் விசேஷத்தை ஒரு சிறு வாக்கியத்தினால் காட்டிற்று. ஈச்வரன் இங்கு மிகுந்த ஆதரம் வைத்துள்ளான் என்று. அது மாத்திரம் அன்று, பார்வதி தேவியும் தானே குடமெடுத்து ஜலம் வார்த்த, தேவிக்கு அவ்வளவு ப்ரியமான, மரம் இது என்று கூறுகின்றது.

பார்வதீபரமேச்வரர்களுக்கு ஸ்கந்தன் எப்படியோ அப்படியே இம்மரமும் பிரியம் எனப்படுகின்றது. (36)

37. कण्डूयमानेन कटं कदाचिद्वन्यद्विपेनोन्मथिता त्वगस्य ।
अथैनमद्रेस्तनया शुशोच सेनान्यमालीढमिवासुरास्त्रैः ॥

कदाचित् = ஒருகால்
वन्यद्विपेन = ஒரு காட்டு யானை
कटं = தனது கன்னத்தை
कण्डूयमानेन = அதில் சொறிந்து
अस्य त्वक् = இதன் பட்டையை
उन्मथिता = பெயர்த்துவிட்டது.
अथ = அதனால்
अद्रेस्तनया = பார்வதி
सेनान्यम् = தனது புத்திரனை கந்தன் (ஸுப்ரம்மணியன்)

असुराश्रैः = அஸுரர்களுடைய பாணங்களினுல்	एनम् = இதைக் குறித்து
आलीढमिव = அடிபட்டதுபோல்	शुशोच = வருந்தினுள்.

முன் கொடுத்த கந்தனது உபமை இங்கும் கொடுக்கப்படுகின்றது. மரம் க்ஷேமமா யிருக்கும் பொழுது தனது சொந்தப் புத்திரன் க்ஷேமமா யிருப்பது போல் அளவு கடந்த ஸந்தோஷமும், அதற்கு ஸ்வல்பத் தீங்கு நேரிடினும் தனது குமாரனுக்கு மிகப் பெரிய தீங்கு நேர்ந்தது போல் வருத்தமும், தேவிக்கு உண்டாயிற்றென்று கருத்து. (37)

38. तदा प्रभृत्येव वनद्विपानां त्रासार्थमस्मिन्नहमद्रिकुक्षौ ।
व्यापारितः शूलभृता विधाय सिंहत्वमङ्कागतसत्त्ववृत्ति ॥

तदा प्रभृत्येव = அது முதற் கொண்டே	अङ्कागतसत्त्ववृत्ति = உன்னிடத்தில் வரும் பிராணிகளை புசித்து ஜீவிப்பாய்" என்று
वनद्विपानाम् = காட்டு யானைகள்	विधाय = கட்டளையிட்டு
त्रासार्थम् = பயந்து இங்கு வராமலிருப்பதற்காக	शूलभृता = பரமசிவனுல்
अस्मिन् अद्रिकुक्षौ = பர்வதத்தின் இந் நடுப்ரதேசத்தில்	अहम् = நான்
सिंहत्वम् = " சிங்கமாயிருந்து	व्यापारितः = நியமிக்கப்பட்டிருக்கிறேன்.

தேவிக்கு மிகுந்த வருத்த முண்டாயிற் றென்று முன் கூறிற்று. தனது புத்திரன் போல் அவரே பாவித்திருப்பதனுல் அவருக்கும் அதில் வருத்தமுண்டு என்பதில் ஐயமில்லை. ஆயினும் தேவியின்வருத்தமும் கூடச் சேர்ந்து அதை ரக்ஷிப்பதற்குரிய ஏற்பாட்டைத் தீவிரமாகச் செய்யும்படி அவரைத் தூண்டிற்று. அதனுல் அவர் மிகவும் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார். (இது அவரை शूलभृत्—சூலபாணி—என்று குறித்ததினுல் ஸூசிப்பிக்கப் படுகின்றது.) அவருடைய கட்டளையாவது—" யானைகள் பயப்படுவதற்காக நீ சிங்க உருவத்தில் இருக்க வேண்டும். நிர்மானுஷ்யமான காட்டின் நடுவில் இருந்தாலும், நீ இதை விட்டு ஒரு க்ஷணமும் போகக்கூடாது. ஆகாரம் தேட வேண்டாமோ வெனில் அதற்காகவும் நீ போகக் கூடாது. தானுக உன்னிடம் வந்து சேரும் ப்ராணி தான் உனக்கு ஆஹாரம்" என்பது. (38)

39. तस्यालमेषा क्षुधितस्य तृप्त्यै प्रदिष्टकाला परमेश्वरेण ।
उपस्थिता शोणितपारणा मे सुरद्विषश्चान्द्रमसी सुधेव ॥

तस्य क्षुधितस्य मे = அப்படி நியமிக்கப்பட்டு இங்குப் பசித்திருக்கும் எனக்கு
परमेश्वरेण प्रदिष्टकाला = ஈச்வரன் கட்டளையிட்ட காலத்தில்
उपस्थिता = வந்திருக்கின்ற
एषा शोणितपारणा = ரக்தத்தைஉறிந்து செய்யக் கூடிய இந்தப் பாரணையானது
सुरद्विषः = ராஹுவுக்கு
चान्द्रमसी सुधेव = சந்திரனுடைய அமிர்தம்போல்
तृप्त्यै अलम् = திருப்தியைக் கொடுக்கும்.

முன் நடந்ததைக் கூறி இப்பொழுது தான் நந்தினியைப் பிடித்துக் கொண்டதின் காரணத்தை விளக்கு கின்றது. நீண்ட காலமாக என்னிடத்தில் தானுக ஒரு பிராணியும் வாராமையால் நான் பசித்திருக்க வேண்டியது பகவானின் கட்டளை என்று பொறுத்திருந்தேன். இப்பொழுது இப்பசு என்னிடத்தில் வந்தமையால் இதை நான் புசிக்க வேண்டு மென்று பகவானுடைய கட்டளை என்பது ஸ்பஷ்ட மாகின்றது. ஆகையால் நான் இதைப் பிடித்துக் கொண்டேன் என்பது கருத்து.

கும்போதரன் தானே தன்னை ராஹுவுக்குச் சமானமாகவும் நந்தினியைச் சந்திராமிர்தத்திற்குச் சமானமாகவும் கூறியதிலிருந்து தான் செய்வது அஸுர கார்யமே என்று அவனே கருதினன் என்பது ஸ்பஷ்டம். (39)

40. स त्वं निवर्तस्व विहाय लज्जां गुरोर्भवान् दर्शितशिष्यभक्तिः ।
शस्त्रेण रक्ष्यं यदशक्यरक्षं न तद्यशः शस्त्रभृतां क्षिणोति ॥

सः त्वम् = ஆகவே நீ
लज्जां विहाय = வெட்கப்படாமல்
निवर्तस्व = திரும்பிப் போ.
भवान् = நீ
गुरोः दर्शितशिष्यभक्तिः = ஆசார்யனிடத்தில் சிஷ்யனுக்கு இருக்க வேண்டிய பக்தியைக் காண்பித்துவிட்டாய்.
यत् रक्ष्यम् = ரக்ஷிக்க வேண்டிய ஒரு வஸ்துவானது
शस्त्रेण अशक्यरक्षम् = ஆயுதத்தினல் ரக்ஷிக்க முடியாததாகில்
तत् = அது
शस्त्रभृतां यशः = ஆயுதந்தரிப்பவர்களுடைய புகழை
न क्षिणोति = கெடுக்காது.

அரசன் தெரிந்து கொள்ள வேண்டிய எல்லா விஷயத்தையும் இப்படித் தெளிவாகக் கூறி அவனைத் திரும்பிப் போகச் சொல்லு

கின்றது. அவன் திரும்பிப் போவதில் மூன்று காரணங்களினல் இஷ்டப் படாமல் இருக்கலாம். அதற்காக அம்மூன்று விஷயத்திலும் அது அவனுக்கு இவ்வாறு போதனம் செய்கின்றது. வெட்கம் இருக்கலாம். பகவானுடைய கட்டளை என்பதை நினைத்து வெட்கத்தை விடவேண்டும். குருவின் பசுவை இழந்து திரும்பிப் போனல் தனது குருபக்திக்குக் குறைவு வருமே என எண்ணலாம். தன்னல் கூடிய ப்ரயத்தினத்தைச் செய்து விட்டபடியால் அதற்குக் குறைவில்லை. 'இவ்வரசன் தன்னிடத்தில் ஒப்படைத்த ஒரு பிராணியை ரக்ஷிக்கவில்லை' என்ற அபகீர்த்தி உண்டாகலாமென்று சங்கிக்கலாம். ஆயுதத்தைக் கொண்டு ரக்ஷிக்குமவர்கள் ஆயுதங்களுக்கு இலக்கு அல்லாத விஷயங்களில் தாங்கள் சக்தியற்றிருப்பது சகஜமேயாதலின் புகழுக்குக் குறைவில்லை என்று. (40)

41. इति प्रगल्भं पुरुषाधिराजो मृगाधिराजस्य वचो निशम्य।
प्रत्याहतास्त्रो गिरिशप्रभावादात्मन्यवज्ञां शिथिलीचकार ॥

इति = இப்படி
प्रगल्भम् = கம்பீரமான
मृगाधिराजस्य वचः = சிங்கத்தின் சொல்லை
निशम्य = கேட்டு
पुरुषाधिराजः = அரசன்
गिरिशप्रभावात् = ஈச்வரனின் ப்ரபாவத்தினல்
प्रत्याहतास्त्रः = தனது அஸ்திரம் தடைபட்டது (என்பதனல்),
आत्मनि अवज्ञाम् = தன் விஷயத்தில் உண்டான அவமதிப்பை
शिथिलीचकार = தளர்த்தினன் (குறைத்துக்கொண்டான்.)

இது வரையில் தன் நிலையைப் பற்றி மிக வருந்திக் கொண்டிருந்த அரசன் இப்பொழுது கொஞ்சம் தேறுதல் அடைந்தான் என்று கவி இங்குக் கூறுகின்றார். பகவான் தவிர மற்றவர்களிடத்தில் ஒரு பங்கம் தனக்கு ஏற்பட்டிருக்குமாகில் அப்பொழுது வருந்த வேண்டியது யுக்தமாகும். உலகத்தை ஆக்கவும்அளிக்கவும் வல்ல பகவானுடைய மகிமையினல் தனது முயற்சி பங்கப்படுவதைப் பற்றி எவ்வளவு பெரியவனுகிலும் ஒரு மனிதன் வருத்தப் படுவதற்கு இடமில்லை. ஆகிலும் அவன் தனது வருத்தத்தைப் பூர்ணமாக மாற்றிக் கொள்ளவில்லை என்பதைக் காட்டக் கருதிய கவி 'தனது விஷயத்தில் இருந்த அவமதிப்பைத் தளர்த்தினன்' என்கிறார். 'விட்டான்' எனவில்லை.

சிங்கம் வெகு கம்பீரமாகப் பேசியதினால் ‘ அதெல்லாம் ஈச்வராதீனம். எல்லாம் உண்மையே’ என்று அரசன் பூர்ணமாக நம்பினான். (41)

42. प्रत्यब्रवीचैनमिषुप्रयोगे तत्पूर्वभङ्गे वितथप्रयत्नः ।
जडीकृतस्त्र्यम्बकवीक्षणेन वज्रं मुमुक्षन्निव वज्रपाणिः ॥

तत्पूर्वभङ्गे इषुप्रयोगे = அம்பு எய்தது அதுவே முதல்தடவையாக தடைபட்டு
वितथप्रयत्नः = தன் பிரயத்தினம் வீணாகி (அதனால்)
वज्रं मुमुक्षन् = வஜ்ராயுதத்தைப் போடக் கருதிய போது
त्र्यम्बकवीक्षणेन = ஈச்வரனுடைய பார்வையினால்
जडीकृतः = அசைவற்றவனாகச் செய்யப்பட்ட
वज्रपाणिरिव = வஜ்ராயுதத்தைக்கையிலேந்திய இந்திரன் போலிருந்த
पुरुषाधिराजः = திலீப மகா ராஜன்
एनम् = இந்தச் சிங்கத்திற்கு
प्रत्यब्रवीच = தயங்காமல் உடனே மறுமொழி கூறினான்.

அவன் மறுமொழி கூறினான் என்று இவ்வளவே சொல்ல வேண்டியிருக்க அவனது முயற்சி தடைபட்டு கையில் அம்புடன் அவன் நின்றதையும், ஈச்வரனுடைய பார்வையினால் சக்தி குன்றி நின்ற இந்திரனது உபமானத்தையும், இங்குக் கூறியது அவன் தனக்கேற்பட்ட மனோநிலை சிறிதும் குறையாது அதற்குத் தக்கபடி மறுமொழி கூறினான் என்பதற்காக. (42)

43. संरुद्धचेष्टस्य मृगेन्द्र कामं हास्यं वचस्तद्यदहं विवक्षुः ।
अन्तर्गतं प्राणभृतां हि वेद सर्वं भवान्भावमतोऽभिधास्ये ॥

हे मृगेन्द्र = ஓ சிங்கமே
संरुद्धचेष्टस्य = அசைய முடியாமல் செய்யப்பட்டிருக்கும் போது
यत् अहं विवक्षुः तत् = நான் சொல்ல விரும்பிய
वचः = வார்த்தையானது
कामं हास्यम् = பரிஹஸிக்கக் கூடியதாக விருக்கலாம். (ஆனால்)
प्राणभृतां अन्तर्गतम् = மனிதர்களுடைய ஹ்ருதயத்தில் இருக்கின்ற
सर्वं भावं = எண்ணமெல்லாம்
भवान् वेद हि = உனக்குத் தெரியுமன்றோ.
अतः अभिधास्ये = ஆகையினால் சொல்லுகிறேன். (43)

44. मान्यः स मे स्थावरजङ्गमानां सर्गस्थितिप्रत्यवहारहेतुः ।
गुरोरपीदं धनमाहिताग्नेर्नश्यत्पुरस्तादनुपेक्षणीयम् ॥

स्थावरजङ्गमानाम् = நிற்பன நடப்பன இவற்றின்

सर्गस्थितिप्रत्यवहारहेतुः = ஆக்கம் இருப்பு அழிவு இவற்றைச் செய்யும் (உலகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காரணனுன)

सः = அப்பரமேச்வரனே

मे मान्यः = நான் கௌரவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

पुरस्तात् = என் முன்னே

नश्यत् = நசிக்கின்ற

आहिताग्नेः गुरोः इदं धनमपि = அக்னி வளர்த்து யஜ்ஞாதிகளைச் செய்கின்ற எனது குருவின் இச் செல்வத் (சொத்) தையும்

अनुपेक्षणीयम् = நான் உபேக்ஷிப்பதற்கில்லை (நான் விட்டுப் போக முடியாது).

பரமேச்வரனே கட்டளை இட்டிருந்த போதிலும், அதனாலே தனக்கு ஒரு முயற்சியும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பினும், எவ்விதத்திலும் ஆசாரியன் தன்னிடத்தில் ஒப்படைத்த நந்தினியை விடமுடியாது என்பதான தனது மன உறுதியை அரசன் சிங்கத்தினிடத்தில் தெரிவிக்கின்ருன். கை கால்களைக் கூட அசைக்க முடியாமல் செய்யப் பட்டிருக்கும் அந்நிலையில் அவன் 'நான் நந்தினியை ரக்ஷித்தே தீரவேண்டும்' என்று சொல்வது ஸாமான்யமாக எல்லோருக்கும் 'பரிஹஸிக்கக் கூடியது' என்றே தோன்றும். ஒரு ஊமை 'வாதிகளை வெல்லப் போகிறேன்' என்று எண்ணுவது போல். ஆயினும், இந்தச் சிங்கம் ஈச்வரனுடைய அருள் பெற்றுத் தனது உள்ளத்திலிருக்கும் எண்ணத்தை அறியக் கூடிய நிலையில் இருப்பதால் அரசன் தனக்குள்ள மனவுறுதியை அதனிடத்தில் தக்க பூர்வ பீடிகையுடன் தெரிவிக்கிருன். (44)

45. स त्वं मदीयेन शरीरवृत्तिं देहेन निर्वर्तयितुं प्रसीद ।
दिनावसानोत्सुकबालवत्सा विसृज्यतां धेनुरियं महर्षेः ॥

सः त्वम् = ஈச்வரனுடைய கிங்கரன் என்கிற அப் பெருமை வாய்ந்த நீ

मदीयेन देहेन = எனது சரீரத்தினுல்

शरीरवृत्तिं निर्वर्तयितुम् = உனது பசியை ஆற்றிக் கொள்ள

प्रसीद = அருள்வாய்.

दिनावसानोत्सुकबालवत्सा = ஸாயங்காலத்தில் இன்னும் தாய் வரவில்லையே என்று ஏங்கி நிற்கும் இளங் கன்றை உடைய

महर्षेः इयं धेनुः = மஹர்ஷியினுடைய இப்பசுவை

विसृज्यताम् = விட்டுவிடு.

சிறிதும் சக்தியற்ற நீ இதை ரக்ஷித்தே ஆக வேண்டும் என்ற தீர்மானத்தை எப்படி நிறைவேற்றுவாய் என்ற சங்கை எழு—

"எனது சக்தியினுல் நான் இதைக் காப்பாற்றக் கருதுகின்றே னல்லேன். பின் உனது அருளினுலேயே இதைக் காப்பாற்றத் துணிகின்றேன்" என்கின்ருன். 'உன்னிடத்தில் வரும் பிராணியை புசித்து ஜீவிக்க வேண்டு' மென்பது ஈசனின் கட்டளை. என்னுடைய இந்த சரீரத்தை உனக்கு அர்ப்பணம் செய்கிறேன். இதை நீ புசித்து திருப்தி யடைந்து நந்தினியை விட்டுவிட வேண்டும். இது ஒரு பசு. பசுவைக் கொல்வது நியாயமன்று. மேலும் இது ஒரு மஹர்ஷியின் வேள்விக்கு வேண்டிய ஹவிஸ்ஸைக் கொடுக்கின்றதாகையால் அதைக் கருதி நீ இதை விட்டுவிட வேண்டும். அன்றியும் இதன் இளங் கன்று பொழுது போகப் போக தாயை நினைத்து எப்பொழுது வரப் போகிற தென்று ஏங்கி நிற்கும். அதற்காகவும் இதை நீ விட்டுவிட வேண்டும். இவ்விதம் பலவித காரணங்களை எடுத்துரைத்து உனது அருள் பெற்று இதைக் காப்பாற்றுவ தென்று தீர்மானித் திருக்கிறேன். இது என் உள்ளத்தில் உண்மையாக இருக்கின்றதோர் எண்ணம். அதை அமானுஷ சக்தி வாய்ந்த நீ அறிவாய்" என்று ஸமாதானம் சொல்லுகிருன். (45)

46. अथान्धकारं गिरिगह्वराणां दंष्ट्रामयूखैः शकलानि कुर्वन् ।
भूयः स भूतेश्वरपार्श्ववर्ती किंचिद्विहस्यार्थपतिं बभाषे ॥

अथ = உடனே
स भूतेश्वरपार्श्ववर्ती = ஈச்வரனுடைய அந்தக் கிங்கரன்
गिरिगह्वराणाम् अन्धकारम् = பர்வதத்தின் குகைகளிலுள்ள இருட்டை
दंष्ट्रामयूखैः = தனது கோரைப் பற்களின் பிரகாசத்தினுல்
शकलानि कुर्वन् = பொடிப் பொடியாகச் செய்து கொண்டு
किंचिद्विहस्य = புன்னகை செய்து
अर्थपतिम् = அரசனைக் குறித்து
भूयो बभाषे = மறுபடியும் சொன்னுன்.

அரசன் தனது சரீரத்தை அர்ப்பணம் செய்கிறே னென்று சொன்னது அவன் அரசனு யிருக்கும் நிலைக்கு ஒத்ததன்று என்பது சிங்கத்தின் எண்ணம். ஆகவே அவன் மூடன், என்பதைக்காட்டுவதற்காக அவன் வார்த்தையைக் கேட்ட வுடனே அது சிரித்தது. அப்பொழுதும் அது தான் சிங்க உருவத்துடன் இருப்பதை விளக்கிக் காட்டுவதற்காகத் தனது வாயைத் திறந்து பற்களைக் காட்டியது. அவற்றின் மிகுந்த வெண்மை நிறத்தை ஸ்பஷ்டமாக்குவதற்காகக் கவி அது இருந்த ஒரு குகையில் மாத்திரம் அன்று,

அங்குள்ள எல்லாக் குகைகளிலும் இருட்டு அறவே போயிற்று என்று வர்ணிக்கிறார். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களில் இரண்டாவதான பொருளில் ஊக்கமுள்ளவர்கள் அரசர்கள். இவன் அரசனுதலின் அதைப் பெறுவதற்குரிய விவேகம் இவனுக்கு வேண்டியது என்பதைக் குறிப்பதற்கு இவனை இங்கு 'अर्थपतिः' என்று கூறியது. (46)

47. एकातपत्रं जगतः प्रभुत्वं नवं वयः कान्तमिदं वपुश्च ।
अल्पस्य हेतोर्बहु हातुमिच्छन् विचारमूढः प्रतिभासि मे त्वम् ॥

एकातपत्रं जगतः प्रभुत्वम् = ஒரு குடையின் கீழ் உலகத்தை எல்லாம் ஆளக் கூடிய அரசு உரிமை,
नवं वयः = இளம் வயது,
कान्तं इदं वपुश्च = அழகிய இவ்வுருவம்,
बहु = இவ்வளவையும்
अल्पस्य हेतोः = ஒரு மிகச் சிறிய பொருளுக்காக
हातुमिच्छन् = இழக்க விரும்புகின்ற
त्वम् = நீ
विचारमूढः प्रतिभासि = ஆலோசித்துப் பார்க்கும் போது மூட்டாளாகவே காணப்படுகின்ருய்.

எவ்விதத்திலும் இவனது தீர்மானம் தவருனது என்று காண்பிக்கக் கருதிய சிங்கம் முதலில், நந்தினிக்கும் அவனுடைய மற்ற விஷயங்களுக்கும் உள்ள தாரதம்யத்தைக் காட்டி 'அவற்றை எல்லாம் இழப்பதா? பசு ஒன்றை இழப்பதா? என்பதைக் கவனித்துப்பார்' என்று காட்டுகின்றது. (47)

48. भूतानुकम्पा तव चेदियं गौरेका भवेत्स्वस्तिमती त्वदन्ते ।
जीवन्पुनः शश्वदुपप्लवेभ्यः प्रजाः प्रजानाथ पितेव पासि ॥

इयं तव भूतानुकम्पा चेत् = மிகுந்த ஜீவ காருண்யத்தினுல் நான் இப்படிச் செய்கிறேனெனில் (சொல்லுகிறேன் கேள்)
त्वदन्ते = நீ மரித்தால்
एका गौः = ஒரு பசு
स्वस्तिमती भवेत् = பிழைத்திருக்கும்.
जीवन्पुनः = நீ ஜீவித்திருந்தாலோ
हे प्रजानाथ = உலகிலுள்ள யாவரையும் காப்பாற்றும் அரசனை நீ
प्रजाः = ஸர்வ ஜனங்களேயும்
उपप्लवेभ्यः = ஆபத்துக்களிலிருந்து
पितेव शश्वत् पासि = தகப்பன் போல் எப்பொழுதும் காப்பாற்றுவாய்.

முன் நந்தினிக்கும் இவனுடைய சரீரத்திற்கும் உள்ள விசேஷத்தை எடுத்துக் காட்டிற்று. அதற்கு அவன் "இவ்விசேஷங்

களை யெல்லாம் நான் கவனிப்பவனல்லேன். எந்தப் பிராணியை யும் என் பிராணனைக் கொடுத்தாவது காப்பாற்றுவது எனது வ்ரதம்" என்று மறுமொழி கூறலாமென எண்ணி, அதற்கு இங்கே விடை கூறுகின்றது. ஒரு பசுவினிடத்தில் உள்ள காருண்யம் பெரிதா? உலகத்திலுள்ள ஸர்வ ஜனங்களிடத்திலும் வைக்க வேண்டிய காருண்யம் பெரிதா? என்கிறதை ஆலோசித்துப் பார் என்கிறது. 'இந்த ஒரு பசு' என்றும் அந்வயிக்கலாம். (48)

49. अथैकधेनोरपराधचण्डाद्गुरोः कृशानुप्रतिमाद्बिभेषि ।
शक्योऽस्य मन्युर्भवता विनेतुं गाः कोटिशः स्पर्शयता घटोघ्नीः ॥

अथ = இனி
एकधेनोः = ஒரே பசுவை உடைய,
अपराधचण्डात् = பிறர் தவறும்போது வெகு கோபங் கொள்ளும் ஸ்வபாவமுடைய,
कृशानुप्रतिमात् = நெருப்புப்போல் ஜ்வலிக்கின்ற
गुरोः = குருவினிடத்தில்
बिभेषि = பயப்படுகின்றாயாகில்
घटोघ्नीः गाः = சாலப் பெரும் மடிகளை உடைய (நிரம்பக் கறக்கின்ற) பசுக்களை
कोटिशः स्पर्शयता = கோடி கோடியாகக் கொடுத்து
अस्य मन्युः = அவருடைய கோபத்தை
भवता विनेतुं शक्यः = நீ போக்கலாம்.

நந்தினி நசித்துப் போகிறதே என்று எண்ண வேண்டாமென முதலில் சொல்லிற்று. அவனது ஜீவகாருண்யத்திற்கும் பழுதில்லை என்று பிறகு கூறிற்று. இப்படிப் பசுவைப் பற்றியும் அவனைப் பற்றியும் கூறிய பிறகு ஆசாரியனைப் பற்றியும் சிந்திக்க வேண்டாமென்று இங்கே சொல்லிற்று. ஒரே பசு உள்ளமை கோபத்திற்குக் காரணம். கோபம் வந்தால் உக்ரமாயிருப்பதும் அதைக் குற்றம் செய்தவர் தாங்க முடியாதென்பதும் உபமானத்தினால் காட்டப்படுகின்றது. (49)

50. तद्रक्ष कल्याणपरम्पराणां भोक्तारमूर्जस्वलमात्मदेहम् ।
महीतलस्पर्शनमात्रभिन्नमृद्धं हि राज्यं पदमैन्द्रमाहुः ॥

तत् = ஆகையால்
कल्याणपरम्पराणाम् = குறையாது மேல் மேல் வரும் போகங்களை
भोक्तारम् = அனுபவிக்கக் கூடிய,
ऊर्जस्वलम् = மிகுந்த வலிமை பெற்ற
आत्मदेहम् = உன் சரீரத்தை

रक्ष = காப்பாற்றிக்கொள்.
ऋद्धं राज्यम् = எல்லா வளமும் பொருந்திய அரசு
महीतलस्पर्शनमात्रभिन्नम् = பூமியி லுள்ளது என்ற வேற்றுமை மாத்திரம் உடைய
ऐन्द्रं पदं हि आहुः = இந்திர பதவி என்றன்றோ கூறுகின்றார்கள்.

இப்படி, அவன் தனது சரீரத்தை அர்ப்பணம் செய்யத் தீர்மானித்ததற்கு எது எது காரணமாக இருக்கக் கூடுமோ அதை எல்லாம் எடுத்து அதெல்லாம் தகாதென்று காட்டி மறுபடியு மிங்கு அவனது அரச பதவியைப் பெரிதாகப் பேசி அவனது புத்தி பேதிக்கும் படிச் செய்கின்றது. (50)

51. एतावदुक्त्वा विरते मृगेन्द्रे प्रतिस्वनेनास्य गुहागतेन।
शिलोच्चयोऽपि क्षितिपालमुच्चैः प्रीत्या तमेवार्थमभाषतेव ॥

मृगेन्द्रे = சிங்கம்
एतावदुक्त्वा विरते = இவ்வளவு சொல்லி நின்ற பொழுது
गुहागतेन = குகையில் உண்டான
अस्य प्रतिस्वनेन = அதன் எதிரொலியினால்
शिलोच्चयोऽपि = மலையும்
क्षितिपालम् = அரசனைக் குறித்து
प्रीत्या = ப்ரீதியோடு
तमर्थमेव = அது சொன்னதையே
उच्चैः = உரக்க
अभाषतेव = சொல்லிற்றுப் போலும்.

அரசன் அது மேலும் என்ன சொல்லப் போகிறதோ என்று எதிர் பார்த்தும், நந்தினியின் துரவஸ்தையைப் பார்ப்பதனால் உண்டான வருத்தம் மிகுந்தும் க்ஷண காலம் பதிலுரைக்காமல் நின்றான். அப்பொழுது அவனது காதில் விழுந்த சிங்கத்தின் கம்பீர த்வனியினாலுண்டான எதிரொலிக்குக் கவி இங்கு ஒரு பொருள் கல்பிக்கிறார். அந்நிலையில் அங்கு எவர் இருந்தாலும் அரசன் விஷயத்தில் அவ்வளவு கருணை கொண்டு, அவன் நியாயமென்று கருதும் வழிக்கு மாறாகவே பேசுவர் எனபது த்வனிப் பொருள். (51)

52. निशम्य देवानुचरस्य वाचं मनुष्यदेवः पुनरप्युवाच।
धेन्वा तदध्यासितकातराक्ष्या निरीक्ष्यमाणः सुतरां दयालुः॥

देवानुचरस्य वाचम् = ஈச்வர கிங்கரனுடைய பேச்சை
निशम्य = கேட்டு
तदध्यासितकातराक्ष्या = அவனேறி உட்கார்ந்ததனால் உண்டான பயத்தைக் கண்களால் காட்டுகின்ற

धेन्वा = நந்தினி
निरीक्ष्यमाणः = தன்னைப் பார்க்க
सुतरां दयालुः = முன்னைவிட அதிக மாகக் கருணை பொங்கிய
मनुष्यदेवः = அரசன்
पुनरप्युवाच = மறுபடியும் கூறினன்.

ஒரு பக்கம் பார்த்தால் ஈச்வரனுடைய ஆக்ஞையைக் கடக்க முடியாமல் இருக்கின்றது. மற்றொரு பக்கம் பார்த்தால் தான் அரசன் என்ற கடமையைச் செலுத்த முடியாம லிருக்கின்றது. அதே ஸமயத்தில் நந்தினி கோரமான ஆபத்திலிருந்து துன்பப்படுவது பாதிக்கின்றது. ஆகையால் எவ்விதத்திலும் அதை ரக்ஷிக்கக் கருதி முன் சொன்னபடியே மறுபடியும் திடமாகக் கூறுகின்றான். (52)

53, क्षतात्किल त्रायत इत्युदग्रः क्षत्रस्य शब्दो भुवनेषु रूढः ।
राज्येन किं तद्विपरीतवृत्तेः प्राणैरुपक्रोशमलीमसैर्वा ॥

क्षतात् त्रायत इति किल = துன்பத்திலிருந்து காப்பாற்றுகின்றான் என்ற பொருளைப் பற்றி யன்றோ
उदग्रः क्षत्रस्य शब्दः = அரசனைக் கூறும் க்ஷத்ரம் என்கிற பெரும் சொல்
भुवनेषु रूढः = உலகங்களில்ப்ரஸித்தமாயிருக்கின்றது.
तद्विपरीतवृत्तेः = அதற்கு நேர்மாறான நடத்தை உடையவனுக்கு
राज्येन किम् = ராஜ்யத்தினால் என்ன?
उपक्रोशमलीमसैः — எல்லோரும் இகழ்ந்து மங்கிய
प्राणैर्वा किम् = பிராணனால் தான் என்ன ?

நந்தினியை விட்டு விட்டு ராஜ்ய ஸுகத்தை அனுபவி என்றும், பிரஜைகளைக் காப்பாற்று என்றும் சிங்கம் சொல்லிற்று. ஒரு பிராணிக்கு ஆபத்து வந்த போதெல்லாம் இது சொன்ன நியாயத்தைக் கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதே அரசன் செய்ய வேண்டிய காரியமாகில் க்ஷத்திரியன் என்கிற பெயரே அவனுக்குத் தகாது. அவ்விதமானவனுக்கு ராஜ்யமிருந்தும் பயனென்ன? தன் கடமையைச் செய்யாது விட்டவனுக்கு அதுவே எப்பொழுதும் மனத்தை வருத்திக் கொண்டிருக்கு மாகையால் அரசன் என்கிற உயர்ந்த பதவியினால் அவன் ஸுகம் பெறுவது எப்படி? பிறரைக் காப்பாற்றாத படியால் அதற்காகவும் அவனுக்கு ராஜ்யம் வேண்டியதில்லை. தனக்கு ஸுகம் உண்டாகாதாகையால் அதற்காகவும் அது வேண்டியதில்லை. இப்படி க்ஷத்திர தர்மத்தைப் பரிபாலிக்காத அரசனுக்கு ராஜ்யமே அனாவசிய மென்பது மாத்திரமன்று அவன்

ஜீவித்திருப்பதும் தகாது. ஆபத்து வரும் பொழுது ஜனங்களைக் காப்பாற்றாவிடில் அவர்கள் எப்பொழுதும் நிந்தித்துக் கொண்டிருப்பார்களாதலின் அவன் பிழைத்திருப்பதே தவறாகும், என்கிறான்.

ஸுகமனுபவி என்று சொன்னதற்குத் தனது கடமையை இழந்தவன் ஸுகம் அனுபவிக்க முடியாது, என்ற விடை அளிக்கப்பட்டது. நந்தினி ஒன்றைக் காப்பாற்றுவதைக் காட்டிலும் பல பிரஜைகளைக் காப்பாற்றுவது யுக்தம் என்பதற்கு எந்தப் பிராணியையும் அரசன் காக்கவேண்டியது கடமை என்ற இதைச் சிந்திக்கும்போது அப்பொழுது ஆபத்திலிராத மற்றவர்களைக் கொண்டு நியாயம் கூறுவது யுக்தமன்று என்று ஸமாதானம் கூறப்பட்டது. (53)

54. कथं च शक्योऽनुनयो महर्षेर्विश्राणनादन्यपयस्विनीनाम् ।
इमामनूनां सुरभेरवेहि रुद्रौजसा तु प्रहृतं त्वयाऽस्याम् ॥

अन्यपयस्विनीनाम् विश्राणनात् = வேறு பல கறவைப் பசுக்களைக் கொடுத்து
महर्षेरनुनयश्च = மஹரிஷியை ஸமாதானம் செய்வது தான்
कथं शक्यः = எப்படி முடியும்?
इमां सुरभेः अनूनां अवेहि = இந்த நந்தினி காமதேனுவுக்குக் குறைந்ததன்று என்று நீ தெரிந்து கொள்ள வேண்டும்.
रुद्रौजसा तु = ஈச்வரனது பெருமையினாலாக்கும்
त्वया अस्यां प्रहृतम् = நீ இதைப் பிடித்துக் கொண்டது.

நந்தினி ஒன்றுக்குப் பதிலாகப் பல பசுக்களைக் கொடுத்துக் குருவின் கோபத்தைத் தணிக்கலாம் என்று சிங்கம் சொன்னதற்கு அரசன் இங்கு மறுமொழி கூறுகின்றான். உலகத்திலுள்ள மற்ற எல்லாப் பசுக்களைக் கொடுத்தாலும் இதற்கு ஈடாகாது. காமதேனு எப்படியோ அப்படியே இந்நந்தினியும். ஆகையால் வேறு பசுக்களைக் கொடுத்துக் குருவைத் திருப்தி பண்ணிவைக்க முடியாது என்கிறான். என்னிடத்தில் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிற எளிய பசுவுக்கோ அவ்வளவு பெருமை என்று அது சந்தேகங் கொள்ளலாம். அதற்காக மேலே அவன் கூறுகின்றான் "ஈச்வரனுடைய ப்ரபாவத்தினாலே நீ அதைப் பிடிக்க முடிந்ததேயன்றி வேறன்று" என்று. (54)

55. सेयं स्वदेहार्पणनिष्क्रयेण न्याय्या मया मोचयितुं भवत्तः ।
न पारणा स्याद्विहता तवैवं भवेदलुप्तश्च मुनेः क्रियार्थः ॥

सा इयं = ஆகவே இந்நந்தினியை	एवम् = இப்படியாகில்
स्वदेहार्पणनिष्क्रयेण = என் சரீரத்தையே விலையாக அர்ப்பணம் செய்து	तव पारणा = உனது பாரணையும்
मया भवत्तः मोचयितुं न्याय्या = நான் உன்னிடத்திலிருந்து விடுவிக்க வேண்டியது தர்மம்.	विहता न स्यात् = தடைப்படாது
	मुनेः = வஸிஷ்ட மஹரிஷியினுடைய
	क्रियार्थश्च = வேள்விச் சடங்கும்
	अलुप्तो भवेत् = லோபிக்காமல் இருக்கும்.

அரசன், அவனது சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சிங்கம் எடுத்துரைத்த நியாய மெல்லாம் ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல என்று காட்டிய பிறகு தனது தீர்மானமே இப்பொழுது நிறைவேற்றப் படவேண்டும் என்கிறான். நந்தினியை உயிரோடு விட்டு விட்டால் உன்னுடைய பாரணை நடை பெறாது. விடாமல் அதைக் கொன்று நீ புசித்து விட்டால் முனிவரின் வேள்வி தடைபடும். இவ்விரண்டும் விரும்பத்தக்கதல்ல. என்னைநீ நந்தினி ஸ்தானத்தில் ஏற்றுக் கொண்டால் இவ்விரு சங்கடமும் நேரிடாது என்றும், தான் கூறுவது வெகு நியாயமானது என்றும், வெகு தெளிவாகக் கூறிக் காட்டுகின்றான். (55)

56. भवानपीदं परवानवैति महान् हि यत्नस्तव देवदारौ ।
स्थातुं नियोक्तुर्नहि शक्यमग्रे विनाश्य रक्ष्यं स्वयमक्षतेन ॥

परवान् भवानपि = ஒருவரிடத்தில் தொண்டு செய்யு முனக்கும்	रक्ष्यं वस्तु विनाश्य = காப்பாற்ற வேண்டிய வஸ்துவைத் தொலைத்துவிட்டு
इदं अवैति = இது தெரிந்ததே.	नियोक्तुः अग्रे = யஜமானன் முன்
देवदारौ = இந்த தேவதாரு விருக்ஷத்தின் விஷயத்தில்	स्वयं अक्षतेन = தனக்குச் சிறிதும் அபாயமில்லாமல் (தனக்கு ஒரு சிறு காயமும் இராமல்)
तव महान् हि यत्नः = நீ மிகுந்த சிரத்தையை எடுத்துக் கொள்ளுகிறாயல்லவா.	स्थातुं न शक्यं हि = நிற்பது முடியாதல்லவா.

நியாயத்தை எடுத்துக் கூறிய பிறகும் பலவானாக இருக்கும் ஒருவன் ஸ்வதந்திரனாய்ப் பிறர் சொல்வதை ஒப்புக் கொள்ளாது

'இது என் இஷ்டம்' என்று கூறித் தன் விருப்பப்படி நடக்கலாம். அப்படி இச் சிங்கம், தான் சொல்வதைக் கேளாமற் போய்விடுமோ என்றெண்ணி உன்னைப் போலவே என்னையும் கருத வேண்டு மென்று நயந்து கூறுகின்றான். அதற்காக அதையே உபமான மாகக் காட்டுகின்றான். 'உனக்கு தேவதாரு விருக்ஷத்தில் எவ்வளவு சிரத்தையோ, அதைக் காப்பாற்றுவதில் எவ்வளவு முயற்சியோ, அவ்வளவு எனக்கு நந்தினி விஷயத்தில் இருக்க வேண்டியது நியாயந்தானே, என்று கேட்கின்றான். என்னைச் சண்டைக்கு அழைத்து அடித்து வென்று விட்டுப் பிறகு பலாத்காரமாக நந்தினியைப் பிடித்துக் கொண்டாலாவது நான் என் கடமையைச் செய்தேன் என்ற திருப்தி எனக்கு ஏற்பட்டிருக்கும். என் குருவும் நான் செய்யக் கூடியதைச் செய்தேன் என்று திருப்தி படுவர். அப்படி இல்லாமல் நந்தினியை இழந்து விட்டு முன் போலவே திடகாத்ரனாக அவர் முன்னே போய் நிற்பது நான் 'செய்யக் கூடிய காரியமா என்பதைக் காட்டு யானைகள் தேவதாரு வ்ருக்ஷத்தை முறிக்கும்படி செய்துவிட்டு நீ ஈச்வரன் முன்னிலையில் போய் நின்றால் எப்படி இருக்கும் என்ற உபமானத்தைக் கொண்டு செவ்வனே உணர வேணும் என்கிறான். (56)

57. किमप्यहिंस्यस्तव चेन्मतोऽहं यशःशरीरे भव मे दयालुः।
एकान्तविध्वंसिषु मद्विधानां पिण्डेष्वनास्था खलु भौतिकेषु॥

अहं किमप्यहिंस्यः तव मतश्चेत् = ஏதோ என்னை ஹிம்ஸிக்கக் கூடாதென்கிற எண்ணம் உனக்கு உளதாகில்

मे यशःशरीरे दयालुर्भव = என்னுடைய புகழ் உடம்பின் விஷயத்தில் நீ அருள் புரிய வேணும். (ஏனெனில்)

मद्विधानाम् = என்னைப் போன்றவர்களுக்கு

एकान्तविध्वंसिषु = நசிப்பதையே தன்மையாக உடைய

भौतिकेषु पिण्डेषु = ஐம்பூதங்களாலாகிய சரீரங்களில்

अनास्था खलु = ஆசையே கிடையாது.

நம்மிடத்தில் ஒப்படைத்த பொருளை எவ்விதத்திலும் நாம் காப்பாற்றாமல் விடமுடியாது. ஆகையால் நீ என் விருப்பப்படி செய்ய வேண்டு மென்றான் முன். இப்பொழுது என்னைப் பற்றியும் கொஞ்சம் ஆலோசனை செய்து நீ இரங்க வேண்டு மென்கின்றான். என் சரீரத்தையும் நந்தினியையும் ஒப்பிட்டு என்னைக் காப்பாற்றிக்

கொள்ளும்படி நீ கூறினாய். அது யுக்தமன்று. அதை எப்படியும் காப்பாற்றியே ஆக வேண்டும் என்பதை முன்பே காட்டினேன். இப்பொழுது நீ கவனிக்க வேண்டியது என்னவெனில், என்னுடைய இந்த மாம்ஸ மயமான உடல் பெரிதா, அல்லது எப்பொழுதும் அழியாதிருக்கக் கூடிய புகழ் உடம்பு பெரிதா என்பது. எப்படியும் என்னை ஹிம்ஸிக்க நீ கருதுகின்றாயில்லை. அப்படி ஹிம்ஸிக்கக் கூடாது என்கிற எண்ணத்தை நீ பூர்த்தி செய்ய வேண்டுமானால் என் விருப்பப்படி நடந்தால்தான் அது கூடும். நான் விரும்பாத இவ்வுடலை ஒன்றும் செய்யாது விடுத்து நான் மிக மிக விரும்பும் புகழ் உடம்பைக் கெடுத்தாயாகில் அது நீ ஹிம்ஸை செய்ததாகவே முடியும் என்கிறான். (57)

58. **संबन्धमाभाषणपूर्वमाहुर्वृत्तः स नौ संगतयोर्वनान्ते ।**
तद्भूतनाथानुग नार्हसि त्वं संबन्धिनो मे प्रणयं विहन्तुम् ॥

संबन्धम् आभाषणपूर्वमाहुः = பேச்சு உறவை உண்டாக்கும் என்பார்கள்.
वनान्ते संगतयोः नौ सः वृत्तः = அவ்வித உறவு காட்டின் நடுவே சேர்ந்த நம்மிருவருக்கும் ஏற்பட்டு விட்டது.
तत् हे भूतनाथानुग = ஆகையாலே ஈசனின் சேவகனே
संबन्धिनो मे प्रणयम् = உறவினனை நான் கேட்பதை
त्वं विहन्तुं नार्हसि = நீ மறுப்பது தகாது.

காப்பாற்றப்பட வேண்டிய நந்தினியைக் கருதியும் அபகீர்த்தி உண்டாவதைப் பற்றி மிகவும் பயந்த தன்னைக் கருதியும் தனது விருப்பத்தை அது அனுஸரிக்க வேண்டுமென்று கூறினான். ஆயினும் தாக்ஷிண்யம் இல்லாமல், 'நீ சொல்வதை நான் ஏன் கேட்க வேண்டும்' என்று அது கூறி விடுமோ என ஐயமுற்று அதற்கும் தனக்கும் ஒரு உறவு கொண்டாடித் தனது விருப்பத்தை மறுக்கக் கூடாதென்று வாய் விட்டுச் சொல்லுகிறான். (58)

59. **तथेति गां मुक्तवते दिलीपः सद्यः प्रतिष्टम्भविमुक्तबाहुः ।**
स न्यस्तशस्त्रो हरये स्वदेहमुपानयत्पिण्डमिवामिषस्य ॥

तथेति = அப்படியே என்று கூறி
गां मुक्तवते = சிங்கம் நந்தினியை விட்டுவிட
सद्यः प्रतिष्टम्भविमुक्तबाहुः = உடனே அவனுடைய புஜத்தின் தடை (அசைவற்ற நிலை) நீங்கி
सः = அவ்வரசன்

न्यस्तशस्त्रः = ஆயுதத்தைக் கீழே வைத்து விட்டு
स्वदेहम् = தனது உடலை
आमिषस्य पिण्डमिव = மாம்ஸ பிண்டத்தைப் போல்
हरये = அந்தச் சிங்கத்தினிடத்தில்
उपानयत् = கொண்டு சேர்த்தான்.

அரசன் இவ்வளவு கூறியதைக் கேட்ட சிங்கம் வேறொன்றும் கூறாமல் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக் கொண்டது. உடனே நந்தினி விடுபட்டது. இவன் கையும் இவனுக்கு ஸ்வாதீனமாயிற்று. ஆகையால் நிஷ்ப்ரயோஜனமான ஆயுதத்தைக் கீழே வைத்து விட்டுத் தான் சொன்னபடி தனது சரீரத்தை அது தின்னும்படியான நிலையில் குனிந்து அடங்கி ஒடுங்கி அதனருகில் சென்று அர்ப்பணம் செய்தான். அவன் மனத்தில் சிறிதும் வருத்தமில்லை. களங்கமில்லை. இதைக் காட்டுவதற்காக 'மாம்ஸபிண்டம் போல்' என்று உபமானம் கொடுக்கப் படுகின்றது. ஒருவன் ஒரு ஆடு அல்லது மாட்டைக் கொன்று ஒரு தேவதைக்குப் பலி கொடுக்கும் போது எப்படி இருப்பனோ அப்படியே தனது சொந்த உடலைச் கொடுக்கும் போதும் அவன் இருந்தான் என்று கருத்து. (59)

60. तस्मिन् क्षणे पालयितुः प्रजानामुत्पश्यतः सिंहनिपातमुग्रम् ।
अवाङ्मुखस्योपरि पुष्पवृष्टिः पपात विद्याधरहस्तमुक्ता ॥

तस्मिन् क्षणे = அந்தக்ஷணத்தில்
उग्रं सिंहनिपातम् उत्पश्यतः = (தன் மீது) ஸிம்மத்தினுடைய உக்ரமான வீழ்ச்சியை எதிர் பார்த்து
अवाङ्मुखस्य = கவிழ்ந்து இருந்த
प्रजानां पालयितुरुपरि = அரசன் மேல்
विद्याधरहस्तमुक्ता = (வானில்) வித்யாதாருடைய கையினால் பெய்யப்பட்ட
पुष्पवृष्टिः = பூ மழை
पपात = விழுந்தது.

கடமையை உறுதியுடன் செய்தால் தேவர்கள் மிகச் சந்தோஷப்படுவர்கள் என்பதை இங்குக் கவி எடுத்துக் காட்டுகிறார். இப்படித் தனது ஆட்சியில் உட்பட்ட பிரஜைகளைக் காப்பாற்றுமவனன்றோ (प्रजानां पालयितुः) 'அரசனாயிருக்க வேண்டும்' என்று மகிழ்ச்சியுற்ற மேலுலகத்தார் பூ மழையைச் சொரிந்து தமது சந்தோஷத்தை அறிவித்தனர்.

அவன் தன்மேல் எதிர் பார்த்தது கோரமான ஸிம்மத்தின் வீழ்ச்சியே. ஆனால் விழுந்தது மிருதுவாய் மிகுந்த பரிமளமுள்ள பூமழை. இது அவன் எதிர் பாராமல் விழுந்தது. (60)

61. उत्तिष्ठ वत्सेत्यमृतायमानं वचो निशम्योत्थितमुत्थितः सन् ।
दद‍र्श राजा जननीमिव स्वां गामग्रतः प्रस्रविणीं न सिंहम् ॥

वत्स उत्तिष्ठ = குழந்தாய் எழுந்திரு.
इति अमृतायमानं वचः = என்ற அம்ருதம் போன்ற வார்த்தை
उत्थितं निशम्य = எழுந்ததைக் கேட்டு
उत्थितः सन् = எழுந்து நின்று
राजा = அரசன்
अग्रतः = தன் முன்னே
स्वां जननीमिव प्रस्रविणीम् गां ददर्श = தனது தாய் போன்று சுரப்புப் பெருகிய பசுவைக்கண்டான்
न सिंहम् = ஸிம்மத்தையன்று.

புஷ்ப வர்ஷம் விழுந்ததும் அரசன் தான் குனிந்தபடியே இருந்தான். ஏன் புஷ்பமாரி தன்மேல் விழுந்தது என்கிற காரணம் அவனுக்குத் தெரியாது. ஆனால் தன்னை ஆகாரமாகக் கொள்ளென்று ஸிம்மத்திற்குக் கொடுத்த வார்த்தையை மாற்ற முடியாதாகையால் 'ஏன் பூக்கள் தன் மேல் விழுந்தன? எங்கிருந்து விழுந்தன?' என்று நிமிர்ந்து பார்க்கவில்லை. அதைக் கவனித்த பசு நாம் கூப்பிட்டாலன்றி இவன் எழுந்திருக்க மாட்டான் என்றெண்ணி மிகுந்த அன்புடன் கூப்பிட்டது. அதன் பிறகு இது ஏதோ தெய்வத்தின் கட்டளையா யிருக்க வேண்டு மென்றெண்ணி அரசன் எழுந்திருந்து நிமிர்ந்து நின்றான். அப்போது அங்கு அவன் கண்டது என்ன! சிங்கமன்று. தன்னிடத்தில் மிகுந்த அன்பைக் காட்டி நின்ற நந்தினி. இதென்ன ஸம்பவம் என்று மறுபடியும் வியப்புற்றான். (61)

62. तं विस्मितं धेनुरुवाच साधो मायां मयोद्भाव्य परीक्षितोऽसि ।
ऋषिप्रभावान्मयि नान्तकोऽपि प्रभुः प्रहर्तुं किमुतान्यहिंस्राः ॥

विस्मितं धेनुरुवाच = ஆச்சர்யம் அடைந்த அவ்வரசனை அந்நந்தினி சொல்லிற்று;
साधो = ஸர்வ குணம் பொருந்திய உத்தம புருஷனே
मायामुद्भाव्य मया परीक्षितोऽसि = மாயைத் தோற்றத்தை உண்டாக்கி நானே உன்னைப் பரீக்ஷித்தேன்.
ऋषिप्रभावात् = வஸிஷ்ட முனிவரின் மகிமையினால்
अन्तकोऽपि मयि प्रहर्तुं न प्रभुः = எமனும் என்னைப் பீடிக்க முடியாது
किमुत अन्यहिंस्राः = மற்ற துஷ்ட ஜந்துக்களைப் பற்றிக் கேட்க வேண்டுமோ.

எதிர் பாராத ஸம்பவங்கள் மேல் மேல் நேர அதனால் ஒன்றுமே தோன்றாது வாய் திறவாமல் நின்ற அரசனை விளித்து நந்தினி உண்மையைக் கூறுகின்றது. நடந்தவை யெல்லாம் நான் செய்த மாயையே. நான் கொஞ்சமாவது கஷ்டப் பட்டிருப்பேன் என்று நீ சிறிதும் எண்ண வேண்டாம். கடைசியாக உயிரைக் கொண்டு போக வேண்டியவன் யமன். அவனே என்னிடத்தில் ஒன்றும் செய்ய முடியாது. அவ்வித நிலை எனக்கு உண்டானது வஸிஷ்ட முனிவரின் மஹிமையினாலேயே. ஆகையால் ஏதோ ஒரு சிங்கம் என்னைப் பிடித்துக் கொண்டது, ஹிம்ஸித்து விட்டது, என்று நீ எண்ண வேண்டாம் என்கிறது. ஈச்வரனுடைய அனுக்ரஹத்தைப் பெற்ற ஒருவனன்றோ உன்னைச் சிங்க வேஷத்தில் பிடித்துக் கொண்டான். அதனால் பாதை ஏற்படாதோ வெனில் அது நான் செய்த மாயையே யன்றி உண்மையில் நேர்ந்ததன்று என்கிறது. (62)

63. भक्त्या गुरौ मय्यनुकम्पया च प्रीताऽस्मि ते पुत्र वरं वृणीष्व ।
न केवलानां पयसां प्रसूतिमवेहि मां कामदुघां प्रसन्नाम् ॥

गुरौ ते भक्त्या = உனக்கு குருவினிடத்தில் உள்ள பக்தியினாலும்

मय्यनुकम्पया च = என்னிடத்தில் உள்ள காருண்யத்தினாலும்

प्रीताऽस्मि = ஸந்தோஷமடைந்தேன்.

पुत्र वरं वृणीष्व = குழந்தாய், வேண்டியதைக் கேள்.

मां केवलानां पयसां प्रसूतिं नावेहि = நான் வெறும்பாலை மாத்திரம் கொடுப்பேனென்று எண்ணாதே.

प्रसन्नां कामदुघाम् (अवेहि) = ப்ரீதி உண்டானால் வேண்டியதை எல்லாம் தருவேனென்று அறி.

பரீக்ஷை முடிந்தவுடன் அதில் வெற்றி பெற்ற அரசனுக்கு அவன் கோரிய பலனைக் கொடுப்பதாக நந்தினி இங்குப் பேசுகின்றது. 'வேண்டியதைக் கேள்' என்று சொன்னதைக் கேட்டு அரசன் 'இது ஒரு பசு தானே. வேண்டியதை எல்லாம் இது தரக் கூடுமோ. இதை ஓட்டிக் கொண்டு ஆச்ரமம் போய் முனிவரிடத்திலன்றோ வரம் பெற வேண்டும், என எண்ணலாம். அதற்காக நந்தினி 'நான் வெறும் ஸாதாரண பசு அன்று. நீ எதைக் கேட்டாலும் தரக் கூடிய சக்தி எனக்கு உண்டு' என்று முன் (முதல் ஸர்க்கத்தில் 81-வது ச்லோகத்தில்) முனிவர் சொன்னதை இங்கு ஞாபகப் படுத்துகின்றது.

இந்த ச்லோகத்தில் 'हे पुत्र, वरं वृणीष्व' என்ற பொருளில் வந்த சொற்றொடர் 'पुत्रवरं वृणीष्व' பிள்ளைவரம் கேள் என்ற த்வனிக்கும் ஏற்றதா யிருத்தலைக் காண்க. (63)

64. ततः समानीय स मानितार्थी हस्तौ स्वहस्तार्जितवीरशब्दः ।
वंशस्य कर्तारमनन्तकीर्तिं सुदक्षिणायां तनयं ययाचे ॥

ततः = அதன் பிறகு
मानितार्थी = கேட்போர் கேட்டதை எல்லாம் கொடுத்து உபகரித்த,
स्वहस्तार्जितवीरशब्दः = தனது புஜ பராக்கிரமத்தினால் 'இவன் வீரன்' என்ற புகழ் பெற்ற
सः = அவ்வரசன்
हस्तौ समानीय = கைகளைக் கூப்பி
वंशस्य कर्तारम् = வம்சவ்ருத்திக்கு ஹேதுவாய்
अनन्तकीर्तिम् = அபார கீர்த்தியுடன் [விளங்கும்
तनयम् = புத்திரன்
सुदक्षिणायां ययाचे = தனது பட்டமகிஷியான ஸுதக்ஷிணையினிடத்தில் உண்டாக வேண்டுமென்று வேண்டினான்.

திலீபன் இதுவரையில் தான் கொடுப்பவனாக இருந்தானே யன்றி யாசகனாக இருந்ததில்லை. தனது கைகளை ராஜ்ய பரிபாலனத்திற்காக உபயோகப்படுத்தி யிருக்கிறானேயன்றி, யாசிப்பதற்காக உபயோகப் படுத்தினதில்லை. ஆகிலும் இப்பொழுது நிலைக்குத்தகுந்தபடி நடக்க வேண்டுமாகையால் சிறிதும் அகங்காரமோ லஜ்ஜையோ இல்லாமல் மிகுந்த விநயத்துடன் யாசனம் செய்தான். உண்டாகும் புத்ரன் தான் மறுபடியும் தனக்குப் புத்ரன் உண்டாக வேண்டுமே யென்று மிகவும் கஷ்டப்படாமல் மேல் மேலும் ஸந்தான வ்ருத்தி உண்டாக வேணுமென்றும், அவன் குணமில்லாது வம்சத்திற்கு அபகீர்த்தியை உண்டாக்காமல் பெரும் புகழை உண்டாக்கக் கூடியவனாக இருக்க வேண்டுமென்றும், அவ்வித ஸத் புத்திரன் வேறொரு பத்னியிடத்தில் உண்டாகாமல் இப்பொழுது தன்னுடன் வந்து வ்ரதத்தை அனுஷ்டித்து நந்தினியை உபசரித்த ஸுதக்ஷிணையினிடத்தில் உண்டாக வேணுமென்றும் வேண்டினான். (64)

65. संतानकामाय तथेति कामं राज्ञे प्रतिश्रुत्य पयस्विनी सा ।
दुग्ध्वा पयः पत्रपुटे मदीयं पुत्रोपभुङ्क्ष्वेति तमादिदेश ॥

सन्तानकामाय = மகப்பேறு விரும்பும்
राज्ञे = அவ்வரசனுக்கு
तथेति = அப்படியே என்று
कामं प्रतिश्रुत्य = வரத்தைக் கொடுத்துவிட்டு
सा = அந்த நந்தினி

पयास्विनी = சுரப்புவிட்டு நின்று கறந்து
पुत्र = குழந்தாய்
मदीयं पयः = என்னுடைய பாலை
पत्रपुटे दुग्ध्वा = இலைத்தொன்னையில்
उपभुङ्क्ष्वेति = குடி என்று
तमादिदेश = அவனைக் கட்டளையிட்டது.

இவனிடத்தில் நந்தினிக்கு மிகுந்த ப்ரீதி உண்டாய்விட்டபடியால் அது தயங்காமல் சுருக்கமாக உடனே 'அப்படியே ஆகட்டும்' என்று வரங் கொடுத்தது. பாலைக் கறந்து குடிப்பதற்கு கன்றுக் குட்டி வேண்டாவோ வெனில் அது இல்லாமலேயே தானே பால் சுரந்தே னென்கிறது. பாத்திர மில்லையே கறப்பதற்கு எனில் மரங்களிலுள்ள இலைகளைப் பறித்துத் தொன்னை தைத்துக் கொள் என்றது. (65)

66. वत्सस्य होमार्थविधेश्च शेषमृषेरनुज्ञामधिगम्य मातः ।
औधस्यमिच्छामि तवोपभोक्तुं षष्ठांशमुर्व्या इव रक्षितायाः ॥

मातः = அன்னையே
वत्सस्य ऋषेः होमार्थविधेश्च शेषम् = கன்றுக்குட்டி, ஊட்டி முனிவர் தனது ஹோமத்திற்காக உபயோகப்படுத்தி மிகுந்த
तव औधस्यम् = உனது பாலை
ऋषेः अनुज्ञाम् अधिगम्य = முனிவருடைய அனுமதியைப் பெற்று
रक्षितायाः उर्व्याः षष्ठांशमिव = பூமியைக் காப்பாற்றி அதிலிருந்து எனக்குக் கிடைக்கும் ஆறில் ஒரு பங்கைப்போல்
उपभोक्तुम् इच्छामि = அருந்த விரும்புகின்றேன்.

(66

67. इत्थं क्षितीशेन वसिष्ठधेनुर्विज्ञापिता प्रीततरा बभूव ।
तदन्विता हैमवताच्च कुक्षेः प्रत्याययावाश्रममश्रमेण ॥

इत्थं क्षितीशेन विज्ञापिता = இப்படி அரசன் பணிவாகக் கூற
वसिष्ठधेनुः प्रीततरा बभूव = முனிவரின் பசு மேலும் ஸந்தோஷம் அடைந்தது.
च = அப்பொழுதே
तदन्विता = அவனுடன் கூட
हैमवतात् कुक्षेः = ஹிமய மலையின் குகையிலிருந்து
अश्रमेण = களைப்பின்றி
आश्रमम् प्रत्याययौ = ஆச்ரமத்திற்குத் திரும்பிற்று.

தன் பிராணனைக் கொடுத்தாவது இதைக் காப்பாற்ற வேணுமென்ற உறுதியுடன் அரசன் நடந்து கொண்டதனால் நந்தினி மிகவும் ஸந்தோஷித்து அவன் கேட்ட வரத்தைக் கொடுத்து மறுக்ஷணமே 'என் பாலைக்கறந்து குடி' என்றது. இது ஒரு சிறியதான

ஆனால் மிகவும் கடினமான மற்றொரு பரீக்ஷை. திலீபன் போன்ற அறிவாளிகளாய் எல்லோரும் இருக்க மாட்டார்கள். அவர்கள் நந்தினி 'பாலைக் கறந்து குடி', என்று சொன்ன அந்த க்ஷணத்திலேயே அப்படிச் செய்ய முற்படுவார்கள். ஆனால் மஹா விவேகியாகிய திலீப மகாராஜன் அப்படிச் செய்யவில்லை. செய்யக்கூடாது என்று எண்ணினான். ஆனால் அது 'செய்' என்று சொன்னதைச் செய்ய மாட்டேனென்றால், அது அவனது விநயத்திற்குக் குறைவாகும். ஆகையினால் தனது கருத்தை மிகுந்த பணிவுடன் அதனிடத்தில் விஜ்ஞாபனம் செய்தான். ப்ரஜைகளை நன்றாக ரக்ஷிக்காத அரசன் வரி வசூலித்து உபயோகப் படுத்துவது அநீதியாகும். பரிபாலனம் பூர்ணமாக நடந்த பிறகு அதிலிருந்துவரும் வருமானத்தை உபயோகப் படுத்துவதில் குற்றமொன்றுமில்லை. அது தர்மமே. அவ்விதமே உன்னை நான் உபசரித்து நீ கொடுக்கும் பாலை அருந்துவது யுக்தமே. ஆனால் நீ க்ஷேமமாக முனிவரிடத்தில் சென்ற பிறகே நான் உன்னை உபசரித்தது பூரணமாகும். இது முதல் காரணம்.

இரண்டாவது கன்றுக் குட்டி ஊட்டாமல் பால் கறப்பது சாஸ்திர விருத்த மாகையால் இப்பொழுது பால் கறந்து குடிப்பதற்கில்லை. மூன்றாவது, கிடைத்த ஆகாரப் பொருளை யஜ்ஞத்திற்கு உபயோகப்படுத்தி யல்லது நாம் உபயோகப் படுத்துவது பாவம். தவிர எனது ஆசார்யனை வஸிஷ்ட மஹரிஷியினுடைய அனுமதியின்றி நான் உனது பாலைக் குடிப்பது தகாது. இக்காரணங்களால் நீ இட்ட கட்டளையை இப்பொழுதே நிறைவேற்றாமல் ஆச்ரமத்திற்குப் போன பிறகு நிறை வேற்ற விரும்புகிறேன். இதற்கு நீ இசைய வேணும் என்று கூறினான். இதனால் முன்பைவிட இன்னும் அதிக ஸந்தோஷம் அடைந்தது நந்தினி. புத்திரவரம் பெற வேணு மென்ற ஆசை மிகுதியால் விவேகம் குன்றாது, அப்பொழுதும் ஆச்ரமத்திலுள்ள கன்றையும் மஹரிஷியையும் நினைத்து, முறை தவறாது தான் சொன்னதைச் செய்ய அவன் கருதியதைக் கண்டு அது அடங்கா மகிழ்ச்சி அடைந்தது. அதைக் குறித்து அவனை மிகக் கொண்டாடிற்று. பிறகு தானே அவனை அழைத்து 'ஆச்ரமத்திற்குப் போவோம் வா' என்று சொல்லி மற்றப் பசுக்கள் மலையின் உச்சியிலிருந்து கீழிறங்க என்ன சிரமப்படுமோ அந்த சிரமம் சிறிது மில்லாமல், அரசன் பின்னே வர ஆச்ரமத்திற்கு வந்தது.

(67)

68. तस्याः प्रसन्नेन्दुमुखः प्रसादं गुरुर्नृपाणां गुरवे निवेद्य ।
प्रहर्षचिह्नानुमितं प्रियायै शशंस वाचा पुनरुक्तयेव ॥

नृपाणां गुरुः = அரசர்களுக்கெல்லாம் வழிகாட்டியாயிருந்த அந்தத் திலீபன்
तस्याः प्रसादम् = நந்தினி அருள் புரிந்ததை
प्रसन्नेन्दुमुखः = சந்திரபிம்பம்போன்ற தனது முகத்தில் பிரகாசம் தோற்ற
गुरवे निवेद्य = ஆசார்யனிடத்தில் அறிவித்து
प्रहर्षचिह्नानुमितम = ஸந்தோஷக் குறிகளால் முன்பே அறியப்பட்ட அதை
पुनरुक्तयेव वाचा = கூறியது கூறல் என்ற குற்றமுள்ளது போன்ற வார்த்தையினால்
प्रियायै शशंस = தனது பத்நிக்குக் கூறினான்.

சுதக்ஷிணை வழக்கம் போல் அன்று ஸாயங்காலமும் ஆச்ரமத்திற்கு வெளியிற் சென்று நந்தினியையும் அரசனையும் வரவேற்றாள். அப்பொழுது அவன் முகத்தைப் பார்த்தவுடனேயே அவள் 'ஏதோ ஒரு விசேஷம் இருக்கிறது' என்பதை அறிந்து கொண்டாள். அவன் முகத்திலே அவ்வளவு மலர்ச்சியும் ஆனந்தமும் தோன்றின. ஆகிலும் அவன் முறை தவறாது நந்தினியை ஆச்ரமத்திற்குள் அதன் இடத்தில் கட்டிவிட்டு மஹரிஷியினிடம் சென்று வணக்கமாக உசிதமான வார்த்தைகளால் நடந்ததைத் தெரிவித்துவிட்டு அதன் பிறகே தனது இருப்பிடத்திற்கு வந்து விஸ்தாரமாகத் தனது பத்நியிடத்தில் சொன்னான். (68)

69. स नन्दिनीस्तन्यमनिन्दितात्मा सद्वत्सलो वत्सहुतावशेषम् ।
पपौ वसिष्ठेन कृताभ्यनुज्ञः शुभ्रं यशो मूर्तमिवातितृष्णः ॥

अनिन्दितात्मा = ஒருவரும் நிந்திக்காத (யாவரும் கொண்டாடக் கூடிய)ஸ்வபாவமும்
सद्वत्सलः = நல்லோர்களிடத்தில் அன்பும் உடைய
सः = அவ்வரசன்
वत्सहुतावशेषम् = கன்று குடித்தும் ஹோமம் செய்தும் மிகுந்த
नन्दिनीस्तन्यम् = நந்தினியின் பாலை
वसिष्ठेन कृताभ्यनुज्ञः = வஸிஷ்ட முனிவரால் அநுமதிக்கப் பெற்று
अतितृष्णः = மிகுந்த ஆவலோடு
मूर्तं शुभ्रं यश इव = வடிவெடுத்து வந்த பரிசுத்தமான தன் புகழைப் போல
पपौ — பருகினான்.

தனது விருப்பப்படியே ஆச்ரமத்தில் கன்று ஊட்டிப் பிறகு கறந்த நந்தினியின் பாலை முனிவரது ஹோமம் ஆன பிறகு அவரது அனுமதி பெற்றுக் குடித்தான். அதில் அவனுக்கு மிகுந்த ஆவல் இருந்தது. ஏனெனில் தான் எவ்விதக் கஷ்டத்தை அடைந்தாவது ஸந்தானத்தைப் பெறுவிடில் பித்ரு ருணத்திலிருந்து விடுபடாமல் தான் நிந்தைக்குப் பாத்திரனுவான். அந்நிந்தையை ஸஹிக்கக் கூடியவனல்லன் அவன். மேலும் தனது ராஜ்யத்திலுள்ள பிரஜைகள் எல்லோரும் மிக நல்லவர்கள். தர்மத்திலேயே நிலை நின்றவர்கள். அவர்களுக்கு மேல் மேல் உத்தமமான அரசாங்க முறை ஏற்பட்டு ஒருவித தீங்கும் உண்டாகாது பாதுகாப்பு இருக்க வேண்டும். அவர்களிடத்தில் இவனுக்குள்ள அன்பினுல் அதைப் பற்றியும் மகப்பேறு பெறுவதில் இவனுக்கு மிகுந்த சிரத்தை உண்டாயிற்று. இவ்விரண்டு காரணங்களாலும் மிகுந்த ஆவலோடு அவன் அப்பாலைப் பருகினுன். காட்டில் திரிந்து மாடு மேய்த்தாவது குலக்ரமமாக வந்த அரசு கெடாது தொடர்ந்து வருவதற்குரிய ஸந்தானத்தைப் பெற்றுன் என்ற பெரும் புகழ் அவனுக்கு உண்டாயிற்றென்று உபமானம் காட்டுகின்றது. (69)

70. प्रातर्यथोक्तव्रतपारणान्ते प्रास्थानिकं स्वस्त्ययनं प्रयुज्य।
तौ दम्पती स्वां प्रति राजधानीं प्रस्थापयामास वशी वसिष्ठः॥

प्रातः = மறு நாள் காலையில்
यथोक्तव्रतपारणान्ते = விதிப்படி பாரணை செய்து முடிந்ததும்
वशी वसिष्ठः = மிகுந்த வைராக்கிய முடையவரான வஸிஷ்ட முனிவர்
प्रास्थानिकं स्वस्त्ययनं प्रयुज्य = புறப்படும்போது செய்ய வேண்டிய ஆசீர்வாதத்தைச் செய்து
तौ दम्पती = அந்தப் பதிபத்னிகளிருவரையும்
स्वां राजधानी प्रति = அவர்களின் தலை நகரத்திற்கு
प्रस्थापयामास = (புறப்படச் செய்தார்) அனுப்பினுர்.

ஸுதக்ஷிணையும் திலீபனும் அனுஷ்டித்த விரதம் இருபத்திரண்டு நாட்கள் நீடித்தது. இருபத்திரண்டாவது நாள் நந்தினி செய்த பரீக்ஷையில் வெற்றி பெற்று அரசன் ஆச்ரமத்திற்கு வந்து கீழ்க் கூறியபடி நந்தினியின் பாலைப் பருகினுன். மறுநாட் காலையில் பாரணை நடந்தது. பிறகு முனிவரின் அனுமதியையும் ஆசீர்வாதத்தையும் பெற்று அரச தம்பதிகள் தமது நகரத்திற்குப் போகப் புறப்

பட்டார்கள். அப்பொழுது அரசன் தன்னுடைய ஐச்வர்யத்திற்கு ஏற்றவாறு தமது குருவான முனிவருக்கு காணிக்கை ஸமர்ப்பித்தான். அப்பொழுது அம்முனிவர் "நீ தரும் பொருளால் எனக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. நீயே கொண்டு போய் உன் இராஜ்யத்திற்கும் பிரஜைகளுக்கும் வேண்டிய க்ஷேமத்திற்காக அதை உபயோகப் படுத்திக் கொள்." என்று கூறி அதை அங்கீகரிக்க மறுத்து விட்டார். இதைக் குறிக்கின்றது 'இந்திரிய ஜயமுள்ள, விரக்தரான' என்ற பொருளையுடைய 'वशी' என்ற சொல். காரியம் முடிந்தவுடனே தமது நகரத்திற்குப் புறப்பட வேண்டியது நியாயமானாலும் ஆசார்ய ஸன்னிதானத்தில் தாங்கள் ஒன்றையும் சுதந்திரமாகச் செய்ய முற்படக் கூடாதாதலின் இத் தம்பதிகள் இவர்களாகவே அதை முனிவரிடத்தில் தெரியப் படுத்தவில்லை. முனிவரே அவர்களைப் போகலா மென்று அநுமதி கொடுத்து அனுப்பினார் என்பதும் இங்குள்ள கருத்து. (70)

71. प्रदक्षिणीकृत्य हुतं हुताशमनन्तरं भर्तुररुन्धतीं च।
धेनुं सवत्सां च नृपः प्रतस्थे सन्मङ्गलोदग्रतरप्रभावः॥

नृपः = அரசன்
हुतं हुताशम् = ஹோமம் செய்யப்பட்டு ஜ்வலித்த அக்னியையும்
भर्तुः अनन्तरं अरुन्धतीं च = (அருந்ததியின் கணவனை முனிவரையும்) அவருக்குப் பிறகு அருந்ததியையும்
सवत्सां धेनुम् च = கன்றுடன் கூடிய நந்தினியையும்
प्रदक्षिणीकृत्य = வலம் செய்து
सन्मङ्गलोदग्रतरप्रभावः = இவ்வித சுப ஆசாரங்களால் தனது மகிமை மிக வ்ருத்தியடையப்பெற்று
प्रतस्थे = புறப்பட்டான்.

வஸிஷ்டரின் அநுமதியைப் பெற்றவுடனே அவன் அவர் ஸந்நிதானத்தை விட்டுப் புறப்படாமல் தனது மிகுந்த விவேகத்தையும் பக்தியையும் சிரத்தையையும் காட்டக் கூடிய முறையில் அக்னி சாலையில் புகுந்து அங்கு ஜ்வலித்துக் கொண்டிருக்கும் அக்னி ரூபமான ஸர்வேச்வரனையும் அதற்குப் பிறகு அந்த தேவதையை விதிப்படி பூஜித்து உலகத்திற்கே க்ஷேமத்தை விளைவிக்கும் வஸிஷ்ட முனிவரையும் ப்ரதக்ஷிணம் செய்தான். பிறகு குரு பத்னியான அருந்ததி தர்மபத்னிகள் கவனிக்க வேண்டிய க்ருஹ க்ருத்யங்களைச் செய்து கொண்டு வேறிடத்தில் இருப்பதைக் கவனித்து அங்குச் சென்று

அவனையும் வலம் செய்து புறப்பட்டான். இப்படிச் சிஷ்யர்கள் இருக்க வேண்டிய நிலையில் சிறிதும் தவருமல் அரசன் நடந்து வருவதைக் கண்டு குருதம்பதிகளுக்கு மேலும் சந்தோஷம் உண்டாயிற்று. அதனல் அவர்கள் மறுபடியும் இவனுடைய க்ஷேமத்தைக் கோரி ஆசீர்வாதம் செய்தார்கள். இதைக் கருதி सन्मङ्गलोदग्रतरप्रभावः என்கிருர் கவி. (71)

72. श्रोत्राभिरामध्वनिना रथेन स धर्मपत्नीसहितः सहिष्णुः ।
ययावनुद्घातसुखेन मार्गं स्वेनेव पूर्णेन मनोरथेन ॥

सहिष्णुः सः = எவ்வித கஷ்டத்தையும் ஸஹிக்கும் ஸ்வபாவமுள்ள அவ்வரசன்
धर्मपत्नीसहितः = தனது தர்ம பத்நியான ஸுதக்ஷிணையுடன்
श्रोत्राभिरामध्वनिना = காதுக்கு இன்பமான ஓசையோடு
अनुद्घातसुखेन = (வழிசெவ்வையாக, கரடுமுரடாக இராமல், இருந்ததினல்) குலுங்காமல் ஸுகமாய்ச் சென்ற
पूर्णेन स्वेन मनोरथेनेव = நிறைவேறின தனது மனேரதம் போலிருந்த
रथेन = தேரினல்
मार्गं ययौ = வழியைக் கடந்தான்.

"ராஜ்யத்தில் அனுபவிக்கக் கூடிய எல்லா போகங்களையும் விட்டு ஆச்ரமத்திற்கு வந்து வழக்கமான ஆகாரம் முதலியன இராமலும் காடு திரிந்தும் பட்ட ஸர்வ கஷ்டங்களும் இனி நாம் படவேண்டியதில்லை. இனி ஸுகமாக இருப்போம்" என்று இவ்விதமான எண்ணம் அவ்வரசனுக்காவது அவ்வரசிக்காவது இல்லவே இல்லை. இருவரும் அவற்றையெல்லாம் போக்யமாகவே நினைத்தனர். பத்நியை எற்றித் தானும் ஏறி அரசன் 'ஒட்டு' என்று உத்தரவு கொடுக்க ஸாரதி தேரை ஒட்டினன். தேர் செம்மையாக அமைக்கப் பட்டு ஒரு பழுதுமின்றி இருந்தமையால் பிரயாணத்தினல் அவர்களுக்குச் சிறிதும் சிரமம் உண்டாகவில்லை. அதுமட்டுமில்லாமல் மிக வேகமாக ஓடும் பொழுது உண்டான அதன் இனிய சப்தம் அவர்களுக்குக் களிப்பை உண்டாக்கியது. ஸந்தான விஷயமாக அவர்களுக் குண்டான ஆசை நிறை வேறியது ஒன்று. ஸுகமாகப் போகக் கூடிய உத்தமமான ரதம் ஒன்று. இவ்விரண்டினலும் 'இன்னமும் வழி மாளவில்லையே, நகரம் வரவில்லையே, என்று சிந்தைப்படும்படித் தாமதம் தோன்ருமல், போனது தெரியாமல், வழியை ஸுகமாகக் கடந்தார்கள் என்பது இங்கே கருத்து. ()

73. तमाहितौत्सुक्यमदर्शनेन प्रजाः प्रजार्थव्रतकर्शिताङ्गम् ।
नेत्रैः पपुस्तृप्तिमनाप्नुवद्भिर्नवोदयं नाथमिवौषधीनाम् ॥

अदर्शनेन आहितौत्सुक्यम् = காணப் பெருமையால் எப்பொழுது காண்போம் என்ற பேராவலை உண்டாக்கி

प्रजार्थव्रतकर्शिताङ्गम् = மகப் பேற்றுக்காக அனுஷ்டித்த வ்ரதத்தினல் இளைத்திருந்த

तम् = அந்த அரசனை

प्रजाः = குடிகள்

तृप्तिं अनाप्नुवद्भिः नेत्रैः = பார்த்தது போதும் என்று திருப்தியையடையாத கண்களால்

नवोदयम् ओषधीनां नाथमिव = அப்பொழுதே தோன்றிய (மூன்ரும் பிறைச்) சந்திரனைப்போல்

पपुः = பருகினர்கள்.

வெகு நாட்களாகக் காணமையால் நகரவாஸிகள் யாவரும் அரசனை எப்பொழுது பார்ப்போம் என்று மிகவும் ஏக்க முற்றிருந்தார்கள். அரசனிடத்தில் குடிகளுக்கு அவ்வளவு பற்றும் பக்தியும் விசுவாஸமும் இருந்தன: அவன் திரும்பி வருகிருனென்று அறிந்தவுடனே நகரத்திற்கு வெளியே சென்று அவனைத் தகுந்த முறையில் வரவேற்று உபசரித்தார்கள். ரதத்திலிருந்து இறங்கித் தகுந்தோர் ஆசனத்திலமர்ந்து, தனது அனுமதியின் பேரில் ஸர்வ ஜனங்களும் ஒழுங்காக உட்கார்ந்து கேட்க அவன் தான் செய்த வ்ரதானுஷ்டானத்தை விஸ்தாரமாக எடுத்துச் சொன்னன். வ்ரதானுஷ்டானத்தினல் மிகவும் இளைத்திருந்தும் அவனது ஒளி சிறிதும் குன்றவில்லை. அவன் வீற்றிருக்கும் பொழுது யாவரும் அவனை ஆவலுடன் பார்த்த வண்ணமே இருந்தனர். மேன் மேலும் மூன்ரும் பிறைச் சந்திரனைப் போல் அவனைப் பார்ப்பதிலே பேரவாக் கொண்டனர்.

சந்திரனும் க்ருஷ்ணபக்ஷத்தில் கலைகளை இழந்து காணப் பெருதவனுகவும், ப்ரஜைகளின் க்ஷேமத்திற்காகத் தனது கலைகளை தேவர்களுக்குக் கொடுப்பது என்கிற வ்ரதத்தினல் இளைத்த உருவம் உடையவனுகவு மிருக்கின்ருனென்று கொள்க. (73)

74. पुरन्दरश्रीः पुरमुत्पताकं प्रविश्य पौरैरभिनन्द्यमानः ।
भुजे भुजङ्गेन्द्रसमानसारे भूयः स भूमेर्धुरमाससञ्ज ॥

पुरन्दरश्रीः सः = இந்திரன் போன்ற அவ்வரசன்

उत्पताकं पुरम् = கொடி முதலியவற்ருல் அலங்கரிக்கப்பட்டு

மிக விளங்கிய தனது நகரத்திற்குள்
पौरैः अभिनन्द्यमानः = வீதி தோறும் ஜனங்கள் புகழ்ந்து போற்ற
प्रविश्य = ப்ரவேசித்து
भुजङ्गेन्द्रसमानसारे भुजे = ஆதிசேஷனது பலம் வாய்ந்த தனது புஜத்தில்
भूमेः धुरम् = பூமியின் பாரத்தை
भूयः आससञ्ज = மறுபடியும் ஏற்றுக் கொண்டான்.

குடிமக்கள் செய்த வரவேற்பு உபசாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நகரத்திற்கு வெளியே யுள்ள உத்யான வனத்தில் சிறிது நேரம் தங்கிக் களைப்பாறிய பிறகு, சக்ரவர்த்தியான அவனது நகரப் பிரவேசத்திற் கேற்றவாறு ரத கஜ துரக பதாதிகளும், மந்திரிகளும் மற்றப் பெரியோர்களும், வாத்தியங்களும் வந்து தகுந்தவாறு அணிவகுத்து நிற்க, அமரர்களால் சூழப்பட்ட இந்திரன் அமராவதிக்குள் பிரவேசித்தால் உண்டாகக் கூடிய காட்சி அங்கு உண்டாயிற்று. அவ்வித வைபவத்தோடு அவன் கொடிகளாலும் தோரணங்களாலும் சோபிக்கின்ற தனது நகரத்திற்குள் பிரவேசித்தான். வீதி தோறும் ஜநங்கள் 'ஜய விஜயீ பவ' என்று கொண்டாடிப் பூவும் பொரியும் தூவி அவன் வருகையினால் உண்டான தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர். இவ்வாறு கொண்டாடப் பெற்ற அவன் அரண்மனை சேர்ந்த பிறகு அதுவரையில் ராஜ்யபாரத்தை ஏற்று நடத்திய மந்திரிகள் அதை அவனிடம் ஒப்புவிக்க, அதை ஏற்று அவர்களுக்கு அதுவரையில் இருந்த மனக் கவலையை நீக்கினான். (74)

75. अथ नयनसमुत्थं ज्योतिरत्रेरिव द्यौः
सुरसरिदिव तेजो वह्निनिष्ठ्यूतमैशम् ।
नरपतिकुलभूत्यै गर्भमाधत्त राज्ञी
गुरुभिरभिनिविष्टं लोकपालानुभावैः ॥

इति श्रीकालिदासीये रघुवंशे महाकाव्ये पुत्रवरलाभो नाम
द्वितीयः सर्गः ।

अथ = காலக்ரமத்தில்
द्यौः अत्रेः नयनसमुत्थं ज्योतिरिव = ஆகாசம் சந்திரனைப் போலவும்
सुरसरित् वह्निनिष्ठ्यूतं ऐशं तेज इव = கங்கை அக்னிவார்த்த பரமேச்வரனது வீர்யத்தைப் போலவும்
राज्ञी = ஸுதக்ஷிணை

नरपतिकुलभूत्यै = மஹா ராஜனுடைய வம்சத்தின் க்ஷேமத்திற் கான
गुरुभिः लोकपालानुभावैः अभिनिविष्टम् = இந்திரன் அக்கினி முதலிய லோக ரக்ஷகர்களான தேவர்களுடைய பெருமை வாய்ந்த (அம்ச அனுப்ரவேசத்தினல் உள்ள சீர்மையை உடைய)
गर्भम् = கர்ப்பத்தை
आधत्त = தரித்தாள்.

ஸுதக்ஷிணையின் கர்ப்பம் ஸாமான்யமான தன்று. திலீபனது வம்ச க்ஷேமத்திற்காக உண்டானது. அதற்குத்தக்கபடி அது மகிமை பெற்றிருந்தது. இந்திரன் கிழக்கிலும், அக்கினி தென் கிழக்கிலும் இப்படியே முறையே யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈச்வரன், இவர்கள் மற்றத் திக்குகளிலும் இருந்து உலகத்தைக் காப்பாற்றுகின்றனர்கள். பூமியை ஆளும் அரசன் ஒருவன் உண்டாகும் போது அவனிடத்தில் கர்ப்பத்திலேயே இத் தேவர்களுடைய அம்சங்கள் பிரவேசித்து அவனுக்குப் பூமியை ஆள்வதற்குரிய சிறப்பைத் தருகின்றன. அப்படியே இங்கும் நடந்தது. ஆனல் மற்ற அரசர்கள் விஷயத்தில் போல் ஸாமான்ய மானதன்று இச் சிறப்பு. பின் மிக மிக விசேஷம் வாய்ந்தது. அரசனுக்கு இருக்க வேண்டிய குணங்கள் முக்கியமாக இரண்டு விதமாகப் பிரிக்கக் கூடியவை. எல்லோரும் அவனிடத்தில் ப்ரீதியோடு அணுகும்படி செய்யுமவை ஒரு கூறு. ஆகிலும் அவனிடத்து மிக்க பயத்தோடும் வினயத் தோடும், பக்தி யோடும் நடந்து கொள்ளச் செய்யுமவை ஒரு கூறு. இதைத் திலீபன் விஷயத்தில் முன்னமே கவி காட்டியிருக்கின்றனர் (1 - 14). இரு கூறன இவ்வித குணங்கள் இந்தக் கர்ப்பத்தினிடத்தில் மிகுந்திருக்கும்படி அவ்வளவு அதிகமாகத் தேவர்களுடைய அம்சப்ரவேசம் இருந்தது என்பதை இரண்டு உபமானங்களால் கவி காட்டுகின்றனர். 'சந்திரன் போலும்' என்றதனல் முதற் கூறைச் சேர்ந்த குணங்களுடையவும், 'ஈச்வரனது வீர்யம் போலவும்' என்பதனல் இரண்டாவது கூறைச் சேர்ந்த குணங்களுடையவும் மலிவு காட்டப் படுகிறது. சுருக்கமாகச் சந்திரன் என்னுமல் 'அத்திரி மஹர்ஷியினுடைய நேத்திரத்திலிருந்து உண்டான ஒளி' என்றும், ஈச்வரனது வீர்யம் என்னுமல் 'அக்கினி வார்த்த அது' என்றும் கூறியது இங்குத் திலீபனிடமிருந்து அவள் அதைப் பெற்றுளென்பதயும், 'திலீபன் அத்திரிமஹர்ஷி போலவும் அக்கினி போலவும் இருந்தான். அதனலே அவ்விதமே அவனிடத்

திலிருந்து உண்டான கர்ப்பமும் இருந்தது’ என்பதையும் காட்டு வதற்காக. இவ்விரண்டு உவமையிலும் அடங்கிய கதைகள் முறையே ஹரிவம்சத்திலும் ராமாயணத்திலும் கூறப்பட்டிருக் கின்றன. (75)

|| இரண்டாவது ஸர்க்கத்தின் உரை முற்றிற்று ||

SRI VENKATESVARA ORIENTAL INSTITUTE, TIRUPATI

Price list of Publications

General Editor :—PROF. P. V. RAMANUJASWAMI, M.A., *Director*.

Sri Venkatesvara Oriental Series :—	Rs.	A.
1. **Sri Venkatesvara Kavya Kalapa,** (Sanskrit) Ed. by Sri D. T. Tatacharya, M.O.L. ...	4	0
2. **History of Tirupati**, Volume II (English) by Dr. S. Krishnaswami Aiyangar, M.A., Ph.D.	(*Out of Stock*)	
3. **A Glossary of Indian Philosophical Terms**, (Sanskrit-English) by Sri C. V. Sankara Rao, M.A. ...	1	8
4. **Psychology**, (Telugu) by Dr. K. C. Varadachari, M.A., Ph.D.	(*Out of Stock*)	
5. **Isavasyopanishad Bhashya,** of Venkatanatha, (Sanskrit-English) Ed. & Translated by Dr. K. C. Varadachari, M.A., Ph.D. & Sri D. T. Tatacharya, M.O.L.	(*Out of Stock*)	
6. **Samurtarchanadhikarana (Atri Samhita),** (Sanskrit) Ed. by Mr. Raghunatha Chakravarthi Bhattacharya & Sri M. Ramakrishna Kavi, M.A.	6	0
7. **Suvarnasaptati Sastra.** (Sanskrit) Reconstructed from the Chinese & Ed. by Sri N. Aiyaswami Sastri ...	3	0
8. **Kenopanishad Bhashya,** by Rangaramanuja (Sanskrit-English) Ed. & Translated by Dr. K. C. Varadachari, M.A., Ph.D. & Sri D. T. Tatacharya, M.O.L.	1	0
9. **Tirukkural-Kamattuppal**, with the commentaries of Kalingar and Paripperumal (Tamil) Ed. by Sri T. P. Palaniappa Pillai, B.O.L.	2	0

	Rs.	A.
10. **Sri Venkatesvara Vachanamulu,** (Telugu) Edited by Sri V. Prabhakara Sastri	1	8
11. **Sringarasankirtanamulu,** Vol. IV of Tallapaka Annamacharyulu (Telugu) Ed by Sri V. Prabhakara Sastri	2	0
12. **Kasyapa-Jnanakanda (Kasyapa Samhita),** (Sanskrit) Ed. by Sri R. Parthasarthi Bhattachar ...	3	0
13. **Andhra-Kuvalayanandamu** ,(Telugu) by Ubhayabhasha Pravina Sri K. Subrahmanya Sastri ...	3	12
14. **Tirukkural-Porutpal,** with the commentaries of Kalingar and Paripperumal (Tamil) Ed. by Sri T. P. Palaniappa Pillai, B.O.L.	4	0
15. **Kathopanishad Bhashya,** of Rangaramanuja (Sanskrit-Euglish) Ed and Translated by Dr. K. C. Varadachari, M.A., Ph. D. and Sri D. T. Tatacharya, M.O.L.	3	12
16. **Sri Venkatesvara Laghu Kritulu,** (Telugu) Edited by Sri V. Prabhakara Sastri	1	8
17. **Annamacharya Charitramu,** (Telugu) Edited by Sri V. Prabhakara Sastri	2	8
18. **Tiruvengada Sthalapuranam,** (Tamil) with prose supplement Ed. by Sri T. P. Palaniappa Pillai, B.O.L.	1	8
19. **Alankarasangraha,** of Amritanandayogi, (Sanskrit) Edited by Sri P. Balakrishnamurti, M.A.	3	4
20. **Subhadra Kalyanamu,** (Telugu) by Tallapaka Timmakka, Ed. by Sri V. Prabhakara Sastri ..	0	12
20a. **Sankaravilasam,** (Tamil) Ed. by Sri T. P. Palaniappa Pillai, B.O.L.	3	4
21. **Janasrayi,** (Sanskrit) Ed. by Sri M. Ramakrishna Kavi, M.A.	1	0

		Rs.	A.
22.	**Adhyatmasankirtanalu,** Vol. V. of Tallapaka Annamacharyulu (Telugu) Ed. by Sri V. Prabhakara Sastri	3	4
23.	**Tiruvengada Ula,** (Tamil) Ed. by Sri T. P. Palaniappa Pillai, B.O.L.	1	8
24.	**Adhyatmasankirtanalu,** Vol. VI of Tallapaka Annamacharyulu (Telugu) Ed. by Sri A. V. Srinivasachari	2	0
25.	**Prasnopanishad Bhashya,** of Rangaramanuja (Sanskrit-English) Ed. and Translated by Dr. K. C. Varadachari, M.A., Ph.D. and Sri D. T. Tatacharya, M.O.L.	2	12
26.	**Sri Venkatesvara Stuti Ratnamala,** (Telugu) Ed. by Sri V. Prabhakara Sastri	1	2
27.	**Dharmasangraha,** (Sanskrit) Ed. by Prof. P. V. Ramanujaswami, M.A.	2	0
28.	**Nipatavyayopasargavritti,** (Sanskrit) by Vidya Pravina Sri A. Someswarasarma, P.O.L. ..	2	0
29.	**Adhyatmasankirtanalu,** Vol. VII of Tallapaka Annamacharyulu (Telugu) Ed. by Sri R. Anantakrishna Sarma & Sri A. V. Srinivasachari ...	3	0
30.	**Bharata Kosa,** (Sanskrit) Ed. by Sri M. Ramakrishna Kavi, M.A.	22	0
31.	**Adhyatmasankirtanalu,** Vol. VIII of Tallapaka Annamacharyulu (Tel.) Ed. by Sri R. Ananthakrishna Sarma & A. V. Srinivasachari ...	3	0
32.	**Raghuvamsa,** (cantos 1 & 2), Translated into Tamil and Ed. by Sri D. T. Tatacharya, M.O.L (*Shortly*)		
33.	**Adhyatmasankirtanalu,** Vol. IX Ed. by Sri R. Ananthakrishna Sarma	3	0
34.	**Sri Venkatesvara Stuti Ratnamala,** (Tel.) Vol. II Ed. by Sri Ramakrishniah, M.A.	2	0

Sri Venkatesvara Oriental Institute Studies:—

	Rs.	A.
1. **Theory of Knowledge in the Philosophy of Sri Ramanuja** (English) by Dr. K. C. Varadachari, M.A. Ph.D.	3	0
2. **Rupakaparisuddhi** (Sanskrit) by Sri D. T. Tatacharya, M.O.L.	1	0
3. **Idea of God** (English) by Dr. K. C. Varadachari, M.A., Ph. D.	3	0
4. **Sahityavimarsa** (Sanskrit) by Vidya Pravina Sri A. Someswarasarma, P.O.L.	2	0
5. **The Dharmasutras & the Dharmasastras** (English) by Dewan Bahadur K. S. Ramaswami Sastri, B.A., B.L.	0	12
6. **Virasaiva Literature,** (Telugu) by Sri S. Ramakrishna Sastri, M.A., B.O.L.	5	0

For copies of the above apply to:—

THE DIRECTOR,

S. V. Oriental Institute, TIRUPATI,

(*Chittoor Dist.*) *South India.*